
# இடைக்கால நவீன நாகரீக வரலாறு
## (ஐரோப்பா)





முனைவர் **கே.வி.ஜெயராஜ்** எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி.,

TAMILNADU STATE COUNCIL FOR HIGHER EDUCATION
RELEVANCE AND EXCELLENCE

**தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்**
காமராசர் சாலை, சென்னை - 600 005.

# இடைக்கால நவீன நாகரீக வரலாறு
# (ஐரோப்பா)

முனைவர் **கே.வி.ஜெயராஜ்**
எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி.,

**தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்**
காமராசர் சாலை, சென்னை - 600 005.

முதற் பதிப்பு : 2011

மதிப்புரிமை : தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்
சென்னை - 600 005.

நூலின் பெயர் : இடைக்கால நவீனநானரீக வரலாறு

நூலாசிரியர் : முனைவர் கே.வி. ஜெயரபஜ்
பேராசிரியர்
நவீன கால வரலாறு, மற்றும் இயக்குனர்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
ஆய்வு மையம் (ஓய்வு),
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

MADURAI KAMARAJ UNIVERSITY LIBRARY
299114

மறு ஆய்வு செய்தவர் : முனைவர் அ. சுப்பையன்,
பேராசிரியர் (ஆய்வு)
வாரலாற்றுத் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர் - 608 002.

தமிழ் திருத்தம் செய்தவர் :முனைவர் பு.பாஸ்கரன்,
உதவி பேராசிரியர்
தமிழ் துறை
அகுர்சந்த் மேன்முல் ஜெயின் கல்லூரி,
மீனம்பாக்கம்,
சென்னை - 600 114.

விலை : 79.00

அச்சிட்டோர் : மீரா ஆப்செட் பிரிண்ட்ங்
எண். 104, வி.ஆர். பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5

## பொருளடக்கம்

பக்க எண்

இயல் I சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்
(அ) கிறித்துவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் .......... 1

(ஆ) போப்புகளின் நிர்வாகம் ............. 11

(இ) பைஸான்டைன் அல்லது பைசான்டியம் நாகரீகம் 28
(ஈ) இசுலாம் சமயத் தோற்றமும் வளர்ச்சியும்............ 35
(உ) ஸாராஜெனிக் நாகரீகம் ................................ 42

இயல் II நிலமானிய முறை
(அ) தோற்றம், நிறை, குறைகள் ................... 47
(ஆ) சிலுவைப் போர்கள் - காரணங்களும், விளைவுகளும் .... 57
(இ) இடைக்கால ஐரோப்பாவில் மடாலயமுறை வளர்ச்சி ......63
(ஈ) இடைக்கால நகரங்களின் வளர்ச்சி ....................... 70
(உ) கல்வி வளர்ச்சியும் பல்கலைக்கழகங்களின் எழுச்சியும்... 79

இயல் III நவீன காலத்திற்கு முந்திய இடைவெளிக் காலம்
(அ) மறுமலர்ச்சி இயக்கம் - காரணங்கள் .............. 86
(ஆ) இத்தாலியில் மறுமலர்ச்சி – மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவுகள் ........................................ 87
(இ) 15-ஆம் மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில் நிலவியல் கடல்வழிக் கண்டுபிடிப்புகள் - காரணங்கள், போக்கு, விளைவுகள் ............................................ 90
(ஈ) ஜெர்மனியில், பிரான்ஸில், ஸ்விட்ஸர்லாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம் .................................. 99

(உ) எதிர் சமயச் சீர்திருத்த இயக்கம் ...................... 103

இயல் IV புரட்சிகள்

(அ) 1789 ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சியும் அதன் தாக்கமும் .................................. 105

(ஆ) வளர்கற்பனை இயக்கம் ......... 117

(இ) தொழில் புரட்சி காரணங்கள், போக்கு, விளைவுகள்... 124

(ஈ) விவசாயப் புரட்சி காரணங்கள், போக்கு, விளைவுகள்... 135

இயல் V பன்னாட்டு அமைப்புகள்

(அ) தேசியத்திற்கு எதிரான பன்னாட்டியம் .................. 157

(ஆ) அனைத்து நாட்டுக் கழகம் .............................. 162

(இ) ஐக்கிய நாடுகள் சபை ................................ 165

(ஈ) தற்கால உலகில் அறிவியல், தத்துவம், கலை, இலக்கியம் .................................. 191

வரைபடம்

நிலவியல் கடல்வழிக் கண்டுபிடிப்புகள் ........ 210

## இடைக்கால, நவீன நாகரீக வரலாறு

### பாடத்திட்டம்

I. இடைக்காலம் - கிறித்துவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் - போப்புகளின் நிர்வாகம் - பைஸான்டைன் நாகரீகம் - இசுலாம் சமயத் தோற்றமும் வளர்ச்சியும் - ஸாராஜெனிக் நாகரீகம்.

II. நிலமானிய முறை - தோற்றம் - நிறை, குறைகள் - சிலுவைப் போர்கள் - காரணங்களும், விளைவுகளும் - இடைக்கால ஐரோப்பாவில் மடாலய முறை வளர்ச்சி - இடைக்கால நகரங்களின் வளர்ச்சி - கல்வி வளர்ச்சியும் பல்கலைக்கழகங்களின் எழுச்சியும்.

III. நவீன காலத்திற்கு முந்திய இடைவெளிக் காலம் - மறுமலர்ச்சி இயக்கம் - காரணங்கள் - இத்தாலியில் மறுமலர்ச்சி - மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவுகள் 15-ஆம் மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில் நிலவியல் கடல்வழிக் கண்டுபிடிப்புகள் - காரணங்கள், போக்கு, விளைவுகள் - ஜெர்மனியில், பிரான்ஸில், ஸ்விட்ஸர்லாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம் - எதிர் சமயச் சீர்திருத்த இயக்கம்.

IV. பிரஞ்சுப் புரட்சியும் அதன் தாக்கமும் - வளர்கற்பனை இயக்கம் - தொழில், விவசாயப் புரட்சிகள் - காரணங்கள், போக்கு, விளைவுகள்.

V. தேசியத்திற்கு எதிரான பன்னாட்டியம் - சர்வதேச சங்கம் - ஐக்கிய நாடுகள் நிறுவனம் - தற்கால உலகில் அறிவியல், தத்துவம், கலை, இலக்கியம்.

பாடநூல்கள்:

கி.ர. அனுமந்தன் - இடைக்கால நாகரீக வரலாறு
ஆரோக்கியசாமி, எம். - ஐரோப்பிய வரலாறு (சென்னை 1979)
(Grant A.J. Europe: The Story of the Last Five Centuries (London Long Mans: 1963) Hayes and Moon, Ancient and Medieval History.
David Thompson, Europe Since Napoleon (New Delhi: Pelican Books 1966)

## இயல் : I சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

## (அ) கிறித்துவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும்

### இயேசுநாதரின் பிறப்பு:

இயேசுநாதரின் பிறப்பு மற்றும் அவரின் செயல்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்ள நமக்குக் கிடைக்கும் முக்கிய ஆதாரங்கள் அவருடைய நான்கு சீடர்கள் எழுதி வைத்துள்ள புனித நூல்கள் (Gospel) ஆகும். இருப்பினும் இச்சமய நூல்கள் வாயிலாக இயேசுவின் ஆரம்பகால வாழ்க்கை பற்றி நமக்குக் கிடைக்கும் தகவல்கள் குறைவே. இவர் ஜுடே பகுதியில் பெத்தல்ஹேம் எனும் இடத்தில் பிறந்தார். அவர் பிறக்கும் போது ரோமப் பேரரசின் முதல் பேரரசர் அகஸ்டஸ் சீசர் என்பவர் ஆட்சியில் இருந்தார். இவருடைய பெற்றோர்கள் யூதர் இனத்தில் சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவராயினும், யூதர்களின் அரசரான டேவிட் குடும்பத்தின் வாரிசுகள் என்று கருதப்படுகிறது. இவர் ஆரம்பகாலத்தில் நாசரேத் எனும் ஊரில் தன் பெற்றோர்களுடன் வாழ்ந்தார் என்றும், அப்போது அவர்களுக்கு மரத்தச்சு வேலையில் துணைபுரிந்தார் என்றும் தெரியவருகிறது.

### இயேசுநாதரின் போதனைகள்

இயேசு நாதர் தன்னுடைய 30-வது வயதில் தன் கொள்கையைப் பரப்ப ஆரம்பிக்கிறார். அப்போது தைபீரியஸ் சீசஸ் என்பவர் ரோம் பேரரசின் அரசராக இருந்தார். இவர் போதித்தச் சமயம், 'அன்பு, அறம், சகோதரத்துவம்' ஆகியவையே. கடவுள் என்பவர் நம் அனைவருக்கும் அன்பு பாராட்டும் தந்தை என்றும், மனிதர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் சகோதரர்களாகப் பாவித்து நடந்து கொள்ளவேண்டும் என்றும் போதிக்கின்றார். இயேசுநாதர் தன்னை இறைவனுக்கு ஒப்பிடுகிறார். ஆனால் கடவுளின் கீழ் உள்ள நாடு, மண்ணுலகில் உள்ள நாடு போன்றதல்ல. கடவுள் உலகில், வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாட்டிற்கோ, சலுகைகள் பெற்றோர், பெறாதோர் என்ற பாகுபாட்டிற்கோ இடமில்லை என்றும் கூறுகிறார். இத்தகைய கூற்று யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. யூதர்கள் தாங்கள்தான் கடவுளின் குழந்தைகள் என்றும், சொர்க்க பூமியின் நேரடி வாரிசுகள் என்றும் கருதிக் கொண்டிருப்பவர்கள். அவர்கள் இயேசுவின் இக்கூற்றை ஏற்றுக்கொள்ளாததோடு, இயேசுவின் மீது மிகுந்த கோபத்துடனும்

இருந்தனர். அது மட்டும் அல்லாமல் இயேசுநாதர், உண்மையான சமய வாழ்க்கை என்பது பூஜைகள் செய்வதும் மற்றும் சாமிக்குச் செய்ய வேண்டிய பல சடங்குகள் என்று கூறப்படும் கடுமையான சட்டதிட்டங்களும் ஆகாது என்றும், கடவுளை மதித்து, சக மனிதர்களோடு நல்ல பழக்க வழக்கத்தோடு ஒழுக்கமாக பழகுவதிலும்தான் உண்மையான சமயவாழ்க்கை உண்டு என்றும் போதித்தார். இது ஏனைய யூதர்களையும், யூதர் குருக்களையும் கோபமுறத் தூண்டியது. யூதகுருக்கள் தங்களுடைய பதவிக்கு, இயேசுவின் போதனைகள் ஆபத்தை விளைவிக்கும் என்று கருதினர். எனவே இயேசுவின் மேல் கோபமுற்று அவரின் உயிருக்கு ஆபத்தை உருவாக்கத் திட்டமிட்டனர். மேலும் இயேசு மற்றும் அவருடைய சீடர்கள், இயேசு நாதர், கிருஸ்த்து (Christ) or தூதுவர் (Messiah) என்று தங்களைத் தாங்களே கூறிக்கொண்டதும் யூதர்களின் குருக்களைப் பெரிதும் கோபத்துக்-குள்ளாக்கியது. Christ என்பது கிரேக்க சொல். Messiah என்பது ஹெப்ரு சொல் இரண்டின் பொருளும் ஒன்றே. அது கடவுளின் தூதர் என்பதே. யூத குருக்கள், தங்களுக்கு ஒரு கடவுளின் தூதர் (Messiah) பிறப்பார் என்றும், அவர்கள் தங்களை அடிமைத் தனத்திலிருந்து விடுவிப்பார் என்றும் நம்பி எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலம். இக்காலத்தில் இயேசு, ஒரு சாதாரண ஏழைத் தச்சுத் தொழிலாளி குடும்பத்தில் பிறந்து தான்தான் கடவுளின் தூதுவர் (Messiah) என்று கூறிக் கொள்வதை ஏற்கவில்லை என்பது மட்டுமல்லாமல் பெரும் ஏமாற்றத்தில் இருந்தனர்.

இத்தகைய யூத குருக்களின் எதிர்ப்பிற்கிடையே இயேசுவின் போதனைகள் பலராலும் வரவேற்கப்பட்டன. குறிப்பாக ஏழை எளிய மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவர் சென்று பிரசாரம் செய்யும் இடங்களில் எல்லாம் கூடினர். ஆர்வமோடு கேட்கத் தொடங்கினர். யூத குருக்கள் அனைவரும் இதனைக்கண்டு அஞ்சினர். சினம் கொண்டனர். இயேசுவின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு இயேசுவையே கொன்று விடவேண்டும் என்றும் திட்டமிட்டனர்.

**இயேசு கொல்லப்படுதல்**

பாலஸ்தீனம் அக்காலத்தில் ரோமப் பேரரசின் கீழ் இருந்து வந்தது. ரோமப் பேரரசரை அணுகி இயேசுவைப் பற்றிப் புகார் செய்து இயேசுவைத் தண்டிக்க வேண்டும் என்று திட்டமிட்டனர்.

மன்னரின் அந்தரங்க செயலர் அல்லது அமைச்சரை (Procuator) அணுகி, அவர் நம்புகின்ற வகையில், இயேசு, பேரரசுக்கு எதிராக மக்களைத் தூண்டுகிறார் என்றும், தானே மன்னராக முயற்சிக்கின்றார் என்றும் பொய்யாக எடுத்துக்கூறி இயேசுவைத் தண்டிக்குமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் அமைச்சரோ, இயேசுவை அழைத்து விசாரித்தபோது, அவர் ஒரு அப்பாவி, வினயம் இல்லாதவர், உண்மையானவர் என்று கருதி, யூதர் குருக்களின் புகாரை நம்பவில்லை. எனவே, அப்போது இயேசுவைத் தண்டிக்கவில்லை. ஆனால் மீண்டும் மீண்டும், யூதர்களும், யூதர் குருக்களும் கூட்டம் கூட்டமாக வந்து அமைச்சரை வலியுறுத்தியபோது, அமைச்சர் இயேசுவைத் தண்டிக்க முடிவு எடுத்து சிலுவையில் அறைந்து கொல்லும்படி உத்திரவிட்டார். அதன்படி இயேசுவும் இறந்து விட்டார். இயேசுவின் சீடர்கள் இயேசு சாகமாட்டார், அவருக்குப் பல மாயமந்திரங்கள் தெரியும், ஏற்கனவே பல சாகசங்களை இயேசு நிகழ்த்தியுள்ளார் என நம்பினர்.

**மீண்டும் உயிர்த்தெழுதல்**

இயேசுவின் நான்கு சீடர்கள் எழுதிய (Gospel) சமய நூல்களில் கூறியபடி இயேசு தண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட மூன்று நாளில் உயிர் பெற்று உலகிற்கு வந்தார் என்றும், அவரைச் சீடர்கள் பார்த்த போது ஆறுதலும், ஆலோசனைகளும் வழங்கினார் என்றும் கூறப்பட்டுள்ளது. அப்போதுமுதல் இயேசுவின் சீடர்கள் இயேசுவின் போதனைகளை மக்களிடையே பரப்பி பல நாடுகளுக்கும் கொண்டு சென்றனர். தங்களின் குருவான இயேசுவின் மதத்தைப் பரப்பச் சென்ற இடங்களில் எல்லாம் கேட்டவர்கள் இயேசுவின் போதனைகளைப் பின்பற்றத் தொடங்கினர். அவ்வாறு பரப்பியவர்களில் முக்கியமானவர் புனிதபால் என்பவர் ஆவார்.

**புனித பால் என்பவரின் பணி**

புனிதபால் எனும் பாதிரியார் யூதர் இனத்தைச் சார்ந்தவராக இருப்பினும் ரோம் பேரரசின் பிரஜை. இவரின் உண்மையான பெயர் சால். (Saul) இவர் காலத்தில் கிருத்துவமதம் பல பகுதிகளுக்குப் பரவியது. ஆரம்பத்தில் இக்கிருத்துவ மதத்தைப் பாலஸ்தீனத்தில் உள்ள ஏழைகள், தொழிலாளர்கள், சிப்பாய்கள் போன்றவர்கள்தான் பின்பற்றினர். புனிதபால் மிகவும் கற்றறிந்தவர் பல மொழிகள் தெரியும்; ஜூடாயிசம் எனும் சமயத்தில ஆழ்ந்த ஞானம் உள்ளவர். யூத சட்டங்களைக் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று

புனித பால் ஜெருசலம் வந்தார். அங்கு யூதர் சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக ஒருசிலர் புதிய மதத்தைப்பரப்ப முயற்சித்துக் கொண்டு இருந்தனர் என்பதைக் கண்டார். எனவே அவரும், அப்புதிய மதத்தைப் பரப்புவோருக்கு எதிராக அடக்குமுறையில இறங்குபவர்கள் உடன் சேர்ந்து கொண்டு அப்புதிய மதத்தை அழிப்பதில் பங்கு கொண்டார். இப்பணியை மேற்கொள்ள ஜெருசலத்தில் இருந்து டமாஸ்கஸ் (Damascus) நகருக்குச் சென்ற போது புனித பால் கிருத்துவத்துக்கு மாற்றப்பட்டார். அது முதற்கொண்டு இயேசுவின் உண்மையான தொண்டராக மாறி அம்மதத்தை உலகின் பல பகுதிகளுக்குப் பரப்ப பயணம் மேற்கொண்டார். கற்றறிவாளராக இருந்த காரணத்தாலும், பல மொழிகள் அறிந்தவராக இருந்த காரணத்தாலும், கிருத்துவத்துக்கு எதிராக வாதிக்கும் அனைவருடனும் திறம்பட வாதிட்டு கிருத்துவமதத்தை ஜெருசலம் போன்ற இடங்களில் நிலைபெறச் செய்தார். மேலும் இம்மதத்தை ஆசியா மைனர், கிரேக்கம், மற்றும ரோம் நாடுகளில் பரப்பினார். இவர் கீழைநாடுகள் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கும் சென்று கிருத்துவ மதத்தை பரப்பியதாக நம்பப்படுகிறது.

## அடக்கு முறைகள்

காலப்போக்கில் கிருத்துவமதம் நல்ல வளர்ச்சி பெற்றது. ஒரு சில காலம் மன்னர்கள் இம்மதத்தின் மீது வெறுப்பும், விருப்பமும் கலந்தே வைத்து இருந்தனர். ஓரளவு வளர்ச்சிபெற்ற கிருத்துவ மதத்தினர். உலகில் தங்கள் மதம்தான் உயர்ந்தது என்றும், முந்தைய கடவுள்கள் எல்லாம் சாமி அல்ல என்றும் கூற ஆரம்பித்தனர். மன்னனின் இறையாண்மையையும் மதிக்க மறுத்தனர். அத்தோடு கிருத்துவமதத்தினில் இயேசுவைத் தவிர மற்றவர்களை வணங்கமாட்டோம் என்று கூறினர். மன்னரையும் வணங்க மறுத்தனர். எனவே சில மன்னர்கள், தங்களின் இறையாண்மையை மதிக்க மறுக்கும் கிருத்துவர்கள் மீது தாக்குதல் தொடுத்தும், கொலை செய்தும், பல துன்பங்களைக் கொடுத்தனர். அவ்வாறு செய்த மன்னர்களில் முக்கிய மானவர் பேரரசர் டயோகிளீசியன் (Diocletian) ஆவார். அவர் அப்பேரரசின் முழுமை பெற்ற அதிகாரத்தைப் பெற்றவராகக் கருதப்படவேண்டும் என்று எண்ணினார். அவர் புதிய கிருத்துவ மதத்தை அழிக்க அத்துணை முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆனால் கிருத்துவமதம் இத்தகைய அடக்குமுறையால் அழிந்துவிடவில்லை.

மாறாக ஒரு சிலர் கொலை செய்யப்பட்டதால், அவர்களைத் தியாகிகள் என்று அழைத்து இம்மதம் வளர்வதற்குக் காரணமானவர்களாக ஆக்கப்பட்டனர்.

**கான்ஸ்டாண்டைன்:**

டயோகிளீசியன் மரணத்திற்குப் பின்னர் ரோமப் பேரரசில் வாரிசுரிமைப் போர் நடைபெற்றது. இறுதியாக கான்ஸ்டண்டைன் என்பவர் இப்போரில் வெற்றிபெற்று பேரரசராகப் பதவியேற்றார். இவர் கிருத்துவ மதத்தைத் தழுவினார். கிருத்துவ மதத்தை நாட்டின் மதமாக மாற்றினார். இவர் மதம் மாறியதற்கான காரணம் என்னவென்றால் இவர் போரின் போது தன்னுடைய எதிரிகளை முறியடித்து வெற்றிபெற கிருத்துவ மந்திரத்தைக் கூறி கிருத்துவின் உதவியை நாடியதாகவும், அவ்வாறு வெற்றி பெற்றால் கிருத்துவத்தில் சேர்ந்து விடுவதாகவும் வேண்டிக்கொண்டாராம். அதன்படி இவர் வெற்றி பெற்றதால் கிருத்துவ மதத்தைத் தழுவினார். அதன்படி போருக்குப்பின்னர் மிலன் ஆணை ஒன்றைப் பிறப்பித்துத் தன் பேரரசு முழுவதும் சமயப் பொறையைக் கடைப்பிடிக்க உத்தரவிட்டார். அதற்குக் கருத்து வெளியிட்ட ஆணையின்படி, கிருத்துவமதம் நாட்டின் மதம் (State Religion) என்று பிரகடனம் செய்தார். திருச்சபைகளின் வளர்ச்சிக்குப் பண உதவிகள் செய்தார். நிலங்கள் பல தானம் கொடுத்தார். மேலும் கிருத்துவத்தில் உள்ள சிறு சிறு வேறுபாடுகளைக் களைய நைஸ் (Nice) எனும் இடத்தில் திருச்சபைக் குழுவை அழைத்து கலந்துரையாடச் செய்தார்.

இத்தகைய பல உதவிகளைக் கிருத்துவத்துக்குச் செய்த அவர், தன் தலைநகரையும் ரோம் நகரில் இருந்து பாஸ்பரஸ் வளைகுடாவின் மேல் உள்ள பைசான்டைன் எனும் இடத்திற்கு மாற்றினார். அங்கு, தலைநகரை உருவாக்க ஐந்து ஆண்டு காலம் செலவிட்டார்.

**இங்கிலாந்தில் கிருத்துவம் பரவுதல்**

இங்கிலாந்தில் ரோமானியர்கள்தான் கிருத்துவ மதத்தைப் புகுத்தினர். கிருத்துவ மதம் இங்கிலாந்தில் நுழைவதற்கு முன் ஆங்கிலேயர்கள், பல கடவுள்களை வழிபட்டு வந்தனர். இங்கிலாந்தினரை கிருத்துவ மதத்தினராக மாற்றுவதற்கு இரண்டு மிஸ்ஸனரிகள் முயற்சியில் ஈடுபட்டனர். அவை ரோமன் மற்றும் கெல்டிக்

(Roman and Celtic) அமைப்புகள் இக்காலக் கட்டத்தில் ஐரோப்பாவில் திருச்சபை பலம் பொருந்திய ஒன்றாக இருந்தது. கி.பி.590 முதல் 604 வரை ரோமில் பிசப்பாக இருந்து மகா கிரிகொி (Gregory the Great) காலத்தில் கிருத்துவம் கத்தோலிக்க கிருத்துவம் என்று அழைக்கப்பட்டது. ஐரோப்பா முழுவதையும் கிரிஸ்டாண்டம் (Christandam) (இயேசுவின் பேரரசு) என்று அழைத்தனர். அப்போது மகா கிரிகொியை ரோமின் 'பிசப்' என்று மட்டுமல்லாமல், ஐரோப்பிய திருச்சபைகளின் போப் என்று அழைத்தனர். போப் என்பது இலத்தீன் மொழியில் தந்தை என்று பொருள்படும். இங்கிலாந்தில் கிருத்துவத்தைப் பரப்புவதற்காக மதகுருமார்கள் அடங்கிய ஒரு குழுவிற்குத் தலைவராக அகஸ்டின் என்பவரை கிரிகொி நியமித்து அவர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கின்றார். கி.பி.597-இல் அகஸ்டின் தாவுனட் எனும் தீவில் இறங்கிய போது கென்ட் எனனும் பகுதியை ஆண்டு வந்த எத்தல்பெண்ட் எனும் அரசர் அவரை வரவேற்கின்றார் அகஷ்டின் அங்கு வந்த நேரம் நல்ல நேரமாக இருந்தது. காரணம் எத்தல்பெண்ட் என்ற அரசரின மனைவி பிரான்ஸில் இருந்து வந்த பிறகு கிருத்துவ மதத்திற்கு மாறினார். இளவரசியின் செல்வாக்காலும், கிருத்துவத்தைப் பரப்ப வந்த பாதிரியார்களின் முயற்சியாலும் கென்ட் பகுதி மக்கள் அனைவரும் கிருத்துவத்துக்கு மாறினர். அதன் விளைவாகக் காண்டர்பரி எனுமிடத்தில் ஒரு திருச்சபை துவங்கப் பட்டது. அத்திருச்சபைக்கு அகஸ்டின் ஆர்ச் பிசப்பாகப் பொறுப்பேற்றார். அகஸ்டின் காலத்திலேயே ரோச்ஸிஸ்டர் (Rochester) எனுமிடத்தில் மற்றொரு திருச்சபை அமைக்கப்பட்டது. தொடர்ந்து எஸ்ஸக்ஸ் (Essex) பகுதி மக்களும் கிருத்துவத்திற்கு மாற்றப்பட்டனர்.

**நார்த்தம்பிரியர் மதம் மாறுதல்**

கென்ட் பகுதியில் இருந்து நார்த்தம்பிரியா பகுதிக்கு கிருத்துவ மதம் பரவியது. நார்த்திதம்பிரியாவின் அரசர் எட்லின் என்பவர் கென்ட் அரசர் எத்தல்பர்ட்டின் மகளான எத்தல்பர்கா எனும் பெண்ணைத் திருமணம் செய்தார். எத்தல்பர்கா, திருமணமாகி நார்த்தம்பரியா செல்லும் போது, எத்தல்பெர்ட் தன் மகளுடன் ரோச்செஸ்டர்' திருச்சபையில் இருந்த பால்ட்ன்ஸ் (Paultness) எனும் பிசப்பையையும் அனுப்பி வைக்கின்றார். பால்ட்னஸ் என்பவர் தன்னுடைய போதனையின் மூலம் நார்த்தம்பிரிய அரசர் எட்வினையும், அவர் நாட்டு மக்களையும் கி.பி.627-இல் கிருத்துவர்களாக மாற்றினார். பின்னர் அவர் யார்க் (york) நகரில்

ஆர்ச்பிசப் ஆனார். இருப்பினும் மெர்சியா எனும் பகுதியை ஆண்டு வந்த பெண்டா என்ற மன்னரின் படையெடுப்பால் நார்த்தம்பரியாவில் கிருத்துவ மதவளர்ச்சி தடைபட்டது. லெண்டா என்ற அரசர் கி.பி. 633-இல் எட்வினைத் தோற்கடித்துக் கொன்று விடுகின்றான். பின்னர் அவருக்குப்பின் பதவிக்கு வந்த அஸ்வி சகோதரன் ஆஸ்வால்டு (Oswald) என்பவரை கி.பி.642-இல் மாசர் பீல்டு (Masserfield) எனுமிடத்தில் தோற்கடித்துக் கொன்று விடுகின்றார். எனவே சில காலம் நார்த்தம்பிரியாவில் கிருத்துவமதம் இல்லாமல் போயிற்று. பின்னர் ஆஸ்வால்டுவின் சகோதரரான ஆஸ்வி (Oswy) என்பவர் பெண்டாவை வின்விட்பீல்டு (Winvid field) எனுமிடத்தில் தோற்கடித்துக் கொன்று விடுகிறார். எனவே நார்த்தம்பிரியாவும், மெர்சியாவும் கிருத்துவத்தை தழுவின.

### அயர்லாந்து மிஸ்ஸன்கள்

அயர்லாந்து மதமாற்றத் திருச்சபையினருக்குக் கெல்டிக் பிரிவினர் என்று பெயர். பல ஆண்டுகளுக்கு முன்னர் செயின்ட் பாடரிக் என்ற பாதிரியாரால் அயர்லாந்தினர் மதமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இப்போது கிருத்துவத்தைப் பரப்பும் பணியில் இறங்கினர். பிரிட்டனில் வடக்குப் பகுதியில் வாழ்ந்து வந்த பிக்ட்கள் (Picts) எனும் மக்களைக் கிருத்துவத்தில் சேர்க்கும் பணியில் அயர்லாந்து திருச்சபையினர் ஈடுபட்டனர். அவர்களில் கொலம்பு எனும் பாதிரியார் லோனா (Iona) எனுமிடத்தில் ஒரு திருச்சபையைத் தோற்றுவித்தார். அவரைத் தொடர்ந்து ஏனைய பாதிரியார்கள் பிக்ட்ஸ் இன மக்கள் வாழும் பல இடங்களில் அயர்லாந்து திருச்சபையைத் தோற்றுவித்தனர். லோனோ எனும் இடத்தில் இருந்து வந்த மற்றொரு கிருத்துவ, பாதிரியாரான செயின்ட் அய்டான் (St.Aidan) என்பவர் நார்த்தம் பரியாவில் உள்ள லிண்டிஸ் பார்னே (Lindis farne) எனுமிடத்தில் ஒரு திருச்சபையைத் தோற்றுவித்தார். இவருடைய முயற்சியால் இங்கிலாந்தின் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் இருந்தவர்கள் கிருத்துவத்துக்கு மாற்றப்படடனர். இவ்வாறு சிறுக சிறுக இங்கிலாந்தின் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் அயர்லாந்து பாதிரியார்களாலும், தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகள் ரோம பாதிரியார்களாலும் கிருத்துவத்துக்கு மாற்றப்பட்டன.

### அயர்லாந்து (கெல்டிக்) மற்றும் ரோமன் கிருத்துவத்துக்கும்

**இடையே உள்ள வேறுபாடு:**

அயர்லாந்து திருச்சபை சிறந்த அமைப்பு கொண்ட நிறுவனமல்ல. தேசிய அளவில் அந்தஸ்து பெற்ற ஒன்று அல்ல. ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடும் நேரம் இரு திருச்சபையாளருக்கும் வேறுபட்ட ஒன்றாக விளங்கிற்று மற்றும் tonsure என்பதின் அமைப்பிலும் வேறுபட்ட ஒன்றாக விளங்கிற்று. இத்தகைய வேறுபாடுகள் ஒயிட்பை (Whitby) மாநாடில் (Synod) களையப்பட்டன. கி.பி. 664-இல் திருச்சபை பாதிரியார்கள் மாநாடு ஒய்ட்பை எனும் இடத்தில் கூடி அயர்லாந்து திருச்சபை மற்றும் ரோமன் திருச்சபை ஆகிய இரண்டுக்கும் இடையே இருந்த வேறுபாட்டை கலைத்தது, ரோமத் திருச்சபை சார்பில் வில்பிரட் என்பவரும், கோல்மான் (Colman) என்பவர் அயர்லாந்து திருச்சபை சார்பிலும் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர். ஆஸ்வி எனும் நார்த்தம்பரிய அரசர் ரோமத் திருச்சபையினர் கடைப்பிடித்து வரும் நடைமுறையே சிறந்தது என்று தீர்ப்பளித்தார். அவ்வாறு செய்யவில்லை என்றால் இங்கிலாந்து கத்தோலிக்கத் திருச்சபையில் இருந்து தனித்து விடப்படும் என்று கூறினர். இம்முடிவு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாயிற்று. இம் முடிவுக்குப் பின்னர் இங்கிலாந்தின் ரோமன் கலாச்சாரத்தைத் தெரிந்து கொள்ளவும் பிற மதத்தவர்களோடு தொடர்பு கொள்ளவும் முடிந்தது. சமய ஒற்றுமையின் மூலம் அரசியல் ஒற்றுமை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டது.

**ஆங்கில திருச்சபையின் அமைப்பு:**

கி.பி. 668-இல் போப்பாண்டவர் தியோடர் டார்சஸ் என்பவரைக் கண்டர்பரியின் ஆர்ச் பிசப்பாக நியமித்தார். அவர்தான் ஆங்கில திருச்சபை நிர்வாக அமைப்பை உருவாக்கினார். அவர் பல பிசப்களை நியமித்து கீழ்மட்டத்தில் இருக்கும் கிளர்ஜி (Clergy) எனும் சாதாரண குருமார்களைக் கண்காணிக்க உத்தரவிட்டார். காண்டர்பரி ஆர்ச்பிசப் இங்கிலாந்தில் உள்ள அனைத்துத் திருச்சபைகளுக்கும் தலைவர் என்று பிரகடனம் செய்தார். இவ்வாறு உள்நாட்டிலேயே ஒரே விதமான திருச்சபைகளுக்கு ஒரு தலைவர் என்ற நிலையை உருவாக்கினார். பாவ மன்னிப்பு முறையைப் புகுத்தினார். தவறு செய்தவர்கள் தங்கள் தவறுக்குத் தங்களைத் தாங்களே வருத்திக் கொண்டு பாவமன்னிப்பு பெறும் முறையைப் புகுத்தினார். கீழ்மட்ட கிளர்ஜிக்கள் (Clergy) எனும் குருமார்கள் பயிற்சி பெற பள்ளிகளைத் தொடங்கினார். அதோடு அக் கீழ்மட்டக் குருமார்கள் அடிக்கடி

கூட்டப்படும் திருச்சபைக் கவுன்சில்களில் பங்குபெறுமாறு வற்புறுத்தினார். இவ்வாறு சமய ரீதியாக அனைத்து இங்கிலாந்து மக்களும் ஒரே திருச்சபையின் கீழ் வந்தமையால் அரசியல் ரீதியாக ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட இங்கிலாந்து உருவாக காரணமாயிற்று.

**மதமாற்றத்தால் ஏற்பட்ட விளைவுகள்:**

**சமூக விளைவுகள்**

ஜெர்மனிய பழங்குடியினர்களில் இரண்டு பிரிவினர்தான் ஆங்கிலேயர்களும் சாக்ஸன்களும் (Agels and Saxons). இவர்கள் மிகவும் கரடு முரடாகவும், கொடூரமாகவும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் கிருத்துவத்திற்கு மாறியபின் தங்கள் கொடூர குணங்களை விட்டு நாகரீகமாகப் பழகத் தொடங்கினர். ஏனென்றால் மேலைநாட்டு நாகரீகத்தின் பாதுகாவலராக ரோமன் திருச்சபை இருந்து வந்தது. பிசப்புகள் அமைதியை விரும்புபவர்கள். அவர்கள் அமைதி, தன்னடக்கம் மற்றும் இரக்க குணம் கொண்டவர்கள். எனவே ஆங்கிலோசாக்சன் மக்கள் இந்த பிசப்புகளோடு பழகும் வாய்ப்பு ஏற்பட்ட போது தங்கள் குணங்களைத் திருத்திக் கொண்டு நாகரீகமாக வாழத் தொடங்கினர். கிருத்துவத்திற்கு மாறுவதற்கு முன்னர், ஒரு தனிமனிதனுக்கு எதிராக தீங்கு விளைவித்தால், பாதிக்கப்பட்டவருக்கோ அவரது குடும்பத்திற்கோ அபாராதம் அளித்துப் பரிகாரம் தருவர் அல்லது பழிக்குப்பழி வாங்குவர். ஆனால் திருச்சபை அத்தகைய தவறு செய்தால் அது தனிமனிதனுக்கு எதிராக செய்த தவறு மட்டும் அல்ல ஆண்டவனுக்கும், அரசுக்கும் எதிராகச் செய்த தவறு ஆகும். எனவே அதற்கு பாவமன்னிப்பு கோர வேண்டும் என்று போதித்தது. இதனால் நாகரிகமாக வாழ முன்வந்தனர். இரண்டாவதாகச் சமூகத்தில் கல்வி வளர்ச்சி பெற்றது. திருச்சபைகள், கலை மற்றும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தன. அதற்காக மடலாயங்கள் அமைக்கப்பட்டன. அங்கு பாதிரியார்கள், அன்பு அமைதி மற்றும் மனித நேயத்தைப் போதித்தனர். வனங்களை அழித்து கிராமங்கள், நகரங்கள் போன்றவற்றை உருவாக்கினர். விவசாயத்தை வளர்த்தனர். பாதிரியார்களில் பலர் கவிஞர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், தேசிய வாதிகள் என வளர்ச்சி பெற்றனர். திருச்சபையின் பராமரிப்பால் இங்கிலாந்து வரலாற்று ஆசிரியர் பிடே (Bede) கா்டுமேன் (caedman) எனும் ஆங்கில கவிஞர் புகழ் பெற்றனர். ஜரோ (Jorow) எனுமிடத்தில் கி.பி.673-735 வரை இருந்த பாதிரியார் 600 பாதிரியர்களுக்கு, இலக்கணம், வரலாறு, பௌதிகம், வானவியல் போன்ற

பாடங்களைப் போதித்தார், சினிவால் (Cynewall) என்பவர் இயேசுவைப் புகழ்ந்து ஆங்கிலத்தில் கவிதை எழுதியுள்ளார்.

**அரசியல் விளைவுகள்**

*திருச்சபையால்* ஏற்பட்ட ஒருமைப்பாடு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வழிவகுத்தது. நாடடில் வாழும் ஆங்கிலர்கள் சாக்ஸனியர்கள், ஜுட்ஜ்கள் எனப் பல இன மக்களும், பல பகுதியில் ஆட்சி செய்யும் மன்னர்களும் திருச்சபை எனும் ஒரே குடையின் கீழ் வந்ததால் சமய ரீதியாக தங்களிடையை இருந்த வேறுபாட்டை மறந்து ஒற்றுமையாக வாழ நினைத்தனர். *திருச்சபையின்* ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாக முறை, ஒரு அரசரின் கீழ் நிர்வாகம் செய்யமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிற்று. எனவே ஒரு அரசரின் கீழ் வாழ்ந்தால் என்ன என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. மன்னர்கள் பதவியேற்கும் போது திருச்சபை சார்பில் சமயச் சடங்குகள் நடைபெறுவதால் மக்கள் மன்னரை மதிக்கத் தொடங்கினர்.

## (ஆ) போப்பின் நிர்வாகம்

### புனித ரோமனியப் பேரரசு – திருச்சபை
### போப்பாண்டவர் மற்றும் பேரரசர்

**ரோமானியப் பேரரசின் தோற்றம்**

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் ரோமானியப் பேரரசு ஒரு முக்கிய பங்கு வகித்தது. இப்பேரரசின் அதிகாரம் வலிமையானதா இல்லையா என்பதைவிட இப்பேரரசு அக்கால மக்களால் அங்கீகரிக்கப் பட்டது. எனவே புனித ரோமானியப் பேரரசைப் பற்றிய செய்தியின்றி இடைக்கால வரலாற்றைப் படிப்பது முழுமையானதாகாது. ரோமானியக் கத்தோலிக்க திருச்சபை எவ்வாறு ஐரோப்பாவில் உள்ள அனைத்துக் கிருத்துவர்களுக்கும் சமயத்தில் தலைமையானது என்று உரிமை கொண்டாடுகிறதோ அதே போன்றுதான் அரசியல் ரீதியாக அனைத்து ஐரோப்பியர்களுக்கும் புனித ரோமானியப் பேரரசு தலைமையானது என்று உரிமை கொண்டாடியது. ரோமப் பேரரசின் வழித்தோன்றல்தான் பின் புனித ரோமானியப் பேரரசு என்று மக்கள் கருதினர். ஆனால் அவ்வாறு அல்ல. பைசாண்டைன் பேரரசு புதிய ரோமானியப் பேரரசு, ரோமானியப் பேரரசின் வழித்தோன்றல் அல்ல. கி.பி. 962-இல் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த சாக்ஸன் வம்ச அரசரான மாமன்னர் ஆட்டோ என்பவரை போப் ஏழாம் ஜான் புனித ரோமானியப் பேரரசர் என்று அழைத்துப் பதவிபிரமானம் செய்து வைக்கிறார். காரணம், மாமன்னர் ஆட்டோ போப் ஏழாம் ஜானுக்கு அவருடைய எதிரிகளுடன் பிரச்சனை ஏற்பட்ட போது உதவி செய்தார். எனவே அது முதற் கொண்டு ரோமானியப் புனிதப் பேரரசு உதயமானது. அதுமுதல் ரோமானியப் பேரரசின் கீழ் ஜெர்மனி, நெதர்லாந்து பொஹீமியா, ஆஸ்திரியர், ஸ்விட்சர்லாந்து, பர்குண்டி, இத்தாலி ஆகிய நாடுகள் வந்தன. ஆனால் சில பேரரசர்கள், இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்காண்டிநேவியின் நாடுகள் மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கும் தாங்கள்தான் தலைவர் என்று உரிமை கொண்டாடினர். இதற்கு முன்னர் கி.பி. 800-இல் போப் மூன்றாம் லியோ என்பவர் பிராங்க் நாட்டின் அரசர் சார்ல்மாங்க்னே என்பவர் தலையில் ஒரு கிரீடத்தை வைத்து, நீதான் ரோமப் பேரரசர் என்று அழைத்து, வணக்கம் போட்டார் என்றும் அவர் தான் அகஸ்டஸின் வாரிசு என்றும் அழைத்தார் என்று கூறப்படுகிறது. அவருடைய ஆதிக்கத்தின் கீழும் அதிக எல்லைப் பரப்புகள் இருந்த போதிலும் பல வரலாற்றாளர்கள்

மாமன்னர் ஆட்டோவைத்தான் முதல் ரோமானியப்பேரரசர் என்று அழைக்கின்றனர்.

ஜெர்மானிய அரசர்களே புனித ரோமனியப் பேரரசர்களாக வந்தனர். ஜெர்மனி பேரரசின் ஒரு பகுதி. பேரரசர்கள் ஜெர்மனியையும் நிர்வாகம் செய்யும் அதே வேளையில் பேரரசையும், கவனிக்க வேண்டிய நிலையில் இருந்தனர். போப் எவ்வாறு பேரரசின் கீழ் உள்ள அனைத்துக் கிருத்துவ மக்களுக்கும் பொறுப்பானவரோ அதுபோன்று பேரரசருக்குப் பொறுப்பு இருந்தது. பேரரசர்கள் பல கட்டங்களில் பல வம்சத்தையும் சார்ந்தவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்தனர். அவர்கள் சாக்ஸன் வம்சம், பிராங்கோனியன். ஹோவிரன்ஸ்டாதவன், கேப்ஸ்பர்க் போன்ற வம்சத்தினர் இதனால் பேரரசும், ஜெர்மனியும் காலப்பபோக்கில் வலுவிழக்கும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.

**.பேரரசரின் நிலை:**

பேரரசர் முழு அதிகாரத்தைப் பெற்றவராகவும், அவர்தான் எல்லாம் என்ற நிலையும் தோற்றதில் காணப்படும். பேரரசர்களும் தங்களுடைய முழு அதிகாரத்தையும் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால் காலச் சூழ்நிலை அதற்கு இடம் தரவில்லை. அக்காலத்தில் நிலமானிய முறை நிலவி வந்தது. நிலமானிய இளவரசர்கள் (Princes) பிரபுக்கள் (Lords). குறுநில மன்னர்கள் (Vessals) போன்றோர் பேரரசரின் அதிகாரத்தை எதிர்த்தனர். அவர்கள் தங்களுக்கு இருக்கின்ற உரிமையில் பேரரசும் தலையிடக் கூடாது என்று கருதினர். படையைப் பெருக்க பணம் அச்சிட, மாளிகைகள் கட்டிக் கொள்ள, போர் தொடுக்க அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ள, நீதிபரிபாலணம் செய்து கொள்ள, சட்டம் இயற்ற, தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் ஆட்சிசெலுத்த அவர்களுக்கு முழு உரிமை இருந்தது. பேரரசரின் உத்தரவை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. நூற்றுக்கணக்கான நிலமானிய பிரபுக்கள், இளவரசர்கள் போன்றோர் பேரரசரின் அதிகாரத்தைப் புறக்கணித்தனர். ஜெர்மன் நாட்டு அரசரைத் தேர்ந்தெடுக்க என்று சிறப்பு இளவரசர்கள், அதாவது தேர்வாளர்கள் (Electors) என்ற ஒரு பிரிவு நிலமானிய உடமையாளர்கள் இருந்தனர். இவர்கள் ஏனைய நிலமானியப் பிரபுக்களை விட அதிகாரமிக்கவர்களாக

திகழ்ந்தனர். எனவே பேரரசர் இவர்களின் தயவில் ஆட்சி செய்ய வேண்டிய நிலை இருந்தது. அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு அவர்கள் விரும்பிய சலுகைகளை எல்லாம் செய்ய வேண்டிய நிலையில் இருந்தார் மற்றும் பரந்த மிகப் பெரிய பேரரசை ஒரு மனிதர் ஆட்சி செய்வது கடினமானதாக இருந்தது. · பேரரசருக்கு இக்கட்டான சூழ்நிலையில் பணம் தேவைப்படும் போது எல்லாம் ஐரோப்பாவில் பேரரசின் கீழ் இருந்த பல நகரங்கள், தங்கள் நகராட்சியின் சுதந்திரத்தை விலையாகப் பணம் கொடுத்துப் பெற்றனர். இதன்படி பேரரசின் செலவில் நகரங்கள் தங்களைப் பாதுகாப்பதற்குப் பல நாடுகளுடன் இராணுவ உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் உரிமை பெற்றனர். பேரன்கள் (Barons) வாசல்கள் (vessals) நைட்டுகள் (Knights) போன்ற சிறு சிறு நிலமானிய உடைமையாளர்கள் நேரடியாகப் பேரரசுக்கு வரி செலுத்தி வந்தனர். அவர்களும் பகுதி சுதந்திரம் பெற்றவர்(Semi Independent)களாயினர். அவர்கள் பேரரசுக்கு அடிக்கடி பல தொந்தரவுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். பேரரசின் அமைதி மற்றும் ஒற்றுமை இத்தகைய நிலமானியர்களின் தொல்லைகளால் சீர்குலைந்து இருந்தது. சிலர் பகலிலேயே கொள்ளையடிக்க முயன்றனர். அவர்கள் சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு ஜெர்மானியின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் செயல்பட்டனர். பேரரசர்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்குப்பல போர்களில் ஈடுபடவேண்டிய நிலை இருந்தது. தொடர்ந்து நடந்த உள்நாட்டுப் போர்களாலும் தனியாக இருந்து செய்து கொண்ட சண்டைகளாலும் பேரரசுக்கு அச்சுறுத்தலாக இருந்து, அதன் பெருமை குன்றியது. கொள்ளையடிப்பதாலும், உள்ளாட்டுப்போர் வந்ததாலும் பலருடைய இழப்பால் ஒரு சிலர் கொள்ளை இலாபம் அடைந்தனர். பல இளவரசர்களும் சிறுசிறு வாசல்(vassals)களும், இது போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இடைக்கால பேரரசின் நாடாளுமன்றம் (Diet) மூன்று அவைகளைக் கொண்டு விளங்கியது. அவை 1.தேர்வாளர்கள் (Electors) தெய்வீகம் மற்றும் அரசியல் இளவரசர்கள் (Spiritual and temporal) மற்றும் சுதந்திர நகரங்களின் பிரதிநிதிகள் ஆகும். இவர்கள் பல தரப்பட்ட நிலையினும், பல பகுதிகளிலும் இருந்து வந்தமையால் அவர்களிடம் ஒரு பொது நோக்கு இல்லை. சுயநலமே அவர்களிடம் மேலோங்கி நின்றிருந்தது. ஸ்தல மற்றும் சுயநலன் ஆகியவை மேலோங்கிய நிலையில் பேரரசின் நலம்

கருதும் நோக்கு முற்றிலும் காணப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில் பேரரசையோ, பேரரசரையோ காக்கவேண்டும் என்ற எண்ணம் எழ வாய்ப்பில்லை. பேரரசின் பெருமையை உயர்த்துவதாக இருக்க வேண்டிய டயட் என்ற நாடாளுமன்றம் பேரரசின் வீழ்ச்சிக்குத் துணை நின்றது.

**போப் மற்றும் பேரரசர்களிடையே நடைபெற்ற மோதல்கள்**

போப் மற்றும் பேரரசர் ஆகியவர்களுக்கிடையே நடைபெற்ற மோதல்களால் பேரரசர் மற்றும் போப் ஆகியவர்களின் செல்வாக்குச் சரிந்தது. பதவி பிரமாணம் செய்வதில் மோதல் வெடித்தது. போப்பாண்டவர் பேரரசருக்கு பதவிபிரமாணம் செய்து வருவது வழக்கமாக இருந்தது. ஆனால் பேரரசர் நான்காம் ஹென்றி (1056-1105) மற்றும் பேரரசர் ஐந்தாம் ஹென்றி (1105-1125) காலத்தில் சமயத்துக்கு அப்பாற்பட்ட அரசர்கள் திருச்சபையில் உள்ள பிசப்புகள், அபாட்கள் (Abbots) போன்றோரைத் தாங்களே நியமிக்கும் அதிகாரம் பெற்றவர்கள் என்று கூறினர். அவ்வாறு அவர்களுக்குப் பதவிப்பிரமாணம் செய்யும் போது அவர்களுக்கு மோதிரம் அன்பளிப்பு வழங்குவது என்றும் உரிமை கொண்டாடினர். போப் ஏழாம் கிரிகோரி இத்தகைய வேண்டுகோளை ஏற்கவில்லை. நான்காம் ஹென்றியை போப் கனோசாஸ் எனும் இடத்தில் தன் பாதத்தில் மண்டியிடும் படி செய்ததாலும், நான்காம் ஹென்றியை ரோமை விட்டு விரட்டியதாலும் நாடுகடத்தப்பட்ட போப் கி.பி.1085-இல் இறந்தார். இறுதியாக கி.பி. 1122-இல் ஓர்ம்ஸ் (Worms) எனுமிடத்தில் நடைபெற்ற அதை ஒப்பந்தப்படி பேரரசருக்கும் போப்புக்கும் சாமாதானம் ஏற்பட்டது. இருந்தாலும் இந்நிகழ்ச்சி போப் பதவிக்கும் பேரரசர் பதவிக்கும் மரியாதைக் குறைவை ஏற்படுத்தியது.

பேரரசர் பிரடெரிக் பார்பரோடா (1152-1190) ஒரு சிறந்த ஆட்சியாளர். அவர் தன் இரும்புக்கரம் கொண்டு பேரரசின் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார். முதலாம் பிரடெரிக், திருச்சபையை விட உயர்ந்தது பேரரசு என்றும் போப், பேரரசை விட திருச்சபைதான் உயர்ந்தது என்றும் உரிமை கோரினர். இருவரும் தங்களின் முழு பலத்தையும் காட்டத் துவங்கினர். பிரடெரிக் இத்தாலியைத் தாக்கி போப் மூன்றாம் அலெக்ஸாந்தரை ரோமை விட்டு விரட்டினார். போப் மூன்றாம் அலெக்ஸாந்தருக்குப் பதிலாக புதிய போப் ஒருவரை நியமித்தார். போப் பிரடெரிக் பேரரசரைச் சமயவிலக்கு

(Excommunicaton) செய்தார். இதற்கு வடக்கு இத்தாலியில் உள்ள லம்பார்டு அமைப்பில் (Lambard League) உள்ள அனைத்து நகராட்சிகளும் போப்புக்குத் துணை நின்றன. லெக்னனோ எனும் இடத்தில் நடைபெற்ற சண்டையில் கி.பி 1176-இல் பேரரசர் காயமுற்றுத் தோல்வியைத் தழுவினார். இருவருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி ரோமில் மூன்றாம் அலெக்ஸாந்தர் போப் பதவியேற்றார். போப் மூன்றாம் அலெக்ஸாந்தர் பிரடெரிக் பார்பரோசாவிற்கு அளிக்கப்ட்டிருந்த சமய விலக்கு உத்தரவை வாபஸ் பெற்றார். இவ்வாறு அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. பிரடெரிக் தான் சிலுவைப போரில் ஈடுபட்டபோது மரணமடைந்தார். இந்நிகழ்ச்சி பேரரசுக்கும், போப்புக்கும் தாழ்நிலையை உருவாக்கிற்று.

**பேரரசர் இரண்டாம் பிரடெரிக் 1212-1250:**

பேரரசர் இரண்டாம் பிரடெரிக் பிரடெரிக் பார்பரோசாவின் பேரன் ஆவார். அந்நாட்டு மக்கள் இவரை 'உலகின் அதிசயம்' (Wonder of the world) என்று அழைப்பர். இவர் காலத்திலும் போப்புக்கும் பேரரசருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இவர் காலத்தில் போப் மூன்றாம் இன்னோசன்ட் என்பவர் போப் ஆக இருந்தார். போப் பேரரசர் மீது சந்தேகம் கொண்டார். என்ன சந்தேகம் என்றால், இத்தாலியில் உள்ள சிறு சிறு நாடுகள் அனைத்தையும் ஒன்றினைத்து ஒரே நாடக அமைத்துப் போப் ஆதிக்கத்தைக் குறைக்க முயற்சிக்கின்றார் என்று. இத்தாலியில் இருபிரிவினர் தனித்தனியாக இருவரையும் ஆதரித்தனர். போப்பை ஆதரித்தவர்கள் கோல்ப்ஸ் (Guelphs) என்றும், பேரரசரை ஆதரித்தவர்கள் ஜிபெல்லியன்கஸ் என்றும் அழைக்கப்பட்டனர். இப்போட்டியில் பேரரசர் முதலில் வட இத்தாலிய நகரங்களை வென்றார். ஆனால் இறுதியில் பேரரசர் படைகள் வட இத்தாலியை விட்டு விரட்டப்பட்டன. இரண்டாம் பிரடெரிக்கை போப் சமயவிலக்குச் செய்தார். இரண்டாம் பிரடெரிக் கி.பி. 1250-இல் மரணம் அடைந்தார். அப்போது பேரரசு வீழ்ச்சியுறும் தருவாயில் இருந்தது. இத்தாலியை இழந்தது. ஜெர்மனியில் பதவிச் சண்டை அதிகரித்தது. பேரரசு பெயரளவில் இருந்து வந்தது. கி.பி. 1273 வரை புனித ரோமானியப் பேரரசு செயலிழந்த நிலையில் இருந்தது. போப் பேரரசரைத் தேர்ந்தெடுக்க தேர்வாளர்களை (Electors) புதிய பேரரசரை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொண்டார். தேர்வாளர்கள் ஹேப்ஸ்பர்க் வம்சத்தைச் சார்ந்த ரோடால்ப் என்பவரைப் பேரசராகத் தேர்வு செய்தனர். இருப்பினும் இத்தாலியோடு

அவர் வைத்திருந்த தொடர்பு இவரை பலம் குன்றியவராக ஆக்கியது. அடிக்கடி போர்களினால் பேரரசு வீழ்ச்சியுறத் தொடங்கியது.

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளில் திருச்சபைக்கும் மன்னர்களுக்கும் இருந்த உறவு நிலைகளைப் பார்க்கலாம். பேரரசர்களுக்கும் போப்புகளுக்கும் ஏற்பட்ட சண்டைகளைப் போலவே, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் மன்னர்களுக்கும் திருச்சபைத் தலைவர்களான ஆர்ச்பிசப், பிசப் போன்றோருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. அதற்கான காரணங்கள் யாதெனில் குளுயானிக் (Cluniac Monks) துறவிகள், திருச்சபைச் சார்ந்தோர் ஒழுக்கத்துடன் வாழவேண்டும் என்று கோரினர். திருச்சபைப் பொறுப்பில் உள்ளவர் திருமணம் செய்து கொண்டால், சமயம் சாரா சாதாரண மனிதர்களைப் போன்று, தனி பொருளாதார வளத்தைப் பெருக்கவும், தன் குடும்பத்தை மகிழ்வுடன் வைத்துக் கொள்ளவுமே முயற்சிப்பர். மேலும் திருச்சபைப் பதவிகள், சமயம் சாரா மன்னர்களால் நியமனம் செய்யப்படுவதால், தங்களுடைய பதவியைக் காத்துக் கொள்ளவும், பதவி உயர்வு பெறவும், சமயம் சாரா மன்னர்களையும், மன்னர் சார்பு அதிகாரிகளையும் திருப்திபடுத்துவதிலேயே தங்களுடைய முழுக் கவனத்தையும் செலுத்துவர் என்று கூறினர். சமயம் சாரா மன்னர்கள் தான் பதவி பிரமாணம் செய்து வைக்கும் விதிமுறை இருப்பதால், சமயப் பணியில் ஈடுபடும் திருச்சபைப் பொறுப்பாளர்கள் மேற்கூறிய தவறுகளைச் செய்ய வாய்ப்புகள் உள்ளன. எனவே திருச்சபையில் பணிபுரியும், ஆர்ச்பிசப், பிசப், அபாட் போன்ற பதவிகளைச் சமயம்சாரா (laymen) மன்னர்களோ அல்லது அவரின் பிரதிநிதியாகிய அதிகாரிகளோ நியமனம் செய்யவோ பதவிப்பிரமானம் செய்யவோ கூடாது. அத்தகைய முறைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று கூறினர். அதே வேளையில் சமயம் சார்ந்த (Clergy) திருச்சபை பொறுப்பாளர்கள் சந்நியாசி வாழ்க்கையை வாழவேண்டும் அப்போதுதான் அவர்கள் மனித வாழ்க்கையில் உள்ள தவறுகளைச் செய்யமாட்டார்கள் என்றும் கூறினர். குளுனியத் துறவிகளின் இக்கோரிக்கைகள் அவர்களுக்குச் சிறப்பானதாகக் கருதப்பட்டாலும், சமயம் சாரா மன்னர்கள் இக்கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. குளுனியத் துறவிகள், திருச்சபை, திருச்சபையில் பணியாற்றுவோர், சுதந்திரமாகச் செயல்படவேண்டும் என்று கூறினர். மன்னரிடம் இருந்து பெற்ற நிலங்களுக்காக, மன்னருக்கு வரிச்செலுத்தவோ மரியாதை செலுத்துவோ

கூடாது என்று கூறினர். மேலும், மன்னர்களிடம் இருக்கும் பதவிப்பிரமான அதிகாரம் முழுமையாக நீக்கப்படவேண்டும் என்று கூறினர். இக் கருத்துக்களை எந்த ஆட்சியாளரும் ஏற்றுக்கொள்ள மாட்டார். காரணம் இவர்களுக்குச் சலுகைகள் வழங்கினால் சமயம் சாரா பிரபுக்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கும் வரிவிலக்கு வேண்டும் என்று கேட்பார்கள் என்று அஞ்சினர். இதனால் மன்னர்களுக்கும், திருச்சபைகளுக்கும் இடையே அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டன.

**முதலாம் வில்லியம்:**

இங்கிலாந்தில் முதலாம் வில்லியம் ஆட்சி செய்த போது ரோமில் ஏழாம் கிரிகிரி போப்பாக இருந்தார். கி.பி.1073-இல் போப் ஆவதற்கு முன்னால் இவர் குனிய இயக்கத்தில் துறவியாக இருந்தார். எனவே திருச்சபையைச் சமயம்சாரா ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுத் தர பெரும் முயற்சி மேற்கொண்டார். எனவே அவர் அவருடைய கருத்துக்கு ஒத்து வராத அரசர்கள், இளவரசர்களைச் சமயவிலக்கு செய்து வந்தார். இதற்காகப் பேரரசர் நான்காம் ஹென்றியுடன் பெரும் போரில் ஈடுபட்டார். இருப்பினும் இங்கிலாந்தில் ஆட்சிபுரிந்த முதலாம் வில்லியம் திருச்சபையைத் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்த போது அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. முதலாம் வில்லியம் தன்னுடைய நாட்டில் உள்ள பிசப் போன்ற திருச்சபைப் பொறுப்பாளர்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தானே எடுத்துக் கொண்டார். அவர்களுக்குப் பதவிப்பிரமானமும் அவரே செய்து வைத்தார். அது மட்டுமல்லாமல் போப் சமய விவகாரங்களில் தன்னுடைய அனுமதியின்றி இங்கிலாந்தில் தலையிடக் கூடாது என்று கட்டளையிட்டார். இங்கிலாந்தில் உள்ள திருச்சபை சம்பந்தமாக எந்த உத்தரவோ, கருத்தோ தெரிவிக்க கூடாது என்று தடைவிதித்தார். அதுமட்டுமல்லாமல், போப்பாண்டவர் முதலாம் வில்லியம் என்பவரைத் தனக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்று கேட்டபோது அம்மரியாதை செலுத்த வில்லியம் மறுத்து விட்டார்.

இருப்பினும் வில்லியம் திருச்சபையில் எல்லா சீர்திருத்தங்-களையும் கொணடு வந்தார். திருச்சபை முன்னேற்றத்திற்கு சில நடவடிக்கைகள் மேற்கொண்டு சமயம் சார்ந்த பிரச்சனைகளில் தாம் அக்கரை கொண்டதை நிருபித்தார். எனவே போப், வில்லியம் எடுக்கும் நடவடிக்கைகளில் தலையிடவில்லை. முதலாம் வில்லியம்

திருச்சபையில் செய்த சீர்த்தித்தங்களில் முக்கியமானவை கண்டர்பரி ஆர்ச்பிசப்பாக லான்பிராங் என்பவரை நியமித்தது. திருச்சபையில் உள்ள பொறுப்பாளர்களைச் சந்நியாசி வாழ்க்கை நடத்த ஊக்குவிக்குமாறு வேண்டிக்கொண்டார். 2. வில்லியம், திருச்சபைக்கென்று சிறப்பு நீதிமன்றங்களை நிறுவி, திருச்சபை பணியாளர்களை, சாதாரண நீதிமன்றங்களில் விசரிக்கப்படுவதிலிருந்து விடுவித்தார். இப்புதிய நீதிமன்றங்களுக்குப் பிசப்புகள் தலைமை தாங்குவர். கானன் எனும் தனிச்சட்டம் இயற்றி அதன்படி திருச்சபை சார்ந்தோர் தவறு செய்தால் தண்டிக்கப்பட்டனர். இத்தகைய நீதிமன்றங்களில் குடும்ப வழக்குகள், திருமணம், உயில், நல்லொழுக்கம், திருச்சபை நெறிமுறை ஆகியவை சார்ந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டன,

**இரண்டாம் வில்லியம்:**

இரண்டாம் வில்லியம் அவர் தந்தையைப் போல் நியாயமான அரசர் அல்ல. அவர் பணம் சேர்ப்பதில்தான் குறியாக இருந்தார். திருச்சபையினர், பல ஆண்டுகளாகப் பதவியில் இருப்பதால் அதிக சொத்துக்கள் கொணடதாக விளங்கின. திருச்சபையின் வருமானத்தை தான் எடுத்துக் கொள்ளும் நோக்கத்தோடு தன்னுடைய ஆலோசகர் நீதிபதி ரனோல்ப் பிளாம்பார்டு ஆலோசனையின்படி திருச்சபைப் பதவிகள் காலியாகும் போது அப்பதவிகளுக்கு நியமனம் செய்யாமல் காலம் தாழ்த்தினார். கி.பி. 1089-இல் லானபிராங் எனும் ஆர்ச்பிசப் இறந்தபின் அப்பதவியைப் பூர்த்தி செய்யாமல் நான்கு ஆண்டுகள் காலம் தாழ்த்த அதன் வருமானத்தை தானே எடுத்துக்கொண்டார். இன்னும் அதிக ஆண்டுகள் பதவியை பூர்த்தி செய்யாமலே காலம் தாழ்த்தியிருப்பார். ஆனால் கி.பி. 1093-இல் தீராத நோய் வாய்ப்பட்டதால் இந்நோய்க்கு தெய்வக் குற்றம்தான் காரணம் என்று அஞ்சி ஆர்ச் பிசப் பதவிக்கு ஆன்ஸ்லிம் என்பரை நியமனம் செய்தார். காண்டர்பரி ஆர்ச் பிசப்பாகப் பதவி பெற்ற ஆன்ஸ்லின் என்பவர் கற்றறிந்தவர், நியாமானவர்; நேர்மையானவர், உடல் நலம் பெற்ற வில்லியம் மீண்டும் பணத்தாசையால் ஆன்ஸ்லிம் என்ற ஆர்ச் பிசப்புடன் மோதலில் ஈடுபட்டார். ஆன்ஸ்லிம்மைப் பதவியில் அமர்த்தியமைக்குப் பணம் வேண்டும் என்று கேட்டார். அவருக்கு மரியாதை செலுத்தவேண்டும் என்றும் கேட்டார். ஆனால் ஆன்ஸ்லிம் பணம் கொடுக்வோ, மரியாதை செலுத்துவோ முடியாது என்றார்.

வில்லியம் மீண்டும் தான் ஆன்ஸ்லிமுக்கு பதவி பிரமாணம் செய்து வைக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கும் ஆன்ஸ்லிம் மறுத்து விட்டார். அதுமட்டுமல்லால் மன்னர் எடுத்த பல முடிவுகளையும் எதிர்த்தார். எனவே மோதல் வெடித்தது. முடிவில் ஆன்ஸ்லிம் உயிருக்குப் பயந்து இங்கிலாந்தை விட்டு ஓடிவிட்டார்.

**முதலாம் ஹென்றி:**

முதலாம் ஹென்றி இங்கிலாந்தின் அரசராக வந்தபின் அவர் செய்த பல செயல்களில் ஆன்ஸ்லிம் என்பவரை மீண்டும் காண்டர்பரி ஆர்ச் பிசப்பாக நியமித்த ஒன்று ஆகும். ஆனால் ஆன்ஸ்லிம் நியாயமான அரசரான முதலாம் ஹென்றியுடனும் ஒத்துப் போகவில்லை. ஆன்ஸ்லிம், முதலாம் ஹென்றி பதவிப்பிரமானம் செய்து வைப்பதை விரும்பவில்லை. மற்றும், அரசருக்கு அரசிடம் பெற்ற நிலங்களுக்காகத் தாம் மரியாதையும் செலுத்தமாட்டேன் என்றும் கூறினார். இதனை முதலாம் ஹென்றி ஏற்றுக் கொள்ளவில்லை. தன்னுடைய நாட்டில் உள்ள பிசப்புகள் ஆர்ச் பிசப்புகள் தனக்கு மரியாதை செலுத்தாமல் சுதந்திரமாக இருப்பதையும், தனக்கு மரியாதை செலுத்துவதற்குப் பதிலாக ரோமில் உள்ள போப்புக்கு மரியாதை செலுத்துவதையும் விரும்பவில்லை. எனவே மன்னருக்கும் திருச்சபைக்கும் மோதல் முற்றியது. இறுதியில் ஒரு சமாதானம் ஏற்பட்டது. உடன்பாட்டின்படி பிசப் மற்றும் அபாட் போன்றவர்களை அந்தந்தத் திருச்சபையில் உள்ள உறுப்பினர்கள் மற்றும் துறவிகள் தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால் தேர்தல் மன்னர் முன் நடத்தப்பட வேண்டும். 1. அதுபோன்று பதவிபெற்ற அவர்கள் திருச்சபை முத்திரையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் மன்னரிடம் பெற்றிருக்கும் நிலங்களுக்கு மன்னருக்கு வரி அளிப்பது போன்ற மரியாதை செலுத்த வேண்டும். இதன் அடிப்படையில் பேரரசருக்கும் போப்புக்கும் இடையே ஐரோப்பாவில் ஒப்பந்தம் ஏற்பட்டது.

**ஸ்டீபன்**

இவருடைய 19 ஆண்டுகால ஆட்சியில் திருச்சபை நிர்வாகிள், சமயம்சாரா பிரபுக்கள் போல அதிகமான சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டனர். அதனால் பல மாளிகைகள் கட்டினர். இதனைப் பயன்படுத்தி மன்னர்களிடம் இருந்து சுதந்திரம் பெற முயற்சித்தனர்.

**இரண்டாம் ஹென்றி:**

இங்கிலாந்து அரசர் இரண்டாம் ஹென்றி தன் ஆடசிக்காலத்தில் தன் மக்கள் அனைவருக்கும் ஒரே விதமான நீதி கிடைக்க வேண்டும் என்று கருதினார். காரணம் முதலாம் வில்லியம் ஆட்சிக் காலத்தின் போது திருச்சபைக்கு என்று தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டு அதற்கான சமய சட்டம் (Canon law) இயற்றி, திருச்சபை சார்ந்தோரை விசாரித்து தண்டித்து வந்தனர். ஆனால் நீதிமன்றங்களில் வழங்கப்படும் தண்டனைகள் மிகவும் எளிதானதாக இருந்தது. சமயம் சாரா நீதிமன்றங்களில் சாதாரண மக்களுக்கு வழங்கப்படும் தண்டனை கடுமையானதாக இருந்தது. உதாரணமாக கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவருக்கு சமயம் சார்ந்த நீதிமன்றத்தில் திருச்சபையில் அவர் வகித்து வந்த பதவியைப் பறிப்பதுதான் தண்டனையாக இருந்தது. மற்றபடி அவர் விடுதலை செய்யப்பட்டார். திருச்சபை நீதிமன்றத்திற்குள், திருச்சபையில் பணியாற்றும் மதகுருமார்கள் மட்டும் அல்லாமல், திருச்சபை சார்ந்த எந்தப் பணியில் இருந்தாலும் அவர்களும் திருச்சபை நீதிமன்ற எல்லைக்குள் வந்து விடுவதால் நாட்டில் உள்ள மொத்த ஜனத்தொகையில் 3/4 பாங்கினர் கடுமையான தண்டனையில் இருந்து தப்பினர். இது பராபட்சமானது என்று ஹென்றி கருதினார். சமயச் சார்பற்ற நீதிமன்றத்தில் தண்டணைப் பெறுவோரையும், சமயச்சார்ந்த நீதிமன்றத்தில் தண்டணை பெறுவோரையும் ஒரே விதமாக நடத்தவேண்டும் என்று இரண்டாம் ஹென்றி கருதினார்.

இந்தக் குறைபாட்டை நீக்கக் கருதிய இரண்டாம் ஹென்றி தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான நண்பரான தாமஸ் பெக்கட் (Thomas Becket) என்பவரைக் காண்டர்பரியின் ஆர்ச் பிசப்பாக நியமித்தார். இவர் பெக்கட் என்பவரை நியமித்ததின் நோக்கம் தன் விருப்பத்தை நிறைவேற்றுவார் என்று கருதிதான். ஆனால் அவர் முழுதும் வேறுபட்டவராகக் காணப்பட்டாலும் அவர் திருச்சபையின் முழுமையான உரிமையைக் காப்பது என்று முடிவு செய்தார். திருச்சபையின் பெயரால் மன்னரைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது எல்லாம் எதிர்த்து வந்தார்.

இவ்வேளையில் திருச்சபை நீதிமன்றத்தில் சீர்திருத்தம் செய்யும் நோக்கோடு ஒரு அரசியலமைப்பைத் தயார் செய்து, அவ்வரசியல் அமைப்பிற்குக் கண்டார்பரி ஆர்ச்ப்பிசப்பாகிய தாமஸ்

பெக்கட்டின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அனுப்பி வைத்தார். அவ்வரசியல் அமைப்பிற்குக் கிளாரண்டன் அரசியலமைப்பு' என்று பெயர். இவ்வரசியல் அமைப்பில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டன. உதாரணமாக, ஆர்ச்பிசப் நீதிமன்ற விசாரணையில் விசாரிக்கப்பட்ட வழக்குகள் மன்னரின் அனுமதியின்றிப் போப்பாண்டவரின் நீதிமன்றத்துக்கு அனுப்பக் கூடாது. முதலாம் ஹென்றிக்கும் ஆன்ஸ்லிம் ஆர்ச்பிசப் ஆகியோருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் இவ்வரசியல் அமைப்பிலும் இடம் பெற்றிருந்தது. திருச்சபையில் பணியாற்றும் பிசப், அபாட் போன்றவர்கள் மன்னரின் அனுமதியின்றி வெளிநாடுகள் செல்லுதல் கூடாது. சமயம் சார்ந்த திருச்சபை நீதிமன்றங்களில் விசாரணை செய்து குற்றவாளி என்று நிருபிக்கப்பட்டு, பதவி இறக்கம் செய்யப்பட்டோரைச் சமயம் சாராத மன்னர் கீழ் உள்ள நீதி மன்றங்களில் விசாரணை செய்து தண்டிக்க அனுமதிக்கவேண்டும் என்ற அம்சங்கள் இடம் பெற்றிருந்தன.

தாமஸ் பெக்கட் இந்த விதிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் எந்த ஒரு தனிமனிதனும் செய்த ஒரே குற்றத்திற்காக இரண்டு முறை விசாரணைக்கு உட்படுத்த முடியாது என்று மறுத்தார். அதுமட்டுமே அல்லாமல் சமயசரா நீதிமன்றங்களுக்கு, திருச்சபை சார்ந்தோர் மீது பரிபாலனம் செய்ய அதிகாரம் கிடையாது என்று கூறினார். இண்ாடாம் ஹென்றியோ, சமயம் சார்ந்த ஒருவரை சமயம் சார்ந்த நீதிமன்றம் தண்டித்துப் பதவியிறக்கிய பின் அவர் சமயம் சார்ந்தவர் ஆகமாட்டார். அவர் சாதாரண மனிதர். எனவே அத்தகைய சாதாரண மனிதரைச் சமய சாரா நீதிமன்றம் விசாரித்துத் தண்டனை வழங்கினால், அவர் இருமுறை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டவர் ஆக மாட்டார் என்று பதில் அளித்தார். ஆனால் பெக்கட் ஏற்றுக் கொள்ளவில்லை. இரண்டாம் ஹென்றி பெக்கட் முன்னால் கருவூலத் தலைவராக (Chanceller) இருந்த போது நடந்த தவறுக்காகப் பெக்கட் மீது குற்றம் சுமத்தினார். இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றவே, இனிமேலும் இங்கிலாந்தில் இருந்தால் ஆபத்து என்று கருதிய பெக்கட் இங்கிலாந்தை விட்டு பிரான்ஸக்கு ஓடினார். அடுத்த ஆறு ஆண்டுகாலம் இருவருக்கும் இடையே கருத்து மோதல்கள் தொடர்ந்தன. இரண்டாம் ஹென்றி பெக்கட்டின் உறவினர்களை நாடு கடத்தினார். காண்டர்பரி வருமானத்தை அரசுக்குச் சொந்தமாக்கினார்.

பெக்கட் இரண்டாம் ஹென்றியைச் சமயவிலக்கு செய்தார். இவ்வாறு இருவருக்கும் இடையே போராட்டம் தொடர்ந்தது.

இறுதியாக கி.பி.1170-இல் ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. பெக்கட் இங்கிலாந்துக்கு வர அனுமதிக்கப்பட்டார். ஆனால் மீண்டும் பிரச்சனை எழுந்தது. அதாவது பெக்கட் பிரான்சில் இருக்கும் போது, இரண்டாம் ஹெனறி தன் மகனுக்கு இளவரசர் பட்டம் சூட்ட லண்டன் பிசப் ஆன ரோஜர் என்பவரை அழைத்து அச்சடங்குகளைச் செய்யும்படி உத்திரவிட்டார். அதன்படி அவரும் செய்து வைத்தார். ஆனால் இத்தகைய அரச குடும்ப நிகழ்ச்சிகளைக் காண்டர்பரி ஆர்ச்பிசப்தான் செய்வது வழக்கம். இதற்கு மாறாக லண்டன் பிசப் செய்த செய்தி கேட்ட பெக்கெட் லண்டன் பிசப்பைத் தற்காலிக வேலை நீக்கம் செய்து விட்டார். இந்தச் சமயத்தில் இரண்டாம் ஹென்றி பிரான்சில் இருந்தார். இச் செய்தி கேட்டவுடன் மிகுந்த கோபமுற்ற இரண்டாம் ஹென்றி, தன் மகனுக்கு கிரீடம் சூட்டிய பிசப்பைத் தண்டித்தது தனக்குவிட்ட சவால் என்று கருதினார். உடனே கோபமுற்றுக் கடுமையான வார்த்தைகளில் உத்தரவிட்டார். அவை "Are there non of the dastards eating my bread who will rid me of this turbulent priest?" என்று அதாவது தன்னை எதிர்க்கும் இந்த ஆர்ச் பிசப்பை வெல்ல என்னிடம் உப்புதின்ற ஒருவர்கூட இல்லையா? என்று கோபமாக கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த நான்கு (knights) வீரர்கள், காண்டர்பரி சென்று பெக்கட்டைக் கொன்று விட்டனர். இக் கொலையால் பெக்கட் ஒரு தியாகி ஆகிவிட்டார். இக் கொலைச் செய்தி கேட்ட மக்கள் பெக்கட்டை ஒரு தியாகி என்றழைத்தனர். இரண்டாம் ஹென்றியை ஒரு கோழை என்று அழைத்தனர். ஹென்றியும் தான் செய்தது தவறு என்று உணர்ந்தார். ஹென்றி தான் செய்த பாவத்திற்குப் பரிகாரமாக பெக்கட்டின் சமாதிக்குச் சென்று மண்டியிட்டு வணங்கியதோடு பெக்ட்டின் துறவிகள் கையில் சவுக்கு கொடுத்து தன்னை அடித்து தண்டிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனால் பெக்கட் விரும்பியபடி சமயத் திருச்சபை, நீதிமன்றங்களின் அதிகாரத்தில் தலையிடவில்லை. எனவே சமயச் சீர்த்திருத்தக் காலம் வரை திருச்சபைப் பணியாளர்கள் திருச்சபை நீதிமன்றத்தில் தான் விசாரிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியால் திருச்சபை மற்றும் போப் போன்றோர்களின் செல்வாக்கு உயர்ந்தது. திருச்சபை இப்பெருமை பெற்றதனால் போப் மூன்றாம் இன்னோசன்ட் ஜான், மன்னரை

இழிவுபடுத்தவும் மூன்றாம் ஹென்றி காலத்தில் போப் இங்கிலாந்தில் இருந்து அதிக வரிவசூலிக்கவும் முடிந்தது.

**ஜான்:**

இங்கிலாந்து அரசர் முதலாம் ரிச்சர்டு இறந்தபின் ஜான் பட்டத்திற்கு வந்தார் ஜான் ஆட்சிக்காலத்திலும் போப்புடன் மோதல் ஏற்பட்டது. கி.பி.1205-இல் ஹெர்பட் வால்டேர் (Herbert Walter), எனும் காண்டர்பரி ஆர்ச் பிசப் இறந்தார். அந்த இடத்திற்குப் புதிய ஆர்ச் பிசப் நியமனம் செய்யப்பட வேண்டும். முதலாம் ஹென்றிக் காலத்தில் செய்து கொண்ட ஒப்பந்தப்பந்தப்படி காண்டர்பரி ஆர்ச்பிசப்பை காண்டர்பரியில் உள்ள பிசப்புகள் ஒன்று சேர்ந்து மன்னர் முன் தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் காண்டர்பரி மாநிலத்தில் உள்ள பிசப்களுடன் ஏற்பட்ட சச்சரவால் பிசப்புகள், ரகசியமாக சந்தித்து ரெஜனால்டு என்பவரை ஆர்ச் பிசப்பாகத் தேர்வு செய்து ரோமுக்கு அனுப்பி போப்பின் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டனர். ஜான் இதனைக் கேள்விப்பட்டு, கோபமுற்று ரெஜினால்டுவை ஆர்ச்பிசப்பாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் பிசப்புகளை அழைத்துத் தனக்கு வேண்டிய நார்விக்கின் பிசப்பை ஆர்ச்பிசப்பாகத் தேர்வு செய்யுமாறு கட்டளை இட்டார். அவ்வாறே நார்விக் பிசப் ஜான்-டி-கிரேயைத் தேர்வு செய்து ரோமுக்கு அனுப்பி போப்பாண்டவரின் அங்கீகரத்தை நாடினர். போப் இருவரையும் அங்கீகரிக்காமல் தான் தன்விருப்பம் போல் ஸ்டீபன் லாங்க்டன் எனும் ஆங்கிலேயர் ஒருவரை ஆர்ச் பிசப்பாக நியமித்தார். இவர் சிறந்த அறிவாளி. அப்போது ரோமில் குடியிருந்தார். கோபமுற்ற ஜான், கான்டர்பரி பிசப்புகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தார். கார்டினல் ஸ்டீபன் லாங்க்டனை இங்கிலாந்துக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. போப் மூன்றாம் இன்னோசண்டு இதற்கு அஞ்சவில்லை. உடனடியாக ஒரு உத்தரவு போட்டார். அதன்படி இங்கிலாந்து திருச்சபைகள் மூடப்பட்டன. திருச்சபை மணிகள் ஒலிக்கப்படவில்லை. திருச்சபை நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. திருமணம் மற்றும் மரணம் போன்ற சுப, துக்க நிகழ்ச்சிகளுக்குப் பிசப், அபாட் போன்ற திருச்சபை ஊழியர்கள் செல்லக்கூடாது என்று தடைவித்திதார். அவ்வுத்தரவை உடனே மதித்து இங்கிலாந்து திருச்சபையினர் செயல்பட்டனர். அரசர் ஜான் திருச்சபை ஊழியர்களை சட்ட விரோதிகள் என்று பிரகடணம் செய்து அவர்களின்

சொத்துக்களைப் பறிமுதல் செய்தார். போப் ஜான் அரசரைச் சமயவிலக்குச் செய்தார். அதற்கும் அரசர் ஜான் அடங்கவில்லை. உடனே போப், ஜான் இங்கிலாந்தின் அரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்று அறிவித்து பிரான்ஸ் அரசர் பிலிப்பை இங்கிலாந்துக்கு எதிராக படையெடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார். அரசர் ஜான் பேரரசர் நான்காம் ஆட்டோவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு எதிர்த்தாக்குதல் நடத்தத் திட்டமிட்டார். ஆனால் தன் நாட்டில் வாழ்ந்த குறுநில மன்னர்களும் பிரபுகளுக்கும் குழப்பம் விளைவித்ததால் தன் நிலைமையை காப்பற்றிக் கொள்ள போப்பிடம் அடிபணிய வேண்டியதாயிற்று. போப் இங்கிலாந்தை ரோமுக்குக் கப்பம் கட்டும் நாடாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தார் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் போப்புக்கு 1000 மார்க் பணமாகக் கட்டவேண்டும் என்று நிபந்தனை விதித்தார். இதனால் இங்கிலாந்தின் சுதந்திரமும், கௌரவமும் போயிற்று. இத்தகைய சூழ்நிலையால் இங்கிலாந்தில் இருந்த குறு நில மன்னர்கள் மற்றும் பிரபுக்கள் (Magna carta) உரிமைச் சாசனம் என்று ஒன்றைத் தயர் செய்து அரசர் ஜானிடம் கையெழுத்தும் பெற்றனர்.

**ரோமானியப் பேரரசின் வீழ்ச்சி**

திருச்சபை மற்றும் போப்புக்கும் பேரரசர்களுக்கும் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகளால் பேரரசு வலுவிழக்கத் தொடங்கியது. பேரரசின் வீழ்ச்சிக்குப் போப்பாண்டவர் மட்டுமின்றி, திருச்சபையில் இருந்த உயர் பிசப்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளும் காரணமாக அமைந்தனர். திருச்சபை மற்றும் பேரரசுக்கு இருந்து வந்த சண்டையைப் பயன்படுத்தி சிற்றரசர்கள் தங்களுடைய நிலையைப் பலப்படுத்திக்கொள்ள முயன்றதால், அவர்கள் முழுச் சுதந்திரம் பெறாவிட்டாலும், ஓரளவு சுதந்திர அரசுகளாகவே செயல்படத் தொடங்கினர். நிலமானிய பிரபுக்களை அடக்கி ஆளும் அளவிற்கு பேரரசின் அதிகாரம் இல்லாது போயிற்று, நிலப்பிரபுக்கள் மற்றும் குறுநில மன்னர்கள் ஆகியவர்களுக்குள்ளே அவ்வப்போது நடைபெற்ற சண்டைகளை அடக்கும் திறனற்ற நிலையில் பேரரசர்கள் இருந்து வந்தனர். பேரரசின் கீழ் உள்ள பல பிரபுக்கள், குறுநிய மன்னர்கள் போன்றோரில் சிலர் பேரரசர்களையும், சிலர் போப்களையும் ஆதரிக்கத் தொடங்கினர் மற்றும் சில குறுநில மன்னர்கள் பேரரசு, போப் ஆகியோரிடையில் ஏற்பட்ட சண்டைகளில், தங்களின் அதிகாரத்தைப் பலப்படுத்த என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய முயற்சித்தனர். சுதந்திர நகரங்கள், பேரரசின் பெருமையைக் காக்கும் வகையில் தங்கள்

நகரங்களில் சட்டம் ஒழுங்கைக் காக்க முன்வரவில்லை. இத்தாலியும், ஜெர்மனியும் தங்கள் நலனைக் காப்பதில் இச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டன. பேரரசர் இருநாட்டாராலும் பலவீனமடையும் நிலைக்குத் தள்ளப்பட்டார். வட இத்தாலிய நகரங்கள், சிலவேளைகளில், போப்பையும், சிலவேளைகளில் பேரரசையும் ஆதரித்து இருவருக்கும் தீங்கு விளைவிக்கும்படி நடந்து கொண்டன.

புனித ரோமானியப் பேரரசு சுமார் 800 ஆண்டுகள் இருந்தது. இக்காலகட்டத்தில் அனைத்து விதமான வீழ்ச்சிகளையும் எழுச்சிகளையும் சந்தித்தது. இத்தாலியில் உருவாக்கப்பட்ட சுதந்திரக் குடியரசுகளின் புரட்சிப் போக்கால் பலகாலம் பேரரசு பல இடையூறுகளைச் சந்தித்தது. வம்சாவழியின் அடிப்படையில் புனிதரோமானியப் பேரரசர்களுக்குப் பிரான்ஸ் அரசர்கள் தொடர்ந்து பல தொல்லைகள் கொடுத்துக்கொண்டு வந்தனர். பேரரசர்களில் ஒருவர், நிலமின்றி, வருமானம் இன்றி, நிர்வாக அமைப்பு இன்றி பேரரசராக இருந்தார். (It was a ghost without dignity) அதாவது 'மரியாதையில்லாத ஒரு ஆவியாக இருந்தார்'. பேரரசின் கிழக்குப் பகுதியில் துருக்கியர்கள் அச்சுறுத்தலாக இருந்தனர். வடக்கே போலந்தியர்கள் அச்சுறுத்தி வந்தனர். பேரரசின் மையப் பகுதியில் இருந்த நகரங்களைக் கொள்ளையடிக்க ஸ்காண்டிநேவியர்கள் இருந்தனர். பேரரசின் மையப் பகுதியில் ஸ்விட்சர்லாந்து கூட்டரசு தன் அமைப்பை வலுப்படுத்திக் கொண்டிருந்தது. போப்பாண்டவர்கள் அவ்வப்போது பேரரசின் எதிரிகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருந்தனர். ஒரு காலகட்டத்தில் புனித ரோமானியப் பேரரசில் மூன்று பேரரசர்கள் இருந்தனர்.

மறுமலர்ச்சி மற்றும் சமயச் சீர்திருத்த இயக்கங்கள் பேரரசின் நியாயமற்ற அதிகாரங்களை எதிர்த்து சவால் விட்டதால் 'வீழ்ச்சியைத் தழுவத் தொடங்கியது'. இங்கிலாந்தும், பிரான்சும் தங்கள் சொந்த நலனுக்காக அவ்வப்போது பேரரசர்களுக்கு எதிராகப் போர்தொடுத்தன. பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் (Electors) தேர்வாளர்கள் தாங்களே தங்கள் பகுதிக்கு அதிகாரமிக்கவர்கள் என்று ஆக்கிக் கொள்ள முயன்றமையால் பேரரசரை மதிக்கவில்லை. தேசிய உணர்வு மற்றும் தேசிய அரசுகள் வளர்ச்சி பெற்றமையால் பேரரசின் வீழ்ச்சி தொடங்கியது. புனித ரோமனியப் பேரரசில் நூற்றுக்கணக்கான சிற்றரசுகள் சுதந்திரமாக ஆட்சி செய்யவும், போர் செய்யவும் அமைதி

உடன்பாடு செய்துகொள்ளவும் அதிகாரம் பெற்றமையால் புனித ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது. இறுதியாக முதலாம் நெப்போலியன் கி.பி. 1806-இல் புனித ரோமானியப் பேரரசை நீக்கினார்.

**இடைக்கால திருச்சபையின் நிலை**

இடைக்கால ஐரோப்பாவில் அரசியலில் புனித ரோமானியப் பேரரசு எப்படியோ, பொருளாதாரத்தில் நிலமானியமுறை எப்படியோ அப்படி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுதான் திருச்சபையும். சமுதாயம் மற்றும் கலாச்சார வாழ்க்கையில் கி.பி.4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.11-ஆம் நூற்றாண்டு வரை கிருத்துவ மதம் - தேசியமதமாக (State Religion) ஆக்கப்பட்டது. காண்ஸ்டான்டைன் மற்றும் தியோடோசியஸ் ஆகிய பேரரசர்கள் கிருத்துவ மதத்திற்கு பேரரசில் அதிக முக்கியத்துவம் கொடுத்து இருந்தனர். திருச்சபையின் செயல்பாட்டால் கி.பி. 4 முதல் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் கிருத்துவ மதம் மூலை முடுக்குகளில் எல்லாம் பரவியிருந்தது. திருச்சபை வாயிலாக இயேசுநாதரின் போதனைகளை மனித குலத்திற்கு எடுத்துக் கூறினர். குறிப்பாக சகோதரத்துவ தத்துவத்தைச் சிறப்பாகப் பாராட்டினர். இருப்பினும் இடைக்கால ஐரோப்பாவில் திருச்சபை இரு பிரிவாகச் செயல்பட்டது. கீழைநாட்டு அல்லது கான்ஸ்டாண்டி நோபினளைத் தலைநகராகக் கொண்ட பைசாண்டைன் பேரரசில் இருந்த திருச்சபைக்குத் தலைவர் பார்டிரியார்க் என்று அழைக்கப்பட்டார் மேற்கு நாட்டு அல்லது கிருத்துவ தலைநகரான ரோம் நகரில் போப் வாழ்ந்து வந்தார். இரு பிரிவினருக்கும் அவ்வப்போது போட்டிகள் சண்டைகள் ஏற்படும். பார்டிரியார்க் என்பவர் கீழைப் பேரரசரின் செல்வாக்கில் இருந்து வந்தார். ரோம் நகரில் வசித்து வந்த போப்பாண்டவர் மேலைக் கிருத்துவ மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விளங்கினார். இவர் சமயப்புரட்சி ஏற்படும் காலம் வரை, மத்திய, வடக்கு, தெற்கு, மேற்கு ஐரோப்பாவில் அத்துனை கிருத்துவ மக்களுக்கும் தலைவராக விளங்கினார்.

இத்தகைய பிரிவுக்கிடையேயும் திருச்சபை அமைப்பு ஒரு ஒப்பற்ற அமைப்பாக இருந்து வந்தது. அமைதி, புண்ணியம் அடைதல், தெளிவு, ஒற்றுமை, இரக்கம், ஒழுங்கு சகோதரத்துவம் ஆகியவற்றை பரப்புவதில் சிறந்த அமைப்பாக விளங்கியது. மக்களிடையே நல்லுறவை வளர்த்தால் ஐரோப்பாவில் வாழ்ந்த

ஜெர்மனியர், ஸ்லாவியர், செல்டிக் மற்றும் நார்டிக் மக்கள் போன்ற அனைவரையும் ஒரே மதத்தின் கீழ் கொண்டுவந்தது. கிருத்துவ உலகம் போப்பாண்டவரைத் தங்களின் வழிகாட்டி எனக் கருதியது. ரோமனியப் பேரரசைக் காட்டுமிராண்டிகள் படையெடுத்த போதும், சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்ட போதும், இடைக்காலம் இருண்ட காலம் என்று கருதப்பட்ட காலத்திலும், கிருத்துவ மக்கள் திருச்சபையையும், இயேசுவையும் போப்பின் மூலமாக ஒரு ஒளிவீச்சாகக் கருதினர்.

திருச்சபையானது தனிமனிதன் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழவேண்டும் என்ற வதிமுறையை வகுத்தது. இன்னும் அரசர்கள் மற்றும் பேரரசர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்று விதிமுறைகளை வகுத்தது. அக்கிரமங்கள், அநியாயங்களைத் திருச்சபை கண்டித்தது. கல்வி வளர்ச்சி பெற்றது. விருந்தோம்பலில் சிறந்து விளங்கியது. தர்மம் வளர்ந்தது. மக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பல பள்ளிகள் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் தோன்றின. இலத்தின் மற்றும் கிரேக்க மொழிகள் ஊக்குவிக்கப் பட்டன. ஏழைகளைக் காக்க முன்வந்தது. நோயாளிகளுக்குப் பல மருத்துவ மனைகளைக் கட்டியது. கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு ஆதரவு கொடுத்தது. இருண்டகாலத்தில் மடாலயங்கள் சிறந்த ஒளிவிளக்காகத் திகழ்ந்தன.

இடைக்கால மக்களுக்குப் பாதிரியார்கள் செய்த தொண்டு சிறப்புடையது. திருச்சபையின் சேவையால் எல்லோரும் பலன் அடைந்தனர். இன்னல் நிறைந்த காலத்தில் திருச்சபை சமூக ஒற்றுமையை வலியுறுத்தி தெய்வீகத்தை வளர்த்ததில் திருச்சபைக்கு இணையான அமைப்பு வேறு எதுவும் இல்லை. போப், பிசப்புகள், அப்பாட்டுகள் திருச்சபையின் வழிகாட்டிகளாவும், அதன் செயலாண்மைகளை வகுப்பவர்களாகவும், அதனைச் செயல்படுத்தும் அதிகாரிகளாகவும் இருந்தனர்.

## (இ) பைசான்டைன் அல்லது பைசாண்டியம் நாகரீகம்

கி.பி. 330-இல் கீழை ரோமானியப் பேரரசின் தலைநகரான பைசான்டைன் நகரைக் கான்ஸ்டாண்டிநோபிள் என்று பெயர் மாற்றம் செய்து கொண்டாலும், கீழை ரோமானிய நாகரீகத்தை சுட்டிக் காட்டும் சொல்லாக பைசான்டைன் விளங்குகின்றது. பைசான்டைன் நகரம் ஒருபோதும் ரோமனிய படையெடுப்பாளர்களுக்கு அடிபணியவில்லை. மாறாக அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தியுள்ளது. கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ரோமப் பேரரசு காட்டுமிராண்டி படையெடுப்புக்கு உட்பட்டபோதும் கீழை ரோமானியப் பேரரசு கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை சுதந்திரமாகவே இருந்து வந்தது. எனவே பல நூற்றாண்டுகளாக, உலகில் உள்ள பல நாகரீகங்களை விட சிறப்பானது என்று கூறாவிட்டாலும் ஐரோப்பாவில் சிறப்புமிக்க நாகரீகமாகப் பைசான்டைன் நாகரீகம் விளங்கிற்று. பைசான்டைன் கலாச்சாரம் கீழை நாகரீகங்களின் பிரதிபலிப்பாகவும் விளங்கி பிந்தைய நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்டது.

ரோமப் பேரரசில் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி என்ற பிரிவு இருந்தது. அவை ஒரு போதும் ஒரே குடையின் கீழ் வந்தது இல்லை. இரு பகுதிகளும் தனித்தனியாகவே இயங்கிவந்தன. ஹெலெனியப் பகுதி எனப்படும் கிரேக்கப் பகுதியில் ரோம் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு ஆதிக்கம் செலுத்திய போதும் கிரேக்கப் பகுதியில் அதன் கலாச்சாரம் மாறாமலேயே இருந்து வந்தது. மேலய மற்றும் கீழைய கலாச்சாரங்கள் மட்டுமின்றி அரசாங்க அமைப்பிலும், இந்த இரண்டு பகுதிகளும் ரோமப் பேரரசு வீழ்ச்சியடைதல் வரை தனித்தனியாகவே இயங்கி வந்தன. பிற்காலத்தில் வந்த ரோமப் பேரரசர்கள் கீழைநாட்டுப் பழக்கங்களையும் தன் அவையில் வைத்துக் கொள்ள முயற்சித்தமையால் கான்ஸ்டின்டிநோபிளை புறக் கணித்தனர். இறுதியாக சமய அடிப்படையில் கிரேக்க வைதீக கிருத்துவ மதம் என்ற அமைப்பு உருவாகியது முதற்கொண்டு கிழக்குப் பகுதியும் மேற்குப் பகுதியும் தனித்தனியாக இயங்கத் தொடங்கின. இவ்வாறு அரசியல், கலாச்சாரம், சமயம், தத்துவம் மற்றும் நிலவியல் அமைப்பு ஆகியவற்றில் கி.பி.4-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலேயே தனித்தனியாக இயங்கத் தொடங்கின.

**அரசியல்**

பைஸண்டைன் அரசர்களுள் சிறந்தவராகக் கருதப்படுவர் ஜஸ்டினியன் (527-565) எனும் பேரரசர் ஆவார். இவர் காலத்தில் கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைக்கப்பட்டுக் கீழை பேரரசின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். இவருடைய வல்லாட்சி முழுமையானதாகவும், இவருடைய அவை மிகவும் ஆடம்பரமானதாகவும் விளங்கிற்று. ரோமன் கத்தோலிக்க மதத்தைப் போல் அல்லாமல், கிரேக்க வைதீக கிருத்துவ மதம் நாட்டின் சேவைக்காக அமைக்கப்பட்டடதாகவும், நாட்டின் அரசியலில் தலைமையான-தாகவும் இவர் காலத்தில் செயல்பட்டது. பேரரசர் திருச்சபைக் குழுவிற்குத் தலைமை தாங்கினார். திருச்சபை அதிகாரிகளை நியமித்தார். திருச்சபைக் கொள்கைளில் ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்து வைத்தார் 15-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை கான்ஸ்டான்டைன் பேரரசைப் பல காட்டுமிராண்டிகள் தாக்கினர். ஆனால் அத்தாக்குதல்கள் அனைத்தையும் வெற்றிகரமாகப் பேரரசர்கள் முறியடித்தனர். ஜஸ்டினியன் மரணத்திற்குப் பின்னர் பால்கன் தீபகற்பப் பகுதியில் இருந்து இல்லீரியா மற்றும் திரேஸ் போன்ற பகுதிகளை ஸ்லாவ் இனத்தவர் தாக்கினர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முஸ்லீம்கள் ஆசியாமைனர் பகுதியைத் தாக்கினர்.

இருப்பினும் அரசாங்கம் சிறப்பாகச் செயல்பட்டதாகக் கூறமுடியாது. முஸ்லீம் மற்றும் ஏனைய அரேபியப் படையெடுப்பைப் போன்று உள் நாட்டு பிரச்சனைகள் அச்சுறுத்தலாகவே இருந்தன. பைசாண்டைன் பேரரசு மாசி டோனிய வமிச (867-1059) ஆட்சியின் போது அதன் அதிகார உச்சி நிலையை அடைந்தது. கிரீட், சைப்ரஸ் ஆகியவை ஆக்கிரமிக்கப்பட்டு பைசான்டைன் பேரரசின் கிழக்கு எல்லை எபிரேட்ஸ் வரை பரவியது. பாலஸ்தீனம் மற்றும் ஜெருசலம் ஆகியவற்றை மீண்டும் பிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தெற்கு இத்தாலி கைப்பற்றப்பட்டது. பால்கன் பகுதியில் பல்ஜார் (Bulgars) ஆட்சி நீக்கப்பட்டு அப்பகுதியும் பேரரசுடன் சேர்க்கப்பட்டது.

**பைசாண்டியப் பேரரசின் வீழ்ச்சி:**

மாசிடோனியர் வம்சத்தில் பின் வந்த அரசர்கள் திறமையற்றவர்களாக இருந்தமையால், பல பகுதிகளை இழந்தனர்.

செலஜுக் துருக்கியவர்கள் பேரரசின் கீழ் பகுதிகளை கி.பி.1059-இல் தாக்கிப் பிடித்தனர். அவர்கள் சிரியா, பாலஸ்தீனம் போன்ற பகுதிகளைப் பிடித்தனர். சிலுவைப் போரில் ஈடுபட்டவர்கள் கி.பி.1204-இல் கான்ஸ்டாண்டிநோபிளைப் பிடித்தனர். சில காலம் அவர்கள் பெலெப்போசைஸ், தெற்கு தேகோலி மற்றும் கான்ஸ்டாண்டிநோபிள் ஆகிய இடங்களில் தங்களின் ஆதிக்கத்தைச் செலுத்தினர். இவ்வாறு சிறு சிறு துண்டுகளாக இருந்த பைசாண்டைன் பேரரசு மீண்டும் கி.பி.1261-இல் ஒன்றிணைக்கப்பட்டது. ஆனால் முந்திய பேரரசின் நிழல்போலத்தான் காட்சியளித்தது. வியாபாரம் வீழ்ச்சியடைந்தது. கான்ஸ்டாண்டிநோபிளின் பழைய பெருமையும் செழிப்பும் காணப்படவில்லை. மேற்கிலிருந்து இலத்தீனியர்களாலும் கிழக்கில் இருந்து துருக்கியர்களாலும் கான்ஸ்டாண்டிநோபிள் தாக்கப்பட்டது. இறுதியாக கி.பி.1453-இல் துருக்கியர்களால் தாக்கப்பட்டடு, கைப்பற்றப்பட்டது. இப்பெருமை மிகுந்த நகரமான கான்ஸ்டாண்டிநோபின் இஸ்தான்புல் என்று பெயர் மாற்றம் செயய்யப்பட்டு துருக்கியர்களின் தலைநகரானது.

**தொழில் மற்றும் வர்த்தகம்:**

கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நடைபெற்ற வளமிக்க தொழில், வர்த்தகம் மற்றும் விவசாயத்தால் பைசான்டைன் பேரரசு செழிப்புமிக்க பேரரசாகக் காட்சியளித்தது. அதனால் இடைக்காலத்தில் மத்திய தரைச்கடல் நாடுகளில் தன்னுடைய நாகரீகத்தைப் பரப்பியது. வாசனைத் திரவியங்கள், மருந்துகள், ஏலம், மிளகு போன்ற பொருள்கள், விளையுயர்ந்த கற்கள் போன்றவை எல்லாம் கீழை நாடுகளிலிருந்து பைசான்டைன் நகரங்கள் வழியாகத்தான் மேலை நாடுகளுக்குச் சென்று கொண்டிருந்தன. இதனால் கான்ஸ்டாண்டிநோபின் ஆண்டியோக், டமாஸ்கஸ், பீருட், சலோனிகாசோரின்ந்த் போன்ற நகரங்கள் செல்வ நகரங்களாயின. தொழில் துறை கூட இரண்டாம் நிலையில்தான் வைக்கப்பட்டது. தொழில் துறையில் கான்ஸ்டாண்டிநோபின் நகரில் பல பஞ்சு தொழிற்சாலைகள் இருந்தன. கிரீஸில் இருந்து பட்டு இறக்குமதி செய்யப்பட்டதனால் பட்டு வியாபாரம் செழிப்புடன் இருந்தது. ஆபரணங்கள் மற்றும் சமயம் சார்ந்த ஆபரணங்கள், பாத்திரங்கள், யானைத் தந்தத்தால் செய்பட்டட வேலைப்பாடுகள் மற்றும் ஆயுதங்கள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

போதுமான உணவுப் பொருள்கள் கிடைக்கும் அளவிற்குச் சிறப்புடன் விளங்கிற்று. அதன் விளைவாகப் பைசாண்டியப் பேரரசு சுமார் $ 6,00,00,000, (ஆறு மில்லியன் டாலர்) அளவிற்கு ஆண்டு வருமானம் பெற்றதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

**சமூகம்:**

கிரேக்க நாகரீக மக்களைப் போன்றே பைசான்டிய நாகரீக மக்களும் நகர்ப்புற வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அதே வேளையில் அவர்கள் தொழில் சார்ந்த சமுதாயமாக வாழ்ந்தனர். இவர்கள் வடக்கு இத்தாலியில் இடைக்காலத்தில் நிலவிய வாணிப நகரங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தனர். பிரபுக்கள், வசதிபடைத்த அதிகாரிகள், நிலப்பிரபுக்கள் போன்றோர் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்கள் தனிப்பட்ட முறையில் திறமைசாலிகளாகவும் விளங்கினர். நடுத்தர மக்கள், வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் நல்ல முறையில் வாழ்ந்தாலும் இன்னும் பழமை வாதிகளாகவே வாழ்ந்து வாழ்ந்தனர். விவசாயிகள் வாழ்க்கை சிறப்பாக கூறும் அளவிற்கு இல்லை. பைசான்டியப் பேரரசில் வீழ்ச்சி ஏற்படும் போது பல விவசாயிகள் அடிமைகளாயினர்.

**கலை:**

பைசான்டைன் நாகரீகத்தில் கலப்பட கலாச்சாரம் கலைத் துறையிலும் வெளிப்பட்டது. பைசான்டைன் காட்சிக் கலை கிரேக்க ரோம மற்றும் கீழை நாடுகளின் தொகுப்பு ஆகும். ஆபரணங்கள், அடையாளச் சின்னங்கள் மற்றும் கோபுரம் போன்றவற்றைக் கீழை நாடுகளிலிருந்தும் பாஸிலிகா (Basilica) மற்றும் மோடில் (Modil) அலங்காரம் போன்றவற்றை ரோம கலாச்சாரத்திலிருந்தும் பெற்று கட்டடங்கள் படைக்கப்பட்டன. பேரரசர் ஜஸ்டினியன் காலத்தில் கான்ஸ்டாண்டிநோபிளில் கட்டப்பட்ட செயின்ட் சோபியா எனும் திருச்சபை இன்றளவும் புகழ் பெற்ற ஒன்றாகத் திகழ்கிறது. பைசான்டைன் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இக் கிருத்துவத் திருச்சபை கி.பி. 1453-ல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபினைக் கைப்பற்றிய பின் இஸ்லாமிய மசூதியாக மாற்றப்பட்டது. அதன் மத்திய கோபுரத்தின் சுற்றுப் பரப்பு 107 அடியாக உள்ளது. நான்கு அடுக்கு கொண்ட அமைப்பில் நான்கு விட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் உள் அமைப்பில் பளிங்குக் கற்கள்

பதிக்கப்பட்டுப் பல வண்ணங்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டுப் பல வண்ணங்களுடைய மொசைக் கற்களால் அழகுபடுத்தப் பட்டுள்ளது. அதன் வெளிப்புறத் தோற்றத்தை விட உள்புறத் தோற்றம் மிகவும் கவர்ச்சியுடையதாக உள்ளது.

பைசான்டைன் கட்டடக்கலையின் தாக்கத்தை இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் காணலாம். இவற்றை வடக்கு ஐரோப்பாவிலும் காணமுடியும்.

திருச்சபையில் எழுந்த உருவ வழிபாட்டுப் பிரச்சனைகளால் பல திருச்சபைகளில் உருவங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய சில உருவச் சிலைகளை வைத்து பைசான்டியக் கட்டடக் கலையைப் பற்றி அறிந்து கொள்ளலாம். திருச்சபை தன்னுடைய சிற்பிகள் மற்றும் ஓவியர்களுக்குப் பொருள் (thematic) அல்லது கொள்கை ரீதியான படைப்புக்களைப் படைக்க வேண்டும் என்று பணித்திருந்தது. அப்படைப்பாளர்கள் தங்களுடைய திருச்சபைகளுக்குத் தேவையான படைப்புகளைப் படைத்ததோடு ரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்குத் தேவையானவைகளையும் படைத்து விற்று வந்தனர். ஆபரண நகைகள், பட்டு ஆடைகள் போன்றவைகள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டன. இருந்த போதிலும் பைசான்டைன் கலை இயற்கையானது அல்ல. கற்பனையானதும் அல்ல; இயல்பான ஒன்றும் அல்ல. சமய அடிப்படையிலுள்ள ஒரு கலைப்படைப்பாகத்தான் இருந்தது.

**சமயம் மற்றும் தத்துவம்:**

ரோமானியப் பேரரசின் கீழைப் பகுதிகளில் கிருத்துவ மதம் பரவியபோது ரோமன் கத்தோலிக்க கிருத்துவ மதத்தின் சில கொள்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சமயக் கொள்கைகளில் ரோமன் கத்தோலிக்க கிருத்துவத்துக்கும் கிரேக்க வைதீக கிருத்துவத்துக்கும் இடையே அடிப்படை வேறுபாடுகள் இருந்தன. ரோமன் கத்தோலிக்கத்தில் இருந்த பல கொள்கைகளைக் கீழை ரோமானியப் பேரரசில் இருந்தவர்கள் குறை கூறினர். இயேசுவின் தெய்வீகத் தன்மையை அவர்கள் நம்பத் தயாராக இல்லை. ஜேகோபைட்டுகள் இயேசுவுக்கு இரு குணாதிசயங்கள் இருந்ததாகக் கூறினர். இவைகள் எல்லாம் செவிவழிச் செய்திகள் என்று ரோமன்

கத்தோலிக்கர் கண்டனம் செய்தனர். ஆனால் ரோமன் கத்தோலிக்கக் கீழைய ரோமானியப் பேரரசைச் சபித்தனர். அவைதான் உண்மை என்று நம்பினர். கி.பி.ஏழாம் நூற்றாண்டிலேயே ரோமில் உள்ள பேப்பாண்டவரின் மேலாண்மையைக் கான்ஸ்டாண்டிநோபிளில் உள்ள பேரரசரோ அல்லது சமயத் தலைவரான பாட்ரியார்க்கோ அங்கீகரிக்கவில்லை. இறுதியாக உருவ வழிபாட்டுப் பிரச்சனையால் ரோமன் கத்தோலிக்க மதத்திற்கும், கிரேக்க வைதீக கிருத்துவ மத்திற்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டது. கி.பி.1054-இல் போப்பாண்டவர் கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்து கிரேக்க வைதீக மதத் தலைவரான பாட்ரியார்க் என்பவரைச் சமய விலக்கு செய்தார். அதன் பின்னர் சமயத்தின் இரு பிரிவினரை இணைக்கும் முயற்சி நடைபெறவில்லை.

**கோட்பாடு:**

கிரேக்க வைதீக கிருத்துவ மதம் புனித ஆவி தந்தை மூலம் தான் வருகிறது என்று கூறுகிறது. அதன் உறுப்பினர்கள், மூன்று செயல்களால்தான் இறைவன் அருள் பெறமுடியும் என்ற நம்புகின்றனர். அதாவது மதகுருமார்கள் திருமணம் செய்து கொள்வது உடலை நலமாக வைத்துக்கொள்ள புனித எண்ணெயைத் தேய்த்துக்கொள்வது, பாவங்களை மன்னிப்பது ஆகியவையாகும். பாவமன்னிப்புச் சீட்டு விற்பது போன்ற செயல்பாடுகளில் நம்பிக்கையில்லை. இறந்தவர்கள் மோட்சம் பெற பாவமன்னிப்புச் சீட்டு விற்பதற்குப் பதிலாக இறந்த உடலுக்குப் பிரார்த்தனை செய்வதே சிறந்தது என்று கருதினர். அவர்கள் இயேசுவைக் கடவுளின் அவதாரம் என்று நம்பவில்லை. ஆனால் பாட்ரியாக்கின் தெய்வீகத் தன்மையை மதித்தனர். நோன்பு இருப்பதை அவர்கள் ஆதரித்தனர். புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நோன்பு இருக்கவேண்டும் என்றும் ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் விருந்தின் போதும் நோன்பு இருக்கவேண்டும் என்றும் கூறினர். ஈஸ்டர் திருவிழாவிற்கு முன் 40 நாள் நோன்பு இருக்க வேண்டும் என்பதையும், கன்னிமேரியின் விழாக்களிலும், சீடர் பிலிப் விழாக்காலத்திலும், ஜான் பாதிரியார் கொலை செய்யப்பட்ட நினைவு நாளின் போதும் நோன்பு இருக்கவேண்டும் என்றும் கூறினர். திருச்சபையில் போதிக்கும் நேரம் குறைக்கப்பட்டது. திருச்சபைப் பிரார்த்தனையின் போது இசை அமைப்பது நிறுத்தப்பட்டது. கூட்டுப் பிரார்த்தனைகள் வலியுறுத்தப்பட்டன.

மத குருமார்கள் இருவகைப்பட்டனர். மேல்குருமார்கள் (upper Clergy) கீழ் குருமார்கள் (Lower clergy) என இருவகைப்படடனர். மேல்மட்ட குருமார்களைப் பிசப்கள், ஆர்ச் பிசப்கள், பாட்ரியார்க்குகள் போன்றோர் மடாலயங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீழ்மட்ட குருமார்களான, வாசகர்கள், பாடகர்கள், போதகர்கள், துணைப் போதகர்கள் போன்றோர் மேல்மட்ட குருமார்கள் ஆக முடியாது. கிரேக்க வைதீக கிருத்துவத்தில் மதகுருமார்களுக்கு அதிக முக்கியத்துவம் இல்லை. ரோமானியக் கத்தோலிக்க மதத்தை ஒப்பிடும் போது, திருச்சபை அமைப்பில் அதிகாரக் குவிப்பு கிரேக்க வைதீக கிருத்துவதத்தில் இல்லை. கிரேக்க வைதீக கிருத்துவத்தைப் பின்பற்றும் நாடுகள் தங்கள் நாட்டுக்கு ஏற்றுவாறு கோட்பாடுகளைப் பின்பற்றிக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். எகிப்து மற்றும் சிரியாவில் மெல்சிட்ஸ் (Melchites) திருச்சபையும், மத்திய ஐரோப்பாவில் ருத்தீனியன் திருச்சபையும், ஹங்கேரியில் கிரேக்க ரோமானிய திருச்சபையும், பல்கேரியாவில் ஒருங்கிணைந்த திருச்சபையும் என்று எல்லா வகையான திருச்சபைகளும் இருந்தன. ஒவ்வொரு திருச்சபையும் மற்றொன்றிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன.

**பைசான்டைன் நாகரீகத்தின் முக்கியத்துவம்:**

ரோமானிய நாகரீகத்திலிருந்து பைசான்டைன் நாகரீகம் பல வகைகளில் வேறுபட்டது. மேலை ரோமானியப் பேரரசின் கீழ் பல நிலமானிய பிரிவுகள் இருந்தனர். ஆனால் கீழை ரோமானியப் பேரரசின் பைசான்டைன் பேரரசு ஒரு நிலையான முழுமை பெற்ற மத்திய அதிகாரத்தின் கீழ் செயல்பட்டது. கீழை ரோமானியப் பேரரசு வியாபாரம் தொழில் மற்றும் நகரமைப்புக் கொண்டதாக விளங்கிற்று. மேலை ரோமினியப் பேரரசு விவசாயத்தை முக்கிய தொழிலாகக் கொண்டு விளங்கிற்று. சமய அடிப்படையிலும் இவ்விரு நாகரீகங்களுக்கிடையே வேறுபாடு இருந்தது. மக்களும் பல விதமான மொழிகளைப் பேசினர். இருப்பினும் கலாச்சார அடிப்படையில் நாகரீகத்தின் தாக்கம் குறிப்பாக மேலைநாட்டு கலைத் துறையில் அதிகம் காணப்பட்டது. கட்டடக் கலை மற்றும் ஓவியக் கலையில் பைசான்டைன் நாகரீகத்தாக்கம் மறுமலர்ச்சி காலத்திலும் இருந்தது.

மருத்துவத் துறையில் ஹிப்போகிரேட் மற்றும் கேலன் (Gallon) ஆரம்பித்த பணியினை ஆக்டியஸ் மற்றும் எஜினாவின் பால்

தொடர்ந்து செய்து வந்தனர். பைசான்டைன் நாகரீகத்தின் முக்கியத்துவம் கிரேக்க நாகரீகம் காக்கப்பட்டதேயாகும். இருப்பினும் பைசான்டைன் நாகரீகம் தொன்மைக் கலாச்சாரத்தைக் காத்தது. இத்தகைய பைாசன்டைன் நாகரீகம் கி.பி.1453-இல் துருக்கியர்கள் கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியதால் முடிவுக்கு வந்தது. துருக்கியர்கள் பால்கன் தீபகற்பம் மற்றும் ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதி முழுவதையும் கைப்பற்றினர். பைசான்டைன் காலத்தில் படைக்கப்பட்ட கலை, கட்டடக் கலை அனைத்தும் அழிக்கப்பட்டன. துருக்கியர்களின் வீழ்ச்சியால் ஒரு சில பைசான்டைன் கலை தற்போது வெளிச்சத்திற்கு வருகின்றது.

### *(ஈ) இஸ்லாம் சமயத் தோற்றமும் வளர்ச்சியும்*

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அரேபியாவில் ஒரு புதிய சமயம் தோன்றியது. அச்சமயத்தால் மனித குலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. வரலாற்றுக்கு முந்திய காலம் தொட்டு அரேபிய மனிதகுலம் நல்ல நிலையில் வாழ்ந்து வந்தது. இந்த அரேபியாவில்தான் பாபிலோனியா, அசீரியா, போனிசியா போன்ற நாகரீகங்கள் தோன்றின. அதற்குப் பின்னர் பல ஆண்டுகாலம் அரேபியா பற்றி அதிகம் தெரியாத நிலை இருந்தது. பின்னர் அரேபியாவின் வடக்குப் பகுதியில் அலெக்ஸாந்தர் படையெடுப்பின் போது பயணித்தாகவும், ரோமானியர்கள் அரேபியாவின் உள்பகுதியில் ஊடுருவியதாகவும் அறிகிறோம். அரேபியாவில் உள்ள அனைத்து நிலங்களும் விவசாயத்துக்குப் பயன்படும் நிலங்களாக அமையவில்லை. எனவே ஆங்காங்கே சில மலைவாழ் மக்கள் (Tribes) நாடோடிகளாக வாழ்ந்து வந்தனர். செங்கடல் (Red sea) கரையில் உள்ள அரேபியப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மட்டும் அங்குள்ள நிலங்கள் விவசாயத்திற்குப் பயன்பட்டமையால், விவசாயம் செய்து வாழ்க்கை நடத்தி வந்தனர். இவ்வாறாக அரேபியாவில் வாழ்ந்த மக்கள் அந்நாட்டின் நில அடிப்படையில் இரண்டு விதாமாக வாழ்க்கை நடத்தினர். ஒரு பிரிவினர் நகர்ப்புற மக்களாவும், மற்றொரு பிரிவினர் பாலைவன மக்களாகவும் வாழ்ந்து வந்தனர். அரேபியாவில் செங்கடல் கடற்கரையில் வாழும் நகர்ப்புற மக்கள் தங்களுக்கென்று ஒரு தெய்வத்தை வழிபட்டனர். அத்தோடு அவர்கள் மரங்கள், மலைகள், நட்சத்திரங்கள் எல்லாம் புனிதமானவை, வணங்கத் தக்கவை என்று கருதினர். மெக்கா நகரில்

வாழ்ந்த மக்கள் (Kaaba) காபா எனும் கருங்கல்லை தெய்வமாக வழிபட்டனர். அம்மக்கள் அக்காபா எனும் கல் சொர்க்கத்தில் (Heaven) இருந்து விழுந்ததாக நம்பினர். பொதுவாக அரேபிய மக்களிடையே பலதார மணம் கடைப்பிடிக்கப்பட்டது. அவர்களுடைய சமூக வாழ்க்கையில் மூடநம்பிக்கை அதிகம் இருந்தது. அரேபியர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தபோதும் உலகின் மற்ற பகுதியினரோடும், அவர்களுக்குள்ளேயும் தொடர்பின்றியே வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய சமூக சமய சூழ்நிலையில்தான், மெக்கா நகரில் கி.பி. 569-இல் முகமது நபி பிறந்தார். பிறந்த சில நாட்களில் முகமது நபியின் பெற்றோர்கள் இறந்து விட்டனர். எனவே அவருடைய தாத்தாவும், தாய்மாமனும் அவரை வளர்த்தனர். ஆரம்பக்காலத்தில் தெற்கு அரேபியா மற்றும் சிரியா ஆகிய பகுதிகளுக்குத் தன் தாத்தா, மாமாவுடன் ஒட்டக வியாபாரத்தில் ஈடுபட்டுத் தன்னுடைய வாழ்க்கையை நடத்தினார். அவர் தன்னுடைய 25-வது வயதில் ஒரு விதவையை மணந்தார். அந்த விதவை ஒரு பெரும் செல்வந்தரின் மனைவி. எனவே அவருக்குப் போதுமான பணவசதி கிடைத்து. இவ்வசதியை வைத்துக்கொண்டு பல இடங்களுக்கு செல்லும் இடங்களில் பல யூதர் வியாபாரிகளையும் கிருத்துவத் துறவிகளையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர்களோடு சமயம் சார்ந்த கருத்துக்களைக் கலந்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. மிக குறுகிய காலத்திலேயே இயேசு கடவுளின் பிரதிநிதி என்பதை உணர்ந்தார். அதேபோன்று தானும் மற்றொரு கடவுளின் பிரதிநிதி என்று உணர்ந்தார். குழந்தைப் பருவம் முதல் அவர் சமய அடிப்படையில் தியானம் செய்வதிலும் கடவுளை வழிபடுவதிலும் ஆர்வம் காட்டி வந்தார். அவ்வேளையில் இறைவனின் சக்தியை காணமுடிந்தது. இவ்வாறு சாமானியராகப் பிறந்த முகம்மது, அங்கும் இங்கும் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்த அரேபியர்களை ஒருங்கிணைத்து ஒரு பலம் பொருந்திய நாடாக உருவாக்கினார். அந்நாடு ஒரு நூற்றாண்டுக்குள் தங்கள் ஆட்சியையும், மொழியையும் மேற்கே ஸ்பெயின் முதல் கிழக்கே சீனாவரை பரப்பி தங்கள் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தது.

**முகமது நபிகளின் போதனைகள்:**

நபிகள் தன்னுடைய நாற்பதாவது வயதில் உலகிற்கும், அரேபியர்களுக்கும் தன் போதனையைப் போதிக்கத் துவங்கினார். அவர்

போதித்த சமயம் இஸ்லாம் எனப்படும். இஸ்லாம் சமயத்தின் புனித நூல் குர்ரான் எனப்படும். குர்ரான் எனும் நூல், நபிகள் நாயகத்தால் அவ்வப்போது கூறப்பட்ட சமயக் கருத்துக்களைத் தொகுத்துக் கொடுக்கப்பட்ட ஒரு நூல் ஆகும். நபிகள் நாயத்தின் முக்கிய போதனைகளாவன உலகில் இருப்பது ஒரே கடவுள் தான். அவர்தான் அல்லா. அல்லாவின் அருளைப் பெறும் வழியினைக் காட்டுபவர்கள்தான் மோசஸ் இயேசு நாதர் மற்றும் முகம்மது. கடவுளை நம்பி வாழ்பவர்கள் மரணத்துக்குப் பின் சொர்க்கத்தை அடைவர் என்று போதித்தார். மேலும் மனிதர்கள் நன்னடத்தையோடு நடந்து கொள்ளவேண்டும் என்றும் கூறினார். முஸ்லீம் எனப்படும் இஸ்லாமியர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களைச் சகோதரர்களாகக் கருதவேண்டும். அன்பாக நடத்தவேண்டும். ஏழை எளிய மக்களுக்கு உதவவேண்டும். மற்றவர்களோடு பழகும்போது நாணயத்துடன் நடந்து கொள்ளவேண்டும். பக்தியுள்ள ஒவ்வொரு இஸ்லாமியரும் ஒரு நாளுக்கு ஐந்துமுறை (வணங்கவேண்டும்) தொழுகை (வணங்குதல்) செய்தல் வேண்டும். ரமலான் மாதத்தின் போது நோன்பு இருக்கவேண்டும். ஒவ்வொரு இஸ்லாமியரும் ஆண்டுக்கு ஒருமுறை சமயப் பயணமாக மெக்கா நகருக்குச் செல்லவேண்டும் என்று பல நற்குணங்களைப் போதித்தார்.

ஆரம்பத்தில் அரேபியர்கள் இவருடைய போதனைகளை ஏற்க மறுத்தனர். இவருடைய சமயத்தை ஏற்றால் காபா எனும் கடவுளை வணங்க ஒவ்வொரு ஆண்டும் வரும் பக்தர்களால் கிடைக்கும் வருமானம் போய்விடும் என்று கருதினர். எனவே முகமது நபிகளைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டினர். முகமதுவும் கி.பி.622-இல் தன் உயிரைக் காத்துக்கொள்ள தப்பி மெதினா நகருக்கு ஓடினார். இந்த ஆண்டு தான் முஸ்லீம்களின் யுகம் ஆன (Hejra) ஹெஜ்ராவின் தொடக்கமாகும். தன்னுடைய பிரசாரத்தில் மெதினாவில் வெற்றி கண்டார். அங்கு பல சீடர்களைப் பெற்றார். அங்கு ஆட்சியில் இருந்த அரசரையும் தன் கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி செய்தார். பின்னர் ஒரு பெரும் படையை உருவாக்கி, மெதினாவை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். அங்கிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் அரேபியா முழுவதையும் தன் ஆடசியின் கீழ் கொண்டு வந்தார். பின்னர் பாரசீகம் மற்றும் கான்ஸ்டான்டிநோபின் ஆகியவற்றைக் கைப்பற்ற எண்ணினார். ஆனால் அத்திட்டம் நிறைவேறுவதற்குள் கி.பி.632-இல் இயற்கை எய்தினார்.

முகமது நபிகளுக்குப் பின்னர் அவருடைய பிரதிநிதியாக, அவருடைய மாமனார் (மனைவியின் தந்தை) அபுபக்கர், காலிபாவாக (Khalip) பதவி ஏற்றார். இரண்டு ஆண்டுகளில் அபுபக்கர் இறந்துவிடவே அவருக்குப்பின் ஓமர் என்பவர் காலிபாவாக பதவி ஏற்றார் ஓமர் தன்னுடைய சிறந்த தளபதி காலத் என்பவர் துணையுடன் ரோமப் பேரரசர் ஹெர்குலிஸ் என்பவரைத் தோற்கடித்து டமாஸ்கஸ், சிரியா, பாலஸ்தீனம், போனீஸியா ஆகிய பகுதிகளைப் பிடித்தார். பின்னர் ஓமரின் படைகள் எகிப்துக்கு எதிராகப் படையெடுத்துச் சென்று அலெக்ஸாண்டரியா எனும் நகரைப் பிடித்தது. அங்கு ஓமர் போஸ்டாத் எனும் நகரை உருவாக்கினார். இந்நகர்தான் பின்னர் கெய்ரோ எனும் பெயர் பெற்றது. பின்னர் ஓமரை ஒரு பாரசீக அடிமை கொலை செய்துவிடுகிறான். ஓமரின் கொலைக்குப் பின்னர் ஆட்டாமான் என்பவர் காலிபாவாக 12 ஆண்டுகள் பதவியில் இருந்தார். 12 ஆண்டுகள் முடிவில் ஆட்டோமான் என்பவரும் கொலை செய்யப்படுகின்றார். ஆட்டோமான் மரணத்துக்குபின் முகமது நபியின் மருமகன் (மகள் கணவர்) அலி என்பவர் காலிபாவாக பதவியேற்கிறார். அலி ஒரு சிறந்த முஸ்லீம் பக்திமான். ஆனால் கலிபாவை அடைய விரும்பிய பலரின் எதிர்ப்புக்கு ஆளாகின்றார். எனவே அவர் பல போர்களில் ஈடுபடுகின்றார். அதாவது 110 நாட்களில் 90 போர்கள் புரிந்தார் என்று சொல்லப்படுகின்றது. இறுதியில் அலி கொல்லப்படுகின்றார். அத்துடன் அதுவரை நடைபெற்ற வாரிசுரிமைப்போர் முடிவுக்கு வந்தது. இதற்குப் பின்னரும் காலிபா (Caliphate) வரலாற்றில் அமைதி இல்லை. உள்ளுக்குள் சண்டை சூழ்ச்சிகள், விசம் வைத்துக் கொள்வது, கொலை செய்வது என்று பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. இத்தகைய நிலை கி.பி.8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாம் வாலித் (Walid) என்பவர் காலிப் ஆக பதவி ஏற்கும்வரை நடைபெற்றது. இவர் தான் ஆரம்பகாலக் காலிபாக்களில் மிகவும் பலம் பொருந்தியவராகவும், சிறந்தவராகவும் காணப்படுகின்றார். இவர் காலத்தில்தான் அரேபியர்கள் தங்கள் ஆட்சியையும் ஆதிக்கத்தையும் மேற்கே ஸ்பெயின் முதல் கிழக்கே சீனா வரை செலுத்தினர் என்று கூறப்படுகிறது.

**ஸ்பெயின் மூர்கள்**

கி.பி. 711-இல் முஸ்லீம் ஆட்சியாளர் டாரிக் என்பவர் தலைமையில் 12000 அரேபியர்கள் ஒன்று சேர்ந்து ஐரோப்பாவின்

அருகாமையில் உள்ள உயர்ந்த மலையை ஹெர்குலிசின் பழைய நுழைவாயில் வழியாகச் சென்றடைந்தனர். அம்மலையை டாரிக் மலை என்று அழைத்தனர். அப்போது இருந்து இம்மலை ஜிப்ரால்ட்டர் (Gibraltar) என்று அழைக்கப்படுகிறது. டாரிக்கின் வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்து, இப்பயணத்தால் உந்தப்பட்ட ஆப்பிரிக்கர் பலர் வளைகுடாவைக் கடந்து ஸ்பெயின் நாட்டுக்குள்ளும் ஊடுருவினர். ஜிப்ரால்டாரில் இறங்கிய ஆறு மாத காலத்திற்குள் முழு ஸ்பெயின் நாடும் முஸ்லீம் ஆதிகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அவ்வாறு கொண்டு வரப்பட்ட, ஸ்பெயினில் குடியேறிய அரேபியர்கள், சிரியர்கள், பெர்பர்கள் (Berbers) ஆகியோரை ஐரோப்பியர் மூர்கள் என்று அழைத்தனர். ஸ்பெயின் முழுவதையும் தங்கள் வசப்படுத்திய பின் முஸ்லீம் படைவீரர்கள் பிரனீஸ் கணவாய் வழியாகப் பிரான்ஸுக்குள் நுழைந்தனர். அங்கு ஆரம்பக் காலத்தில் சிறுவெற்றியைத் தழுவினாலும் கி.பி. 732-ஆம் ஆண்டு டூர்ஸ் போரில் (Battle of Tours) சார்லஸ் மார்டல் என்பவரிடம் படுதோல்வி அடைந்தனர். கிட்டத்தட்ட முகமது நபி மறைந்து நூறு ஆண்டுகளுக்குப்பின் இத்தோல்வியை அடைந்தனர். சார்லஸ் மார்டெல் என்பவர் ஐரோப்பாவில் முஸ்லீம் ஆதிக்கம் நுழைய விடாமல் தடுத்து முஸ்லீம் படையெடுப்பைப் பின்வாங்கச் செய்தார். இருந்தாலும் டூர்ஸ் போரில் பின் வாங்கிய முஸ்லீம் படையினர் மீண்டும் ஸ்பெயினுக்கு வந்து ஸ்பெயினை ஏழு நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.

**கார்டோவா காலிபா (Caliphate of Corova)**

அரேபியாவில் உள்ள டமாஸ்கஸ் காலிபாவிற்கு வாரிசுரிமைப்போர் ஏற்பட்டபோது, அரச குடும்பத்தைச் சார்ந்த அனைவரும் கொல்லப்பட்டனர். அப்துல் ரஹ்மான் என்ற ஒருவர் மட்டும் தப்பிச்சென்று ஸ்பெயின் வந்தடைந்து கார்டோவா எனும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஒரு சுதந்திர நாட்டை உருவாக்கினார். இது மேலை நாட்டில் ஒரு சிறந்த நாடாகத் திகழ்ந்தது. அப்துல் ரஹ்மானின் பேரனாகிய மூன்றாம் அப்துல் ரஹ்மான்தான் கார்டோவா காலிபாக்களில் தலைசிறந்த மன்னர் ஆவார். இவருடைய ஆட்சிக்காலத்தின் போது ஸ்பெயினில் அமைதியும், செழிப்பும் நிலவியது. இவர் காலத்தில் சமயப் பொறை கடைப்பிடிக்கப்பட்டது. இவருடைய ஆடசிக்காலத்தில் யூதர்களுடனும், கிருத்துவர்களுடனும் நல்லுறவு வைத்திருந்தார். வல்லமை கொண்ட அரசாக இருந்தபோதும், அதிகாரத்தைப் பயன்படுத்தி

திருச்சபைகளைக் கைப்பற்றாமல், மூன்றாம் அப்துல் ரகுமான், கார்டோவா எனுமிடத்தில் இருந்த புனித வின்சென்ட் எனும் திருச்சபையின் பகுதியை விலைகொடுத்து வாங்கினார். பின்னர் முழுத் திருச்சபையையும் விலை கொடுத்தே வாங்கி அவ்விடத்தில் மிகவும் அழகு பொருந்திய ஒரு மசூதியைக் கட்டினார். அக்கட்டிடம் இன்றளவும் ஸ்பெயினில் ஒரு நினைவுக் கலைச் சின்னமாக காட்சியளிக்கிறது. இப்பெரிய மசூதி கட்டியதோடு கார்டோவா நகரில் இன்னும் பல அழகு பொருந்திய கட்டடங்களைக் கட்டினார். அதனால் அக்காலத்தில் அந்நகரமே உலகின் அலங்கார ஆபரணம் (Jewel of the world) என்றழைக்கப்பட்டது. அந்நகரம் உலகில் உள்ள வளமிக்க அழகுபெற்ற நகரங்களில் ஒன்றாகக் காட்சியளித்தது. காரணம், பல பிரமாண்டமான மசூதிகள், மாளிகைகள், பூங்காக்கள், பொதுமக்கள் குளிக்கும் நீச்சல் குளங்கள், அகன்ற சாலைகள், சாலைகளில் உள்ள விளக்குகள் என்று மிகவும் சீரமைக்கப்பட்ட நகரமாகக் காட்சியளித்தது. இந்நகரில் ஏறத்தாழ இரு நூறு ஆயிரம் வீடுகளில் ஒரு மில்லியன் மக்கள் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. எனவே அக்காலத்தில் ஐரோப்பாவில் இருந்த வேறு எந்த நகரமும், இந் நகரைப் போன்று சிறந்த அழகு பெற்றதாகவும் செழிப்புடன் வளமாகவும் இருந்தாகக் கூறமுடியாது.

மிகக் குறைந்த காலத்தில் அதிக பரப்பில் இஸ்லாம் கலாச்சாரம் வளர்ந்தமைக்கு அதனுடைய ராணுவ வெற்றி மட்டும்தான் காரணம் என்று கூறமுடியாது. இஸ்லாம் சமயத்தில் இருந்த நல்ல பல கருத்துக்களும் காரணமாகும். முகமது நபி காலத்தில மக்களிடையே இஸ்லாமியத்திற்கு இருந்த செல்வாக்கு, அச்சமயத்தில் இருந்து எளியமுறையில் புரிந்து கொள்ளும் கொள்கைகள் பூசாரிகள், சமயச்சடங்குகள் போன்றவை இல்லாமையால் ஏற்பட்ட சுதந்திர உணர்வு போன்றவைகள் எல்லாம் காரணமாக அமைந்துள்ளன. இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றிய மக்களிடையே இருந்த ஆர்வம். இச்சமயத்தில் இருந்த சமூக பொருளாதார சமத்துவக் கொள்கை ஆகியவை சாதாரண மக்களும் இச்சமயத்தில் சேர தூண்டிய காரணங்களாகும். இஸ்லாமிய அரசர்கள் எல்லைகளைப் பிடிப்பதில் மட்டும் ஆர்வம் செலுத்தாமல் கலாச்சாரத்தைப் பரப்புவதிலும் ஆர்வம் காட்டினர். இஸ்லாமிய கலாச்சாரம் என்பது, அரபிக், கிரேக்க, ரோம, யூத, பாரசீக மற்றும் இந்திய கலாச்சாரங்களின் கலப்பு ஆகும். பாக்தாத் கார்டோவா

நகரங்கள், ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் கல்வி ஸ்தலங்களாக விளங்கின.

**இஸ்லாமிய ஆட்சியால் ஏற்பட்ட நன்மைகள்**

இஸ்லாமியர்கள் இந்தியா மற்றும் கிரேக்கம் ஆகிய நாடுகளில் தாங்கள் கற்ற கல்விச் செல்வத்தை ஸ்பெயினிலும் பின்னர் ஸ்பெயின் மூலம் ஐரோப்பாவிற்கும் எடுத்துச் செல்கின்றனர். கணிதம், வானசாஸ்திரம், புவியியல் மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களில் புத்துணர்வு ஊட்டினர். புவியியலில் கிரேக்க எழுத்துக்களைப் புகுத்தினர். அல்ஜீப்ரா (Algebra, Trignometry) டிரிக்னமெட்ரி போன்ற கல்வியை வளர்த்தனர். அரிஸ்டாட்டில் இலத்தீன் மொழியில் எழுதிய நூல்களை அராபிக் மொழியில் மொழி பெயர்த்தனர். ஐரோப்பியர்கள் அரிஸ்டாட்டில் போன்ற தத்துவ மேதைகளின் எழுத்துக்களை அராபிக் மொழியில் இருந்து தங்கள் மொழியில் மொழி பெயர்த்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டனர். இந்தியாவிலிருந்து கணிதத்திற்குப் பயன்படும் எண்களைக் கற்றுக் கொண்டனர். குறிப்பாக (Zero) (Cyber) பூஜ்ஜியம் என்பதை கணித வசதிக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் காலத்தில் ஸ்பெயினில் செவில்லி, சிரியாவில் டமாஸ்கஸ், எகிப்தில் கெய்ரோ, அரேபியாவில் பாக்தாக் போன்ற இடங்களில், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் நிறுவினர். அவை மிக வளர்ச்சி பெற்ற நிறுவனங்களாக விளங்கின.

பொருளாதார வாழ்க்கையிலும் இஸ்லாமியர் ஆட்சி பெரும் பங்காற்றியுள்ளது. அரேபியர்கள் பாத்திரங்கள் செய்வது, உலோக வேலை மற்றும் சாயம் போடுதல் போன்ற குடிசைத் தொழில்களில் சிறந்து விளங்கினர். இவர்கள் தொழில் நுட்பத்தில் சிறந்தவர்கள் என்பதற்கு ஒரு உதாரணம், ஒரு காலத்தில் பிராய்பர்ட் அரசர் மற்றும் இஸ்லாமிய காலிபா, ஒருவருக்கொருவர் பல அன்பளிப்புகளை அனுப்பியபோது, செம்பால் செய்யப்பட்ட ஒரு கடிகாரமும் இருந்தது. முஸ்லீம் பெரிய அளவில் வியாபாரம் செய்து வந்தனர். ஏலம், மிளகு, கிராம்பு போன்ற வாசனைத் திரவியங்களை இந்தியா போன்ற கீழை நாடுகளில் இருந்தும் முத்துக்களை இலங்கையிலிருந்தும் எடுத்துச் சென்று வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினர். இஸ்லாமிய மாலுமிகள் திசைகாட்டும் கருவியின் பயனை அறிந்திருந்தார்கள். அதன் உதவிகளோடு தங்கள் கப்பல்களைச்

சீனா, ரஷ்யா, எகிப்து மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கு எடுத்துச் சென்றனர்.

அரேபியர்கள் இயற்கையை ரசிப்பவர்கள். விவசாயத்தில் தேர்ச்சி பெற்றவர்கள். எங்குச் சென்றாலும் விவசாயத்தை ஊக்குவித்தனர். உரம் இடுதல், பழமரங்களை நடுதல், பூச்சிகொல்லி மருந்துகள் தயாரிப்பு, பயன்படுத்துதல் மற்றும் தாவர நோய்களைக் கண்டு அது தீர மருந்து தெளித்தல் போன்ற விவசாய நுணுக்கங்களை அறிமுகப்படுத்தினர். தோட்டம் அமைப்பதில் வல்லவர்கள் இந்தியாவில் இருந்து அரிசி மற்றும் சக்கரையைத் தாங்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்றனர். அரேபியாவில் இருந்து வாழை விவாசாயத்தையும், எலுமிச்சை பயறு வகைகளைச் சிரியாவில் இருந்தும் பட்டுப் பூச்சி வளர்க்கும் முறையையும், செடியையும் பாரசீகத்திலிருந்தும் பிற இடங்களுக்கு அறிமுகப்படுத்தினர். ரோஜா, மட்டும் பருத்தியை ஸ்பெயினில் அறிமுகப்படுத்தினர். பின்னர் ஸ்பானியர்கள் அவற்றை அமெரிக்காவிற்குக் கொண்டு சென்றனர். இறுதியாக இஸ்லாமியர் புதுவிதமான கட்டடக் கலையை அறிமுகப்படுத்தினர். வட்டவடிவமாக வளைவுகள், அழகான தூண்கள், விலை மதிக்கத்தக்க ஆபரணங்கள் என்று பல கலைகளைப் புகுத்தினர். அப்துல் ரஹ்மான் கட்டிய மாபெரும் மசூதி, பின்னால் கிருத்துவ மன்னரால் திருச்சபையாக மாற்றப்பட்டு இன்றளவும் ஒரு பெரிய நினைவுச் சின்னமாக கார்டோவா நகரில் திகழ்கிறது.

### *(உ) ஸாராஜெனிக் நாகரீகம்*

கி.பி.711-இல் வடஆப்ரிக்காவில் இருந்து முஸ்லீம் இனத்தவர் ஸ்பெயின் நாட்டுக்கு வந்தனர். அவர்களை அரேபியர்கள் என்று அழைத்தனர். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் பெர்பர்கள் (Berbers) ஆவர். இத்தகைய இனத்தவர்களைத்தான் சாரசென்ஸ் இனத்தவர் என்று அழைக்கப் படுகின்றார்கள். ஸ்பானிய விசிகோத்திரர்கள், சிறுபான்மையாளரான யூதர்கள் மற்றும் ஆரியன்(Arans)கள் ஆகியோரில் பெரும்பான்மையினர் சாரசன்களின் வருகையை வரவேற்றனர். கி.பி.720-இல் பண்டைய விசிகோத் மாநிலத்தில் நார்போன் (Norbonne) எனும் பகுதியின் தலை நகரான லாசெப்டிமான்னி (La septimanie) எனும் நகரைக் கைப்பற்றினர்.

கி.பி.721-இல் ஸ்பானிய முஸ்லீம் ஆளுநரான அல்-சமா (al-samah) என்பவர் டூலோஸ் (Tolouse) எனும் இடத்தைத் தாக்கினார். ஆனால் அக்யூடையன் (Acquitaine) சோமன் யூடேஸ் (Endes) என்பவரால் விரட்டியடிக்கப்பட்டார். கி.பி.724-725-இல் சாரசனிசன்கள் ரோன் (Rhone) பள்ளத்தாக்கில் ஆட்டன்(Autun) எனும் இடம் வரை படையெடுத்து அப்பகுதியைப் பிடித்தனர். கி.பி. 730-வாக்கில், அக்யூடெயன் கோமகனான யூடெஸ் என்பவர். அரசான் பகுதியில் ஆட்சியில் இருந்த ஆத்மான் பென் ஆபி நாசா (Othman ben Abhi Nassa) என்பவருடன் கூட்டணி அமைத்துக் கொண்டு முஸ்லீம் சுல்தான் ஆப்-தி-ரெஹ்மானுக்கு எதிரான போர் தொடுத்தார். ஆனால் ஆப்.தி ரெஹ்மான், ஆத்மான் பென் அபி நாஸாவைத் தோற்கடித்து ஆக்ஜன் பகுதியைத் தாக்கினர்.

முஸ்லீம் சுல்தான் ஆப்-தி-ரெஹ்மான் ஆன சாரன்ஸ் கி.பி.732- ஜூனில் போர்டியாக்ஸ் பகுதியைப் (Borde) பிடித்தார். போய்ட்டியன்ஸ்யை (Poitiens) முற்றுகையிட்டு டூர்ஸ் (Tours) வரை படையெடுத்துச் சென்றார். ஆனால் அக்டோபர் 732-இல் மௌசாய்ஸ்லாபடாய்லி எனும் (Moussais la batailee) இடத்தில் நடைபெற்ற சண்டையில் ஆப்-தி-ரெஹ்மான் தோற்கடிக்கப்பட்டார். சான்லஸ்ன் குதிரைப் படை, ஆப்தெல் குதிரைப் படையை விடப் பலம் வாய்ந்த ஒன்றாக இருந்தது.

நார்போனெய்ஸ் (Norbonnaise) பகுதியைச் சார்ந்த சாரசன்கள் ரோன் பள்ளத்தாக்கை கி.பி.732 – முதல் 739 வரைத தாக்கினர். ஆனால் சார்லஸ்மார்டல் மகனான பிபெபின் என்பவரும் லோம்பார்ட்ஸ் அரசர் லியூட்பிராண்டு என்பவரும் மார்செய்ல்ஸ் எனுமிடத்தில் சாரசன்களை தோற்கடித்து நார்போன் பகுதியைவிட்டு விரட்டினர். 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் ஸ்பெயினில் இருந்தும், வடஆப்பிரிக்காவில் இருந்தும் சாராசன்ஸ்கள் தொடர் தாக்குதல்கள் நடத்தினர். கரோலிஞ்சியன் நாடுகள் மிகப் பரந்து கிடந்தன. இந்நாடுகள் ஒரே நேரத்தில் நார்மாண்டுகள் மற்றும் சாராசன்ஸ்கள் ஆகியோரின் இருமுனை தாக்குதல்களைச் சாமாளிக்க முடியவில்லை. கி.பி. 828 மற்றும் 848-இல் சாராசன்ஸ்கள் மார்செய்ல்ஸ் பகுதியைத் தாக்கினர். கி.பி. 842 மற்றும் 850-இல் அவர்கள் ஆரன்ஸ் பகுதியைத் தாக்கினர். கி.பி.869-இல் சாரசன்ஸ்கள் கார்மாக்யூ (Carmargu) எனும் பகுதியில் சதங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர்.

கி.பி.870 முதல் 890 வரை வைக்கிங் எனும் இனத்தவர் சாரசன்ஸ்களைப் பின்னோக்கித் தள்ளினர். கி.பி. 890-இல் சாரசன்ஸ்கள் லா-கார்டி-பிரியனெட் எனும் இடத்தில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர். கி.பி.972-இல் க்ளணி பாதிரியார் செயின்ட் மேயல் என்பவரை ஜெனிவர் மலை(Mount Genever)க்குச் செல்லும் வழியில் பிடித்தனர். கி.பி.990-இல் புராவென்ஸ் (Provence) எனும் பகுதி முழுவதையும் தங்கள் ஆதிகத்தின் கீழ் கொண்டு வந்தனர். இருப்பினும் 13-ஆம் நூற்றாண்டுவரை பல படையெடுப்புகள் நடத்தினர். கி.பி.1047-லும், 1107-லும், இல்ஸ்-டி-லெரிம் (ils-de-lenins) மற்றும் கார்னீஸின் தென்பகுதியையும், கி.பி.1178 மற்றும் 1197-இல் டூலோன் பகுதி மீதும் தாக்குதல்கள் நடத்தினர்.

**இத்தாலியில் சாரசன்கள் ஆட்சி:**

ஐரோப்பிய வரலாற்றில் கி.பி.878-லிருந்து 1072 வரை இத்தாலியின் தென்பகுதியில் உள்ள கிரீட் மற்றும் சிசிலி ஆகிய பகுதிகளை இஸ்லாமியர்கள் எனப்படும் சாரசன்கள் ஆட்சி செய்தார்கள் என்ற செய்தி புறக்கணிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் இந்தத் தீவு விஞ்ஞானம், வாணிபம் மற்றும் தொழிற்துறையில் சிறந்து விளங்கிற்று. அதனால் இத்தாலியில் உள்ள சாரசன்கள் ஆட்சியின் கீழ் இருந்த கிரீட் சிசிலி போன்ற பகுதியைப் புன்னகைத் தோட்டம் (Similing Garden) என்று அழைத்தனர் மற்றும் மிலன், வெனிஸ் போன்ற நகரங்கள் வணிகத் தளங்களாகத் திகழ்ந்தமைக்கும் சாரசன்களோடு அவர்கள் கொண்டிருந்த வாணிப உறவே காரணம் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுவர்.

பேரரசர் இரண்டாம் மைக்கேல் ஆட்சியில் இருந்தபோது, அவரின் கோபத்திற்கு ஆளான ஒரு படைத்தளபதி யூபிமியஸ் எனும் பிமி (Fimi) என்பவர் தன்னுடைய விசுவாசப் படைகளுடன் முஸ்லீம்கள் ஆண்டுவரும் வட ஆப்பிரிக்காவுக்குத் தப்பி ஓடினார். அவர் அங்கிருந்த மெர் ஜிண்டா அல்லா என்ற அரசரிடம் சிராகோஸ் (Syrocuse) எனும் பகுதியைப் பிடிக்க உதவி கேட்டார். அவர் வேண்டுகோளை ஏற்று கி.பி.827-இல் எமிர் ஆசாத் இபின்-அல்-போராட் எனும் தளபதியின் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். ஆசாத் இபின்-அல்-போரட் இத்தாலியத் தீவின் கிழக்குப் பகுதியில் நுழைந்து சிரோகோஸ் பாலர்மோ ஆகிய பகுதிகளை முற்றுகையிட்டார். பல இடங்களில்

ஆசாத்தின் படை தோல்வியையும், சில இடங்களில் வெற்றியையும் பெற்றது. ஆனால் ஸ்பெயின் நாட்டில் இருந்து அந்துலேசியா என்பவரின் உதவி கிடைத்தபின் ஆசாத் படைகளில் கிருத்துவப் படைகளைத் தோற்கடித்தன. அதன் பின்னர் பல நகரங்களைக் கைப்பற்றினர். அவ்வாறு கைப்பற்றப்பட்ட நகரங்கள், பாலர்மோ, காஸ்ட்ரோஜி யோவானி ஜிஞ்ஜின்டியோ, காட்டானியா, மெசினா, கிரீட் போன்றவையாகும். ஏறத்தாழ 200 ஆண்டுகள் சிறப்போடு ஆட்சி செய்த சாரசன்கள் ஆட்சி கி.பி.1072-இல் ரோகர் சோமகள் சிசிலியைக் கைப்பற்றியதன் மூலம் முடிவுக்கு வந்தது.

இதற்கிடையே சிசிலியை ஆண்டுவந்த எமிர் அல்-பதில்-இபின்-அல். ஹுமாஜாமி என்பவர் ரோம் நகரைப் பிடிக்கவேண்டும் என்று ஒரு படையை அனுப்பினார். அப்போது போப் இரண்டாம் செர்ஜியஸ் பதவியில் இருந்தார். அவர் உலகில் உள்ள அனைத்துக் கிருத்துவர்களின் பாதுகாவல்ராக இருந்தார். வாடிகன் நகரில் போப்பாண்டவர் வாழ்ந்து வந்தார். சிசிலியில் ஆட்சியில் இருந்து முஸ்லீம் படைகள் வாடிகன் நகரை முற்றுகையிட்டனர். இச்செயல் போப்பாண்டவரையும் ரோமப் பேரரசின் கீழ் உள்ள மக்களையும் பெரும் கோபத்தில் ஆழ்த்தியது. பேரரசர் இரண்டாம் லூயி, பிராங்கள் மற்றும் லோம்பார்டுகளின் அரசர்கள் ஆகியோர் பெரும்படையுடன் வந்து சாரசன்களிடம் இருந்து வாடிகன் நகரைக் காப்பாற்றினர். சாரசன் படையில் இருந்த படைத்தலைவர்களின் ஒற்றுமை-யின்மையின் காரணமாக வாடிகன் நகர் காப்பாற்றப்பட்டது.

சாரசன்கள் சிறந்த படைவீரர்கள் மட்டுமல்ல. புராவென்ஸ் பகுதியில் உள்ள கிராமங்களில் அமைதியாகக் குடியமர்ந்து நல்ல வாழ்க்கை நடத்தியவர்கள் அவர்கள் பிராங்குகளுக்கு, பாட்டில்களில் மூடி அடைக்கும் கார்க்குகள் எவ்வாறு செய்வது என்று சொல்லிக் கொடுத்தனர். மாசில்-டெஸ்-மார்ஸ் எனும் மலைப்பகுதியல் உள்ள கார்க் தயாரிக்கும் ஓச் (Ochas) மரங்களில் இருந்து எவ்வாறு பாட்டில் மூடிகள் தயாரிப்பது என்பதைக் கற்றுக் கொடுத்தனர். இப்போதும் இப் பகுதியில் கார்க் தொழிற்சாலை செழிப்பாகச் செயல்பட்டு வருகின்றன. சாரசன்கள் அப்பகுதி மக்களுக்கு பைன்தார் (Pine Tar) தயாரிப்பது எப்படி என்றும் கற்றுக் கொடுத்தனர். அதன் மூலம், படகுகளுக்குப் பைன்தாரை எப்படிப் பயன்படுத்துவது என்றும்

கற்றுக் கொடுத்தனர். செயின்ட் டிராப்பெக்ஸ் (St.Tropexi) வளைகுடாவல் கார்டோபா உமாயத் ஒரு நிலையான கப்பல்படை வைத்திருந்தார் என்று நம்பப்படுகிறது. இன்றும் பிரான்ஸில் பைன்தார் என்பதைக் கெளடரான் என்று அழைக்கின்றனர்.

**சாராசன்களின் கலை:**

அரோபியர்கள் மற்றும் மூர்கள் பெரும்பாலும் நாடோடிகளாக வாழ்ந்தமையால், பாலைவனங்களில் சில கொட்டகைகள் அமைத்து வாழ்க்கை நடத்தினர். சில இடங்களில் நகரங்களையும் அமைத்து வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுடைய கலை பெரும்பாலும், கோவில்கள் மற்றும் மசூதிகளில் காணப்படுகின்றது. இவர்களுடைய கட்டடக் கலையில் வளைவு (Arch)கள் அமைக்கும் போது குதிரை லாடத்தைப் போன்று கூர்மையானதாக அமைத்துள்ளனர். இவ்வடிவம் கோபுரங்கள் மற்றும் உச்சியில் உள்ள கலசம் (Tombs) போன்றவற்றில் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் சிவப்பு, பச்சை, நீலம் மற்றும் தங்க நிறம் போன்ற வண்ணங்களில், பல வடிவங்களில் அழகுபடுத்தப்பட்டிருக்கும். கட்டட அமைப்பில் பெரிய மாற்றம் ஏதும் இல்லை. சிற்பக்கலை மற்றும் ஓவியக்கலை இல்லாமல் இருக்கும். விலங்குகளின் உருவங்களை அழகுக்காக வரையவில்லை. பளிங்குக் கற்கள் (Tiles) மற்றும் வண்ணக் கண்ணாடிகளைக் கட்டடங்களில் அழகுக்காகப் பயன்படுத்தினர்.

இந்தியாவிற்கு வந்த பல கட்டடக்கலை வல்லுநர்கள் இந்தோ-சாசனிக் கட்டடக் கலையுடன் கோதிக் மற்றும் விக்டோரியா காலக் கட்டடக்கலையும் கலந்து 19-ஆம் நூற்றாண்டில் பல கட்டடங்களை எழுப்பினர்.

உதாரணமாக, மைசூரில் கட்டப்பட்டுள்ள மன்னர் மாளிகை ஆகும். இந்தியாவிற்கு வந்து ஆட்சி செய்த இங்கிலாந்தினர், தாங்கள் இந்தியாவில் ஆட்சி செய்ய உரிமை பெற்றவர்கள் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க இந்திய கலைப் பாணியுடன் தங்கள் நாட்டின் கோத்திப் பாணியையும் கலந்து கட்டடக்கலையை வளர்த்தனர். அதன்படி பல கட்டடங்களை எழுப்பினர். அவ்வாறு உருவான கட்டங்களில் சில வருமாறு: சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரி மற்றும் சென்னைப் பல்கைலக்கழகத்தில் கட்டப்பட்டுள்ள செனட் அரங்கம், பரோடாவில் உள்ள லக்ஷ்மி விலாஸ் மாளிகை, சிம்லாவில்

உள்ள வைஸ்ராய் மாளிகை சென்னை உயர்நீதிமன்றக் கட்டடம் ஹைதராபாத்தில் உள்ள உயர்நீதிமன்றம், ஆஸ்மானிய மருத்துவமனை போன்றவை இந்தோ-செராசனிக் பாணியில் ஆங்கிலேயக் கட்டடக் கலைஞர்களால் கட்டப்பட்டன.

## *இயல் -II நிலமானிய முறை*

### *(அ) தோற்றம்*

புனித ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியால் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிலமானிய முறை பரவியது. இம்முறை பரவியதற்குப் பல காரணங்கள் உண்டு. அவை: 1.சார்ல்மாக்னே என்னும் பேரரசர் மரணத்துக்குப் பின்னரும், பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னரும் ஐரோப்பாவின் பல பகுதிகளில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டது. அரசர்கள் ஒருவருக்கு ஒருவர் போரிட்டுக் கொண்டனர். சாதாரண மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பலர் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டனர். வலுத்தவன் இளைத்தவனைத் தாக்குவது அன்றாட வாழ்க்கையானது. இளைத்தவர்களின் சொத்துக்களை அபகரிப்பதும், நிலங்களைப் பறிப்பதும், அவர்களைச் சிறைப்பிடித்து அடிமையாக வைத்திருப்பதும் வலுத்தவர்களின் அன்றாட நிகழ்வுகளாக விளங்கின. அரசர்கள், பேரரசர் போன்றோர் வலுத்தவர் செய்யும் இக் கொடிய செயல்களில் இருந்து இளைத்தவர்களைக் காப்பாற்றும் திறனற்றவர்களாக விளங்கினர். எனவே இளைத்தவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டனர்.

வலுவுள்ளவன் கையில் மாட்டி அழிந்து போவதைவிட யாரேனும், ஒரு பிரபுவிடமோ திருச்சபையிடமோ அடிமைபோல் (vassel) இருந்து, அவர்களின் தலைமையேற்று அவர்களின் பாதுகாப்பில் வாழ்வதேமேல் என்று கருதினர். இத்தகைய நிலையை இங்கிலாந்தில் சாக்ஸோனியர் காலத்தில் டேனியர்கள் படையெடுப்பின் போது இங்கிலாந்தில் கடைப்பிடித்தனர். இங்கிலாந்து அரசர் எட்கார் என்பவர் நிலமற்ற ஒவ்வொருவரும் ஒரு பிரபுவை வைத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

மேற்கு ஐரோப்பிய மன்னர்கள் பலர் தங்களுக்குத் துணை செய்ய தங்களுக்கு விசுவாசமான நில உடமையாளர்களை (fiefs) வைத்துக் கொண்டனர். இவர்களுக்குத் தங்கள் நாட்டில் உள்ள நிலங்களில் பலவற்றைப் பிரித்து கொடுத்தனர். அவ்வாறு நிலம் கொடுப்பதில் சில உரிமைகளையும், கடமைகளையும் வகுத்தனர். ஆரம்பத்தில் நிலமானிய-தாரர்களின் வாழ்நாட்களுக்கு மட்டும் என்றும், அவர்கள் இறந்தபின் அந்நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் இருந்தது. ஆனால் காலப் போக்கில் அந்நிலங்களில் நிலமானியதாரர்களின் வாரிசுகளுக்கும் கொடுக்கப்பட்டு வாரிசுப்படி அனுபவிக்கத் தொடங்கினர்.

சார்ஸ்மாங்க்னே மரணத்திற்குபின் பேரரசு உடைந்தது. அவ்வேளையில் ஆங்காங்கு ஆளுநர்களாகவும், நீதிபதிகளாகவும் இருந்தவர்கள் தாங்கள் அனுபவித்து வந்த பதவிகள் தங்கள் காலத்துக்கு மட்டுமல்லாமல் தங்கள் வாரிசுகளுக்கும் உரிமையுண்டு என்று கூறினர். அவர்கள் நீதி, ஆட்சி மற்றும் சட்டமியற்றுதல் போன்ற துறைகளில் சில அதிகாரங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். இருப்பினும் பேரரசரைப் பெயரளவில் 'தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

நிலமானிய முறை என்பது கிரேக்க வார்த்தை (feudom) (fief or fee) வரிகட்டுதல் எனும் சொல்லில் இருந்து வந்தது. அதாவது சொத்துவரி (நிலவரி) அல்லது கால்நடைவரி செலுத்துவது. அக்காலத்தில் கால்நடைகளும் சொத்தாகக் கருதப்பட்டது.

நிலப்பிரபுக்களுக்கும், அவருக்குக்கீழ் உள்ள நில உடமை-யாளருக்கும் இடையே சமூக, பொருளாதார அரசியல் உறவுகள் பல உள்ளன. பொருளாதார உறவு என்பது என்னவென்றால், மன்னரிடமோ, நிலப்பிரபுவிடமோ, பிசப்பிடமோ ஒரு நிலமானியதாரர் நிலம் பெறுகின்றார் என்றால் அவர் அந்நிலத்தை அனுபவித்துக் கொள்ளலாம். ஆனால் நிலத்தை விற்கமுடியாது.
ஆனால் தனக்குப் பின் தன் வாரிசுகளுக்கு மாற்றிக் கொள்ளலாம். சமூக உறவு என்றால் நிலப்பிரபு உயர்ந்தவர் என்றும் நிலம் பெற்ற நிலமானியதாரர் தாழ்ந்தவர் என்றும் அவருக்கு உரிய மரியாதை செலுத்தவேண்டும் என்றும் விதிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. நிலப்பிரபுக்கள் தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளில் அரசு தலையிடாது.

அரசின் தலையீட்டிலிருந்து பிரபுகள் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தங்களுக்குக் கீழ் உள்ள நிலமானியர்கள் மீது நீதி, ஆட்சி மற்றும் ஒரு சிறிய அளவில் சட்டமியற்றும் அதிகாரங்களைச் செலுத்த முடியும்.

**நிர்வாக அமைப்பு:**

இங்கிலாந்தில் முதலாம் வில்லியம் ஆட்சியில் இருந்த போது நிலமானிய முறையை ஒழுங்குபடுத்தினார். அதன்படி இங்கிலாந்து அரசர்தான் இங்கிலாந்தில் உள்ள அனைத்து நிலங்களுக்கும் தலைவர். அவர் பல எஸ்டேட்களைப் பல பிரபுக்களுக்கும் ஆர்ச் பிசப்புகளுக்கும், பிசப்களுக்கும் வழங்கியுள்ளார். அவ்வாறு நிலம் பெற்ற இவர்கள் (tenants in chief) தலைமைக் குத்தகைதாரர்கள் என்று அழைக்கப்படுவார். இந்தக் குத்தகை-தாரர்கள் தங்களுக்குக் கிடைத்த நிலங்களைப் பலருக்குப் பிரித்துக் கொடுப்பர். இவர்கள் இடைக் குத்தகைதாரர்கள் என்று அழைக்கப்படுவர் அவர்கள் மீண்டும் தங்களுக்குக் கிடைத்த நிலத்தைப் பல குத்தகைதாரர்களுக்குப் பிரித்துக்கொடுப்பர். இக்குத்தகைதாரர்கள் பல கூலித் தொழிலாளர்(villeins)களை வைத்து விவசாயம் செய்வர். விவசாயக் கூலிகள், குத்தகைதாரர்களுக்கு அடிப்பணிந்து நடக்கவேண்டும். குத்தகைதாரர்கள் இடைக் குத்தகைத்தாரர்களுக்கு அடிபணிந்து நடக்க வேண்டும். இடைக் குத்தகைதாரர்கள், தலைமைக் குத்தகைதாரர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும் தலைமைக் குத்தகைத்தாரர்கள் மன்னருக்கு அடிபணிந்து நடக்கவேண்டும். இத்தகைய அமைப்பு பொதுவாகக் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால் நாட்டுக்கு நாடு சில வேறுபட்ட அமைப்புகளும் இருந்தன.

மன்னர் - நிலஉடமையாளர்

↓

பிரபுக்கள், பிசப்கள் - தலைமை குத்தகைதாரர்கள்

↓

சிறுசிறு நிலமானியர்கள் - இடைக் குத்தகைத்தாரர்கள்

↓

குத்தகைதாரர்கள்

↓

விவசாய அடிமைகள் (Villeirs)

இடைக்காலத்தில் இருந்த பெரும்பாலான அரசுகளின் நிலை இவ்வாறே இருந்துள்ளன. உதாரணமாக, தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சியின் போது பாளையக்காரர் முறை இருந்ததைப் போன்று.

**நிலமானியச் சம்பிரதாயங்களும், கடமைகளும்:**

நிலம் வழங்கும் முறையில் மரியாதைகள் செலுத்தும் வகையில், சில சம்பிரதாயங்களும் கடமைகளும் இருந்தன. நிலம் பெற்ற நிலமானியதாரர் நிலம் வழங்கிய பிரபுவிடம் கைகட்டி நிற்கவேண்டும். காலில் விழுந்து வணங்க வேண்டும். பின்னர், தான் பிரபுவின் உத்தரவுக்கு கட்டுப்பட்டவன், தங்களின் உடமை என்று கூறி தங்களுக்கு என்றும் மரியாதை செலுத்த கடமைப்பட்டவன் என்று உறுதி மொழி எடுக்கவேண்டும். நிலப்பிரபு அவனை நிமிரச் சொல்லி, அவன் உறுதிமொழி எடுத்தபின், அவனுக்கு பிரபுவின் அடையாளமாக ஒரு கத்தி, மோதிரம் போன்ற பொருள் அணிவித்துப் பெருமைப்படுத்துவான் அதன் மூலம் அவன் நிலப்பிரபுவின் குத்தகைதாரன் என்று ஆக்கப்படுவான்.

**நிலப்பிரபுவின் கடமையும் உதவியும்**

குத்தகைதாரர்களுக்கு நிலப்பிரபுக்கள் செய்ய வெண்டிய கடமையாக, குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது குத்தகைதாரர்கள் தவறு செய்தால் தண்டிப்பது குத்தகைதாரர்களுக்குரிய உரிமைகளைக் காத்துக் கொடுப்பது மற்றும் அவனுக்கு அனைத்து வகைகளிலும் நீதி கிடைக்கச் செய்வது போன்றவையாகும். குத்தகைதாரர்களின் முக்கிய கடமை, நிலப்பிரபுக்களுக்கு இராணுவ சேவை வழங்குவது. சாதாரணமாக இச்சேவை ஆண்டுக்கு 40 நாட்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இராணுவ சேவையைத் தவிர தன் பிரபுக்கு அவ்வப்போது, நிலமானிய வரிச் செலுத்தவேண்டும். பிரபு இறந்தபோது அடக்கம் செய்ய ஆகும் செலவுகள், பிரபுவின் மூத்தமகனுக்கு நைட் (Knight) பட்டம் சூட்டும் போது, பிரபுவின் மூத்தமகள் திருமணத்தின் போது, போன்ற நாட்களில் அதிகமான பணம் பரிசுப் பொருளாகத் தரவேண்டும். குறிப்பாக, பிரபுவின் மூத்த மகள் திருமணத்தின் போது அதிகப் பணம் செலுத்த வேண்டும். மற்றொரு வரி, குத்தகைதாரர் இறந்தபின் அவர்மகன் அந்நிலங்களுக்கு பொறுப்பேற்கும் போது (relief) பரிகாரம் எனும் வரி செலுத்தவேண்டும். பரிகார வரி செலுத்தாத வரை அவர் தன் தந்தையின் நில உரிமையை அடைய முடியாது. சாதாரணமாக இவ்வரி ஒரு வருட வருமானமாக இருக்கும். திருச்சபையில் உள்ள பிசப் இறந்து விட்டால் அத்திருச்சபை வழங்கப்பட்ட நிலத்திற்குப் புதிதாகப் பிசப் நியமனம் செய்யப்பட்டால், அந்தப் பிசப் நியமனம் ஆன முதல்ஆண்டின் வருமானத்தை நிலப்பிரபுவான பிசப்புக்கு வரியாகச் செலுத்த வேண்டும். குத்தகைதாரர் வாரிசு இன்றி இறந்துவிட்டால், அந்நிலம் நிலப்பிரபுக்கே சேர்ந்து விடும். அந்நிலத்தை வேறு ஒரு குத்தகைதாரருக்கு நிலப்பிரபு வழங்குவார். குத்தகைதாரர் விதிமுறைக்கு மாறாக நடந்து குற்றம் செய்தால் நிலத்தை நிலப்பிரபு அபகரித்துக் கொள்ளலாம். இங்கிலாந்தில் மன்னர்களுக்கு மற்றொரு அதிகாரம் இருந்தது. அதன்படி மைனர்கள் பாதுகாப்பு மற்றும் திருமண அனுமதி போன்ற அதிகாரங்கள் அரசர்களிடம் இருந்தது. குத்தகைதாரர்கள் வயதுவராத குழந்தைகளை (minor) விட்டு இறந்து விட்டால், அவர்கள் வயது வரும் வரை தங்கள் பொறுப்பில் வைத்து வளர்த்துக் கொள்ளவும், அக்காலத்தில், குத்தகைதாரர் நிலத்தில் வருகின்ற வருமானம் முழுவதையும் தானே எடுத்துக் கொள்ளவும் உரிமை பெற்றனர். இவர்கள் வயது வந்தபின்

திருமணம் செய்யவேண்டுமானால் மன்னரின் அனுமதி பெறவேண்டும். அவ்வாறு அனுமதி பெற மன்னருக்கு அதிக வரிசெலுத்த வேண்டும். நிலமானிய பிரபுக்கள், தாங்களோ அல்லது தங்களது படையோ குத்தகைதாரர்கள் நிலம் வழியாக செல்லும் போது அவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். நிலமானிய வீரர்கள் (Knights) தாங்கள் அந்தப் பட்டம் பெறுகின்றபோது ஒரு உறுதிமொழி எடுக்கவேண்டும். அதன்படி அவர்கள் வலிமையற்றவர்கள், திருச்சபை மற்றும் பெண்களைக் காப்போம் என்று உறுதிமொழி எடுக்கவேண்டும். கீழ்மட்டத்தில் உள்ள குத்தகைத்-தாரர்களுக்கும் அவர்கள் தகுதிக்கேற்ற கடமைகளையும், வரிகளையும் செலுத்த வேண்டும். மெனார் தகுதியில் உள்ள பிரபுகள் தங்கள் மெனாரில் உள்ள விவசாயிகளைக் காக்கவேண்டும். அதற்கு ஈடாக விவசாயி மெனார் பிரபுவின் நிலத்தில் வேலை செய்வதோடு, அவருகளுடைய பிரபுக்கும் ஒரு குறிப்பிட்ட வரியைச் செலுத்தவேண்டும்.

**மெனார் முறை:**

இடைக்கால ஐரோப்பிய நிலமானிய முறையில் குறைந்த பட்ச நிலஅளவு என்பது ஒரு மெனார் (Manor). மெனார் என்பது ஒரு கிராம அளவு அல்லது அதன் பகுதியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராம அளவாகவோ இருக்கலாம். நிலமானிய பிரபு அழைக்கின்றபோது கிராம மக்கள் உடனே வரும் தூரத்தில் வாழ்ந்து வந்தனர். நார்மானியர்கள் படையெடுப்பின்போது இங்கிலாந்தில் இருந்த ஆங்கிலேயர் சுதந்திரமாக இருந்தனர். படையெடுப்புக்குப் பின் நார்மானியர்கள் மெனார்கள் பிரபுக்களாகவும், மெனாரில் வாழ்ந்த விவாசயக் கூலிகள் (Villens) நார்மானியர்களின் அடிமைக் கூலிகளாகவும் ஆகினர். வில்லென் என்பது ஆரம்பத்தில் கிராமம் என்றும் பின்னர் அடிமை சேவகர்கள் என்றும் பொருள் விளங்கிற்று.

மெனார் நிலங்களின் நடுவில் மெனார் வீடு அமைந்திருக்கும் அவ்வீட்டில் மெனாரின் பிரபு குடியிருப்பார். மெனார் பிரபு தனக்கு என்று சொந்தமாகவும் நிலம் வைத்திருப்பார். அந்நிலம் (demesne) டெமெஸ்னே (பிரபுவின் நிலம்) என்று அழைக்கப்படும். இந்நிலத்திலும் வில்லென் எனப்படும் விவசாயக் கூலிகள் வேலை செய்யவேண்டும் பிரபு தன் நிலத்தை 30, 30 ஏக்கர் விளைநிலங்களைப் பிரித்துக் கொடுத்து இருப்பார். இந்த 30 ஏக்கர் விளைநிலத்தில் மூன்று

பகுதிகளாகப் பிரித்து சுழற்சி முறையில் விவசாயம் செய்வர். 10 ஏக்கரில் கோதுமையும், 10 ஏக்கரில் பார்லியும், 10 ஏக்கர் தரிசாகவும் வைத்து விவசாயம் செய்வர். இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை இச்சுழற்சி முறை கடைப்பிடிக்கப்படும். ஒவ்வொரு மெனாரிலும் மரங்கள் அடர்ந்த நிலங்களும், பொதுத்தரிசு நிலங்களும் கிடக்கும். மரங்கள் அடர்ந்த இடத்தில் வில்லென்கன் எனப்படும் விவசாயக் கூலிகள் பன்றி வளர்ப்பர். பொது இடங்களில் பசு, ஆடு போன்றவற்றை வளர்ப்பர்.

வில்லென் எனப்படும் விவசாயக் கூலிக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலத்திற்கும், பன்றி, ஆடு மாடு வளர்ப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ள மெனார் நிலத்திற்கும், அவரவர் பிரபுக்களுக்குச் சில சேவைகளும் மரியாதைகளும் செலுத்தவேண்டும். அவர்கள் வாரவேலை மற்றும் அதிக வேலை என்று பல வேலைகளைப் பிரபுக்களின் நிலத்தில் செய்யவேண்டும். அப்பிரபுக்களின் நிலத்திற்கு வேலை செய்ய தான் செல்லவேண்டும் அல்லது அதற்கு இனையாக ஒரு கூலி ஆள் அனுப்பவேண்டும். இந்த வார வேலையோடு உழவு செய்து விதைக்கும் போதும், அறுவடை காலத்திலும் அதிக வேலை என்ற வகையில் பிரபுவின் (Demesre) நிலத்தில் வேலை செய்ய வெண்டும். வாரவேலை என்பது வாரத்திற்கு 5 நாள் பிரபுவின் நிலத்திலும், மீதி இரண்டு நாட்களே தன் நிலத்திலும் வேலை செய்ய வேண்டியிருந்ததால் தன் நிலத்தில் வந்த வருமானம் குறைவாகவே இருந்தது. வாரவேலை மற்றும் அதிக வேலை ஆகிய வேலைகளைச் செய்வதோடு பிரபுவிற்குக் கிருஸ்துமஸ் மற்றும் ஈஸ்டர் போன்ற பண்டிகைக் காலங்களின் போது கோழி, முட்டை, வெண்ணெய் ஆகியவற்றைக் கொடுக்கவேண்டும். தன் நிலத்தில் விளைந்த தானியங்களை அரைக்க பிரபுவின் ஆலைக்குச் செல்லும் போதும் கணிசமான தானியங்களையும் கொடுக்கவேண்டும்.

**வில்லென் என்ற விவசாய கூலிகளின் வாழ்க்கை**

விவசாயக் கூலிகள் வாழ்க்கை மிகவும் பரிதாபமானதாக இருந்தது. அவன், ஆடு மாடுகள் தங்கும் கொட்டத்தில் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்தான். குளிர் மற்றும் மழைக்காலங்களின் போது, இருள் சூழ்ந்த நிலையிலும், சகிக்க முடியாத குளிரையும் தாங்கி பாதிக்கப்பட்ட நிலையில் வாழந்தான். இத்தகைய நிலையில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள மதுகுடித்துக் கொள்வான். இவன் இவ்வாறு குடித்துக் கொண்டிருந்தாலும், அவன் தன் பிரபுக்குச் செலுத்தவேண்டிய

வரிகளை; செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கும் காலம் வரை அவன் தனக்கு இருக்கும் உரிமையைக் காத்துக் கொள்ளலாம். வில்லென் என்னும் விவசாயிகள் அல்லாமல் மெனாரில் குடிசைவாசிகள் என்பவர்களும் இருந்தனர். அவர்கள் மெனாரில் 5 முதல் 6 ஏக்கர் நிலம் வரை வைத்து இருந்தார்கள். இவர்கள் சுதந்திரமானவர்கள் என்றழைக்கப்பட்டனர். காரணம் 5 அல்லது 6 ஏக்கர் நிலம் வைத்து இருந்தாலும், அவர்கள் தங்கள் பெற்ற நிலத்தை விற்க உரிமை பெற்றவர்களாக இருந்தனர். ஆனால் வில்லன்கள் அவ்வாறு நிலத்தை விற்கமுடியாது. இருப்பினும் சுதந்திரமானவர்களும் பிரபுவின் நிலத்தில் வாரம் 5 நாள் வேலை செய்யவேண்டும்.

**மெனார் நீதிமன்றம்:**

மெனார் தங்கியிருக்கும் பெரிய வீட்டின் முற்றத்தில் நீதிபரிபாலனம் நடைபெறும். கிராமத்தில் இருப்போரிடையே ஏற்படும் சண்டைகள் தீர்த்து வைக்கப்படும், குத்தகைத்தாரர் இறந்து விட்டால், அந்நிலத்தை அவருடைய மனைவிக்கு அளிக்கும் சடங்கு மெனார் நீதிமன்றத்தில் நடைபெறும் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் வழக்கத்தில் உள்ள சட்டதிட்டங்கள்படி நடத்தப்படும். மெனார் நீதிமன்றம் பிரபுக்களுக்கு அதிக லாபம் தரும் நிறுவனமாக இருந்தது. ஏனென்றால் நீதி பரிபாலனத்தில் தண்டனையாக விதிக்கப்பட்ட அபராதத் தொகைகள் இவருடைய செலவுக்கே பயன்பட்டது.

**மெனார் அலுவலகங்கள்:**

பெரிய நிலப்பிரபு பல மெனார்களை வைத்திருந்தனர். எனவே அதனை நிர்வாகம் செய்ய Steward, Bailiff, Hayward போன்ற அதிகாரிகள் இருந்தனர். Steward என்பவர் மேலாளர் போன்றவர். எல்லா மெனார்களையும் சுற்றி வேலை சரியாக நடக்கின்றனவா என்று பார்வையிடுபவர். Bantiff என்பவர் மேற்பார்வையாளர் போன்றவர். குத்தகைத்தாரர்கள் தங்கள் நிலங்களில் ஒழுங்காக விவசாயம் செய்கின்றனரா என்று பார்வையிடுபவர். இவர் விவசாயிகளால் தேர்ந்தெடுக்கப்படுவார். இவர்கள் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளியும் அவரவர் கடமையைச் செய்கின்றார்களா என்று பார்ப்பவர்கள். Hayward என்பவவர் அடிமட்ட அலுவலர் அவர் நவதானியங்கள் அறுவடையின் பொது மேற்பார்வையிடுபவர். நிலப்பிரபு இல்லாதபோது Steward

நீதிபரிபாலனம் செய்வார். மெனார் ஒரு தன்னிறைவு பெற்ற கிராமமாக இருந்தது. விவசாயம் மட்டும்தான் தொழில். இருந்தாலும் விவசாயம் விஞ்ஞான முறையில் நடைபெறவில்லை. ஏனென்றால் தனிமனிதன் உரிமை இல்லை. சுதந்திரமாகச் சிந்தித்து விவாசயம் செய்ய விவசாயிகளுக்கு அதிகாரம் இல்லை. வில்லென் என்ற விவசாயக் கூலிகளின் நிலை, அடிமைகளின் நிலையை விட சற்றுப் பரவாயில்லை என்று கூறும் அளவில் இருந்தது. நிலப்பிரபுவிடம் பாதுகாப்புக் கிடைத்ததே தவிர, சுதந்திரமாக நடமாடவோ திருணம் செய்யவோ முடியாது. வாரம் முழுவதும் தனக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திலும் வேலை செய்யமுடியாது எனவே அதிக லாபம் பெறமுடியவில்லை.

***நிறை, குறைகள்***

நிலமானிய முறையில் எளிய மக்களின் உயிர் உடமைக்கு பாதுகாப்பு கிடைத்தது. Knights எனப்படும் பிரபுக்கள் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்போம் என்று உறுதிமொழி எடுத்துதான் பதவி பெற்றனர். இத்தகைய நன்மையிருப்பினும் பல தீமைகளும் இருந்தன. நிலப் பிரபுக்களிடையே போட்டி பொறாமைகள் ஏற்பட்டு அவ்வப்போது ஒருவருக்கொருவர் சண்டையில் ஈடுபட்டனர். இதனால் நாட்டில் அமைதியில்லை. நிலப்பிரபுக்கள் தங்களுக்குத் தேவையான படைவீரர்களைக் கையில் வைத்திருந்ததால் பல வேலைகளில் மன்னருக்கு எதிராகப் போர் தொடுத்தனர். நிலையான படை மன்னரிடம் இல்லாமையால் இத்தகைய பிரபுக்களோடு மன்னர்கள் போரிட முடியவில்லை. இங்கிலாந்தின் முதலாம் வில்லியம் நார்மண்டியின் பிரபுவாக (Duke) இருந்த போது அவருடைய அரசரை பிரான்ஸ் நாட்டின் அரசர் தூக்கி எறிந்து விட்டு இங்கிலாந்தைப் பிடித்தார். இங்கிலாந்தின் மன்னரானபின் நிலமானிய முறையை முறைப்படுத்தி நிலப்பிரபுக்கள் மன்னரை எதிர்க்காத வண்ணம் நடவடிக்கை மேற்கொண்டார். நிலமானிய முறையை ஒழுங்குபடுத்த மூன்று வழிகளை கையாண்டார் அவை: 1. இங்கிலாந்து மன்னரானவுடன் தன்னுடன் வந்த நார்மன் இனப்படை வீரர்களுக்கு இங்கிலாந்து நிலத்தை பிரித்துக் கொடுத்ததோடு மொத்தம் மொத்தமாக ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுக்க வில்லை. நாட்டில் உள்ள பல பகுதிகளிலும் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகப் பிரித்துப் பிரித்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். அப்போதுதான் ஒரு நிலப்பிரபு மன்னருக்கு எதிராக இருக்கின்றார் என்று

தெரிந்தால் பக்கத்து பிரபு தகவல் கொடுத்து விடுவார் என்றும் அவரை அப்போது தாக்குவது எளிது என்றும் கருதினார். தன்னுடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் இத்தகைய நிலப்பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைக்கும் நோக்கோடு இரு செயல்கள் புரிந்தார். அவற்றில் ஒன்று தன் அதிகாரிகளை அனுப்பி நாட்டில் உள்ள பல பகுதிகளிலும் எட்வர்டு மன்னர் காலத்தில் என்ன என்ன, எப்படி எப்படி இருந்தன என்பதைக் கணக்கிடச் செய்தார். அதாவது எட்வர்டு ஆட்சிக் காலத்தில் எத்தனை மெனார்கள், அதன் பெயர்கள், எத்தனை பிரபுக்கள், பிரபுக்களிடம் இருந்த டெமஸ்னே (Demesne) நிலங்கள் அதில் பணியாற்றிய ஆட்களின் எண்ணிக்கை, அவர்களில் எத்துணை பேர் சுதந்திரமானவர்கள், எத்தனை பேர் வில்லென்கள் எனப்படும் விவசாயக் கூலிகள், எத்தனைக் குடிசைவாழ் மக்கள், அவர்கள் வைத்திருந்த சொத்துக்கள் எட்வர்டு மன்னர் காலத்தில் எத்தகைய மதிப்புடையது என்றெல்லாம் கணக்கிட்டு அதற்கேற்றவாறு தலைமைக் குத்தகைதாரர்களுக்கு வரி விதித்ததின் மூலம் அதிக லாபம் பிரபுக்களுக்குக் கிடைக்காதவாறு செய்தார். இத்தகைய கணக்குகளை முறைப்படுத்தி, டூமஸ்டே (Doomsday) புத்தகத்தில் பதிவு செய்தார். இவ்வாறு கணக்கெடுத்து வரிவிதித்ததின் மூலம் பிரபுக்களுக்கு அதிக லாபம் இல்லாததால், மன்னரை எதிர்க்க போதுமான பணம் இல்லாத சூழ்நிலையை உருவாக்கினார்.

அடுத்து கி.பி. 1086-இல் எல்லா மெனார்களிலும் இருந்த சுதந்திர குத்தகைத்தாரர்களை அழைத்து சாலிஸ்பரி என்னுமிடத்தில் உள்ள மைதானத்தில் பேசினார். அப்போது அவர்கள் அனைவரும் மன்னருக்குப் பிரச்சனை ஏற்பட்டால் மன்னருக்கு எதிராக உள்ள அனைவரையும் எதிர்த்து மன்னரை ஆதரிப்போம் என்று சபதம் ஏற்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் மன்னருக்கும், விவசாயிகளின் உடனடி பிரபுக்களுக்கும் சண்டை ஏற்பட்டால், விவசாயக் கூலிகள் அனைவரும் அவர்களின் உடனடித் தலைவரான பிரபுக்கு ஆதரவு தராமல் மன்னருக்குத்தான் ஆதரவு தரவேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார். இதனால் பிரபுக்களின் செல்வாக்குக்குப் பின்னடைவு ஏற்பட்டது. மேலும் வில்லியம் சாக்ஸன் காலத்தில் இருந்த நூறு நீதிமன்றங்களைப் புதுப்பித்து பிரபுக்களின் செல்வாக்கைக் குறைத்தார். சாக்ஸன் காலத்தில் நடைமுறையில் இருந்த சட்ட திட்டங்களையே கடைப்பிடித்தார். இவ்வாறு முதலாம் வில்லியம்

உருவாக்கிய நிலமானிய முறை திறமையற்ற மன்னராட்சிக் காலத்தில் வீழ்ச்சியுறத் தொடங்கியது.

### *(ஆ) சிலுவைப் போர்கள் காரணங்களும் விளைவுகளும்*

வாணிபம் செய்ய வாய்ப்பு கிடைத்து அதிக லாபம் பெறலாம் என்று கருதினர். சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டோர் தண்டனையில் இருந்து தாங்கள் தப்பிக்கலாம் என்று கருதினர். நிலமானியப் பிரபுக்களின் கீழ் பணியாற்றிய விவசாயிகள், விவசாயக் கூலிகள், சிலுவைப் போர்களில் ஈடுபட்டால் தங்களுக்கு ஓரளவு விடுதலை கிடைக்கும் என்று கருதினர். இத்தகைய சமய மற்றும் பொருளாதார காரணங்களால் ஐரோப்பிய மக்கள் சிலுவைப் போர்கள் நடத்த தயார் நிலையில் இருந்தனர். இச்சூழ்நிழலையில் இரண்டாம் போப் அர்பன் (Pope Urban II) கிருத்துவ உலகத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அவ்வேண்டுகோள் யாதெனில், கிருத்துவர்கள் தங்களுக்குள்ளே இருக்கின்ற சிறு சிறு வேறுபாடுகளை மறந்து ஒருவருக்கொருவர் சண்டையிடுவதை நிறுத்திக் கொண்டு, பாலஸ்தீனத்தைத் துருக்கியர்களிடம் இருந்து விடுவிக்கும் புனிதப் போரில் கலந்து கொள்ள வேண்டும் என்பதே. அதன்படி சிலுவைப் போர்கள் நடைபெற்றன.

போப்பாண்டவரின் வேண்டுகோள் கிருத்துவ மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது. ஐரோப்பியக் கிருத்துவர்கள் சிலுவைப் போருக்குத் தயாரானார்கள். ஆனால் திட்டமிடப்படவில்லை. அனைவரும் ஒன்று கூடி திட்டமிட்டு புனிதப் போர் தொடுப்பதற்குப் பதிலாக, பல கிருத்தவர்கள் ஹெர்மிட் பீட்டர் (Peter the Hermit) என்பருடைய தலைமையில் கிருத்துவ புண்ணியத் தலங்களை நோக்கிப் போர் செய்யப் புறப்பட்டனர். பலதூரம் சிரமத்திற்கிடையே பயணம் மேற்கொண்டதால் வழியிலேயே பலர் மரணத்தை தழுவினர். கான்ஸ்டாண்டிநோபினை அடையும்போது அவர்கள் எண்ணிக்கை குறைந்துவிட்டன. அவர்களிடம் போதுமான பணம் இல்லாததால் அரசாங்க விவசாய நிலங்களைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். கான்ஸ்டாண்டிநோபின் அரசர் இவர்கள் தொந்தரவு தாங்கமுடியாமல் இவர்களுக்கு, புண்ணியத் தலங்களுக்குச் செல்ல போதுமான பண உதவிகள் அளித்து கொள்ளையடிப்பதைத் தவிர்த்தார். திட்டமிடப்படாமல், வெறியுடன் ஜெருசலத்தை அடைந்த

கிருத்துவர்களைத் துருக்கியர் படை போரில் முறியடித்து பலரைக் கொன்று குவித்தது. ஹெர்மிட் பீட்டர் மற்றும் சிலர் மட்டும் தப்பித்தனர்.

கிருத்துவப் புண்ணியத் தலங்களை மீட்க பல சிலுவைப் போர்கள் நடைபெற்றாலும், முதல் சிலுவைப்போர், மூன்றாம் சிலுவைப் போர் மற்றும் நான்காம் சிலுவைப்போர் ஆகியவைகளே முக்கியமானவை. திட்டமிட்ட முதல் சிலுவைப் போர் கி.பி.1096-இல் நடைபெற்றது. நார் மண்டியைச் சார்ந்த ராபர்ட் மற்றும் காட்பிரேடி-போய்லோன் என்பவர்களின் தலைமையில் ஐரோப்பாவில் வாழ்நத பல கிருத்துவப் பிரபுக்களும் கலந்து கொண்டனர். இப்புனிதப் போர்ப்படையில் அறுநூறு ஆயிரம் தரைப் படைவீரர்களும், நூறு ஆயிரம் குதிரைப் படை வீரர்களும் கலந்து கொண்டனர். அவர்கள் கான்ஸ்டாண்டிநோபிள் நகரை அடைந்தபோது அங்கு ஆட்சியில் இருந்த அரசர் அவர்கள் விரக்தியடைந்து இருந்தார். அவ்வேளையில் சிலுவைப் போர் வீரர்கள் அவருக்குரிய மரியாதை செலுத்தியதோடு தாங்கள் பிடிக்கும் பகுதிகளைக் காண்டாண்டிநோபிள் மன்னரிடமே ஒப்படைப்பதாக உறுதி கூறுயதன் பேரில் அவர்களைப் புனித இடங்களுக்குச் செல்ல அனுமதித்தார். பின்னர் ஆசியாவில் நுழைந்து, நைஸ், ஆண்டியோக் ஆகிய இடங்களைப் பிடித்தனர். கி.பி. 1099-இல் ஜெருசலத்தைத் தாக்கிக் கைப்பற்றினர். ஜெருசலத்தைப் பாதுகாக்க நிறுத்தப்பட்ட துருக்கியர் அனைவரும் கொல்லப்பட்டனர். இவ்வாறு முதல் சிலுவைப் போர் வெற்றியில் முடிந்தது. வெற்றிபெற்றபின் கிருத்துவ வீரர்கள், ஜெருசலம், எடிசா, ஆண்டியோக் மற்றும் திரிபோலி எனும் நான்கு நாடுகளை உருவாக்கி அந்நாடுகளுக்குக். காட்பிரே என்பவரை அரசராக ஆக்கினர். இருப்பினும் காட்பிரே என்பவர் தன்னை அரசர் என்றழைப்பதற்குப் பதிலாக புண்ணிய தலங்களின் காவலன் என்றழைப்பதையே விரும்பினார்.

அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் ஏழுக்கும் மேற்பட்ட சிலுவைப் போர்கள் நடைபெற்றன. காட்பிரே தலைமையில் அமைந்த நாடுகளைச் சில ஆண்டுகளில் துருக்கியர்கள் மீண்டும் கைப்பற்றினர். எனவே கி.பி. 1147-இல் இரண்டாம் சிலுவைப்போர் நடைபெற்றது. இப்போரில் கிருத்துவப் படைவீரர்கள் துருக்கியர் தாக்குதலை முறியடிக்க முடியவில்லை. கி.பி. 1187-இல் துருக்கிய அரசரான சுல்தான் சலாதீன் ஜெருசலம் போன்ற புண்ணியத் தலங்களைக் கைப்பற்றி

ஆதிக்கம் செலுத்திவந்தார். கிருத்துவர்களுக்குப் பல துன்பங்களை விளைவித்தார். அவர் மிகவும் அறிவும் திறமையும் மிக்கவர். எனவே புண்ணிய தலங்களை மீட்க போப் மூன்றாம் கிளமெண்ட் சிலுவைப் போருக்கு அழைப்பு விடுத்தார். இப்போர் சிலுவைப் போர்களிலே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் ஐரோப்பாவில் உள்ள முக்கிய அரசர்கள் கலந்து கொண்ட போர் ஆகும். பேரரசர் பிரடரிக் பாரபரோசா, பிரான்ஸின் பிலிப், இங்கிலாந்தின் ரிச்சர்டு ஆகியோர் கலந்துகொண்ட போர் ஆகும். பேரரசர் பிரடரிக் இப்போரில் ஈடுபட்ட போது அவருக்கு வயது 70. இவர் புனிதப் பயணம் மேற்கொண்டபோது, ஒரு ஆற்றில் மூழ்கி மரணத்தைத் தழுவினார். இங்கிலாந்து மற்றும் பிரான்சு படைகள் கடல்வழியாகப் படைப் பயணம் மேற்கொண்டனர். செல்லும் வழியில் சைப்ரஸைக் கைப்பற்றி அக்கீர எனும் இடத்தை நோக்கிப் புறப்பட்டனர். ஆனால் இவ்வேளையில் பிலிப் அரசரும், ரிச்சர்டு அரசரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டதால் பிலிப் சிலுவைப் போரில் தொடர்ந்து செல்லாமல், தன்னுடைய படைவிரர்களுடன் நாடு திரும்பினார். ரிச்சர்டு மட்டும் போரில் ஈடுபட்டு பல வெற்றிகளைக் குவித்தார். இருப்பினும் ஜெருசலத்தை மீட்க முடியவில்லை. சாலாதின் எனும் துருக்கிய அரசருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி சலாதீன் கிருத்துவர்களுக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுப்பதாகவும் ஜெருசலத்துக்குத் தாராளமாக வந்துசெல்ல அனுமதிப்பதாகவும் உறுதியளித்தார். எனவே ரிச்சர்டு நாடு திரும்பினார். திரும்பும் வழியில் ஏட்ரியாக் கடலில் கப்பல் மூழ்கியதால் ஆஸ்திரிய அரசர் பிடித்து சிறையில் அடைத்தார். பின்னர் அதிகப் பணம்கொடுத்து அவர் சிறையில் இருந்து விடுதலை பெற்றார்.

**நான்காம் சிலுவைப்போர்:**

போப் மூன்றாம் இன்னோசன்ட் நான்காம் சிலுவைப் போருக்கு அழைப்பு விடுத்தார். இப்போருக்குப் பிளபிண்டர்ஸின் பால்டுவின் என்பவரும் சைமன்டி மார்ட்டின் என்பவரும்தாம் முன் வந்தனர். போப் மூன்றாம் இன்னோசன்ட் ஐரோப்பிய மக்களிடையே சிலுவைப் போரின் ஆர்வம் குறைந்து இருப்பதாகவும், அவர்களிடம் ஆர்வத்தை உருவாக்கி போர் தொடுத்துப் போப்பின் பெருமையை உயர்த்திக் கொள்ளவும், திருச்சபையின் செல்வாக்கை உயத்திக்கொள்ளவும் இவ்வழைப்பை விடுத்தார். சிலுவைப் போரில்

MADURAI KAMARAJ UNIVERSITY P.M. LIB 229714

ஈடுபடுவோர் வெனிஸ் நகரில் கூடி அங்கிருந்து போருக்குப் புறப்பட முயன்றனர். வெனிசியர்களின் கப்பல்களைக் கேட்டபோது, இவர்கள் ஒரு நிபந்தனை விதித்தனர். என்னவென்றால் அவர்களுக்கு வாணிபத்தில் போட்டியாக ஏடிரியாடிக் கடற்கரையில் ஒரு ஜாரா எனும் நகரம் உள்ளது. அந்நகரைப்பிடித்துத் தரவேண்டுமென்பது. அதை ஏற்றுக்கொண்டு சிலுவைப் போர் வீரர்கள் வெனிஸ் கப்பல்களில் புறப்பட்டனர். ஜாரா நகரைப் பிடித்துவிட்டு கான்ஸ்டாண்டிநோபிள் சென்றனர். அங்கும் கிருத்துவ அரசர்தான் ஆட்சியில் இருந்தார். சிலுவை வீரர்கள் கான்ஸ்பிண்டிநோபிள் நகரையும் தாக்கிக் கைப்பற்றினர். இதனை போப் விரும்பவில்லை. கீழை நாட்டு கிருத்துவ அதிகாரத்துக்குப் பாதகம் இல்லாமல், முஸ்லீம்களிடம் இருந்து ஜெருசலத்தை மீட்கவேண்டும் என்றுதான் போப் வேண்டிக் கொண்டிருந்தார். இருப்பினும் வெனிஸ் வியாரிகள் விருப்பத்திற்கு இணங்க கான்ஸ்பிண்டிநோபிளைத் தாக்கினர். கான்ஸ்டாண்டிநோபிளில் வாரிசுரிமைப் போர் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அப்போரில் அலெக்ஸில் ஆஞ்சிலோஸ் என்பவரை அரசராக ஆக்கவேண்டும் என்று வேண்டினர். காரணம் அலெக்ஸிஸ் அஞ்சிலோ என்பவர் பல வியாபார சலுகைகளை வெனிஸ் மக்களுக்குக் கொடுப்பதாக உறுதியளித்தார். எனவே சிலுவைப் போர் வீரர்கள் கான்ஸ்டாண்டிநோபிள் அரசரையும் பதவியை விட்டு நீக்கிவிட்டு' அலெக்ஸிஸ் ஆஞ்சலோவைப் பதவியில் அமர்த்தினர். ஆனால் மக்கள் புரட்சியில் ஈடுபட்டு அலெக்ஸிஸ் ஆஞ்சலோவைக் கொன்றுவிட்டனர். எனவே சிலுவைபோர் வீரர்கள் கான்ஸ்டாண்டிநோபிளைக் கொள்ளையடித்து விட்டு வந்தனர். பால்டுவின் என்பவர் அரசராக பொறுப்பேற்றார். நான்காம் சிலுவைப்போர் கான்ஸ்டாண்டிநோபிள் நகரைத் தாக்கியதோடு முடிந்து விட்டது. பலன் ஒன்றுமில்லை. மீண்டும் பலபோர்கள் ஏற்பட்டன. ஆனால் வெற்றிபெற்றனர் என்று கூறமுடியாது.

**போரின் விளைவுகள்:**

போர் அடிப்படையில் சிலுவைப்போர்கள் தோல்வியில்தான் முடிந்தன. ஜெருசலம் மற்றும் ஏனைய புனிதத் தலங்களை மீண்டும் மீண்டும் துருக்கியர்கள் கைப்பற்றினர். லத்தீன், பாலஸ்தீனம் போன்ற பகுதிகளில் உருவாக்கப்பட்ட லத்தீன் அரசுகளையும் துருக்கியர்கள் மீண்டும் பிடித்துவிட்டனர். இருப்பினும் சிலுவைப் போர்களால் துருக்கியர்கள் தங்கள் அதிகாரத்தை

ஐரோப்பாவில் செலுத்த முடியவில்லை. அதனால் கீழை ரோமனியப் பேரரசின் வீழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது. சிலுவைப்போர்களால் போப்களின் செல்வாக்கும் புகழும் உயர்ந்தது. அவர்கள் ரோமன் கத்தோலிக்கக் கிருத்துவத்தின் தலைவர்களாகக் கருதப்பட்டனர். பல படை அமைப்புகளும், சமய அமைப்புகளும் அவ்வப்போது உருவாகக் காரணமாக அமைந்தது. இது துறவிகளையும் படைவீரர்களையும் உருவாக்கியது.

இங்கிலாந்தில் பல நகரங்கள் பணம் கொடுத்துச் சுதந்திரம் பெற்றன. காரணம் மன்னருக்குப் பணம் தேவைப்பட்டதால் பணத்தைப் பெற்றுக்கொண்டு நகராட்சிக்குச் சுயஆட்சி உரிமைகளை வழங்கினார்.

அரசியல் ரீதியாக ஐரோப்பாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இப்போர்களினால் ஐரோப்பாவில் பலம் பொருந்திய மன்னராட்சி ஏற்பட்டது. போருக்குச் சென்ற பல நிலமானியப் பிரபுக்கள் போரில் இறந்து விட்டதாலும், போரில் பொருளிழந்து வறுமையில் வாழ்ந்ததாலும், மன்னர்களின் பலம் உயர்ந்தது. இப்போர்களினால் வியாபாரம் பெருகிற்று. புதிய வியாபார வழிகள் திறக்கப்பட்டன. போரில் ஈடுபட்டவர் கிழை நாட்டவரோடு தொடர்பு கொண்டமையால் கீழை நாகரீகத்தைத் தெரிந்து கொண்டனர். ஆடம்பர வாழ்க்கையை விரும்ப ஆரம்பித்தனர். கீழை நாடுகளில் இருந்து பல ஆடம்பர பொருள்களை வாங்க ஆரம்பித்தனர். அதனால் வாணிபம் பெருகிற்று. வாசனைப் பொருட்கள், பட்டு, சர்க்கரை, பருத்தி மஸ்லின் போன்ற பொருள்களைக் கீழை நாடுகளிடம் பெற்றனர். மேலை நாட்டுத் தோட்டங்களில் ரோஜா, ஆரஞ்சு மரம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தினர். பேப்பர் தயாரித்தல் போன்றவற்றைக் கீழை நாட்டவரிடம் கற்றுக் கொண்டனர். ஆக்ரே, ஆன்டியோக் டிராயிலி போன்ற கீழை நகரங்களுக்கும் இத்தாலியில் உள்ள வெனிஸ் நகருக்கும் இடையே வாணிபம் வளர்ச்சி பெற்றது. இதனால் மத்தியத் தரைக்கடல் துறைமுகங்களில் இருந்த பல நகரங்கள் செல்வ மிக்க நகரங்களாயின. கீழை நாடுகளில் உள்ள செல்வ வளத்தால், அந்நாடுகளைப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் பலருக்கு ஏற்பட்டது. இவ்வார்வத்தின் பயனாக மார்கோபோலா, பல புதிய இடங்களைக்காண கீழைநாடுகளில் பயணம் மேற்கொண்டார். மார்கோபோலோவின் பயணக் குறிப்பால் பல கண்டுப்பிடிப்புக்கள் ஏற்பட்டன. இங்கிலாந்து அரசர் ரிச்சர்டு துருக்கியர்களிடம் இருந்து பலம்

பொருந்திய, வட்டவடிவ மாளிகைகள் கட்டுவதைக் கற்றுக் கொண்டார். அராபிக் மொழி, விஞ்ஞானம், அல்ஜுப்ரா, அரேபிய மருத்துவர்களின் திறமை போன்றவற்றை மேலை நாட்டவர் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஐரோப்பாவில் நிலமானிய பிரபுக்களின் கீழ் அடிமைகளாக (Villeins) வாழ்ந்த விவசாயிகள், விவசாயக் கூலிகள் விடுதலை பெற்றனர். தங்கள் நாட்டில் வாழ்ந்த அவர்களில் சிலர், சிலுவைப் போரின்போது, போரில் ஈடுபட்ட பிரபுக்களிடம் பணம் கொடுத்தும் விடுதலை பெற்றனர்.

### (இ) இடைக்கால ஐரோப்பாவில் மடாலயமுறை வளர்ச்சி

**பெனிடிக்டைன் மடாலய முறை (480 – 543 AD)**

ஆரம்பக்காலத்தில் பல மடாயலங்கள் பல சட்டதிட்டங்களைக் கொண்டு இயங்கி வந்தன. காலப் போக்கில் ஒரு சட்டதிட்டங்களுக்குள் இயங்க ஆரம்பித்தன. ஆசியாவின் பாசில் என்பவர்தான் கிருத்துவ மடாலயமுறையின் தந்தை என அழைக்கப்படுகின்றார். இவர் ஆரம்பித்த மடாலயமுறையில், கடின உழைப்பு, சமுதாய வாழ்வில் பொதுநோக்கு, தர்மம் செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்று வரையறை செய்தார். மேலைநாட்டு மடாலய முறையை நிறுவியவர் செயின்ட் பெனிடிக்டைன். இவர் இத்தாலியில் செயின்ட் பாட்ரிக் இறந்த நூறு ஆண்டுகளுக்குப் பின் பிறந்தார். இவர் மடாலய வாழ்க்கை என்ன என்பதை வரையறை செய்து அதன்படி துறவிகள் வாழவேண்டும் என்று கூறினார். தன்னுடைய 15-வது வயதில் ஜார்ஜ் என்னுமிடத்தில் உள்ள ஒரு குகையில் தனி வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர் கி.பி. 529-இல் இத்தாலியில் நேப்பிள்ஸ் அருகாமையில் உள்ள மாண்டிதேசினோ எனுமிடத்தில் மடாலயத்தைத் தொடங்கினார். இவருடைய கொள்கைப்படி துறவிகள் ஒழுக்கமான வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அவருடைய சட்டதிட்டப்படி ஒவ்வொரு துறவியும் ஒரு உறுதிமொழி எடுத்துக் கொள்ளவேண்டும். அதன்படி அவர்கள், கற்புடன் இருக்கவேண்டும், கடவுளுக்குப் பணிந்து நடக்கவேண்டும். ஏழ்மையில் வாழவேண்டும் என்று கூறினார். துறவிகள் தங்கள் வாழ்வின் நேரத்தை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு நாளும் செயல்படவேண்டும். அதாவது வழிபாடு செய்தல் தோட்டத்தில் வேலை செய்தல், படித்தல் என்று வேலைகளைப் பிரித்து செயல்படவேண்டும் என்று கூறினார். பெனிடிக்டைன் துறவிகள் வேலை செய்வதன் மூலம் கடவுளுக்கு வழிபாடு செய்வது என்று கொள்கையில் நம்பக்கை வைத்துப் பணியாற்றினர். பல பள்ளிகளை நிறுவி பல போதகர்களுக்குப் பயிற்சி அளித்துக் கிருத்துவ மதத்திற்குச் சேவைசெய்ய வைத்தனர். பெனிடிக்டைனைப் பின்பற்றிய துறவிகள், ஜெர்மனியர்களை நாகரீக மக்களாக மாற்றி, நெறிபடுத்திய வாழ்க்கையில் வாழச் செய்தனர். மக்களிடையே நாகரீகம் வளர அவர்கள் பெரிதும் காரணமாக இருந்தனர். பெனிடிக்டைன் கொள்கையைப் பின்பற்றிய பாதிரியார்கள் விதிமுறைப்படி பாதிரியார்கள் (Regular Clergy) ஆனவர்கள் என்றும்,

உலகியல் வாழ்வில் இருந்து கொண்டு பாதிரியார்களாக இருந்தவர்களுக்கு, சமய விதிமுறைசாரா பாதிரியார்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

மாபெரும் போப் கிரிகோரி (St.Gregory) செயின்ட் பெனிடிக்டைன் கொள்கையைப் பின்பற்றியவர் ஆவார். அவர் பெனிடிக்டைன் விட்டுச் சென்ற பணியினை முடித்து வைத்தார். இவர் செயின்ட் பெனிடிக்டைன் இறந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின் ரோமில் உள்ள பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன. ஆனால் தன்னுடைய 35-ஆவது வயதில் தன் சொத்துக்கள் அனைத்தையும் துறந்தார். தான் வசித்த வீட்டை சென்ட் ஆண்டரு மடாலயம் என மாற்றினார். செயின்ட் ஆண்ட்ருவில் அப்பாட் (Abbot) ஆக இருக்கும் போது செயின்ட் பெனிடிக்டைன் கொள்கைகளைப் பரப்பினார். அப்போதுதான் அவர் செயின்ட் அகஸ்டின் மற்றும் 40 துறவிகளை இங்கிலாந்துக்கு அனுப்பி கிருத்தவ மதத்தைப் பரப்பச் செய்தார். இங்கிலாந்திலும் மடாலய முறை அறிமுகப் படுத்தப்பட்டது. இம்முறை இங்கிலாந்தில் நார்தம்பரியின் (Nortambrian Supremary) மேலாதிகத்தில் இருக்கும் போது நல்ல வளர்ச்சி பெற்றது.

மெல்ரோஸ், ஸாரோ ஹெறஸ்ஸாம், ரிப்பன், ஒய்ட்லி, லின்டிஸ் பார்னே போன்ற இடங்களில் அபே அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இப்பெயர்கள் அக்கால ஐரோப்பாவில் பிரபலமாக இருந்தன. செயின்ட் க்யூபாட் (625-687) லிண்டிஸ்பார்னே அப்பாட் ஆக இருந்தார். இவர் தன்னுடைய அதிக நாட்களை வடக்கு கடற்கரையில் உள்ள கொரே விலங்குகள் நிறைந்த குவிஸில் கழித்தார். அவர் அங்கிருந்த பார்னே தீவில் எட்டு ஆண்டுகள் கழித்தார் என்று கூறப்படுகிறது. அந்த இடத்தில் தனிமையாக வாழ்ந்தார். அப்போது, கடலையோ நிலத்தையோ பார்க்கவில்லை. வானத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தார். தான் வாழ்ந்த இடத்தில் இருந்தே தான் மோட்சத்தை அடைய முடியும் என்று நம்பினார். மடாலய வாழ்க்கை மிகவும் கடினமானது என்றாலும் அக்காலத்தில் அத்தகைய வாழ்க்கை பலரை இழுத்தது. ஏனென்றால் மடலாய முறையில் தான் நல்ல கல்வியையும், நல்ல அமைதியையும் காண முடியும் என்று நம்பினர். நார்த்தம்பிரிய மடாலய முறையில் ஜஸ்ரா என்பதும் ஒரு மடம். இம் மடத்தில் செயின்ட் பேடே எனும் அறிஞர் அபாட்டாக இருந்தார். அவர்

ஆங்கிலேய மக்களின் சமய வரலாறு (Ecclaiastical history of the English people) எனும் நூலை எழுதியுள்ளார். அந்நூலின் மூலம் சாக்ஸோனிய இங்கிலாந்து பற்றிய பல செய்திகளை நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது. செயின்ட் பேடே தன் வாழ் நாள் முழுவதும் ஜாரோ மடத்தில் கழித்தார். அங்கு படிப்பது, கற்றுக்கொடுப்பது, எழுதுவது போன்ற பணிகளை மேற்கொண்டார். இங்கிலாந்து நாகரீக நாடாக மாற இந்தத் துறவிகள் பெரிதும் துணை புரிந்துள்ளனர். இவர்கள் கற்றறிந்தவர்கள் ஆதலால் மன்னரின் ஆலோசனைக் குழுவில் அமர்ந்து, மன்னருக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கினர். இவர்களின் ஆலோசனையின்படி நிர்வாகம் செய்ததால், காட்டு மிராண்டித்தனமாக இருந்த சாக்ஸோனிய இங்கிலாந்து நாகரீக நாடாக மாறியது.

பிந்திய நூற்றாண்டுகளில் இன்னும் பல மடாலய முறைகள் தோன்றின. அவை குளினியர்கள் (910-AD) கார்த்தூசியர்கள் (1084-A.D) மற்றும் சிஸ்டர்ஸ்ஸியனர்கள் (1098 A.D) போன்றவையாகும்.

**குளுனியர்கள் (Cluniacs):**

காலப்போக்கில் திருச்சபையில் பலமுறைகேடுகள் நடைபெறத் தொடங்கின. திருச்சபைப் பொறுப்பில் இருந்தோர் பல பாவச் செயல்களிலும் ஈடுபட்டனர். இதனை மக்கள் பலரும் கண்டித்த வண்ணம் இருந்தனர். திருச்சபையில் உயர்ந்த பதவியில் இருந்தோரும் இத்தகைய தவறுகளுக்கு அடிமையாயினர். இத்தகைய தீய பழக்கவழக்கங்களுக்கு எதிராகப் புரட்சி வெடித்தது. அவ்வாறு நடைபெற்ற புரட்சியில் பிரான்ஸ் நாட்டில் உள்ள குளுனி என்ற இடத்தில் வாழ்ந்த துறவிகளும் தைரியமாகத் திருச்சபை முறைகேடுகளைக் கண்டிக்கத் தொடங்கினர். அவர்கள் தூய்மையான வாழ்க்கையையும், தூய்மையான பக்தியுடனும் செயல்பட்டனர். எனவே 10-ஆம் நூற்றாண்டில் பல மடாலயங்களில் இருந்த துறவிகள், கன்னியாஸ்திரிகளும் குளுனி மடாலயத்தோடு சேர்ந்து திருச்சபைச் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர். சூழ்நிலைக்கு ஏற்றவாறு பெனிடிக்டைன் சட்டதிட்டங்களில் சில மாற்றங்களைச் செய்து கொண்டனர். இவர்களுடைய நடவடிக்கையைக் கண்ணுற்ற பல அரசர்களும் போப்பாண்டவர்களும் திருச்சபைச் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர். மாபெரும் போப் ஏழாம் கிரிகோரி திருச்சபைச்

சீர்திருத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டார். குளுனியாத் துறவிகளும், கன்னியாஸ்திரிகளும் நல்ல பயிற்சி பெற்று முழு மனதோடு, சேவை மனப்பான்மையோடு சேவை செய்தனர். டன்ஸ்டான் (Dunstan) எனும் காண்டாபரி ஆர்ச் பிசப், ஆரம்பத்தில் குளுனி இயக்கத்தில் அப்பாட் ஆக இருந்தவர். இவர் கணாண்டர்பரி திருச்சபையில் ஆர்ச் பிசப்பாக 30 ஆண்டுகாலம் இருந்தார். இவர் செயின்ட் பெனிடிக்டைன் விதிமுறைகளை கடுமையாகப் பாதிரியர்கள் மீது செயல்படுத்தியதோடு பாதிரியார்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 7 முறை சமய சேவை (பிரசங்கம்) செய்ய வேண்டும் என்றும், நான்குமணி நேரம் படிப்பதற்கு ஒதுக்க வேண்டும் என்றும் 6 மணி நேரம் உடல் உழைப்புடன் வேலை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார். குளுனியாத் துறவியான வைரல்டாபிராண்டு திருச்சபையின் சுதந்திரத்திற்காகப் பேரரசரரோடு கடுமையான சண்டையிட்டு வெற்றி பெற்றார்.

**கார்த்தூசியன்:**

பதினோறாம் நூற்றாண்டின் இறுதியில் மற்றொரு மடாலயமுறை தோன்றியது. கி.பி. 1084-இல் செயிண்ட் புருனோ என்பவர் கார்த்துசிய மடாலய முறையைத் தோற்றுவித்தார். இது நல்ல வாழ்க்கை மற்றும் நல்ல வழிபாடு செய்வதையே நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒன்று அவர்கள் தனியாகவும் கடுமையான கட்டுப்பாட்டுடனும் வாழ்வதைக் கொள்கையாகக் கொண்டிருந்தனர். ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு அருந்தினர். அதுவும் மிகவும் சாதாரண உணவு. அந்த உணவைத் தனியாக உண்டனர். துறவிகள் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட அறையில் வாழ்ந்தனர். தலையை மொட்டையடித்துக் கொண்டு வாழ்ந்தனர். அவர்கள் அமைதியாக இறை பக்தியுடன் வழிபாடு செய்தல் மற்றும் தோட்ட வேலை செய்தல் ஆகியவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டனர். அவர்கள் கடினமான ஆடைகளை அணிந்தனர். அவர்கள் கடுமையான கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையை வாழ மக்களை தயார் செய்தனர். எனவே மற்ற மடாலயமுறையைப் போல இம்மடாலயமுறைக்கு அதிக வரவேற்பு இல்லை.

**சிஸ்டர்ஸ்ஸியன் (Cistercians):**

சிட்ராக்ஸ் (Citreauks) அபாட் ராபர்ட்பர்குண்டியில் பணியாற்றிய போது சிஸ்டர்ஸ்ஸியன் எனும் மடாலய முறையைத் தோற்றுவித்தார். செயின்ட் பெர்னார்டு என்னும் இச்சபையின் உறுப்பினர்

கி.பி. 1115-இல் கிலிடார்வாக்ஸ் எனுமிடத்தில் ஒரு மடாலயத்தைத் தோற்றுவித்தார். அவர் இறக்கும் வரை அம்மடாலயத்தின் அபாட்டாக இருந்தார். இவருடைய மடாலயப் பணியில் சிஸ்டர்ஸ்ஸியன் மடாலயம் மிகவும் சிறந்த ஒரு நிறுவனமாக இருந்தது. மக்கள் போப்புக்கு அளித்து வந்த மரியாதையை விட செயின்ட் பெர்னார்டுக்கு அதிக மரியாதை செலுத்தினர். மன்னர்கள் கூட அவரைக் காணவந்தனர். மனவலிமை மிக்க இவர். மிகவும் எளிமையாக வாழ்ந்தார். போப்பாண்டவரை நியமிக்கும் அளவிற்கு அவர் செல்வாக்கு உயர்ந்தது. இவர்தான் முதல் சிலுவைப் போர் நடத்தியவர். மடாலயமுறையில் இவருடைய மடலாயமுறைதான் சிறந்தது என்று மக்கள் கருதினர். இவர் இறக்கும் போது 300-க்கும் மேற்பட்ட சிஸ்டர்ஸ்ஸியன் மடாலயங்கள் இருந்தன. இதுவே அவருடைய செல்வாக்குக்கு எடுத்துக்காட்டான ஒன்று. சிஸ்டர்ஸ்ஸியன் துறவிகள் வெள்ளைத் துறவிகள் என்று அழைக்கப்பட்டனர். காரணம் அவர்கள் பெனிடிக்டைன் மடாலய துறவிகளில் இருந்து வேறுபடுத்திக் காட்ட வெள்ளை ஆடைகள் அணிந்து இருந்தனர். இவர்கள் தங்கள் மடாலயங்களை அமைக்க, நகர் மற்றும் ஊர் ஆகியவற்றிற்கு அப்பால் தனியாக உள்ள காடுகள், பள்ளத்தாக்குகள் போன்ற இடங்களைத் தேர்ந்தெடுத்தனர். தாங்கள் மட்டும் எளிமையாக வாழவில்லை. தாங்கள் அமைத்திருந்த மடாலயங்கள், திருச்சபைகளையும் எளிமையாகக் கட்டி வாழ்ந்து வந்தனர்.

12-ஆம் நூற்றாண்டில் மடாலய முறையில் நகர் உச்சக் கட்டத்தை அடைந்தது. குறிப்பாக செயின்ட் பெர்னார்டு காலத்தில் அதன் பெருமைகள் உயர்ந்து காணப்பட்டது. அவரின் மரணத்திற்குப் பின்னர் துறவிகள் தங்களின் எளிமையான வாழ்க்கையைத் துறந்தனர். பணம் சேகரிப்பதிலும், ஆடம்பர வாழ்க்கை வாழ்வதிலும் ஈடுபட ஆரம்பித்தனர். தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்களைச் சேர்க்க ஆரம்பித்தனர். அவர்கள் தாங்கள் உணவருந்தும் போது பயன்படுத்தும் தட்டுகள் தங்கத்தாலும், வெள்ளியாலும் ஆனவைகளாக இருந்தன.

**ப்ரியர்கள் அல்லது பிச்சைக்காரத் துறவிகள்:**

இடைக்கால திருச்சபையில், 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் ப்ரியர்களின் பணி குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவர்கள் திருச்சபையோடு சாதாரண மக்களின் தொடர்பினை

அதிகரித்தனர். அன்றாட வாழ்க்கையில் அவர்களுடைய பணி தொடர்புடையதாக இருந்தது. செயின்ட் டொமினிங் என்பவர் இந்த மடாலயமுறையைத் தோற்றுவித்தார். டொமினிசியர்கள் படிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இவர்களுடைய முயற்சியால் பல பல்கலைக்கழகங்கள் தோன்றின. இங்கிலாந்தின் மூன்றாம் ஹென்றியின் அமைச்சரும் வெஸ்ட்மின்ஸ்டர் பிசப்பும் ஆன பீட்டர் டெஸ்ரோச்சஸ் (Peter Des Roches) என்பவரின் அழைப்பின்படி முதன்முதலில் இங்கிலாந்துக்கு வந்த ப்ரியர் இயக்கத்தினர் டொமனிஸியர்கள்தான். முதன் முதலில் அவர்கள் 1221-இல் ஆக்ஸ்போர்டில் ஒரு கட்டடம் கட்டினர். விரைவில், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ்ஸில் 50-க்கும் மேற்பட்ட மடாலயங்களைக் கட்டினர். இம்மடாலயத்தில் இருந்த அத்துணைபேரும் தங்கள் சொந்த சொத்துக்களைத் துறந்தனர்.

**பிரான்ஸ்ஸிஸ்கன் ப்ரியர் (Franciscan Friars)**

பிரான்ஸிஸ்கன் ப்ரியர் அமைப்பை (கி.பி. 1112-1226) அஸிஸி என்னும் இடத்தில் இருந்த செயின்ட் பிரான்ஸிஸ் தோற்றுவித்தார். இவர் இத்தாலியில் இருந்த ஒரு வசதிபடைத்த வியாபாரியின் மகன் தன்னுடைய 21-ஆம் வயதுவரை மிக ஆடம்பர மற்றும் உலகியல் வாழ்க்கையில் வாழ்ந்து வந்தார். ஒருமுறை நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தார். அப்போது ஒரு அதிசயத்தக்கக் கனவு கண்டார். அக்கனவில் இயேசு நாதர் தோன்றி உன்னிடம் இருக்கும் சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டு, அதனை ஏழைகளுக்குக் கொடு என்று கூறினார். அது முதல் தன் சொத்துக்கள் அனைத்தையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து விட்டுத் தான் பிச்சை எடுக்கத் தொடங்கினார். தன்னுடைய காலத்தை ஏழை மற்றும் நோயாளிகளுக்கு உதவுவதற்கே செலவு செய்தார். தொழுநோயாளிகளை அழைத்து அவர்களுக்குரிய மருத்துவமனைகளில் சேர்த்தார். தெய்வ பக்தி நிறைந்தவராகக் காணப்பட்டார். இவருடைய தெய்வீக வழிபாட்டால் பலர் ஈர்க்கப்பட்டனர். எனவே ஏராளமானோர் இவருடைய சீடர்களாகச் சேர்ந்தனர். பிரான்ஸிலும் அவருடைய சீடர்களும் ஏழை மக்களிடம் தங்கள் கொள்கைகளைப் பரப்பினர். அவர்கள் தங்கள் சொத்துக்களைத் தானம் வழங்கியதோடு மற்றவர்களையும் தங்கள் சொத்துக்களைத் தானம் செய்யவேண்டும் என்று போதித்தனர். அவர்கள் பல இடங்களுக்குச் சென்று பிச்சை எடுத்து வாழ்ந்ததால் அவர்களைப் பிச்சைக்கார ப்ரியர்கள் என்று

அழைத்தனர். பிரான்ஸிஸ்கன் ப்ரியர்கள் கி.பி. 1224-இல் இங்கிலாந்துக்கு வந்தனர். இங்கிலாந்தில் கான்டர்பரி, லண்டன் ஆக்ஸ்போர்டு போன்ற இடங்கில் தங்கள் அமைப்புக்களை அமைத்துக் கொண்டனர். பிரான்ஸிஸ்க்கன் ப்ரியர் துறவி ஒருவர் காலணியில்லாமை, எளிய ஆடைகள், பணம் பெற்றுக் கொள்ளாமை ஆகிய மூன்று நடைமுறைகளும்தான் தங்கள் இயக்கத்துக்குப் பெருமை என்று கூறினார். நகர்ப் புறங்களுக்கு வெளியே தாங்கள் குடியிருந்து கொண்டு நகர்ப்புற மக்களுக்குத் தொண்டு செய்தனர். அவர்கள் சமயப் பிரச்சாரமும் மேற்கொண்டனர். பல இடங்களுக்குச் சென்று தெருமுனைப் பிரச்சாரம் செய்து வந்தனர். அவ்வாறு பிரச்சாரம் செய்யும் போது, சாதாரண மக்கள் பயன்படுத்தும் மொழியில், அவர்களுக்குப் புரியும் வகையில் சமயப் பிரச்சாரம் செய்தனர். இத்தகைய செயல்பாடு டொமினிக் கொள்கையைப் பின்பற்றியவர்கள் செய்வதில்லை. டொமினிகன்களை பின்பற்றுபவர்களுக்கும் பிரான்ஸிஸ்கனைப் பின்பற்றியவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் டொமினிக்கை பின்பற்றுபவர்கள் கற்றறிந்தவர்கள் பிரான்ஸிகனைப் பின்பற்றுபவர்கள் அனுபவ அறிவு பெற்றவர்கள், இருப்பினும் ஒரு சில பிரான்ஸிஸனைப் பின்பற்றியவர்கள் சிறந்த கல்வியாளர்-களாகவும் நல்ல பல தத்துவங்களைப் போதித்தவர்களாகவும் விளங்கினர். அவர்களில் லண்டன் பிசப் ராபர்ட் கிராஸெட்டஸ்ட் மற்றும் ரோஜர் பேகன் ஆகியோர் ஆவர். அவர்கள் படிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் இன்னும் ஏன், எதற்கு என்று ஆய்வு நோக்கை வளர்க்கும் அறிவை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இத்துறவிகள் சமுதாயத்திற்குப் பல சேவைகள் செய்துள்ளனர். இவர்கள்தான் இடைக்காலத்தில் பல்கலைக்கழகங்கள் நிறுவ காரணமாக இருந்தனர். பலதுறவிகள் தங்கள் காலத்தைய மூல எழுத்துக்களை சேகரிப்பதில் செலவு செய்தனர். அவ்வாறு அவர்கள் சேகரித்த ஆதாரங்கள் எதிர்கால மனித குலத்துக்கு பயனுள்ளவைகளாக விளங்கின. மடாலயங்களில் இருந்த நூலகங்களை எதிர்கால சந்ததியாளர் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருந்தது. அந்நூல்களில் இருந்த மூல ஆதாரங்களும், அம்மடாலயம் சார்ந்த அறிஞர்கள் எழுதிய நூல்களும் வரலாற்று ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ளவைகளாக அமைந்தன. செயயன்ட் ஆல்பன் மடாலயத்தில் இருந்த ஆங்கிலேயத் துறவிகள் பலர் தங்கள் காலத்தில் இருந்த வரலாற்றை

எழுதிவைத்திருந்தனர். செய்ன்ட் ஆல்பன் மடாலயத்தில் பணியாற்றிய மாத்யூ பாரிஸ் என்பவர், வரலாற்றுத் துறவிகளில் முக்கியமானவர் ஆவார். மடாலயங்கள் ஒரு நாளைக்குப் பலமுறை வழிபாடு நடததும் இடமாக மட்டுமல்லாமல், கல்விகற்கும் இடமாகவும் விளங்கிற்று. அதுமட்டுமல்லாமல், பயணிகள் அங்கு வந்து தங்கவும் உணவு அருந்தவும் ஏற்ற இடமாகவும் இருந்தது. பல விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் இடமாகவும் விளங்கிற்று.

### *(ஈ) இடைக்கால நகரங்களின் வளர்ச்சி*

இடைக்கால ஐரோப்பாவில் பல நகரங்கள் வளர்ச்சி பெற்றன. அதற்குப் பல காரணங்கள் உண்டு.இங்கிலாந்தில் பிரிஸ்டால் (Brishtal) நகர வளர்ச்சிக்கு ஆவோன் மீது அமைக்கப்பட்ட பாலம் காரணமாயிற்று. இன்னும் சில நகரங்கள், கடற்கரையில் அமைந்துள்ள துறைமுகங்களிலும், நதிக்கரையிலும் அமைந்துள்ளதால் வளர்ச்சி பெற்றன. சில நகரங்கள் மடாலயங்கள் அமைந்த இடங்களில் வளர்ச்சி பெற்றன. சில நகரங்கள் பிரபுக்களின் மாளிகையைச் சுற்றி வளர்ச்சி பெற்றன. ஆக்ஸ்போர்டு போன்ற சில நகரங்கள் மேலே கூறிய அனைத்துக் காரணங்களாலும் வளர்ச்சி பெற்றன.

ஆரம்பக் காலத்தில் கிராமம் அல்லது மெனோர் ஆகியவற்றிற்கும் நகருக்கும் வேறுபாடு இல்லாது இருந்தது. நகரத்தில் உள்ளவர்களும், கிராமத்தில் உள்ளவர்களைப் போன்றே வாரவேலை, அறுவடைக் கால வேலை போன்ற வேலைகளை நகரில் உள்ள பிரபுக்களுக்கு வில்லென் அல்லது விவாசயக் கூலி செய்வதைப் போன்று செய்து வந்தனர். ஆனால் காலப் போக்கில் நகர்ப்புற மக்கள் வாணிபத்தில் ஈடுபட்டதால் செல்வந்தர்களாக ஆகினர். தாங்கள் பெற்ற செல்வத்தைக் கொண்டு, பிரபுக்களுக்குப் பணம் செலுத்தி தங்கள் உரிமைகளைப் பெற்றனர். இம்முறை, நகர்ப்புறங்களில் உள்ள அரச குடும்பத்திற்குச் சொந்தமான டெமஸ்னே (Demesne) நிலங்களை எளிதில் நகர்ப்புற மக்கள் மன்னருக்குப் பணம் செலுத்தி தங்களுடைய நிலங்களாக ஆக்கிக்கொண்டனர். அதோடு மன்னர் தன்னிடம் இருந்த நிலமானிய உரிமைகளையும் பணம் கொடுத்தவர்களுக்கே விட்டுக் கொடுத்துவிட்டார், இவ் வகையில் இங்கிலாந்து மன்னர்கள் இரண்டாம் ஹென்றி, முதலாம் ரிச்சர்டு மற்றும் ஜான் ஆகியோர் காலத்தில் பல

நகரங்கள் சுதந்திர உரிமைகளைப் பெற்றன. ஆனால் மடாலயத்துக்கு அருகாமையில் இருந்த நகரங்கள் குத்தகை உரிமைகளைப் பெறுவதில் சில சிக்கல்கள் இருந்தன. காரணம் சில மடாலய நிர்வாகிகள் தங்கள் நிலமானிய உரிமைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இதனால் மடாலயங்களுக்கும், நகரங்களுக்கும் இடையே பல தகராறுகள் ஏற்பட்டன.

ஆரம்பத்தில் நகரங்களை ரீவ் (Reeve) எனும் அதிகாரி நிர்வாகம் செய்து வந்தார் அவர் நாட்டில் உள்ள செரிப் என்பவருக்குக் கட்டுப்பட்டவர். அக்காலத்தில் நகர்ப்புற மக்கள், மன்னர் சிலுவைப் போரில் ஈடுபடுவதையும், மேலும் பணச்செலவு போர்களில் ஈடுபடுவதையும் வரவேற்றனர். காரணம் அப்போதுதான் பணம் கொடுத்து உரிமை சாசனங்களைப் பெற்று நகரங்களைச் சுதந்திரமாக நிர்வகிக்க முடியும் என்று கருதினர். அவ்வாறே பணம் கொடுத்து நகரங்களுக்குச் சுதந்திர உரிமை சாசனங்களைப் பெற்றுவிட்டனர். ஆனால் சுதந்திரம் பெற்ற பின்னர் தங்கள் நகரங்களை நிர்வகிக்க மேயர் ஏல்டர்மேன் என்ற ஒருவரைத் தேர்ந்தெடுத்து நிர்வாகம் செய்யத் தொடங்கினர். அவ்வாறு நிர்வாகம் செய்யும் போது தங்கள் நகரங்களுக்குத் தேவையான சட்டங்களை இயற்றவும், நாணயங்கள் அச்சிடவும் நகர்ப்புற வாயிலில் வரிவசூலிக்கவும், சுதந்திரமாக வரி விதிக்கவும் உரிமை பெற்றுச் சுதந்திரக் குடியரசு போல செயல்படத் தொடங்கின. மேலும் நகர்ப்புறங்களில் வாழும் சாமானிய மக்களும் சுய ஆட்சி என்ன என்பதை உணரத் தொடங்கினர். நகர்ப்புற மக்கள் பல கட்டடங்களையும் கட்டினர். இங்கிலாந்து நாட்டு நகரங்கள், இத்தாலி, ஜெர்மனி நாட்டு நகரங்களைப் போன்று செல்வச் செழிப்புள்ள நகரங்களாக விளங்கவில்லை.

இருப்பினும் நகரங்கள் அழகிய கட்டடங்களைக் கொண்டு விளங்கின என்று கூறமுடியாது. பல நகரங்களில் வீடுகள் மரத்தாலும், கூரைகளாலும் கட்டப்பட்டிருந்தன. அவை தீப்பற்றக் கூடியவைகளாக இருந்தன. தெருக்கள் மிகவும் குறுகியதாகவும், சுத்தமில்லாமலும் சுகாதாரமற்ற நிலையிலும் இருந்தன. நோய் நொடிகள் நிறைந்தவைகளாக இருந்தன. காய்ச்சல், தொற்றுநோய், தோல்நோய் ஆகியவை பல நகரங்களில் நிலவின. பல நகரங்களில் வாழ்ந்த மக்கள் சுகாதார விதிமுறைகளைத் தெரியாதவர்களாக இருந்தனர்.

**வர்த்தகச் சங்கங்கள்: (Guilds)**

இடைக்கால நகர மக்கள் அடுத்த நகரமக்கள் மீது பொறாமை கொண்டவர்களாக இருந்தனர். தங்கள் நகரத்து மக்கள் அல்லாத பிற நகர மக்களை அந்நியர்கள் என்று கருதினர். பிற நகரத்தார் தங்கள் நகருக்குள் நுழைய வேண்டுமானால் அவர்கள் சுங்க வரி செலுத்தி விட்டுத்தான் வரவேண்டும். நகரத்தில் உள்ள வர்த்தக நடவடிக்கைகள் (Guild) கில்டு என்ற வர்த்த சங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. சங்கத்தை நிர்வகிக்கத் தேவையான நிதியினை வர்த்தகச் சங்க உறுப்பினர்கள் செலுத்துவர். வர்த்தகச் சங்க இடத்துக்கு வர்த்தக சங்க மஹால் என்று அழைக்கப்படும். வர்த்தகச் சங்கத்தில் அனைத்து வகையான வியாபார உறுப்பினர்களும் இடம் பெறுவர். அவ்வுறுப்பினர்கள் அனைவரும் சங்கம் இயற்றும் கடுமையான விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். வர்த்தகச் சங்கம் இரண்டு நோக்கங்களை அடிப்படையாக வைத்து விதிமுறைகளை வகுக்கும். அவை: வெளிநாட்டவரை போட்டியிலிருந்து தவிர்ப்பது; பொது நலன் கருதி விலை நிர்ணயம் செய்வது. ஒவ்வொரு நகரிலும் விலைக்கட்டுப்பாடு நிர்ணயம் செய்ய அனுபவம் மிகுந்த கணக்கீட்டாளர் (Assessor) இருப்பார். எடை அளவைக் குறைக்கின்ற வியாபாரிகள் தண்டிக்கப்பட்டனர். தரம் குறைவாக இருந்தாலும் வர்த்தகச் சங்கங்கள் மூலம் தண்டிக்கப்பட்டனர். இவ்வாறு வர்த்தகச் சங்கங்கள் நகர்ப்புற வாணிபத்தைக் கட்டுப்படுத்தவும், விலைவாசியை ஒழுங்குபடுத்தவும் செயல்பட்டன.

ஒட்டுமொத்த வர்த்தகச் சங்கங்கள் இருப்பினும் பல பொருளிலும் நடைபெறும் வாணிபத்திற்காகத் தனித்தனி வர்த்தகச் சங்கங்களும் இருந்தன. ஒரு குறிப்பிட்ட பொருளில் வர்த்தகம் செய்வோருக்கும், ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யும் கைவினை வல்லுநர்களுக்கும் தனித்தனி சங்கங்கள் இருந்தன. கைவினைச் சங்கத்தில் தொழில் வல்லுநர் (Master) மற்றும் சாதாரண உறுப்பினர் என இருவகையினர் இருந்தனர். ஒரு பையன் தன் இளம் வயதில் கைவினைத் தொழிலில் ஈடுபட்டு எழு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பின்னர்தான் அவன் கைவினைஞன் என்று கருதப்படுவான். அதன் பின்னர் பொருளை உற்பத்தி செய்ய அனுமதிக்கப்படுவான். அவ்வாறு உற்பத்தியில் ஈடுபட்டுத் தன் திறமையின் அடிப்படையில் திறமையைக் காட்டி சிறந்த உற்பத்தியாளர் என்று பெயர் பெற்றால்தான் தொழில்

வல்லுநர் (Master) என்று அழைக்கப்படுவான். சம்பந்தப்பட்ட கைவினைஞர் சங்கம், ஒருவர் உற்பத்தி செய்த பொருளின் தரம் குறைவாக இருந்தாலோ, தவறாக இருந்தாலோ அவரைத் தண்டிக்கும். மேலும் இச்சங்க உறுப்பினர்கள் ஞாயிற்றுக்கிழமை அல்லது விடுமுறை நாட்கள், விழாக்காலம் அல்லது இரவு நேரம் ஆகிய நேரங்களில் வேலை செய்தால் அவர்களைத் தண்டிக்கும். இச்சங்கம் ஒரு சேமநல அமைப்பாகவும் செயல்பட்டது. ஏதேனும் உறுப்பினர் இறந்துவிட்டால், அடக்கம் செய்வதற்கான செலவு மற்றும் ஏற்பாட்டையும் சங்கமே செய்யும் இறந்துவிட்ட தொழிலாளியின் விதவைக்கு ஓய்வு ஊதியம் வழங்கிற்று. உறுப்பினர் ஏதேனும் ஒரு பொருளை உற்பத்திசெய்யுமுன், உடல்நலவுக் குறைவு ஏற்பட்டு உற்பத்திக்குத் தடை ஏற்படுமெனின், அவ்வுறுப்பினருக்கு உதவியாகச் செய்ய வேண்டிய பொருளை முடித்துக் கொடுக்கும். திருச்சபைகள் கட்டுவதற்கு, நகர்ப்புறங்களில் விழா நடத்த மஹால்கள் கட்ட விளையாட்டு அரங்குகள் அமைக்க வர்த்தக மற்றும் கைவினைஞர்கள் நன்கொடைகள் வழங்கும். திருச்சபை பாதிரியார்கள், இறந்தோர்களை அடக்கம் செய்யும் போது செய்யப்படும் பிரார்த்தனைகளுக்குப் பணஉதவி செய்தன. சமயம் சார்ந்த கட்டங்களுக்கு சில சங்க உறுப்பினர் நன்கொடை வழங்கினால் அவர்களின் பெயர் அக்கட்டடங்களுக்குச் சூட்டப்படும். சங்கக் கட்டடங்களுடன் திருச்சபையும் இணைக்கப்பட்டிருக்கும். சங்கங்கள் பல கல்விச் சாலைகளையும் அமைத்துள்ளன. பல இலக்கணப் பள்ளிகளைத் துவக்கியுள்ளன. கேம்பிரிட்ஜ்ஜில் உள்ள கிருத்துவ அறக்கட்டளை (Corpus Christ) எனும் வர்த்தகச் சங்கம் ஒரு கல்லூரியைத் தோற்றுவித்து அக்கல்லூரியையும் அதன் பெயரில் தான் இயக்கியது. இவ்வாறு இடைக்கால வர்த்தக மற்றும் கைவினைஞர் சங்கங்களின் செயல்பாடு பல்நோக்குக் கொண்டதாக விளங்கின.

இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் நகராட்சி முறைகள் செயல்பட்டன. ஜெர்மனியில் இருந்த நகராட்சிகள் தங்கள் நகர் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தங்களுக்குத் தேவையான சட்ட திட்டங்களை உருவாக்கிக் கொண்டன. சில நகரங்கள் கூட்டமைப்பு அமைத்துக்கொண்டு, வெளிநாடுகளோடு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் போர் தொடுக்கவும், சமாதான உடன்படிக்கைகள் செய்து கொள்ளவும் உரிமை பெற்றன. அவ்வாறு கூட்டமைப்பு கொண்ட நகர அமைப்புகளில் முக்கியமானவை ஹான்சீட்டிக் கூட்டமைப்பு

(Hanseatic League) ஆகும். இவ்வமைப்பில் பல ஜெர்மானிய நகரங்கள் உறுப்பினர்களாக இருந்தன. இவ்வமைப்பு பல நாடுகளில் வியாபார ஸ்தலங்களை அமைத்திருந்தன. இவ்வமைப்பு கடற்கொள்ளைக் காரர்களை அடக்கும் வகையிலும், கடற்கொள்ளைகளைத் தடுக்கும் வகையிலும் பலம் பொருந்திய ஆயுதங்களை வைத்திருந்தது. வியாபாரத்திற்கு முக்கியத் தரை மார்க்கமாக விளங்கிய இடங்களான கீவ் (Kiev) மற்றும் அஸ்ட்ரகான் (Astrakhan) ஆகியவற்றை இவ்வமைப்பு தன் கட்டுப்பட்டின் கீழ் வைத்திருந்தது. இங்கிலாந்து அரசர்கள் இவ்வமைப்புக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கினர். இரண்டாம் ஹென்றி ஆட்சிக் காலத்தில், அவரின் அனுமதி பெற்று லண்டனில் பொருள் பாதுகாப்பிடம் (Warehouse) ஒன்றை அமைத்து இருந்தனர். தெற்கு ஜெர்மனியில் புருஜஸ், ஆண்ட்வெரிப் போன்ற இடங்களில் சிறந்த ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவ்வாடைகள் ஐரோப்பாவில் உள்ள பாதி நாடுகளுக்குப் போதுமானதாக இருந்தது. மேலும், கோலக்னே (Cologne) ஆக்ஸ்பர்க் (Augsburg) மற்றும் நூரம்பர்க் (Nuramberg) போன்ற நகரங்களும் சிறந்து விளங்கின.

**இத்தாலியில் நகர மற்றும் நகராட்சிகள்**

இத்தாலியில் இருந்த நகரங்கள் மிகவும் வலுவான ஆட்சிமுறையைச் செயல்படுத்தின. அவைகள் மரியாதைக்காகக் கூட புனித ரோமானிய பேரரசரை மதிக்கவில்லை. அந்த அளவிற்குச் சுதந்திர நகர்களாக விளங்கின. வியாபாரம் பெருக பெருக இத்தாலியில் இருந்த பல நகரங்கள் செல்வச் செழிப்புற்ற நகரங்களாக விளங்கின. அதனால் பலம் மிகுந்த அந்நகரங்கள் ஒன்றுபட்ட இத்தாலியை உருவாக்குதற்குத் தடையாக இருந்தன. இருப்பினும் அங்குவாழ்ந்த செல்வந்தர்களிடையே போட்டி பொறாமைகள் ஏற்பட்டு அடிக்கடி உள்நாட்டுச் சண்டை மற்றும் குழப்பங்கள் ஏற்பட்டன. இதனால் வெளிநாட்டவர் அச்சுறுத்தலுக்கும் ஆளாயின. இருந்த போதிலும், இத்தகைய நகரங்களில்தான் ஐரோப்பாவிலேயே மிகச்சிறந்த பணக்காரர்கள், மிகச் சிறந்த கைவினைஞர்கள், மிகச் சிறந்த ஓவியர்கள், மிகச்சிறந்த ஸ்தபதிகள், சிறந்த விஞ்ஞானிகள் மற்றும் தத்துவ மேதைகள் தோன்றினர். இத்தாலியில் இருந்த நகரங்களில் மிக முக்கியமானவை. மிலன், பிளாரன்ஸ் மற்றும் வெனிஸ் ஆகியவை ஆகும். அவற்றைப் பற்றி இப்போது காண்போம்.

**மிலன்**

இத்தாலியில் உள்ள லம்பார்டி எனும் பகுதியில் மிலன் அமைந்துள்ளது. போ (Po) நதிப் பள்ளத்தாக்கின் மையப் பகுதியில் இந்நகர் அமைந்துள்ளது. இந்நகரில் உள்ள பட்டறையில் மிகவும் சிறந்த இரும்பாலான ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. மற்றும் பட்டு, கம்பளி போன்ற சிறந்த ஆடைகளையும மிலன் நகரில வாழ்ந்த கைவினைஞர்கள் உற்பத்தி செய்தனர். இங்கு உலகப் பிரசித்தி பெற்ற திருச்சபை (Cathedral) ஒன்று இன்றும் உள்ளது. இந்தக் கத்தேட்ரல் எனும் திருச்சபை கோதிக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. போப்புக்கும் பேரரசுக்கும் இடையே நடைபெற்ற சண்டையில், லாம்பார்டி நகரங்களின் சார்பில் மிலன் தலைமையேற்றுப் பேரரசுப் படைகளை எதிர்த்து போரிட்டது. அப்போது மிலன் அதிகாரம் உச்சத்தில் இருந்தது. இரண்டு வல்லரசு குடும்பம் மிலனை ஆட்சி செய்தது. அவை ஒன்று விஸ்கவுண்ட் மிலனில் உள்ள கத்தேட்ரல் திருச்சபையை இவ்வமிசத்தைச் சார்ந்த ஜுயான் பாலீஜோ என்பவர் கட்டினார். மற்றொரு வம்சம் ஸ்போர்ஜா (Sforza). 16-ஆம் நூற்றாண்டின் போது மிலன் தன் சுதந்திரத்தை இழந்து ஸ்பெயின் நாட்டின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டது. பின்னர் கி.பி.1713-இல் உட்ரக்ட் ஒப்பந்தப்படி மிலன் ஆஸ்திரியாவோடு இணைக்கப்ட்டது.

**பிளாரன்ஸ் (Florence):**

உலகில் உள்ள அழகான நகரங்களில் பிளாரன்ஸ் நகரமும் ஒன்று. மற்ற நகரங்களைவிட அதிகமான கலைப் படைப்புகளை பிளாரன்ஸ் உருவாக்கியுள்ளது. பிளாரன்ஸ் மக்கள் கல்வி கற்பதிலும் கலை படைப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினர். அவர்கள் நாட்டுப் பற்று மற்றும் சுதந்திர உணர்வு கொண்டவர்கள். ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கை கொண்டவர்கள். பிளாரன்ஸ் நகரம் இத்தாலியில் உள்ள டஸ்கானி பகுதியில் உள்ளது. பல ஆண்டுகளாக அப்பகுதியில் இந்த ஒரு நகரம்தான் இருந்தது. ஆனால் அதன் அருகாமையில் உள்ள பல நகரங்களை ஒவ்வொன்றாக வென்று அந்நகரங்களுக்கு எல்லாம் தலைமை நகரமாக விளங்கிற்று. பிளாரன்ஸ் நகரில் வாழ்ந்த மக்கள் இரு பிரிவாகப் பிரிந்து செயல்பட்டனர். ஒரு பிரிவினர் புனித ரோமானியப் பேரரசை ஆதரிப்பவர்களாகவும் மற்றொரு பிரிவினர் அதனை எதிர்ப்பவர்களாகவும் இருந்தனர். இதனால் பிளாரன்ஸ் கட்சி அரசியலுக்கு ஆட்பட்டு பிரச்சனைகளைச் சந்திக்க நேர்ந்தது. பல கட்சித் தலைவர்கள் தோன்றினர். அவ்வாறு தோன்றிய கட்சிகளில்

மெடிசி என்பது முக்கியமான ஒன்று. இவர்கள் வாக்குகளை விலைக்கு வாங்கி தேர்தல்களைச் சமாளித்து வெற்றி பெற்றுத் தாங்கள் சர்வாதிகாரிகள் என்று சொல்லிக் கொள்ளாமல் சர்வாதிகாரம் செய்தனர். அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது பழைய குடியரசு ஆட்சி அமைப்பையே வைத்துக் கொண்டனர். பொதுப் பணிகளுக்கும் கலைப் படைப்புக்களுக்கும் ஏராளமான பணம் செலவிட்டு மக்களை மகிழ்ச்சியுடன் வைத்துக்கொண்டனர். 15-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் பிளாரன்ஸ் நகரமானது இத்தாலியின் கலை, கல்வி மற்றும் ஆடம்பர வாழக்கையின் மையப் பகுதியாக விளங்கிற்று. பிளாரன்ஸை மெடிசி வம்சத்தினர் ஆட்சி செய்து வந்தனர். குறுகிய காலத்திற்குள் தாங்கள்தான் டஷ்கானியின் அரசன் (Duke of Tuscary) என்று பெயர் சூட்டிக் கொண்டனர் அவர்கள் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். 18-ஆம் நூற்றாண்டில் ஆஸ்திரியாவின் ஹேப்ஸ்பர்க் வம்சத்துக்குச் சொந்தமான நகரமாக மாறியது. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலியோடு இணைந்தது. (Divine comedia) டிவைன் காமெடியா எனும் நூலை எழுதிய டான்டே (Dante) என்பவரும் பிரின்ஸ் (Prince) எனும் அரசியல் தத்துவப் புத்தகத்தை எழுதிய மாக்யவல்லியும் பிளாரன்ஸ் நகரில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வெனிஸ்:**

இத்தாலிய நகரங்களில் வெனிஸ் நகரும் ஒன்று. காட்டுமிராண்டிகள் (Barbanian) படையெடுப்பின்போது தப்பிவந்த பல கிராம மக்கள் இந்தத் தீவில் குடியேறியதால் உருவான நகரம் வெனிஸ். குறுகிய காலத்திற்குள் இந்நகரில் வாழ்ந்தவர்கள் பிற நாடுகளோடு வியாபாரம் செய்து செல்வந்தர்களாயினர். தாங்கள் பெற்ற செல்வத்தைக் கொண்டு மாளிகைகள் கட்டினர். குறுகிய காலத்தில் வெனிஸ் அழகு பெற்ற நகரமாகி இத்தாலியின் கிழக்கு நுழைவாயிலாக மாறியது. வெனிஸ் நகரில் வாழ்ந்தவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள். அவர்கள் கப்பல் மூலமாக கான்ஸ்டாண்டிநோபிள் மற்றும் பல இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்து பெரும் செல்வம் ஈட்டியதோடு பல எல்லைப் பகுதிகளையும் கைப்பற்றினர். அவர்கள் ஏட்ரியாட்ரிக் கடற்கரையில் சில பகுதிகளையும் மத்திய தரைக்கடலில் உள்ள தீவுகளில் சிலவற்றையும் கைப்பற்றினர். கீழை ரோமானியப் பேரரசு,

புனித ரோமானிய பேரரசு இத்தாலியில் உள்ள ஏனைய ஜெனோவா போன்ற போட்டி நகரங்கள், வெனிஸ் நகரை தாக்கி, அதன் செல்வத்தைக் கொள்ளை அடிக்க மாறிமாறி முயற்சி செய்தனர். ஆனால் வெற்றி பெற முடியவில்லை. வெனிஸ் அத்துணை எதிர்ப்புகளையும் சமாளித்தது. முதலாம் நெப்போலியன் காலத்தில் வெனிஸ் தோற்கடிக்கப்பட்டு அதன் குடியரசை அவர் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். வெனிஸ் வெற்றிக்கு முக்கிய காரணம் அதன் கடல் வலிமையே. வெனிஸ் கலைப்படைப்பிலும் சிறந்து விளங்கிற்று. வெனிஸில் உள்ள செயின்ட் மார்க் கத்தேட்ரல் அதற்கு எடுத்துக்காட்டு. செயின் மார்க் கத்தேட்ரல் பளிங்கு கற்களாலும், உயர்ந்த கோபுரங்களாலும் பளிச்சிடும் சிறிய ஜன்னல்களாலும் பல வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்ட ஒன்று. வெனிசியர்கள் பல வண்ண ஓவியங்கள் வரைவதில் புகழ் பெற்றவர்கள்.

**வெனிஸ் அரசு:**

வெனிஸ் நகராட்சியில் உள்நாட்டுப் போர் நிகழவில்லை. புரட்சி ஏற்படவில்லை. அரசு நகராட்சி அரசாக அமைந்திருந்தது. பணக்காரர்கள் ஆதிக்க ஆட்சியாக இருந்தது. நகராட்சியை நிர்வாகம் செய்ய 200 உறுப்பினர்கள் கொண்ட ஒரு பெருங்குழு (The Great Council) இருந்தது. இக்குழுவில் உள்ள உறுப்பினர் ஆயுள் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நிர்வாகத்தைக் கவனிக்க 10பேர் கொண்ட ஒரு குழு இருந்தது. 10 பேர் கொண்ட குழு அரசுக்கு யாரேனும் துரோகம் விளைவிப்பார்கள் என்று கருதினால் அவர்களை சிறையில் அடைக்க உத்தரவு இடும் அதிகாரம் பெற்றிருந்தது. வெனிசிய அரசு பிறநாடுகளில் தன்நாட்டு தூதர்களை நியமித்திருந்தது. இருந்த போதிலும் கீழைநாடுகளுக்குப் புதிய கடல்வழிப் பயணம் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்நகரின் செல்வாக்கு வீழ்ச்சியுறத் தொடங்கியது.

**ரோம்**

வடக்கு இத்தாலியில் ரோம் ஒரு முக்கிய நகரமாக கருதப்பட்டது. ஆனால் சுதந்திர அரசாகச் செயல்படவில்லை. சில சிறந்த திறமையான போப் ஆட்சியின் போது சுதந்திரமாகச் செயல்படும். வலிமையற்ற போப் ஆடசிகாலத்தில் நகரில் உள்ள செல்வந்தர்கள்

அரசியல் செல்வாக்குப் பெற்று நகராட்சியை கைப்பற்றி போப்பின் உத்தரவுகளை மீறுவர். அடிக்கடி ரோமில் தெருச்சண்டைகளும், பிரச்னைகளும் ஏற்படும்.

இடைக்கால ஐரோப்பிய நகரங்கள் வியாபாரம், புதிய கண்டுபிடிப்புகள், தொழிற்சாலை, கலைப்படைப்புகள், கட்டடங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகித்தன. பிளாரன்ஸ் நகரைச் சார்ந்த மார்கோபோலோ கீழைநாடுகளுக்கு வழி கண்டுபிடிக்க கத்தே (Cathay) வரை பயணம் செய்தார். கீழைநாடுகளோடு, வெனிஸ், ஜெனோவா நகரங்கள் வாணிபத் தனியுரிமை வைத்திருந்தன. வெனிஸ் நகரில் வங்கித் தொழில் சிறப்பாக நடைபெற்றது. தற்போது உள்ள கட்டடங்கள், மாளிகைகள், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைக் கண்ணுற்றுப் பார்க்கும் போது இந்நகரங்கள், கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் சிறந்து விளங்கின என்பது தெரியவருகிறது. எடை மற்றும் அளவு சீராக்கப்பட்டது.

### (உ) கல்வி வளர்ச்சியும் பல்கலைக்கழகங்களின் எழுச்சியும்

இடைக்கால ஐரோப்பா கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தது. ரோமப் பேரரசின் கீழ் இயங்கிவந்த நகரங்களில் பல இலக்கணப் பள்ளிகள் இயங்கிவந்தன. காட்டுமிராண்டிகள் படையெடுப்பால் சிறிய அளவில் கல்வி செயல்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்பட்ட போதிலும், விரைவில் புதிய முறைகள் புகுத்தப்பட்டு மீண்டும் கல்வி வளர்ச்சி பெற்றது. குறிப்பாக சார்ல்மேக்னே காலத்தில் இத்தகைய புத்துணர்வு ஏற்பட்டது. ஆச்சென் (Achen) எனுமிடத்தில் ஆரண்மனைப் பள்ளி ஒன்றை நிறுவி அரசுப் பணியில் ஈடுபடுவோருக்குப் பயிற்சி கொடுத்தார். அவர் யார்க் நகரின் ஆல்குயின் (Alcuin of York) மற்றும் பிசாவின் பீட்டர் (Peter of Pisa) ஆகிய அறிஞர்களை அழைத்து ஆசிரியர்களாக நியமித்தார். கீழ்மட்டத்தில் உள்ள பாதிரியார்களைத் (Pariah Priests) தொடக்கக் கல்வியை கற்றுக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். இலத்தீன், கிரேக்க மொழிகளின் மறுமலர்ச்சிக்கு ஊக்கமளித்தார். பாதிரியார்கள் கிரேக்க லத்தீன் மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்றும், அவர்கள் திருச்சபைப் பணிகளில் இலத்தீன் மொழியைப் பயன்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சார்ல்மேங்க்னே எழுதப் படிக்கத் தெரியாதவர் எனினும், புத்தகங்கள் எழுத ஊக்கமளித்தார். பிராங்கின் நாட்டுப்புறப் புத்தகங்களைத் (Frankin Folklore) தொகுத்தார். புதிய (New testament) எனும் விவிலிய நூலை கிரேக்க மொழியிலிருந்து லத்தீன் மொழிக்கு மொழிபெயர்க்கச் செய்தார். ஆனால் சார்ல்மேங்க்னேக்குப் பின் வந்தவர்கள் அவர் ஆரம்பித்த பள்ளிகளுக்கு ஊக்கம் கொடுக்கவில்லை. ஆனால் திருச்சபையினர் தொடர்ந்து அவர் விட்டுச் சென்ற பணியினைச் செய்து வந்தனர். ஆனால் அவர்கள் (Pagan) பழமையான புத்தகங்களை ஒதுக்கினர். அதாவது தொன்மை (செம்மொழி) இலக்கியங்களை ஒதுக்கினர். திருச்சபைப் பாதிரியார்கள் கல்வி என்பது திருச்சபைக்குத் தேவையான தலைவர்களை உருவாக்குவதும், திருச்சபைப் பாடல்கள், திருச்சபை சம்பந்தமான இலக்கணம் வகுப்பது, கணிதம் படிப்பது ஆகியவைதான் கல்வி என்று முடிவு செய்து இத்தகைய பாடங்களைக் கற்பித்தனர். இதனால் சில ஆண்டுகள் சார்ல்மேகக்னேயின் கல்விக் கொள்கைகள் மறைக்கப்பட்டன.

**திருச்சபையின் கல்விக் கொள்கை:**

கிருத்துவத்திற்கு மதம் மாறும் மனிதர்களில் எண்ணிக்கை அதிகரிக்கவே, தெய்வீக நம்பிக்கையை ஊட்டுவதே கல்விக் கொள்கையாகும் எனக் கருதினர். எனவே திருச்சபைப் பொறுப்பாளர்கள் வாய்மொழிவாயிலாக விவிலிய(Bible)த்தில் கூறப்பட்டுள்ள கதைகளையும், தெய்வீக வழிபாட்டு முறைகளையும் வாய்மொழியாகவே மக்களுக்குப் போதித்தனர். ஆனால் சில கல்வி கற்ற (Pagan) பழமைவாதிகள் கிருத்துவத்துக்கு மாறியதால் தங்கள் கல்விக் கொள்கையில் சிறிது மாற்றம் செய்தனர். அதன்படி அலெக்ஸாண்டிலோ, ஆண்ட்யோக் ஆகிய இடங்களில் இருந்த தத்துவப் பள்ளிகள் கிருத்துவக் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டன் அங்குக் கிருத்துவ தத்துவங்களையும் பழமை (Pagan) கல்வியையும் புகுத்தினர். இத்தகைய கல்வி முறையில் மதம் சார்ந்து இருந்ததால் முன்னேற்றமான கல்வி என்று கூறமுடியாது. எதையும் திறனாய்வு செய்து கேள்வி கேட்பது கண்டனத்துக்கு உரியதாயிற்று. பேகன் இலக்கியம், வரலாறு மற்றும் தத்துவம், உரியதாயிற்று.

தெய்வீக வழிபாட்டுக்கு பயன்படுத்தப்பட்டது. ஜான் கிரிகோலல்டம் எனும் கிருத்துவக் கல்வியாளர், பேகன் செய்யுள் மற்றும் தத்துவத்தில் இருந்து கிருத்துவ மதத்திற்குத் தேவையான தேன் போன்ற செய்திகளை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறினார்.

மடாலயங்களின் கலாச்சார நடவடிக்கைகள் மிகச் சிறந்தனவாக இருந்தன. பேகன் மற்றும் கிருத்துவ செய்பாடுகள்தான் அதிகம் உள்ளன. மூல எழுத்துக்கள் (Manuscripts) தொகுக்கப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. அப்பாட்டுகள் உடல் உழைப்போடு மூளைக்கும் வேலை கொடுத்ததால் கல்வியறிவு ஓரளவு வளர்ச்சிபெற்றது இருந்த போதிலும் அவர்கள் தெய்வீகம் சம்பந்தமான அறிவினை மட்டும் பெற்றிருந்தனர். தெய்வீக நம்பிக்கைதான் அறிவு என்று நம்பிக்கை வைத்திருந்தமையால் உலகியல் அறிவு அதிகம் அவர்களுக்கு தெரியவில்லை.

**சமயம் சாரா கல்வி:**

சமயம் சார்ந்த மேலே கூறிய கல்விமுறைக்கு அப்பால் சமய சாராத கல்விமுறையும் நடைமுறையில் இருந்தது. ஆனால்

அந்நிறுவனங்கள் முறையான பள்ளிகளாகச் செய்படவில்லை. சாதாரண மக்களுக்குப் பயிற்சியளிக்கும் முறைசாரா கல்வியாகவே இயங்கி வந்தன. தொழில் கழகம் (Industrial Guilds) கைவினைஞர்களுக்குப் பயிற்சிமுறை என்ற வகையில் பலருக்குப் பயிற்சியளித்தது. இம் முறையில் பல இளைஞர்கள் தங்கள் தொழிலில் முன் அனுபவமிக்க மூத்த தொழில் வல்லுநர்களிடம் பயிற்சி பெற்ற சிறந்த கைவினைஞர்களாக ஆகினர். ஒரு சிறந்த போர்வீரன் ஆகவேண்டுமானால் மிகக் கடுமையான ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்துப் பயிற்சி எடுக்கவேண்டும். அரசவை மரியாதைகளைப் பற்றியும், குதிரை ஏறி ஓட்டும் பயிற்சி பற்றியும், போர்ப் பயிற்சி பற்றியும் பயிற்சி எடுக்க வேண்டும். ஒரு இளைஞர் போர் வீரன் ஆகவேண்டுமானால், தன் தந்தையில்லாத மற்றொரு பிரபுவின் வீட்டிற்குச் சென்று பயிற்சி மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு சேரும் இளைஞரின் வயது 14-ஆக இருக்கவேண்டும். 14 வயதில் சேர்ந்த ஒருவன் 21 வயது வரை பயிற்சி எடுத்தபின்னரே வீரன் என்று அழைக்கப்படுவான்.

மாடலயங்கள் முறை தோன்றியபின், பல பாதிரியார்களால் சமய போதனைகளை மக்கள்மொழி நடையில் போதித்தனர். சில மடாலயங்கள், படிப்பு, வேலை மற்றும் பிரார்த்தனை ஆகியவற்றைக் கொள்கையாகக் கொண்டிருந்தன. குறிப்பாக பெனிடிக்டைன் மடாலய முறையில் இத்தகைய படிப்பும் ஒரு முக்கிய கோட்பாடாக இருந்தது. எனவே மடாலயங்களும் கல்விச் சாலைகளாக விளங்கின. 12-ஆம் 13-ஆம் நூற்றாண்டில் ப்ரியர்(Priars)கள் எனும் பிச்சைகாரப் பாதிரியார்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தனர். போலக்னே, பாரிஸ், ஆகஸ்போர்டு, கேம்பிரிட்ஸ் ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் தோன்ற பெரிதும் துணைபுரிந்தவர்கள் ப்ரியர் எனப்படும் கிருத்துவ மடாலப் பாதிரியர்கள் ஆவர் கல்வி நிறுவனங்களுக்குப் பல்கலைக்கழகம் (University) என்ற சொல் எப்போது வந்தது என்றால், கல்விக்காக ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக, பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் சேர்க்கப்பட்டு பாடம் கற்பித்தநிலை ஏற்பட்டபோது அத்தகைய கல்வி நிறுவனங்களுக்குப் பல்கலைக்கழகம் என்று பெயர் வந்தது. தத்துவம் மற்றும் சமயம் சார்ந்த படிப்புக்குப் பாரிஸ் பல்கலைக்கழகம் சிறந்து விளங்கியது. சட்டப்படிப்புக்குச் சிறப்புவாய்ந்த பல்கலைக்கழகமாகப் போலக்னே விளங்கிற்று, பொல்க்னே எனும்

பல்கலைக்கழகம் மருத்துவத்துக்குப் பயன் பெற்ற ஒன்றாக விளங்கிற்று. கற்பிப்பதும், கற்பதும்தான் பல்கலைக்கழத்தின் பணியாக இருந்து வந்தது. இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி ஆட்சிக்காலத்தில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அப்பல்கலைக்கழகம் நிறுவுதற்கான காரணம், அரசர் இரண்டாம் ஹென்றிக்கும் ஆர்ச்பிசப் பெக்கட் என்பருக்கும் இடையே பிரச்னை எழுந்தபோது, தப்பி ஓடிய பெக்கட்டுக்கு பிரான்ஸ் மன்னர் ஆதரவு கொடுத்தார். அந்த வேளையில் இரண்டாம் ஹென்றி கி.பி. 1167-இல் ஒரு உத்தரவு போட்டார். அதன்படி பிரான்சில் படிக்கும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அனைவரும் இங்கிலாந்துக்கு உடனே திரும்பவேண்டும் என்று. அவ்வாறு இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த மாணவர்கள் பாரிஸில் இருந்து தாயகம் திரும்பினர். அவ்வாறு திரும்பிய அம்மாணவர்களுக்காக இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார் பின்னர் கி.பி. 1209-இல் அரசர் ஜான். தன் காலத்தில் காம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார். ப்ரியர் பாதிரியார்கள் பலர் இப்பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளனர். செயின்ட் தாமஸ் அக்யுனாஸ் எனும் டொமினிசியப் பாதிரியார், பாரிஸ், ரோம், போலக்னோ ஆகிய பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளனர். கி.பி 13-ஆம் நூற்றாண்டின் போது ஏறத்தாழ 19 பல்கலைக்கழகங்கள் இருந்தன. ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தின்போது ஐரோப்பாவில் அப்பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை 70-ஆக உயர்ந்தது.

**பல்கலைக்கழகங்களின் அமைப்பு:**

பல்கலைக்கழகங்கள் நவீன கால பல்கலைக்கழகங்களைப் போன்று வகுப்பறைகள் கொண்டதாகவோ பல கட்டடமுறைகளைக் கொண்டதாகவோ இல்லை. விளையாட்டு அரங்கு, கிரிடிட் முறை போன்றவைகள் எல்லாம் இல்லை. சாதாரண இடங்களில் மாணவர்களும் ஆசிரியர்களும் அடிக்கடி கூடி கல்வி பெறுவர். வகுப்பறைகளில் மேஜை நாற்காலிகள் இருக்காது. தரையில் அமர்ந்து படிப்பர். மாணவர்கள் தங்கள் துறைகளில் தங்கள் துறைவல்லுநரிடம் பயிற்சி பெற்றுத் தேறியபின் அவர்கள் முழுமை பெற்றவர்களாக அங்கீகரிக்கப்பட்டு, பின் அவர்களும் பல மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் நான்கு பாடப் பிரிவுகள்இருந்தன. அவை கலை,

சட்டம், மருத்துவம் மற்றும் சமயம் சார்ந்த தத்துவம் (theology) ஆகும். ஒவ்வொரு துறைக்கும் ஒரு ஆட்சிக்குழு இருக்கும். ஆட்சிக்குழு அதிகாரியான பிராக்டர் (Proctor) என்பவரை மாணவர்களே தேர்ந்தெடுப்பர். மாணவர்கள் பல நாடுகளில் இருந்து வந்து பயில்வர். அந்தந்த நாட்டு மாணவர்கள் தனித்தனியாகத் தங்கள் சமூக அமைப்புக்களை அமைத்துக்கொண்டு தங்களுக்கு ஏற்படும் பிரச்னைகளைச் சமாளித்துக் கொள்வர். தங்கள் சகமாணவர்களிடையே ஏற்படும் நோய் மற்றும் சிலரின் தேவைகளை அவர்களாகவே பூர்த்தி செய்து கொள்வர். பல்கலைக்கழகங்கள் செல்வாக்கு வெகு விரையில் வளர்ச்சி பெற்று, திருச்சபை மற்றும் அரசர்கள் ஆகியோரிடமிருந்து பல உரிமைகளைப் பெற்றன.

**மாணவர்கள் நிலை:**

அக்கால மாணவர்கள் அறிவு வளர்ச்சிக்காக என்று அல்லாமல் வாழ்க்கைக்காகக் கல்வி பயின்றனர். எனவே தன் குறிக்கோளை அடைய பல துன்பங்களுக்கு ஆளாயினர். பல மாணவர் தாழ்நிலையில் இருந்து கல்வி பயில வந்தவர்கள். தங்கும் இடம் உணவுக்குக்கூட பல இன்னல்களைச் சந்தித்தனர். சிலர் பிரபுக்களின் குதிரைக் கொட்டத்தில் தங்கி, அவர்களின் தயவில் உணவும் பெற்று கல்வி கற்று வந்தனர். வகுப்புகள் சில வேளைகளில் தெருக்களில் நடக்கும் தெருக்களில் வைக்கோல் போரை விரித்து அமர்ந்து பாடம் கற்பர். அதனால் தான் பாரிசில் ஸ்டாரா ஸ்டீரீட் எனும் பெயர் லத்தீன் குடியிருப்பு எனும் இடத்திற்கு வந்தது. ஆடம்பர வாழ்க்கை மற்றும் கடின வாழ்க்கை இரண்டுமே அக்காலத்தில் நடைமுறையில் இருந்தன. அவர்கள் படித்த பாடம் கலையை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. சட்டம், மருத்தும் மற்றும் சமயம் சார்ந்த தத்துவம் படிப்பதற்குமுன் மாணவர்கள் கலையில் படிப்பு முடித்திருக்க வேண்டும் என்ற நிலையிருந்தது. பல்கலைக்கழகத்தில் நுழைய நுழைவுத் தேர்வு நடைபெற்றது. நுழைவுத் தேர்வுக்குப் பயிற்சி பெற பிரபுக்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தனியாகப் பயிற்சியளித்தனர். நடுத்தர மக்கள் கிராமப் பள்ளிகளில் பயிற்சி எடுத்தனர். கீழ் மட்ட குருமார்களின் பிள்ளைகள் திருச்சபைப் பள்ளிகளில் பயிற்சி மேற்கொண்டனர். முதுகலைப் பட்டம் பெற 6 ஆண்டுகள் படிப்பு முடிக்கவேண்டும். கலையில் பட்டம் பெற மூன்று பாடமுறைகள் மற்றும் நான்கு பாடமுறைகள் பின்பற்றப்பட்டன. மூன்று பாடமுறைகளில் (Trivium) இலக்கணம், Phetoric மற்றும் logic

ஆகியவை இருக்கும். நான்கு பாட முறைகளில் (Quadrivium) இசை, கணிதம், geometry மற்றும் வானசாஸ்திரம் (astronomy) ஆகியவை அடங்கும்.

ஐரோப்பாவில் அரேபியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அரிஸ்டாட்டிலின் படைப்புகள் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் அங்கீகரிக்கப்பட்டன. பேகன் இலக்கியங்களை எதிர்த்து வந்த திருச்சபையாரின் எண்ணங்களை மாற்றிய பெருமை ஆல்பர்ட்ஸ் மாக்னஸ், தாமஸ் அக்யூனாஸ் மற்றும் டொமினியன் தத்துவமேதைகளையே சாரும்.

கி.பி.1304-1374-இல் வாழ்ந்த ஸ்ட்ரார்க் இலத்தீன் இலக்கியத்-தையும் கிரேக்க இலக்கியத்தையும் கற்க ஊக்குவித்தார். இப்பாடங்கள் கலைப் பாடத்திட்டத்தில் பெரும்பங்கு வகித்தன. சிவில் சட்டம் பயிலும் மாணவர்கள் ஜஸ்டீனியன் சட்டத்தைப் பயின்றனர். மருத்துத்தில் கேலன் மற்றும் ஹிப்போகிரேட்ஸ் ஆகியோரின் படைப்புகள் அடிப்படைப் பாடங்களாயின.

**பல்கலைக்கழகங்களின் முக்கியத்துவம்:**

பல்கலைக்கழகங்கள் இடைக்கால கலாச்சாரத்தை வலுப்படுத்தி-யதோடு அல்லாமல் தற்கால கலாச்சாரத்திற்கும் அடிகோலியது. பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எண்ணிக்கை, அக்கால மக்கள் தொகை அடிப்படையில் மிகவும் குறைந்த அளவு எனினும், அவர்கள் பயின்ற கல்வியின் தாக்கம் பெரிதாக இருந்தது. இலக்கியக் கல்வி மற்றும் விஞ்ஞானத்தில் செயற்பயிற்சி குறைவாக இருந்தாலும் சட்டம் மற்றும் சமயம் சார்ந்த கல்வியில் இப்பல்கலைக் கழகங்கள் முன்னோடிகளாக விளங்கின. தேசிய அரசுகள் தோன்றும் காலகட்டத்தில் மாணவர் பயின்ற சிவில் மற்றும் சமயம் சார்ந்த சட்டங்கள் அரசியல் மற்றும் நீதிமுறை விழிப்புணர்வை ஏற்படுத்திற்று. அதே வேளையில் பல்கலைக்கழகங்கள் மட்டும் இத்தகைய பணியை மேற்கொணடதாகக் கூறமுடியாது. மடாலயப் பள்ளிகள் மற்றும் திருச்சபைப் பள்ளிகளும் தொடர்ந்து கல்விப் பணி ஆற்றிக்கொண்டிருந்தன. தத்துவம் மற்றும் சமயம் சார்ந்த தத்துவங்களை இப்பள்ளிகள் கற்பித்து வந்தன.

**இடைக்கால விஞ்ஞானம்:**

அறிவியல் வளர்ச்சி என்பது தற்காலத்திற்கே உரியது என்றாலும், அதன் தொடக்கம் இடைக்காலத்திலும் இருந்தது எனக் கூறலாம். ஏனைய பாடப்பிரிவுகளுக்குக் கொடுத்த முக்கியத்துவம் அறிவியல் பாடத்துக்குக் கொடுக்கப்படவில்லை. காரணம் திருச்சபை அறிவியலை எதிர்த்தது. மனிதன் முக்தி அடைவதே சிறந்த நோக்கம் என்பதால் முக்தி அடைவதற்கு, பொருளியல் வாழ்வைத் துறக்கவேண்டும் என்று திருச்சபைக் கருதியது. அரேபியர்கள் மற்றும் கீழை நாட்டவர்கள் மேலை ஐரோப்பியர்களை விட விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்று இருந்தனர். அவர்கள் கிரேக்க மக்களிடம் கிடைக்கப்பெற்ற அறிவினையும் ஆசியாவில் இந்துக்களிடம் கிரேக்கர் பெற்ற அறிவியலையும் பாதுகாத்தனர். சிலுவைப்போரின் போது இத்தகைய கருத்துக்களைச் சிலுவைப்போரில ஈடுபட்டோர் பெற்றுச் சென்றனர். பின்னர் அவற்றை அரேபிய ஆசிரியர்கள் மேற்கு ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பரப்பினர். அவர்கள் அரேபிய எண்கள் முறை, பூஜ்யம், (decimel system) மற்றும் Trignometery போன்றவைகளைப் பல்கலைக்கழகங்களில் புகுத்தினர். லாட்டிடியுடு, லாங்கிடியுடு ஆகியவற்றைப் படம் வரைவதற்குப் பயன்படுத்தினர். (Marinus Campus)-திசைகாட்டும் கருவியின் பயனைப் பற்றிக் கற்பித்தனர். மருத்துத்தைப் பற்றி அரேபியர்கள் கேலன் மற்றும் ஹிப்போகிரேட்ஸ் ஆகியோர்களின் படைப்புக்களையும், அவர்களுக்குத் தெரிந்த மூலிகை மருத்துவத்தையும் கற்பித்தனர். இத்தகைய அரேபியர்களின் அறிவாற்றல்களைப் பெற்ற மேற்கத்தியர் அதற்கேற்ற நன்றி அங்கீகாரத்தை அளிக்கவில்லை.

கி.பி.1543-இல் வாசிலாஸின் பகுவா என்பவர் கடந்த கால முடிவுகளை எதிர்ப்பது அவசியம் என்றும், உண்மையின் அடிப்படையை அறிவது அவசியம் என்றும், உண்மையான அடிப்படையில்தான் ஆய்வுகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும் கூறியதில் இருந்து நவீன கால விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றதை உணரமுடிகிறது.. இடைக்கால விஞ்ஞானம் பிற்காலத்தை ஒப்பிடும்போது மிகவும் ஆரம்பக் கட்டத்தில் இருந்ததாகவே கருதப்படவேண்டும். விஞ்ஞான செய்முறைகள் மிகவும் ஆரம்ப நிலையில்தான் இருந்தது. செய்முறைக் கருவிகள் மிகவும் குறைவாகவே இருந்தன. விஞ்ஞானிகள் பொதுவாக உலகம் உருண்டையானது என்று நம்பினர். ஜோதிடம் (Astrology) அல்கெமி (Alchemy) போன்றவை பல அறிஞர்களை

ஈர்த்தது. அல்கெமி முறையில் உலோகத்தால் ஆன பண்டங்கள்; மண்பாண்டங்கள் மற்றும் கண்ணாடியால் ஆன பண்டங்கள் செய்யும் முறையினைத் தெரிந்து கொண்டனர். மருத்துவத்தை அரேபியர்களிடம் மேற்கு ஐரோப்பியர் கற்றுக் கொணடனர். (Gynocology) பிரசவம் மற்றும் (Optholmology) கண் வைத்தியம் போன்றவற்றைப் பல்கலைக்கழகங்களில் அறிமுகம் செய்தனர்.

**புதிய கண்டுபிடிப்புகள்:**

ரோஜார் பேகன் போன்றார், ஆகாய விமானம், குதிரையில்லா சுமை இயந்திரம் மற்றும் துடுப்பு இல்லா படகு போன்றவை தோன்றும் என்று முன் அறிந்து கூறினர். அவ்வாறே இத்தகைய துறைகளில் பல, வகையில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இக்காலத்தில்தான் வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டது. திசைகாட்டும் கருவி மற்றும் அச்சு எந்திரம் ஆகியவைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இக்கண்டுபிடிப்புகள், நவீன கால மக்களுக்கு மிகவும் பயனுள்ளவைகளாக அமைந்துள்ளன. காங்மீனோ. டி.மெடிசி என்பவர் 200 நூல்கள் கொண்ட ஒரு நூலகம் அமைக்க 45 எழுத்தர்களை இரண்டு ஆண்டுகளுக்குப் பணி அமர்த்தி நகல் எடுத்தார் என்று கூறப்படுகிறது. ஜான் குட்டன்பர்க் என்பவர் கி.பி. 1455-இல் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். கி.பி.15-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் காகிதங்கள் பயன்படுத்தப்பட்டன. இதனால் மிகக் குறைந்த விலையில் பல புத்தகங்களை வெளியிட முடிந்தது. கி.பி.1500-இல் ஏறத்தாழ 9,00,000 புத்தகங்கள் அச்சிடப்பட்டு ஐரோப்பாவில் புழக்கத்தில் விடப்பட்டன எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## *இயல் – III* நவீன காலத்திற்கு முந்திய இடைவெளிக் காலம்

### *(அ) மறுமலர்ச்சி இயக்கம் - காரணங்கள்*

மறுமலர்ச்சி என்றால் இலக்கியத்தில் மறுபிறப்பு ஆகும். ஆனால் நம் வரலாற்றில் மறுமலர்ச்சி என்பது பண்டைய கிரேக்க, ரோமானிய கலை, விஞ்ஞானம், கல்வி ஆகியவற்றை மீண்டும் கற்றுணர வேண்டும் என்று தோன்றிய ஆர்வத்தைக் குறிக்கும். இது 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றிய ஒரு கலாச்சாரப் புரட்சியாகும். இவ்வியக்கம் மனித வாழ்வின் எல்லாத் துறைகளையும் எண்ணங்களையும் தொட்டுப்

பழைய பழக்க வழக்கங்களையும், வாழ்க்கைத் தூரத்தையும் அடியோடு மாற்றியது. இது ஐரோப்பாவில் இருண்ட காலம் என்ற ஒரு காலத்தை மாற்றி, தற்கால ஐரோப்பாவை உருவாக்கிற்று. இந்த இயக்கம் கி.பி.1453-இல் கான்ஸ்டாண்டி நோபிளைப் பிடித்தது முதல் ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் ஐரோப்பிய மக்கள் குறிப்பாக இத்தாலியர்கள், கிரேக்க ரோமானிய, கலை இலக்கியங்களைப் படிக்கத் தொடங்கினர். இவ்வாறு இத்தாலியில் இவ்வியக்கம் முதன் முதலில் தோன்றியதற்குப் பல காரணங்கள் உண்டு.

1. இருண்ட காலத்திலும் இத்தாலிய மக்களில் சிலர் பண்டைய இலக்கியங்களைப் படித்து வந்தனர்.
2. 1453-இல் கான்ஸ்டாண்டிநோபிள் துருக்கியர்களால் பிடிக்கப்பட்டதால், அங்கு வாழ்ந்த இலக்கிய மேதைகள், கலைஞர்கள், ஓவியர்கள் முதலியோர் துருக்கியர்களுக்கு அஞ்சி கான்ஸ்டாண்டிநோபிள் நகரை விட்டு வெளியேறினர். வரும்போது தாங்கள் படைத்த படைப்புகளை இத்தாலிக்குக் கொண்டுவந்தனர்.
3. இத்தாலிய நகரங்களில் வாழும் மக்களில் பலர் செல்வந்தர்கள். அவர்களும், சிற்றரசர்களும், இவர்களின் சிறந்த இலக்கியப் படைப்புக்களையும் ஓவியங்களையும் விலை கொடுத்து வாங்கினர்.
4. இத்தாலி மத்தியதரைக் கடற்கரையில் அமைந்துள்ளமையால் பல இன மக்கள் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களிடமிருந்து பல புதுமையான கலைப்பொருட்கள் கிடைத்தன.
5. இத்தாலியில் நிலமானிய முறை இல்லை. ஆகவே மக்கள் சுதந்திரமாகச் சிந்தித்துச் செயலாற்ற வாய்ப்புகள் இருந்தன.

### *(ஆ) இத்தாலியில் மறுமலர்ச்சி – மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவுகள்*

மேலே கூறியக் காரணங்களால் இத்தாலியில் தோன்றிய இம் மறுமலர்ச்சி இயக்கம் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது.

**இலக்கியத்தில் மறுமலர்ச்சி**

பதினைந்தாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களை இலத்தீன் மொழியில் எழுதினர். இலத்தீனில் எழுதுவதுதான் நாகரீகம் என்றும் கருதினர். ஆனால் இம்மொழி பாமரமக்களுக்குப் புரியாத காரணத்தால் பல எழுத்தாளர்கள் தங்கள் தாய்மொழியிலேயே எழுதத் தொடங்கினர்.

டான்டே (Dante) என்பவர் "டிவைன் காமெடி, (Divine Comedy) அல்லது "தெய்வீக இன்பியல்" என்னும் நூலை இலத்தீன் மொழியில் எழுதினார். ராபலே (Rabeleigh) என்பவர் "கார் குண்டுவா" என்ற நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். இது இடைக்காலத்திலிருந்து வந்த மூட நம்பிக்கைகளைக் கண்டிக்கின்றது. சேர்வான்டேஸ் (Cervantes) என்ற ஸ்பானியர் 'டான் குவிடே (Don Quixote) என்ற புத்தகத்தை எழுதி இடைகாலத்தில் கொடுத்து வந்த "வீரத் திருத்தகைப்" பட்டம் (Knighthood) போன்ற பட்டங்களைக் குவிடே கேலி செய்து காட்டியுள்ளார். இங்கிலாந்தில் சேக்ஸ்பியர், ஸ்பென்சர், போன்றவர்கள் பல புத்தகங்களை ஆங்கிலத்திலும் படைத்து, அம்மொழியின் வளர்ச்சிக்கும், மக்களின் விழிப்புணர்ச்சிக்கும் துணை செய்தனர். 'மாக்யவல்லி (Machiavalli) என்பவர், இளவரசர் (The Prince) என்ற புத்தகத்தை எழுதி அரசியலில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். பொகாசியோ என்பவர் Decomeron என்ற புத்தகத்தை எழுதினார். இது நூறு சிறு கதைகளைக் கொண்டுள்ளது. தாமஸ் மூர் என்பவர் 'உடோபியா' (Utopia) என்ற நூலை எழுதினார்.

பெட்ரார்க் என்பவர் மனிதாபிமான இயக்கத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். இடைக்காலத்தில் மக்கள் சமயத்தில் மூழ்கியிருந்தனர். "கடவுள் தான் எல்லாம்" என்றும் இருந்தனர். ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தில் "மனிதன்தான் எல்லாம்" என்று உணரத் தொடங்கினர். பெட்ரார்க் என்பவர் மனிதனைப் பற்றி மனிதனின் ஆற்றலைப் பற்றிப் பல செய்திகளைப் பண்டை இலக்கியங்களிலிருந்து எடுத்து புத்தக வடிவமாகக் கொடுத்தார். இதனால் மனிதாபிமான இயக்கம் வளர்ந்தது.

**விஞ்ஞானத்தில் மறுமலர்ச்சி:**

கோபர்னிகஸ் என்ற போலந்து நாட்டுத் துறவி 'வானுலகக் கோள்களின் புரட்சி' (Revolution of the Heavenly Bodies) என்ற புத்தகத்தில் பூமி சூரியனைச் சுற்றுகிறதே தவிர சூரியன் பூமியைச் சுற்றவில்லை என்று கூறினார். இவருடைய கருத்து சரியானதே என்று கலிலியோ(Galeleo) என்ற இத்தாலிய விஞ்ஞானி தாம் கண்டறிந்த தொலைநோக்குக் கருவியின் மூலம் நிருபணம் செய்தார்.

திசை காட்டும் கருவியைப் பயன்படுத்தும் முறையை அரேபியர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் கற்றுக்கொண்டனர். வெடிமருந்து பயன்படுத்தும் முறையை ரோகர் பேகன் என்பவர் வெளியிட்டார். வெடிமருந்து பயன்படுத்தும் முறையை அரேபியர்கள் பழக்கத்தில் வைத்திருந்தனர். இதனால் நிலப் பிரபுகளை , அடக்கி நிலையான ஆட்சியினை ஏற்படுத்த முடிந்தது. ஜான்கூடன்பர்க் என்பவர் கண்டு பிடித்த அச்சு இயந்திரம், எழுத்தாளர்கள் எழுதிய நூல்களை அச்சிட்டுக் குறைந்த விலையில் வெளியிடத் துணையாக இருந்தது.

**கலையில் மறுமலர்ச்சி:**

மறுமலர்ச்சிக்கு முன்னர் எழுதப்பட்ட கலை, ஓவியங்கள் அனைத்தும் சமயம் சார்ந்தவைகளாகவே இருந்தன. ஆனால் மறுமலர்ச்சிக் காலத்தில் எழுந்தவைகள் மதசார்பற்றவைகளாக இருந்தன. சமயம் சார்ந்திருப்பினும், புத்துணர்வு பெற்ற ஓவியங்களாகவும் கலைத் தன்மை படைத்தவைகளாகவும் அவை விளங்கின. மறுமலர்ச்சிக் கலை வல்லுநர்களில் சிறப்பு வாய்ந்தவர்கள் லியோனார்டா-டா-வின்சி, மைக்கேல் ஆஞ்சலோ, திதியன், (Titian) ரபேல் ஆகியோராவர். மைகேல் ஆஞ்சலோ வாடிகன் நகரில் உள்ள 'சிஸ்டைன் சாப்பல்' என்ற ஆலயத்தை அழகுபடுத்தினார். இறுதி இரவுச் சாப்பாடு (The Last Supper), மோனோ லிசா (Mono Lisa) போன்றவை லியானார்டா-டா-வின்சியின் தலை சிறந்த படைப்புக்களாகும். ரபேல், 'மாதாவும் குழந்தையும்', 'புனித கேதரின் ஆலயம்' ஆகியவற்றைப் ப்டைத்தார். திதியனின் கலைப்பணிகளும் உலகினைக் கவர்ந்தது.

**விளைவு:**

1. இக்கால உலகம் மறுமலர்ச்சியின் விளைவேயாகும்.
2. தேசிய மொழிகள் வளர்ச்சி அடைந்தன.
3. சமயப் புரட்சிக்கு வழி கோலியது.
4. தேசிய அரசுகள் தோன்றின.
5. புதை பொருள் ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்பட்டன.

## (இ) 15-ஆம் மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில் நிலவியல் கடல்வழிக் கண்டுபிடிப்புகள் - காரணங்கள், போக்கு, விளைவுகள்

*மனிதன் தோன்றி 5,00,000 ஆண்டுகள் ஆனாலும்* கி.பி.15-ஆம் நூற்றாண்டு வரை அவனுக்கு உலகம் என்றால் என்ன? எந்த அளவு பரப்பு கொண்டது? என்பது தெரியாமல் இருந்தான். இவ்வுலகில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற கண்டங்கள் இருப்பதே தெரியாமல் இருந்தான். ஐரோப்பியர்கள், இந்தியர்கள், சீனர்கள் போன்றோர் தங்கள் அருகாமையில் இருக்கும் சில நாடுகளை மட்டும் தெரிந்து இருந்தனர். 15-ஆம் நூற்றாண்டு வரை அமெரிக்காவிலோ ஆஸ்திரேலியாவிலோ ஐரோப்பியர் யாரும் குடியேறவில்லை. ஐரோப்பியர்கள் ஆசியாவைப் பற்றியோ, ஆசியர்கள் ஐரோப்பாவைப் பற்றியோ அதிகம் தெரிந்திருக்கவில்லை. ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் அருகிலேயே ஆப்பிரிக்கா இருந்தபோதும் இவைகள் ஒன்றுக்கொன்று எந்தத் தகவல் தொடர்பும் இல்லாமல் இருந்தன. தகவல் தொடர்பு சாதனங்களான ரேடியோ, தொலைபேசி, தந்தி, இருப்புப்பாதை, விமானம், மோட்டார் வாகனங்கள், உலகப் படங்கள், செய்தித்தாள்கள் மற்ற மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும் எனும் ஆர்வம், புவியியல் அமைப்பு எவ்வாறு இருக்கின்றது என்பது பற்றிய அறிவு ஆகியவை இல்லாத காரணத்தால் அக்கால மக்களுக்கு நிலவியல் அமைப்புப் பற்றி எதுவும் தெரியாது இருந்தனர்.

ஆனால் இயேசுவின் காலத்திற்கு முன்பே, பெனிசியர்கள், எகிப்தியர்கள், பாரரேர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள் போன்றோர்களால், ஐரோப்பியர்களுக்கும், ஆசியர்களுக்கும் இடையே பல தொடர்புகள் இருந்து வந்தன. இவ்விரு பகுதி மக்களையும் வர்த்தகம், வியாபாரம், கலாச்சாரம் ஆகிய தொடர்புகள் இணைத்தன. ரோமப் பேரரசர் சீசர் அகஸ்டஸ் அவைக்குப் பாண்டிய மன்னர் தூது அனுப்பிய

செய்தி மற்றும் இந்தியாவோடு ரோம நறுமணப் பொருள்களான வாசனைத் திரவியங்கள், ஏலம், பட்டு, முத்து போன்ற பொருள்களால் வைத்திருந்த வியாபாரத் தொடர்புகள் ஆகியவற்றால் அக்காலத்தில் இம் மக்களிடையே இருந்த புவியியல் அறிவுபற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது. பண்டைக் காலத்தில் பயணம் மேற்கொண்ட டாலமி போன்ற அறிஞர்கள் கொடுத்த செய்திகளைக் கொண்டு அக்கால மக்களுக்கு நிலவியல் அறிவு இருந்தது பற்றி அறியமுடிகிறது. ஆனால் இடைக்காலத்தில் அவை அழிந்துவிட்டன. இடைக்காலத்தில் நிகழ்ந்த சிலுவைப்போர்கள் மற்றும் சமயப்பண்புகள் ஓரளவு மக்களுக்கு நிலவியல் அறிவுபெற்றுத் தெளிய வாய்ப்பு கொடுத்தது. கி.பி.1271-1295 ஆகிய ஆண்டுகளில் பயணம் மேற்கொண்ட வெனிசிய பயணிகளான நிகோலோ, மாபியாபோ மற்றும் நிகோலோவின் மகனான மார்கோபோலோ போன்றோர்கள், சீனா போன்ற ஆசிய நாடுகளில் மேற்கொண்ட பயணத்தால் பல நிலவியல் அறிவு பற்றித் தெரிந்து கொண்டனர். ஆசியாவில் பயணம் மேற்கொண்டு 24 ஆண்டுகளுக்குப் பின்னர் வெனிஸ் திரும்பிய மார்கோபோலோ எழுதிய புத்தகத்தின் மூலம் சீனா, திபெத், பர்மா, சியாம், கொச்சின், சீனா, இலங்கை, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் பற்றிக் கூறிய கருத்துக்கள் அப்புத்தகத்தைப் படிப்போரை வியக்க வைக்கின்றது.

**காரணங்கள்:**

ஐரோப்பியர்களுக்கும், கீழை நாட்டினருக்கும் இடையே வாணிபத் தொடர்பு இருந்து வந்தது. இவ் வாணிபத்தை ஆசிய வியாபாரிகள் கான்ஸ்டாண்டிநோபிள் வழியாகத் தரைமார்க்கமாக நடத்தி வந்தனர். ஆசிய வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைத்ததால் தாங்களும் லாபம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் போர்த்துகீசியர் வாணிபப் போட்டியிட்டனர். அதனால் சுருக்கமான வழிகள் தேடப் புறப்பட்டனர்.

இவர்களிடையே இருந்துவந்த வாணிபப் பொருட்களோ, விலையுயர்ந்த கற்கள். மிளகு, ஏலம் போன்ற நறுமணப் பொருட்களும், சில்க், யானைத் தந்தம் போன்றவைகளுமாகும். இப்பொருள்கள் ஐரோப்பியர்களுக்கு அத்தியாவசியத் தேவைப் பொருட்களாயின. ஆனால் கான்ஸ்டாண்டிநோபிள் பிடிக்கப்பட்டுவிட்டதால் துருக்கியர்கள்,

ஐரோப்பியர்கள் தரை மார்க்கமாக வாணிபம் செய்யத் தடைவித்தனர். ஆகவே அவர்கள் கடல் வழி காணப் புறப்பட்டனர்.

மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ள ஐரோப்பியர்கள், தங்கள் கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கத்துடனும், பொருள் தேடும் நோக்கத்துடனும் பல புதிய இடங்களைப் பிடிக்க விரும்பினர்.

விஞ்ஞான வளர்ச்சியின் பயனாய் நிலவியல் கண்டுபிடிப்பு ஊக்கம் பெற்றது. நிலம் உருண்டையானது என்று கண்டுபிடிக்கப்பட்டதால் மாலுமிகள் எங்குச் சென்றாலும் தாம் திரும்பித் தம் இடத்திற்கே வந்துவிடலாம் என்ற தைரியம் வந்தது. திசைகாட்டும் கருவி, நல்ல உலகப் படங்கள் போன்றவை பழக்கத்திற்கு வந்ததால் மாலுமிகளுக்குப் பயணம் செய்ய வசதியாயிற்று.

**போர்ச்சுக்கீசியர் ஆய்வுப்பயணம்:**

போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி என்பவர் பள்ளி ஒன்று நிறுவி, கடல் வழிப்பயணம் செல்வோர்க்குப் பயிற்சியளித்தார். ஆனால் அவர் 1460-இல் இறந்து விட்டார். இறந்த 27 ஆண்டுகள் கழித்து 1487-இல் பார்த்தலோமியோடயஜ் என்பவர் கடல்வழிகாணப் புறப்பட்டார். தென்ஆப்ரிக்காவின் தெற்கு முனையை அடைந்ததும் புயல் ஒன்று வீசவே புயல் முனை என்று கூறித் திரும்பினார். ஆனால் அப்போது அரசராக இருந்த போர்ச்சுக்கீசிய அரசர் நன்னம்பிக்கை முனை என்று பெயா கொடுத்தார். இதற்குப் பின்னர் ஒன்பது ஆண்டுகள் கழித்து 1498-இல் .வாஸ்கோடகாமா, நன்னம்பிக்கை முனையைக் கடந்து கள்ளிக்கோட்டை (Calicut) வந்தடைந்தார். 1500-இல் கேபல் என்பவர் தென்அமெரிக்காவில் பிரேசிலைக் கண்டுபிடித்தார். அங்குப் போர்ச்சுக்கீசியர் குடியேறினர்.

**அமெரிக்கா கண்டுபிடிக்கப்படல்:**

ஸ்பெயின் நாட்டு ஆட்சியாளர் இசபெல்லா பெர்டினாண்டு அவர்கள் இத்தாலிநாட்டு கிறிஸ்டோபர் கொலம்பஸ் என்பவருக்கு மூன்று கப்பல்களும் பண உதவியும் கொடுத்துக் கீழைநாடுகளுக்குப் புதிய வழிகாண அனுப்பினார். ஆனால் அவர் பாகமஸ் என்னும் இடத்தில் இறங்கினார். அவ்விடம் இந்தியா என்று எண்ணினார். மீண்டும் மூன்று

முறை பயணம் செய்தும் அது புது இடம் என்று அவருக்குத் தெரியவில்லை.

அவருக்குப்பின் பயணம் செய்த அமெரிக்கோ வெஸ்புகி என்ற இத்தாலியர் தென் அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் பயணம் செய்து கொலம்பஸ் கண்டுபிடித்தது கீழைநாடுகளில் ஓர் இடம் அல்ல, அது ஒரு புது இடம் என்று நிரூபித்தார். எனவே அவருடைய பெயரால் அது இன்று அமெரிக்கா என்று அழைக்கப்படுகிறது.

**மெகலன் ஆய்வுப் பயணம்:**

மெகலன் என்பவர் ஆய்வுப்பயணம் செய்வதற்குத் துணையாக இருந்த நாடு ஸ்பெயின் ஆகும். ஸ்பெயின் நாட்டு அரசர் ஐந்தாம் சார்லஸின் அனுமதியும் உதவியும் பெற்று, ஸ்பெயினில் இருந்து ஆய்வுப் பயணத்தைத் தொடங்கினார். தென் அமெரிக்காவின் தெற்கு முனையில் ஒரு ஜலசந்தியைக் கண்டார். அதற்கு மெகலன் ஜலசந்தி எனப் பெயரிட்டார். அதனைக் கடந்தபோது, ஒரு பெரும் கடல் அலைகளின்றி அமைதியாக இருந்தது. ஆகவே அதற்கு அமைதிப்பெருங்கடல் எனப்பெயரிட்டார். பின்னர் தொடர்ந்து பயணம் செய்த அவர் கிழக்கிந்தியத் தீவுகளைக் கண்டார். அத்தீவுகளுக்குப் பிலிப்பைன் தீவுகள் எனப் பெயரிட்டார். அங்கு வாழ்ந்த மக்களால் கொல்லப்பட்டதால் அவருடன் சென்ற கப்பல்களில் ஒன்று தென் ஆப்பிரிக்காவின் தெற்கு முனையைச் சுற்றி ஸ்பெயினை வந்தடைந்தது. இப்பயணம் செய்ய மூன்று ஆண்டுகள் ஆயிற்று. இதனால் உலகம் உண்டையானது என நிரூபிக்கப்பட்டது.

**விளைவுகள்:**

நிலவியல் கண்டுபிடிப்புகளால் ஐரோப்பாவின் சமசக்தி நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய நாடுகள் செல்வம் பெற்ற நாடுகளாயின. ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த பிரபுக்களின் செல்வாக்குகள் குறைந்து தேசிய அரசுகள் உருவாகி பல குடியேற்றங்கள் ஏற்பட்டன. ஆரம்பத்தில் நிலவியல் கண்டுபிடிப்புகளால் வியாபாரம் மற்றும் குடியேற்றத்தில் இரு ஐரோப்பிய நாடுகள் முதன்மை பெற்றன. அவை போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகும். கீழைநாடுகளில் போர்த்துகீசும் தன் செல்வாக்கைப் பெருக்கியது. மேலைநாடுகளில் தன் ஆதிக்கத்தைப் பெருக்கியது ஸ்பெயின். காலப்போக்கில் இந்த இரு நாட்டின் மேலாதிக்கத்திற்குப் போட்டியாக இங்கிலாந்து, பிரான்ஸ்,

ஹாலந்து போன்ற நாடுகள் விளங்கின. கி.பி.16-ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகீசியர் உலகம் முழுவதும் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவினர். கி.பி.1500-இல், கேப்ரல் எனும் போர்ச்சுக்கீசியர் பிரேசிலைப் பிடித்துப் போர்த்துக்கீசிய ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்தார்.

டச்சுக்காரர்கள் தென் ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா போன்ற நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். பிரான்ஸ், மேற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்கா, இந்தியா, வட அமெரிக்கா போன்ற பகுதிகளில் தங்களுடைய வியாபார மற்றும் வர்த்தகத்தை விரிவுபடுத்தியது. 16-ஆம் நூற்றாண்டுவரை ஐரோப்பாவிலே வியாபாரம் செய்து வந்த இங்கிலாந்து, 16-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் குடியேற்ற அமைப்புப் போட்டியில் ஈடுபட்டது. கி.பி. 1603-இல் முதலாம் ஜேம்ஸ் அரியணை ஏறிய போது இங்கிலாந்துக்கு தன் நாட்டைத் தவிர எங்கும் குடியேற்றங்கள் இல்லை. சர்ஜான் வில்லோபி கி.பி.1553-இல் இந்தியாவைக் காணும் நோக்கத்தோடு கடல்வழிப் பயணம் புறப்பட்டு ஆர்டிக் வழியாக வந்தார். அதன் பயனாக ரஷ்யாவோடு வாணிபம் நடைபெற்றது. இங்கிலாந்து அரசர் ஏழாம் ஹென்றியின் உத்தரவின்படி ஜான்கேபட் கி.பி.1497 மற்றும் 1498-இல் வடஅமெரிக்காவைக் கண்டுபிடித்து வடஅமெரிக்கா இங்கிலாந்துக்குச் சொந்தம் என்று உரிமை கொண்டாடினார். கி.பி.16-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் கடல் நடவடிக்கைகள் பல கடற்கொள்ளையர்களால் நிகழ்த்தப்பட்டது. பிரான்ஸில் டிரேக் சிறந்த கடல் வழிப் பயணி மற்றும் கடற்கொள்ளையர். இவர் ஸ்பானியக் கப்பல்களைக் கடல்களில் கொள்ளையடித்துப் பல சாதனைகளைப் புரிந்ததால் இங்கிலாந்தில் பெரிதும் பாராட்டப்பட்டார். இவர் கி.பி.1577-1578களில் உலகத்தைச் சுற்றி வந்தார். அதற்காக 5 கப்பல்களைப் பயன்படுத்தினார். அவற்றுள் ஒன்று 'கோல்டன் ஹிந்து' எனும் கப்பல் ஆகும். சர்ஜான் ஹாக்கின்ஸ் என்பவர் இங்கிலாந்தில் உள்ள புரட்டஸ்டன்ட் மதத்தைச் சார்ந்தவர். அவர் முறையாக பைபிள் படிப்பவர். இருப்பினும் அவர் அடிமை வியாபாரத்தில் ஈடுபட்டார். மேற்கு ஆப்பிரிக்காவில் இருந்து அடிமைகளைச் சேர்த்துப் பின்னர் ஸ்பானிய குடியேற்றங்களில் விற்றார். பிரான்ஸிஸ் டிரேக் போன்று ஹாக்கின்ஸ்ம் ஒரு கடற்கொள்ளைக்காரர்தான். ரிச்சர்டு கிரேன்வில்லி எனும் மற்றொரு கடற்கொள்ளைக்காரரும் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவர்தான். அவரும்

பல கடற்கொள்ளைகளில் ஈடுபட்டார். தாமஸ் காவண்டிங் எனும் மற்றொரு ஆங்கிலேயர் டிரேக் என்பவர் உலகம் சுற்றிய ஆறு ஆண்டுகளுக்குபின் உலகம் சுற்றி வந்தார்.

சர்வால்டேர் ராலே மற்றும் சர் ஹம்ப்ரே கிர்பர்ட் ஆகியோரும் ஸ்பானியக் கப்பல்களைக் கொள்ளையடித்த கடற்கொள்ளையர்களே. அவர்கள்தான் முதன் முதலில் அமெரிக்காவில் வர்ஜீனியா மற்றும் நியூபௌண்டுலாண்டு ஆகிய மகாணங்களை நிறுவியவர்கள். ஆனால் அவை வெற்றி பெறவில்லை. கி.பி.16-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் கடற்கொள்ளையிலேயே ஈடுபட்டிருந்தனர். கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தான் பயனுள்ள குடியேற்றங்களை நிறுவினர். கி.பி.1607-இல் வர்ஜீனியாவை நிறுவினர். நியூஇங்கிலாந்து குடியேற்றங்களை கி.பி.1620-21-இல் புனிதப் பாதிரியார்கள் நிறுவினர். கி.பி.1634-இல் பால்டிமோர் பிரபு எனும் ரோமன் கத்தோலிக்கர் மேரிலாண்டு எனும் மாகாணத்தைத் தோற்றுவித்தார். கரோலினாவை கி.பி.1663-இலும் லாஸ் ஐலாண்டை (Los Islands) கி.பி.1635-இல் நிறுவினர். டச்சுவிடம் இருந்து கி.பி.1664-இல் நியூயார்க்கைக் கைப்பற்றினர். கி.பி.1670-இல் ஹட்சன்பே எனும் குடியேற்றத்தையும் கி.பி.1682-இல் பென்சில்வானியா எனும் குடியேற்றத்தையும் அமைத்தனர். இவ்வாறு இங்கிலாந்து, பிரான்ஸ், ஹாலந்து போன்ற நாடுகளில் 17-ஆம் நூற்றாண்டில் தங்கள் குடியேற்றங்களை அமைத்தனர்.

**பொருளாதாரத் துறையில்:**

லிஸ்பன், ஆண்ட்வெர்ப், லண்டன் போன்ற துறைமுக நகரங்கள் தோன்றின. வியாபாரம், தொழில் துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பெரிய கப்பல்கள் கட்டப்பட்டன. வங்கிகள், 'Joint stock companies' போன்றவைகள் தோன்றின.

**சமூக விளைவு**

நடுத்தர மக்களில் பலர் தொழிற்சாலை வைப்பதற்கும் வாணிபம் செய்வதற்கும் வழி செய்யப்பட்டது. புதிய உலகம் கண்டுபிடிக்கப்பட்டதால் பல நாடுகள் குடியேற்றங்கள் அமைத்தன.

இக்குடியேற்றங்களில் அடிமை முறை வழக்கில் இருந்தது. ஆகவே ஆப்பிரிக்க நீக்ரோக்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

**கலாச்சாரம்:**

ஐரோப்பிய கலாச்சாரம் அனைத்து நாடுகளுக்கும் கொண்டுசெல்லப்பட்டது. ஐரோப்பியர்கள் கிருத்துவ மதத்தை எல்லா நாடுகளிலும் பரப்பினர்.

**தேசிய அரசுகள்**

கடல் வழிக் கண்டுபிடிப்புகள் தேசிய அரசுகள் தோன்ற காரணமாயின. அவை ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகியவையாகும்.

**ஸ்பெயின்:**

கீழை நாடுகளிலும், மேலை நாடுகளிலும் பேரரசு அமைத்திருந்த போத்துகீசிய நாட்டுக்கு 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் பல சோதனைகள் ஏற்பட்டன. காரணம் பல ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்கள் அமைப்பதில் போட்டியிட்டன. கி.பி. 1580-இல் ஸ்பெயின் போர்த்துகீசிய நாட்டை ஆக்கிரமித்தது இந்த அரசியல் இணைப்பு போர்த்துக்கீசிய நாடுகளுக்கு பாதகமாக அமைந்தது. அது முதற்கொண்டு அதனுடைய செல்வாக்கு மற்றும் கலாச்சாரம் சரியத் தொடங்கியது. போர்த்துகீசியச் செயல்பாடுகள் ஸ்பெயின் ஆதிக்கத்துக்குட்பட்டது. போர்த்துகீசிய குடியேற்றங்களும், அதன் சொத்துக்களும் ஸ்பெயின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. கொலம்பஸ்ஸின் கண்டுபிடிப்பு ஸ்பெயினைச் சார்ந்தது என்று உரிமை கொண்டாடியது. ஸ்பெயின் வியாபாரம் மற்றும் குடியேற்றங்கள் அமைப்பதில் தீவிரமாக இருந்து பேரரசு அமைத்தது. கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகின் பல பகுதிகளிலும் ஸ்பெயின் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது.

ஸ்பெயின் அரசின் ஆதரவில் மெகல்லன் கடல் வழிப்பயணம் மேற்கொண்டமையால், மெகல்லன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புக்கள் அனைத்திற்கும் ஸ்பெயின் சொந்தம் கொண்டாடியது. வியாபாரத்தில் போர்த்துகீசிய தனியுரிமை ஸ்பெயின் நாட்டின் தனியுரிமையானது. இவ்வாறு ஸ்பெயின் நாட்டின் பலம் பொருந்திய பேரரசுக்கு இக்காரணங்கள் வித்திட்டன. கி.பி.1580-க்குப்பின் ஸ்பெயின்

பேரரசில் புளோரிடா, நியூமெக்ஸிகோ, கலிபோர்னியா, மெக்ஸிகோ மத்திய அமெரிக்கா, மேற்கு இந்திய தீவுகள் மற்றும் தென் அமெரிக்கா முழுவதும் இடம்பெற்றன. இவற்றோடு பிலிப்பைன்ஸ் நாடும் ஸ்பெயின் ஆதிக்காத்தில் இருந்தது. ஸ்பெயின் பேரரசு ஏறத்தாழ 300 ஆண்டுகள் நீடித்தது. ஸ்பெயின் நாட்டு மொழி, கலாச்சாரம், அரசுமுறை ஆகியவற்றைத் தன் குடியேற்ற நாடுகளில் புகுத்தியது. புதிய குடியேற்றங்களில் குடியேறிய, ஸ்பெயின் நாட்டு சமயத்துறவிகள், ஆசிரியர்கள், அதிகாரிகள், சிப்பாய்கள் அனைவரும் ஸ்பெயின் நாட்டின் பெருமையை நிலைநாட்டினர். பேரரசின் அனைத்துப் பகுதிகளிலும் பல நகரங்கள், பெருநகரங்கள் உருவாக்கப்பட்டன. கல்லூரிகள், பள்ளிகள் நிறுவப்பட்டன. நிலங்கள் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. அடிமைமுறை அமுலில் இருந்தது. பல அடிமைகளை வைத்து விவசாயம் செய்தனர். நீக்ரோக்கள் பலர் அடிமைகளாக வேலை செய்தனர். திருச்சபைகள் நிறுவப்பட்டன. பிற ஐரோப்பிய நாடுகளில் ஸ்பெயின் பெருமைக்குரிய நாடு என்று ஆனது. ஸ்பெயின் தன் ஆதிக்கத்தின் கீழ் உள்ள குடியேற்ற நாடுகளில் பிற ஐரோப்பிய நாடுகள் ஈடுபடாத வகையில் பார்த்துக் கொண்டது.

ஸ்பெயின் தன் குடியேற்ற நாடுகள் தொழிற்துறையில் ஈடுபடக்கூடாது என்று தடை வித்தது. அதாவது உற்பத்தி, கப்பல்கட்டுதல் போன்ற துறைகளில் ஈடுபடக்கூடாது. குடியேற்றங்கள் கச்சாப்பொருள்களை அனுப்பும் நாடுகளாக மட்டும் இருக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தியது. அதனால் ஸ்பெயின் நாட்டுக்குத் தங்கம், வெள்ளி அதிகம் குவிந்தன. இருப்பினும் காலப் போக்கில் இத்தகைய கொள்கை ஸ்பெயின் நாட்டுக்கே பாகதமாக அமைந்தது. கி.பி.16-ஆம் நூற்றாண்டிலும், 17-ஆம் நூற்றாண்டு ஆரம்பக்கால வரையிலும் ஸ்பெயின் தன்னிகரற்ற ஒரு பேரரசாகத் திகழ்ந்தது. உலகில் வேறு எந்த நாடும் போட்டியிட முடியாத அளவிற்குப் பலம் பொருந்திய பேரரசாகத் திகழந்தது.

**இங்கிலாந்து:**

ஐரோப்பாவின் ராணி என்றழைக்கப்பட்ட ஸ்பெயின் மேலைநாடுகளிலும், கீழை நாடுகளிலும் தன் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்தது. ஸ்பெயின் மீது பொறாமைகொண்ட இங்கிலாந்து புதிய உலகம் என்றழைக்கப்பட்ட அமெரிக்காவில் தனக்கும் வியாபார உரிமை வேண்டும் என்று கருதியது. இங்கிலாந்து எலிசபெத் ராணியா இருந்த

போது இங்கிலாந்தின் "கடல் நாய்கள்" (Sea Dogs) என்றழைக்கப்பட்ட கடற்கொள்ளைக் காரர்களின் வீரதீரச் செயல்களால் கவரப்பட்ட இங்கிலாந்து புதிய உலகில் ஸ்பெயினுக்கு எதிராக வியாபாரத்தில் இறங்க நினைத்தது. மேலும் இங்கிலாந்து ஒரு புரட்டஸ்தானிய கிருத்துவ நாடு. ஸ்பெயின் கத்தோலிக்கக் கிருத்துவ நாடு. ரோமன் கத்தோலிக்கப் போப்புக்கள் இங்கிலாந்தை அடக்கி ஆளவேண்டும் என்று பலமுறை முயற்சித்தாலும், எலிசபெத் அரசியைக் கொலை செய்ய நடந்த முயற்சி, இங்கிலாந்து அரசப் பதவிக்குப் ஸ்பெயின் நாட்டு அரசர் இரண்டாம் பிலிப் உரிமை கொண்டாடியது போன்ற காரணங்களால் இங்கிலாந்துக்கும், ஸ்பெயினுக்கும் இடையே பகைமை வளர்ந்தது.

இத்தகைய பகைமை உணர்வின் காரணமாக ஸ்பெயின் கி.பி.1588-இல் இங்கிலாந்தைப் பிடிக்க ஆர்மதா எனும் போர்க்கப்பலை அனுப்பியது. ஆனால் இங்கிலாந்திடம் தோல்வியைத் தழுவியது. எனவே இங்கிலாந்து வடஅமெரிக்காவில் போட்டியின்றிக் குடியேற்றங்கள் அமைக்க ஏதுவானது. இவ்வாறு குடியேற்றங்கள் அமைத்து வியாபாரத்திலும் ஈடுபட்டதால் நாட்டின் பெருமை, நாட்டுப்பற்று ஆகியவை இங்கிலாந்தில் ஓங்கியது. ராணி எலிசபெத் காலத்தில் நிலவிய தேசிய உணர்வு இங்கிலாந்தைப் பலம் பொருந்திய பேரரசாக உருவாக்க காரணமாக அமைந்தது.

**பிரான்ஸ்:**

பிரான்ஸில் தேசிய உணர்வு கி.பி.14, 15-ஆம் நூற்றாண்டுகளில், ஆங்கிலேயர்கள் படையெடுத்த போது எழுச்சி பெற்றது. பிரான்ஸ் மக்கள் தங்கள் ஒற்றுமையால் இங்கிலாந்தினரை பிரான்ஸ்ஸை விட்டு வெளியேற்றினர். பொது எதிரி, பொது நன்மை கருதி அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து நாட்டுபற்றை வெளிப்படுத்தினர். சமய சீர்திருத்தத்தின் விளைவாகவும் தேசிய உணர்வு வெளிப்பட்டது. பிரான்ஸ் ஒரு கத்தோலிக்க நாடு கி.பி.1559, 1598-களில் நடைபெற்ற சமயப் போர்களிலும் தேசிய உணர்வு எழுச்சி பெற்றது. கி.பி.1598-இல் நடைபெற்ற நான்டிஸ் ஒப்பந்தப்படி சமயப்போர்கள் முடிவுக்கு வந்தன. போர்பன் வம்சத்தைச் சார்ந்த நான்காம் ஹென்றி (1553-1610) பிரான்ஸின் மன்னரானார். அப்போதுதான் ஸ்பெயின் இங்கிலாந்திலும் தோல்வியுற்ற நேரம், பிரான்ஸ் ஸ்பெயினின் வீழ்ச்சியால் தன்னுடைய ஆதிக்கத்தை ஐரோப்பாவிலும் உலக அரங்கிலும் செலுத்த

முயற்சி செய்தது. நான்காம் ஹென்றிக்குத் துணையாக அவருடைய அமைச்சர் சல்லிகோமகன் இருந்தார். நான்காம் ஹென்றி காலத்தில் ஆஸ்டிரியா, ஸ்பெயின் நாடுகளில் ஆட்சியில் இருந்த ஹேப்ஸ்பர்க் வம்ச மன்னர்களோடு சமாதானம் செய்து கொண்டார். துருதிருஷ்டவசமாகத் தேசிய அரசை உருவாக்க முயற்சித்த நான்காம் ஹென்றி கி.பி.1610-இல் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் பதிமூன்றாம் லூயி அரசரானார். அவருடைய அமைச்சர் ரிச்லியூ பிரபுக்களின் அதிகாரத்தைப் குறைத்து நாட்டைப் பலப்படுத்தினார். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த பதினான்காம் லூயி காலத்தில் பிரான்ஸ் ஒரு பலம் பொருந்திய நாடாக ஆனது. விவசாயம், வியாபாரம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிற்று.

### *(ஈ) ஜெர்மனியில், பிரான்ஸில், ஸ்விட்ஸர்லாந்தில் சமயச் சீர்திருத்த இயக்கம்*

16-ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதத்திலிருந்த நடைமுறைக்கு ஒவ்வாத சில பழக்க வழக்கங்களுக்கு எதிராக ஐரோப்பாவில் எழுந்த இயக்கமே சமயப் புரட்சியாகும். இத்தகைய எழுச்சிக்குப் பின்னர் தம் மதத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்று போப்பாண்டவர், ஏனைய திருச்சபைக் குருமார்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள்தான் சமயப் புரட்சியின் மறுப்பியக்கமாகும். சமயப் புரட்சிக்குப் பல காரணங்கள் உண்டு.

**ஒழுக்கமின்மை:**

ஐரோப்பிய மக்கள் கத்தோலிக்க மதத்திற்கெதிராகச் செய்த புரட்சி, திருச்சபைகள் கூடாது என்பதற்காக அல்ல. திருச்சபைகள் திருடர்களின் கூடாரங்களாக இருந்தமையைக் கண்டிப்பதற்காக. தெய்வீகத்தின் இருப்பிடமாக இருக்கவேண்டிய திருச்சபை, திருட்டுக் காதலின் புகலிடமாய் இருந்ததனால், நெஞ்சத்தைத் தூய்மைப் படுத்தும் திருச்சபை, லஞ்சத்தின் உறைவிடமாய் இருந்தமையால் மக்கள் விழிப்படைந்து புரட்சி செய்தனர்.

**திருச்சபையின் வருமானமும் ஆட்சி முறையும்**

எல்லாக் கிறித்தவ மக்களும் போப்பாண்டவரைத் தலைவராக வைத்திருந்தனர். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள திருச்சபைக்கு அதிகமான நிலங்களும், கல்வி நிறுவனங்களும் இருந்தன. இந்தச்

சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானத்தைத் தவிர போப்பாண்டவருக்குக் குருமார்கள் முதற்கனிகள் (First fruits of Annates) என்ற முறையில் பணம் கொடுத்து வந்தனர். இவை தவிர பாவமன்னிப்புச் சீட்டு விற்பனை (Sale of Indugences) என்ற முறையிலும், அதிகமான பணம் பெற்று வந்தனர். கீழ்மட்டத்திலிருக்கும் குருமார்களின் பதவிகள் விலைக்கு விற்கப்பட்டதால், திறமைக்கு மதிப்பளிக்கப்படவில்லை. பதவிகள் விற்கப்பட்டதால் ஆட்சி முறை சிறப்படையவில்லை. திருச்சபையின் வருமானத்தை மேல்மட்டக் குருமார்களே அனுபவித்து வந்தனர். கீழ்மட்டக் குருமார்களுக்குக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. ஆகவே போப்பின் திருச்சபை ஆட்சி முறையில் அதிருப்தி அடைந்த மக்கள் புரட்சி செய்தனர்.

**தேசிய உணர்வு:**

போப்பாண்டவர் ஐரோப்பிய நாடுகளிலுள்ள அனைத்து மக்களுக்கும் தலைவராக இருந்தமையால், அந்த நாடுகளில் வாழ்ந்த அரசர்களும் போப்பாண்டவரின் கட்டளையைக் கேட்டு வந்தனர். ஆனால் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசர்கள் தங்கள் நாட்டின் மீது அந்நியர் ஒருவருக்கு இவ்வாறு உரிமையும் அதிகாரமும் இருக்கக் கூடாது எனக் கருதினர். போப்பாண்டவர் ரோம் நகரில் இருந்ததால் மக்கள் அவரை அந்நியராகவே கருதினர். ஒவ்வொரு நாட்டிலிருந்தும் குறிப்பிட்ட தொகை வரியாக ரோமாபுரிக்குச் செல்லும். ஆனால் அங்கிருந்து எவ்விதப் பயனும் அம் மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே மக்கள் மன்னரை ஆதரிக்கத் தொடங்கினார். மன்னர்கள், தங்கள் சொந்த வாழ்க்கையிலும் தங்கள் நாட்டின் உள் நாட்டு விவகாரங்களிலும் போப்பாண்டவர் தலையிடுவதை விரும்பவில்லை. ஆகவே அவர்கள் போப்பின் அதிகாரத்தைத் துச்சமாகக் கருதித் தூக்கியெறிந்தனர்.

**மறுமலர்ச்சி:**

மறுமலர்ச்சியின் விளைவால் மக்கள் சிந்திக்கத் தொடங்கினர். எந்த ஒரு பிரச்சனையையும் கண் மூடித்தனமாக நம்பாமல் ஏன்? எதற்கு? என்று கேட்கத் தொடங்கினர். இராஸ்மஸ் எழுதிய "பிரைஸ் ஆ∴ப் ∴பாலி (Praise of Folly) அல்லது குறைகளின் புகழ்ச்சி, செர்வான்டெஸ் எழுதிய டான்குவிசோ (Donquixote) போன்ற

புத்தகங்கள் இடைக்கால மூட நம்பிக்கைகளைக் கண்டித்ததால் மக்கள் உணர்வடையத் தொடங்கினர்.

**ஆரம்பக்கால சீர்திருத்தவாதிகள்:**

14-ஆம் நூற்றாண்டிலேயே திருச்சபைக்கும் வேத நூலுக்கும் எதிராகப் பல இயக்கங்கள் தோன்றின. ஜான விக்ளிப் என்ற ஆங்கிலப் பாதிரியார் திருச்சபையின் தீய செயல்களைக் கண்டித்தார். இவரைச் "சமயச் சீர்திருத்தத்தின் விடி வெள்ளி" என்று அழைக்கின்றனர். ஜான் ஹஸ் என்பவர் பொஹிமியாவில் புரட்சி செய்தார். இதற்காக இவர் 1415-இல் திருச்சபையால் உயிருடன் தீயிலிட்டுக் கொல்லப்பட்டார்.

**உடனடிக் காரணம்:**

ஜெர்மனியில் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பேராசிரியராக மார்ட்டின் லூதர் பணியாற்றிக் கொண்டிருந்த போது, போப்பாண்டவர் பத்தாம் லியோவின் பிரதிநிதியாக ஜான்டெட்சல் என்பவர் புனித பீட்டரின் ஆலயத்தைத் திருப்பணி செய்யப் பணம் சேர்க்கும் நோக்குடன் வந்தார். பாவமன்னிப்புச் சீட்டு விற்று அதன் மூலமாகப் பணம் சேர்த்தார். மார்ட்டின் லூதர் இதனை வன்மையாகக் கண்டித்தார். அத்தோடு தன்னுடைய கொள்கைகளை "95 விவர அறிவிப்புக்கள்" என்ற முறையில் எழுதித் திருச்சபையின் கதவில் அறைந்து வைத்தார். திருச்சபை இவரைச் 'சமய விலக்கீடு செய்தது. மார்ட்டின் லூதரோ, ஜெர்மனியிலுள்ள திருச்சபை நிலங்களை எல்லாம் இளவரசர்களே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

ஆகவே ஐந்தாம் சார்லஸ் இவ்விஷயத்தில் தலையிட வேண்டியதாயிற்று. 1521-இல் ஓம்ஸ் என்ற இடத்தில் நடந்த டயட் எனும் நாடாளுமன்றத்திற்கு மார்டின் லூதரை அழைத்தார். லூதரைத் தன் கருத்துக்களிலிருந்து பின்வாங்குமாறு கேட்டுக்கொண்டார். மறுத்துவிடவே மார்ட்டின் லூதர் நாடு கடத்தப்பட்டார். ஆனால், லூதருக்கு இளவரசர்களில் பலர் ஆதரவு கொடுத்தனர். சாக்ஸனி நாட்டு இளவரசர் பிரடெரிக் என்பவர் தன்னுடைய கோட்டையில் லூதருக்கு அடைக்கலம் தந்து ஒளித்து வைத்துக் காத்தார்.

லூதரை ஆதரித்த இளவரசர்கள், ஐந்தாம் சார்லஸையும், கத்தோலிக்க மதத்தையும் எதிர்த்துப் புரட்சி செய்ததால் இவர்களுக்குப் புரொட்டஸ்டண்ட்-கள் (Protesstants) என்று பெயர். ஐந்தாம் சார்லஸ் ஆதரவாளர்களுக்கும் லூதர் ஆதரவாளர்களுக்கும் இடையே போர் ஏற்பட்டது. ஒன்பது ஆண்டுகள் நடந்த இப்போர் 1555-இல் ஆக்ஸ்பர்க் ஒப்பந்தப்படி முடிவுற்றது. இதனபடி ஜெர்மனிய சிற்றரசர்களும், மக்களும் தங்கள் விருப்பம்போல் எம்மதத்தையும் தழுவிக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**கால்வினிசம்:**

பிரான்சில் பிறந்த ஜான் கால்வின் என்பவர் சுவிட்சர்லாந்தில் சீர்திருத்தம் செய்தார். இவர் 'The Institute of Christian Religion' என்னும் புத்தகத்தை எழுதினார். பிறவிப்பயன் (முற்பிறவியில் செய்த பாவம், புண்ணியம்) என்னும் தம்முடைய கொள்கையைப் பின்பற்றுவோர் மிகவும் தூய்மையாயிருத்தல் வேண்டும் என்று விரும்பினார். உல்ரிச் சுவிங்லி என்பவர் லூதரைக் காட்டிலும் தீவிரமானவர். சிலைகள், மடங்கள் போன்றவற்றை நீக்க வேண்டும் என்று கூறினார்.

**ஆங்கிலிக்கானிசம்:**

இங்கிலாந்தில் ஏற்பட்ட சமயப் புரட்சி மன்னரால் ஏற்படுத்தப்பட்ட புரட்சியாகும். எட்டாம் ஹென்றி என்பவர் கேதரினை திருமண ரத்து செய்து ஆன்பொலினை மணக்க வேண்டும் என்று போப்பிடம் அனுமதி கேட்டார். போப்பாண்டவர் அனுமதி கொடுக்கமறுத்ததால் போப்பின் அதிகாரத்தைத் தூக்கி எறிந்தார். தன்னுடைய பாராளுமன்றத்தை 1534-இல் கூட்டி மேன்மை அதிகாரச் சட்டத்தை நிறைவேற்றினார். அதன்படி போப்பாண்டவருக்கு இங்கிலாந்தின் சமய, அரசியல் விவகாரங்களில் தலையிட உரிமையில்லை என்று நிருபித்தார். 'தெய்வீக வழிபாட்டின் ஆறு விதிகள்' (Six articles of faith) என்பதை வெளியிட்டு அதன்படி மக்கள் தெய்வ வழிபாடு செய்யுமாறு வேண்டினார். இவருடைய மதமானது போப் இல்லாத கத்தோலிக்க மதமாகும். இவர் லூதரின் மதத்தைப் பின்பற்றவில்லை. இதற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆறாம் எட்வர்டு மன்னரும் எட்டாம் ஹென்றியின் மதக் கொள்கையைப் பின்பற்றினார். இவர் பொதுவழிபாட்டு நூலைவெளியிட்டார். எலிசபெத் அரசியின்

காலத்தில் ஒருமைப்பாட்டுச் சட்டத்தை இயற்றினார். மேன்மை அதிகாரச் சட்டம் 1559-இல் நிறைவேறியது. அதன் மூலம் அரசியாரே இங்கிலாந்தின் சமயத்துறைக்கும் தலைவரானார். 'தெய்வவழிபாட்டின் 39 ஷரத்துக்களை வெளியிட்டார். இவருடைய காலத்தில்தான் இங்கிலாந்து முழு புரொட்டஸ்டண்ட் நாடாகியது.

***(உ) எதிர் சமயச் சீர்திருத்த இயக்கம்***

சமயப் புரட்சியால் கத்தோலிக்க மத்திற்குப் பலத்த அடி விழுந்தது. ஏராளமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ஆகவே போப்பாண்டவரும், ஏனைய கத்தோலிக்கக் குருமார்களும், கத்தோலிக்க மதத்தைச் சீர்செய்ய வேண்டி பல நடவடிக்கைகள் எடுத்தனர். இதற்குக் கத்தோலிக்கச் சமய சீர்த்திருத்தம், அல்லது சமயப்புரட்சியின் மறுப்பியக்கம் எனப்படும்.

1545-இல் போப்பாண்டவரால் டிரண்ட என்னுமிடத்தில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. இதில் எல்லா நாட்டுக் குருமார்களும் அங்கத்தினர்களாயிருந்தனர். இந்தச் சங்கத்தில் பாவமன்னிப்புச் சீட்டு விற்கும் பழக்கத்தை விட்டு விடுவது என்றும், குருமார்களுக்குள் ஒழுங்கினை நிலை நாட்டுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**ஏசு சபை:**

இக்னேசியஸ் லயோலா என்ற ஸ்பெயின் சிப்பாய், ஏசு சபையை நிறுவி, அதில் பிரான்சிஸ் சேவியர் போன்ற சீடர்களை வைத்து கத்தோலிக்கக் கொள்கைகளைப் பரப்பினார். இவருடைய சீடர்கள் பல நாடுகளுக்கும் சென்று கல்வி நிறுவனங்களை நிறுவி அதன் மூலம் கத்தோலிக்க மதத்தைப் பரப்பினர். சமய நீதி மன்றம் வைத்து கத்தோலிக்க மதத்திற்கு எதிராகச் செயல்படுபவர்களையும் கத்தோலிக்கத்தில் ஒழுக்கமில்லாதவர்களையும் தண்டித்தனர். இதன் மூலம் கத்தோலிக்க மதம் ஓரளவு காக்கப்பட்டது.

**விளைவுகள்:**

இரண்டு விதமான மதங்கள் ஏற்பட்டதால், ஐரோப்பாவில் கத்தோலிக்க நாடுகள், புராட்டஸ்டண்ட் நாடுகள் என்ற இரண்டு

பிரிவாகிப் பல போர்கள் ஏற்பட்டன. புராட்டஸ்டண்டுகள் கத்தோலிக்கச் சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர்.

# இயல் - IV புரட்சிகள்

## (அ) 1789 ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சியும் அதன் தாக்கமும்

ஐரோப்பாவில் 1789 - முதல் 1848 வரை நடைபெற்ற பல புரட்சிகளின் காரணமாக இக்காலத்தைப் புரட்சிக் காலம் என்று அழைப்பர். பல நாடுகளில் நடைபெற்ற புரட்சிகளில் பிரான்ஸில் ஏற்பட்ட புரட்சியே முக்கியமான ஒன்று. அப்புரட்சியின் காரணமாகப் பூர்பன் வம்சத்தைச் சார்ந்த மன்னராட்சி நீக்கப்பட்டு சாதாரணக் குடியில் பிறந்த நெப்போலியன் ஆட்சித் தலைவர் ஆக பதவியேற்றார். கி.பி. 1789-இல் பிரான்ஸில் ஏற்பட்ட புரட்சியானது எழுதப்பட்ட மனித வரலாற்றில் அதுவரை இப்புரட்சி போன்ற பெரும் நிகழ்ச்சி எதுவும் ஏற்பட்டதில்லை அத்தகைய புரட்சிக்குரிய காரணங்களை ஆராய்வோம்.

**பிரெஞ்சு சமுதாயம்**

பிரெஞ்சு சமுதாயம் மூன்று பிரிவுகளாக இருந்து வந்தது. அவை பிரபுக்கள், மதகுருமார்கள் மற்றும் நடுத்தர மக்களும் விவசாயிகளும் ஆகும். மத குருமார்களும், பிரபுக்களும் சேர்ந்து மொத்தம் 3,00,000 மக்கள் தான் இருந்தனர். மூன்றாம் வகுப்பினரின் எண்ணிக்கை 20,000,000 மக்கள். முதல் இரண்டு வகுப்பினர் அரசிடம் அதிகமான சலுகைகளைப் பெற்று வந்தனர். மூன்றாம் வகுப்பு மக்கள் சளுகைகள் பெறாததோடு அதிகமான வரிகளையும் செலுத்தி வந்தனர். எனவே சலுகைகள் பெற்ற வகுப்பினர், சலுகைகள் பெறாத வகுப்பினர் என்ற பாகுபாடு அதிகமானதால் சலுகைகள் பெறாத வகுப்பினர் புரட்சியில் ஈடுபட்டனர். மதகுருமார்கள் முதல் வகுப்பைச் சேர்ந்தோர் ஆவர். மத குருமார்களிடையே உயர்மட்ட மதகுருமார்கள், கீழ் மட்ட மதகுருமார்கள் என்று இருபிரிவினர் இருந்தனர். உயர் மட்ட மதகுருமார்கள் அதிகமான வருமானம் பெற்று வந்தனர். அரசிடம் பெறும் சலுகைகள் அனைத்தையும் மேல்மட்ட மதகுருமார்களே அனுபவித்து வந்தனர். அதே வேளையில் கீழ் மட்ட மதகுருமார்கள் தங்களுக்குப் போதுமான வருமானம் இல்லாது இருந்தனர். ஆனால் மேல்மட்ட குருமார்களான பிசப்புகள், ஆர்ச் பிசப்புகள், கார்டினல்கள் போன்றோர்கள் பிரபுக்கள் பிரிவிலிருந்து பதவிக்கு வந்தமையால், பிரபுக்களுடன் சேர்ந்து

கொண்டு பெரும் பாலான நேரத்தை, காமக்களிப்பிலும், ஆடம்பர வாழ்க்கையிலும் தங்கள் வருமானத்தை செலவு செய்து கொண்டு இருந்தனர். அவர்கள் தெய்வீக செயல்பாட்டில் அக்கறை காட்டாது சாதாரண மக்களை இழிவாகப் பார்த்தனர்.

இரண்டாவது வகுப்பினர் பிரபுக்கள். அவர்கள் நாட்டில் உள்ள சொத்துக்களில் பெரும் பகுதியைத் தங்களுக்குச் சொந்தமாக வைத்திருந்தனர். அவர்கள் பொதுமக்களின் வரிப்பணத்தில், ஏகபோக வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அரசின் முக்கிய பதவிகள் அனைத்தும் முதல் இரண்டு வகுப்பைச் சார்ந்தோரே அனுபவதித்து வந்தனர். அரசின் பதவிகள் மூன்றாம் வகுப்பினருக்கு எட்டாக் கனியாக இருந்து வந்தது. முதல் இரண்டு வகுப்பினர்களின் செல்வாக்கு, சமய, சமூக அரசியல் வாழ்க்கையில் அதிகம் இருந்தது. அவர்கள் பெரும் பெரும் மாளிகைகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்கள் நேரத்தை பயனுள்ள வகையில் செலவிடாமல் காமக்களியாட்டங்களிலும், ஆடம்பர வாழ்க்கையிலும் கழித்தனர். மூன்றாம் வகுப்பினர் படும் துன்பங்களைப் பற்றி அவர்கள் கவலை கொள்வதில்லை.

மூன்றாம் வகுப்பில் ஒரு பிரிவினரான விவசாயிகள் நிலை மிகவும் கவலை தருவதாக அமைந்தது. அவர்கள் நிலை அடிமை நிலையைவிட மிகவும் மோசமாக இருந்தது. அந்த விவசாயிகள் பிரபுகளின் நிலத்தில் விவசாயம் செய்யும் போது, என்ன பயிரிடவேண்டும் என்பதையும் பிரபுவிடம் கேட்டுத்தான் செய்யவேண்டும். விளைந்த நவதானியப் பொருள்களைத் தன் பிரபுவின் ஆலையில்தான் அரைக்கவேண்டும். தன் நிலத்தில் விளைந்த திராட்சைப் பழத்தை, பிரபுவின் ஒயின் ஆலையில்தான் ஆட்டவேண்டும். தான் தயாரிக்கும் ரொட்டி போன்றவற்றைப் பிரபுவின் ஓவன் எனும் அடுப்பில்தான் தயாரிக்கவேண்டும் என்ற நிலை இருந்தது. இது அல்லாமல் அவன் பல வரிகளைச் செலுத்த வேண்டியதிருந்தது. சாலை வரி, உப்பு வரி என்று பல வரிகளைச் செலுத்தவேண்டும். அதுமட்டுமல்லாமல் சமூகப் பழக்கவழக்கங்கள் என்று தங்களின் சுயமரியாதைக்கு பாதகம் ஏற்படும் வகையில் பிரபுக்களுக்குப் பல முறையில் பணிந்து செல்லவேண்டும். இவையில்லாமல் திருச்சபை இடும் ஒருவகையான வரிசெலுத்த வேண்டும். விவசாயின் வருமானத்தில் 4/5 பங்கு வருமானம், தன்

பிரபுக்கோ, அரசுக்கோ வரியாகச் செலுத்தப்பட்டது. விவசாயிகள் அல்லாத ஏனைய நடுத்தர மக்களும், தங்களின் தொழில் ரீதியாகப் பல இன்னல்களைச் சந்தித்தனர். அவர்களும் பல வரிகள் செலுத்தி வந்தனர். தொழில் செய்யப் பல தடைச் சட்டங்கள் விதிக்கப்பட்டன.

இத்தகைய சமுதாய நிலை நிலவியபோது கற்றறிந்த வழக்கறிஞர்கள், தத்துவ மேதைகள் ஆகியோர் சமுதாய நிலையை எடுத்துக் கூறி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். அவ்வாறு விழிப்புணர்வு ஏற்படுத்திய தத்துவ மேதைகளில், வால்டோர், ரூசோ, மாண்டஸ்க்யூ ஆகியோர் முக்கியமானவர்கள். வால்டேர் மன்னராட்சியைக் குறைகூறினாலும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர். அவர் 100 எலிகள் ஆட்சி செய்வதை விட ஒரு சிங்கம் ஆட்சி செய்வதையே விரும்புகிறேன் என்று கூறினார். அவருடைய பேச்சுக்கள் சமுதாயத்தில் இருந்த ஏற்றத்தாழ்வுகளை விளக்கி அதற்கு முடிவுகட்டும் நோக்கத்தில் அமைந்ததால் பெருமபாலான நடுத்தர மக்கள் அவர் பேச்சுக்களால் உந்தப்பட்டனர். ரூஸோ என்பவர் எழுதிய 'சோசியல் காண்ட்ராக்ட்' மற்றும் 'பாப்புலர் சாவரினிட்டி' ஆகிய புத்தகங்களின் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்கள் தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாத அரசைத் தூக்கி எறியலாம் என்று அறிவுறுத்தியவர். மேலும் மக்கள் தங்களுக்குத் தேவையான அரசைத் தாங்களே அமைத்துக்கொள்ளும் அதிகாரம் பெற்றவர்கள் என்றும் அறிவுறுத்தினார். மாண்டஸ்க்யூ எனும் பிரான்ஸ் நாட்டு வழக்கறிஞர் உலகில் உள்ள அரசு அமைப்புகளில் இங்கிலாந்து அரசு அமைப்புதான் சிறந்தது என்றும், அத்தகைய ஜனநாயக அமைப்புக் கொண்ட அரசை பிரான்சில் நிறுவவேண்டும் என்றும் கூறினார் க்யூஸ்னே (Quesney) எனும் பொருளாதார நிபுனர் மெர்க்கண்டலிஸக் கொள்கையை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். அதாவது மெர்கண்டலிஸக் கொள்கைப் படி இங்கிலாந்து ஏற்றுமதியை பெருக்கி இறக்குமதியைக் குறைப்பது என்ற கொள்கையைக் கடைப்பிடித்ததால் பிரான்சுக்குப் பாதகம் என்று பிரச்சாரம் செய்தார்.

கி.பி. 1688-இல் இங்கிலாந்தில் நடைபெற்ற புகழ் மிக்கப் புரட்சி(Glorious Revolution)யின் காரணமாக நாடளுமன்றத்துக்கு உரிமை அதிகம் என்பதையும், தனிமனிதனுக்கு உரிமையையும் பாதுகாப்பையும் கொடுத்தமையால், அப்புரட்சியின் தாக்கம் பிரான்ஸ்

மக்களையும் தங்கள் உரிமையை நிலநாட்ட போராட வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டியது.

இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் நடைபெற்ற ஏழாண்டுப் போரில் (1756-1763) இங்கிலாந்துடன் பிரான்ஸ் போரிட்டது. இப்போரில் பல கோடிக்கான பணம் செலவு செய்தும், எந்தவித பலனும் பிரான்சுக்குக் கிடைக்கவில்லை. பிரான்ஸ் நாட்டுக்கு அப்போர்கள் பெருமையையும் சேர்க்கவில்லை. இப்போர்களினால், பிரெஞ்சு குடியேற்றங்கள், வணிகம், கவுரவம் ஆகிய அனைத்தையும் பிரான்ஸ் நாடு இழந்தது.

கி.பி. 1783-ஆம் ஆண்டு அமெரிக்க விடுதலை பெற்றவுடன், அமெரிக்க விடுதலைப்போரில் கலந்து கொண்ட பல பிரெஞ்சுப் படைவீரர்களும், அமெரிக்க மக்கள் அடைந்த உரிமைகளைப் பற்றி மக்களிடையே பரப்பினர். எனவே பிரான்ஸ் நாட்டு மக்களும் அதுபோன்ற உரிமைகளைப் பெற வேண்டுமென்றால் தாங்களும் போராடவேண்டும் என்று முடிவு செய்தனர்.

14-ஆம் லூயி (1715-1774) ஆட்சியில் இருந்தபோது பல போர்களில் ஈடுபட்டதால் நாட்டின் கருவூலம் காலியாக இருந்தது. அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த 15-ஆம் லூயி, 14-ஆம் லூயி போன்று திறமையானவர் அல்ல. எனவே நாட்டின் கருவூலத்தைப் பெருக்குமளவிற்குத் திறமையான நிர்வாகத்தை மேற்கொள்ளவில்லை. மேலும் அவர் அரண்மனையில் அந்தரங்கத்தில் பல பெண்களுடன் உல்லாச வாழ்க்கை நடத்தியும், பிரபுக்களுடன் சேர்ந்து ஆடம்பரச் செலவுகள் செய்வதிலும் ஆர்வம் காட்டினார். கி.பி. 1774-இல் 15-ஆம் லூயி மரணம் அடைந்தபோது பிரெஞ்சுக் கருவூலம் காலியாக இருந்தது. நிதிநிலை மிக மோசமான சூழ்நிலையில் இருந்தது. அரசு திவாலாக ஆகும் சூழ்நிலை இருந்தது. இச்சூழ்நிலையில் பதினாறாம் லூயி (1774-1792) ஆட்சிக்கு வருகிறார். 16-ஆம் லூயி ஆட்சிக்கு வந்தவுடன் நிதிநிலையைப் பெருக்க முயற்சித்தார். அதற்காக தன்னுடைய அமைச்சர் நெக்கர் என்பவரிடம் ஆலோசனை கேட்டார். நெக்கர், நிதியியல் நிபுணர். அவர் பிரபுக்கள் மீது வரிவதிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார். மன்னரின் மனைவி மேரி அன்டாய்னெட் ஒரு ஆடம்பரப் பிரியர். அவர் பிரபுக்களுடன் அதிக நட்புக் கொண்டிருந்தார். அவர்களோடு சேர்ந்து ஆடம்பர வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்.

எனவே பிரபுக்கள் அரசி மேரி அண்டாய்னெட்டிடம் முறையிட பிரபுக்கள் மீது திணிக்க உத்தேசித்த வரியை விதிப்பதற்குப் பதிலாக, அரசியின் தூண்டுதலால் 16-ஆம் லூயி நெக்கர் எனும் திறமையான நிதிஅமைச்சரைப் பதவி நீக்கம் செய்தார். அவருக்குப் பதில் டர்காட் என்பவரை நிதியமைச்சராக நியமித்தார். டர்காட் எனும் நிதி அமைச்சரும், பல வழிகளில் ஆராய்ந்து பார்த்தும் வேறு வழி தெரியாமல் நிதியைப் பெருக்க வேண்டுமானால், பிரபுக்கள், மத குருமார்கள் மீது வரிவிதிக்கவேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார். இப்போதும் பிரபுக்கள் அரசியிடம் முறையிட அரசி அரசரிடம் கூறி டர்காட்டையும் பதவிநீக்கம் செய்தார். எனவே நிதியைப் பெருக்க வேறு வழியின்றி பிரான்ஸ் நாடாளுமன்றத்தை (எஸ்டேட் ஜெனரல்) கி.பி. 1789 மே மாதம் வெர்சே மாளிகையில் கூட்டினார். இந்த எஸ்டேட் ஜெனரல் என்னும் நாடாளுமன்றம் கி.பி. 1614-க்குப்பின் ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்குப்பின் இப்பொழுதுதான் கூட்டப்பட்டது. இந்நாடாளுமன்றம் கூட்டப்பட்டதால் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது.

எஸ்டேட்ஸ் ஜெனரல் எனும் பிரான்சு நாடாளுமன்றம் கூடியபோது நாட்டில் உணவுப் பஞ்சம் அதிகமாக இருந்தது. 1788-ஆம் ஆண்டு அறுவடை சரியாக இல்லை. இந்தச் சூழ்நிலையில் 300 ஆண்டுகளுக்குப் பின் கூட்டப்பட்ட இந்நாடாளுமன்றத்தில் மூன்று அவை உறுப்பினர்களும் தனித்தனியாக மூன்று அறைகளில் கூடினர். அதாவது மதகுருமார்கள் சபை 300 பேர், பிரபுக்கள் சபை 300 பேர் பொதுமக்கள் சபை 600 பேர் என்ற எண்ணிக்கையில் மூன்று அறைகளில் கூடினர். மூன்றாம் வகுப்பு உறுப்பினர்களில் பலர் வக்கீல்களும் பத்திரிகையாளர்களும் இருந்தனர். அப்போதைய அரசியல் அமைப்புப் படி மூன்று அவைகளும் அரசின் எந்த முடிவையும் தனித்தனியாக விவாதித்து முடிவு எடுக்கும். அவ்வாறு எடுக்கப்படும் முடிவுகளில் எந்த முடிவை ஏதேனும் இரண்டு அவைகள் ஆதரிக்கின்றனவோ அந்தமுடிவைச் செயல்படுத்துவர். பொதுவாக முதல் இரண்டு அவையினரும் அதாவது மதகுருமார்கள், பிரபுக்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து கொண்டு மூன்றாம் வகுப்பு அவையின் முடிவைப் புறக்கணித்தே வந்தனர். ஆனால் இப்போது மூன்றாம் வகுப்பு உறுப்பினர்கள் ஒரு புது கோரிக்கையை முன்வைத்தனர். அதன்படி மூன்று அவைகளும் ஒன்றாகக் கூடவேண்டும். அவ்வாறு கூட்டப்பட்ட அவையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வாக்களிக்கும் உரிமை வேண்டும என்று. அவ்வாறு

வாக்களிக்கும்போது பெரும்பான்மை முடிவை அரசு ஏற்றுக் கொள்ளவெண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். அதற்கு மன்னர் மறுத்தார். மறுத்ததோடு மட்டுமல்லாமல் மூன்றாம் வகுப்பு அறையைப் பூட்டினார். உடனே மூன்றாம் வகுப்பு உறுப்பினர்கள் அனைவரும், அந்த அவையின் அருகாமையில் இருந்த டென்னிஸ் மைதானத்தில் கூடி, இந்நாட்டிற்குத் தேவையான மேலே குறிப்பிட்ட கருத்துக்கள் அடங்கிய அரசியல் அமைப்பை உருவாக்காமல் அவ்விடத்தை விட்டுக் களைவதில்லை என்றும் அத்துடன் ஒன்றாகக் கூடும் சபைக்குத் 'தேசிய சபை' என்று பெயரிடப்பட வேண்டும் முடிவு செய்தனர். மூன்றாம் வகுப்பு உறுப்பினர்களுக்கு இரண்டாம் வகுப்பாகிய பிரபுக்கள் சபையைச் சார்ந்த கவுண்ட் மிராபூ மற்றும் லபாயட் ஆகியோர் ஆதரவு தந்தனர். மன்னருக்கு வேறு வழியில்லாமல் புதிய அரசியலமைப்பு அமைக்க ஒத்துக்கொண்டார். ஆனால் அதே வேளையில் தேசிய படைகளை வெர்சே மாளிகைக்கும், பாரிசுக்கும் வரும்படி உத்தரவிட்டார். மன்னரின் இச்செயலில் சந்தேகம் கொண்டு மூன்றாம் வகுப்பு மக்களும், பாரிஸ் நகர மக்களும் புரட்சியில் ஈடுபட்டனர். மூன்று நாட்கள் பாரிஸ் நகரில் சட்டம் ஒழுங்கு பாதிப்புக்குள்ளாகியது. அனைத்து மக்களும் தேசிய சபை வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தனர். தேசிய சபையின் முடிவு தங்களின் இறுதியான முடிவு என்று கருதினர். எனவே கி.பி.1789-ஆம் ஆண்டு ஜூலை 14-ஆம் நாள் பாஸ்டில் எனும் இடத்தில் இருந்த சிறைச்சாலையைத் தாக்கித் தரைமட்டமாக்கினர். பாஸ்டில் சிறைச்சாலையில் இருந்த காவலாளிகளை வெட்டி வீழ்த்தினர். இச்சிறைச்சாலை பூர்பன் அரசர்களால் பல ஆண்டுகளால் தங்கள் எதிரிகளை அடக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு சிறைச்சாலை. பொதுமக்களில் யாரேனும் மன்னருக்கு எதிராக இருப்பாரானால் அவர்களைக் கைது செய்து விசாரணையின்றி இச்சிறையில் அடைத்து வந்தனர். சிறைச்சாலையில் இருட்டறைகள் மட்டும்தான் இருந்தன. கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் விடுதலை ஆவதில்லை. எனவே அச்சிறைச்சாலை மக்களுக்கு ஒரு கொடூரச் சின்னமாகவே காட்சியளித்தது. எனவே அச்சிறைச் சாலையைத் தாக்கித் தரைமட்டமாக்கினர் தேசிய சபையைப் பாரிஸ் மக்கள் விரும்புகின்றனர் என்பது தெளிவானதோடு புரட்சி வெடித்ததற்கான அடையாளம் வெளிப்பட்டது.

பாஸ்டிலின் வீழ்ச்சிக்குப் பின்னர் புரட்சி தீவிரமானது. பாரிஸ் நகரம் மன்னராட்சியின் பிடியில் இருந்து விடுபட்டது. தேசிய காவல் படையினைப் பாரிஸ் மக்களே அமைத்தனர். சுதந்திரமான நகராட்சி அமைக்கப்பட்டது. பதினாறாம் லூயி இந்த அமைப்பை அங்கீகரித்து அனுமதி வழங்கினார். அதே நேரத்தில் பாரீஸ் நகராட்சியையும் தேசிய சபையையும் ஒழிக்க மன்னரவையில் திட்டம் தீட்டடிக் கொண்டிருந்தனர். இச்செய்தியைக் கேள்விப்பட்ட பாரீஸ் மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். பெண்கள், குழந்தைகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அணிவகுத்து வெர்சே மாளிகை நோக்கி வந்தனர். வெர்சே மாளிகையில் கூடிய அவர்கள் தங்களுக்கு 'ரொட்டி வேண்டும் ரொட்டி வேண்டும்' என்று குரல் கொடுத்தனர். மன்னரின் மனைவி கூடியிருந்த அப்பெண்களைப் பார்த்து, உங்களுக்கு ரொட்டி இல்லை என்றால் கேக் சாப்பிடுங்கள் என்று கூறினார். இதனைக் கேள்வியுற்ற பெண்கள் கொதித்து எழுந்து ரொட்டி அல்லது ரத்தம் (Bread or Blood) என்று போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்து, அரசர், அரசி அவர்களின் குழந்தைகள் ஆகியோரைச் சிறைப்பிடித்து வெர்சே மாளிகையில் இருந்து பாரிஸ் கொண்டு வந்தனர். பாரிஸில் மன்னர் ஒரு வீட்டுக் கைதியாகவே வாழ்ந்து வந்தார். தேசிய சபையும் இவர்களைப் பின்தொடர்ந்து பாரிஸ் நகருக்கு வந்தது. மன்னர் அதிகாரமிழந்தார். பாரிஸில் நாட்டின் நடவடிக்கைகளைத் தேசிய சபையே கவனித்து வந்தது. பாரிஸில் என்ன நடக்கின்றதோ அந்த நிகழ்வுகள் பிரான்சில் ஏனைய நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் நடைபெற்றன. ஆங்காங்கே புரட்சியாளர் காவலாளிகளை நியமித்தனர். போர்பன் வம்ச அரசர்களின் அதிகாரம் நீக்கப்பட்டது. பல பிரபுக்கள் கொலை செய்யப்பட்டனர். பல மேல்மட்ட பிசப்புகள் கொல்லப்பட்டனர். பிரபுக்கள் மற்றும் பிசப்புக்களின் மாளிகைகள் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களின் எஸ்டேட் சம்பந்தமான பத்திரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. பல பிரபுக்கள் தங்கள் உயிரைக் காப்பதற்காக நாட்டை விட்டே ஓடினர். சில காலம் பிரான்ஸில் சட்டரீதியான நீதிமன்றங்கள் இல்லை. சட்டம், ஒழுங்கு நிலை சீராக இல்லை. ஸ்தல நிர்வாகம் நீக்கப்பட்டது. மன்னராட்சியின் அதிகார அடையாளங்கள் எல்லாம் நீக்கப்பட்டன. புதிய அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டதால் பழைய மன்னராட்சியில் நியமனம் பெற்றவர்கள் பதவியிழந்தனர். இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் தேசியசபை கூடியது. தேசியசபை கூடியதும் அரசாங்கத்தில் அடிப்படை மாற்றங்கள்

வேண்டியும், புதிய அரசியல் அமைப்பு வேண்டியும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

நாட்டில் இருந்துவந்த சலுகைகள் நீக்கப்பட்டன. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு எனும் வேறுபாடுகள் நீக்கப்பட்டன. நிலமானியமுறை மற்றும் அடிமை முறைகள் நீக்கப்பட்டன. வரிவிதிப்பில் சமத்துவம் கடைப்பிடிக்கப்பட்டது. சிறப்புச் சலுகைகள் என்று யாருக்கும் கிடையாது. சமயம் சார்ந்த குருமார்களின் சிறப்புகளும் நீக்கப்பட்டன. விவசாயிகள் அதிகப் பலன் அடைந்தனர். அவர்கள் நிலத்திற்கு உரிமையாளர் ஆகினர். பிரபுக்கள் மற்றும் மதகுருமார்கள் நிலங்களை உழுதுகொண்டு இருந்த விவசாயிகள் அந்நிலங்களுக்கே சொந்தக்காரர்-களாயினர். எனவே, அவர்கள் உழைப்புக்குக் கிடைக்கும் லாபம் அவர்களுக்கே பயன்பட்டது. நடுத்தர மக்கள், தொழிற்சாலை, விவசாயம் மற்றும் அரசியலில் தாராளமாக ஈடுபட ஆரம்பித்தனர். அவர்கள் மீது விழுந்த வரிச்சுமை குறைந்தது. பல தனியுரிமைகள் நீக்கப்பட்டன. இதனால் பல நடுத்தர மக்கள் பலன் அடைந்தனர். தனிமனிதன் உரிமைகள் இன்ன இன்ன என்று தெளிவுபடுத்தப்பட்டன. மனித உரிமை பிரகடணம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. திருச்சபைகள், மன்னரின் ஆதரவு அமைப்பாக இருந்தமையால், திருச்சபைச் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சமயப் பொறை கடைப்பிடிக்கப்பட்டது. மடலாயங்கள் மற்றும் சமயம் சார்ந்த அமைப்புகள் நீக்கப்பட்டன. பிசப் போன்ற போதகர்கள் இனிமேல் போப்பாண்டவரை தலைவராக ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று பிரகடணம் செய்யப்பட்டது. அவர்கள் இனிமேல், பிரான்சின் அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்று பிரகடணம் செய்யப்பட்டது. இது முதல் திருச்சபை குருமார்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் அரசிடம் சம்பளம் பெறவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது ஒரு தீவிரமான நடவடிக்கை என்பதால் போப்பாண்டவரும், புரட்சியை ஆதரித்த ஒரு சில மதகுருமார்களும் இதனை எதிர்த்தனர். எதிர்த்த மத்குருமார்கள் கொல்லப்பட்டனர். அரசரின் அதிகாரம் குறைக்கப்பட்டது. புதிய அரசியலமைப்பு ஒன்று தாராள கொள்கைகளுடன் நிறைவேற்றப்பட்டது.

உள்ளாட்சித்துறை சீரமைக்கப்பட்டது. நாடு சம அளவுள்ள பல பிரதேசங்களாக(Department)ப் பிரிக்கப்பட்டது. அப்

பிரதேசங்களில் பெரும்பாலும் சமஅளவு ஜனத்தொகை கொண்ட அமைப்புகளை அமைத்தனர். பிரதேசங்கள், மாவட்டங்களாகவும், பின்னர் மாவட்டங்கள் பல கம்யூன்களாகவும் பிரிக்கப்பட்டன இந்த அமைப்புகளின் நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளிடம் விடப்பட்டன. ஒரு சில அசம்பாவி-தங்களைத் தவிர பெரும்பாலான சீர்திருத்தங்கள் அமைதியான முறையில் செயல்படுத்தப்பட்டன. பிரபுக்கள் யாரும் இச்சீர்திருத்தங்களை மனதார விரும்பவில்லை. பிரான்சை விட்டு வெளிநாடு சென்ற பிரபுக்கள் மற்றும் மதகுருமார்கள் பிரான்சில் நடக்கும் புரட்சிக்கு எதிராகச் செயல்பட்டு வந்தனர். அவர்கள் மக்கள் மத்தியில் மன்னர் ஆதரவுக் கருத்துக்களைப் புகுத்தி பிரான்சில் ஒரு உள்நாட்டுப் போர் நடக்கத் தூண்டினர். பிற நாட்டு மன்னர்கள் பிரான்சின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுமாறு வேண்டிக் கொண்டனர். கி.பி. 1791 ஜூனில் பதினாறாம் லூயி மற்றும் அவர் மனைவி ஆகியோர் பாரிசைவிட்டுத் தப்பிச் செல்ல முயற்சித்தனர். ஆனால் அவர்கள் பிடிக்கப்பட்டு மீண்டும் பாரிசுக்குக் கொண்டு வரப்பட்டனர். இங்கிலாந்தைச் சார்ந்த எட்மண்டு பர்க் பிரெஞ்சுப் புரட்சியைக் கடுமையாக விமர்சித்தார். ஆஸ்திரியா மற்றும் பிரஸ்ஸியா நாட்டு மன்னர்கள் பிரான்சின் உள்நாட்டு விவகாரத்தில் மன்னருக்கு ஆதரவாகத் தலையிட முயற்சித்தனர். இத்தகைய முயற்சி பிரான்சில் புரட்சியை மேலும் வலுவடையச் செய்தது. புரட்சியாளர்களின் தேசிய உணர்வை மேலும் தூண்டியது. ஆஸ்திரியா பிரஸ்ஸியா நாடுகள் பிரான்சின் மீது போர்தொடுத்துப் பிரான்சைத் தோற்கடித்தனர். இதனால் நாட்டுப்பற்றுப் பிரெஞ்சு மக்களுக்கு அதிகம் ஏற்பட்டது. பிரான்சு நாட்டின் தேசிய கீதத்தை அனைவரும் பாடத் தொடங்கினர்.

### பயங்கர ஆட்சி

கி.பி. 1792-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் புரட்சியில் புதிய மாற்றம் ஏற்பட்டது. புரட்சியாளர்கள் மன்னரையும் மன்னர் குடும்பத்தையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். தேசியசபையால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் அமைப்பின்படி தேசிய கன்வென்சன் (National Convention) எனும் சபைக்கு வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இடம்பெற்றனர். தேசிய கன்வென்சன் செயலுக்கு வந்தது முதல் தேசிய சபை (National Assembly) முடிவுக்கு வந்தது. டான்டன் என்ற புரட்சியாளர் சர்வாதிகாரிபோல்

செயல்பட்டார். லபாயட் (Lefayette) என்பவர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். மற்றும் வெளிநாட்டு படையெடுப்பு ஏற்பட்ட போது சரணடைந்தார். பாரிஸில் 1600 மன்னர் ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் டான்டன் மீண்டும் கொல்லப்படுவதை நிறுத்தி லபாயேட்டுக்குப் பதிலாக புதிய படைத் தளபதியை நியமித்தார். படையை சீரமைத்தார். கி.பி 1792 செப்டம்பரில் முதல் குடியரசு பிரகடணம் செய்யப்பட்டது. புதிய ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. 1793-ஆம் ஆண்டு ஜனவரி 21-இல் பெயரளவில் ஒரு விசாரணை செய்து 16-ஆம் லூயியை கில்லட்டின் எனும் எந்திரத்தில் வைத்து தலையைத் துண்டித்துவிட்டனர். மரண தண்டனை விதிப்பதில் பிரான்சில் பிரபுக்களுக்குச் சலுகை உண்டு. அதன்படி கயிறு கட்டி தூக்கில் போடுவதற்கு மாறாக அவர்கள் தலையை ஒரே வெட்டில் வெட்டி விடுவதுதான். இது ஏன் என்றால், பிரபுக்கள் தாங்கள் சாகும்போது கூட வலிதெரியாமல் சாகவேண்டும் என்பதால்தான். வெளிநாட்டுப் படையெடுப்பை முறியடித்தனர். தேசிய கன்வென்சன் பிரான்சில் இருந்து தப்பி வெளிநாடு சென்றவர்கள் பிரான்சிற்கு வரக்கூடாது என்று தடைவிதித்தது. பிரான்சில் மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதும் இத்தகைய புரட்சியை உருவாக்குவோம் என்று தேசிய கன்வென்சன் அச்சுறுத்தியது. இதன் மூலம் சர்வாதிகாரம் மற்றும் வகுப்புச் சலுகைகளுக்கு எதிரரக ஜனநாயகம் மற்றும் குடியரசுக் கொள்கை போராடுவது தெளிவாகியது. ஐரோப்பாவில் உள்ள அரசர்கள், அரசின் தலைவர்கள் அவர்களின் உயிருக்கு அஞ்சி வாழ்ந்து வந்தனர். பிரான்சின் மிரட்டலுக்கு அஞ்சி இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்பெயின், சார்டினியா, ஆஸ்டிரியா மற்றும் பிரஸ்ஸியா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்துக்கொண்டு பிரான்ஸ்க்கு எதிராகப் போர் தொடுக்கத் தொடங்கின.

இதற்கிடையில் பிரான்ஸ் நாட்டில் உள்நாட்டுப் போர் தொடங்கிறது. பிரான்ஸில் உள்ள விவசாயிகளில் சிலர் தீவிர கத்தோலிக்கர்களாகவும், மன்னராட்சியை விரும்புபவர்களாகவும் இருந்தனர். அவர்கள் தேசிய கன்வென்சனுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாகப் பிரான்ஸ் நாட்டின் டுமோரியஸ் (Dumouriez) எனும் படைத்தளபதி புரட்சியில் இறங்கினார். தேசிய கன்வென்சன் சபைகளில் மௌண்டனிஸ்ட்கள் (Mountainests) எனும் தீவிரவாத கட்சியினர் ஆதிக்கம் செலுத்தினர். நாட்டின் நிர்வாகத்தை மேற்கொள்ள மற்றொரு தீவிர கட்சியான ஜேகோபின் கட்சியைச் சார்ந்த

உறுப்பினர்கள் அடங்கிய பொதுமக்கள் பாதுகாப்புக்குழுவிடம் (Committee of Public Safety) ஒப்படைக்கப்பட்டது. இந்த அமைப்பு பயங்கர ஆட்சியை நடத்தியது. பயங்கர ஆட்சி என்பது கி.பி.1793 முதல் 1794 வரை நடைபெற்றது. வெளிநாட்டு கூட்டணிப் படைக்கு எதிராகப் பிரான்ஸ்ஸைத் தயார்படுத்த பிரான்சில் இருந்த தேசிய கன்வென்சனுக்கு எதிராக இருந்த எதிர்ப்பாளர்களை அடக்கியது. பொதுமக்கள் பாதுகாப்புக் குழுவுக்கு கீழ் இயங்கி வந்த பொதுப்பாதுகாப்புக் குழு மற்றும் புரட்சித் தீர்ப்பாயம் எனும் அமைப்புகள், ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்கள் மீது பயங்கர நடவடிக்கைகளில் இறங்கின. ஏறத்தாழ 12500 எதிர்ப்பாளர்கள் விசாரணையின்றி பிரான்சில் கொல்லப்பட்டனர். இதற்கு காரணம் தேசிய கன்வென்சன் சபையில் இயற்றப்பட்ட, சந்தேகப்படுபவர்களை கட்டுப்படுத்தும் சட்டம் (Law of Suspects) ஆகும். இச்சட்டத்தின் படி ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் என்று சந்தேகப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர். பயங்கர ஆட்சியைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்தவர் (Robespiere) ராபஸ்பியர் என்பவர் ஆவார். அவர் இக்காலத்தில் ஒரு சர்வாதிகாரியாகவே செயல்பட்டார். ஏனைய புரட்சியாளர்கள் ஜுலை 1794-ஆம் ஆண்டு ராபஸ்பியரையும் கில்லட்டினில் வைத்து கொன்று விட்டனர். அவருடைய மரணத்தோடு பயங்கர ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

புரட்சியின் புனித வார்த்தைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்தும் எனும் வார்த்தைகளோடு புரட்சியாளர்கள் அந்நியப் படையெடுப்பைச் சந்திக்கத் தயாராயினர். ஆயிரக்கணக்கானோர் படையில் சேர்க்கப்பட்டனர். கர்னாட் என்பவர் அவர்களுக்குப் பயிற்சி அளித்துப் படைக்குத் தயார் செய்து கொண்டிருந்தார். பிரான்ஸ்க்கு வெளியே புரட்சிப் படைகள், வெளிநாட்டவர் கூட்டணிப் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்துக் கொண்டிருந்தன. இதே வேளையில் தேசிய கன்வென்சன் எனும் சபையில் மக்கள் நலச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. அனைவரும் சமம் எனும் சட்டம் நாடு முழுவதும் ஒரே மாதிரியான எடை, அளவு, நாடு முழுவதும் ஒரே மாதிரியான சொத்துரிமைச் சட்டம் (Law of inheritance) நீக்ரோ அடிமை முறை ஒழிப்பு, கடுமையான கடன் ரத்து சட்டங்கள், பெண்களுக்கு சமஅளவு சொத்துரிமை போன்ற சட்டங்கள் மக்களை மிகவும் கவர்ந்தன. படிப்படியாக மிதவாத நடுத்தர மக்கள்

தேசிய கன்வென்சன் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனால் ஒரு குடியரசு அரசியலமைப்பு' கடைப்பிடிக்கப்பட்டது. கி.பி.1795-இல் ஓரளவு புரட்சி முடிந்து விட்டது என்றே கூறலாம். வெளிநாட்டுப் பெரும் கூட்டணி களைந்தது. தேசிய கன்வென்சன் சபையும் முடிவுக்கு வந்தது. தேசிய கன்வென்சனுக்குப் பதிலாக 5 உறுப்பினர்கள் அடங்கிய இயக்குநரவை (Directory) என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. தேசிய படையின் முயற்சியால் ரைன் பள்ளத்தாக்கு, பிரனீன் மற்றும் ஆல்பஸ் ஆகிய இயற்கை வளமிக்க பகுதிகள் பிரான்சோடு சேர்க்கப்பட்டன. இப்புரட்சி சர்வதேச அங்கீகாரம் பெற்றது. பிரான்சைப் பின்பற்றி போலந்து ஒரு அரசயிலமைப்பை உருவாக்க முயற்சித்தது. ஆனால் பிரஸ்ஸியா, ரஷ்யா, ஆஸ்டிரியா ஆகிய நாடுகள் 2-வது போலந்து பிரிவினையில் பங்கு போட்டதால் அம்முயற்சி நடைபெறவில்லை. கி.பி.1795-இல் நடைபெற்ற 3-வது போலந்து பிரிவினையின் போது போலந்து எனும் நாடே இல்லாமல் போய்விட்டது.

இயக்குநராட்சி இயங்கிக் கொண்டிருந்த போது, பதினாறாம் லூயியின் சகோதரர் பதினெட்டாம் லூயி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி மேற்கொண்டார். இவ்வேளையில் நெப்போலியன் பிரான்சுப் படைத்தளபதியாக இருந்துவந்தார். அவர் பிரான்சின் சார்பில் வெளிநாடுகளான இத்தாலி, ஆஸ்டிரியா ஆகிய நாடுகளுடன் போரிட்டுப் பல எல்லைகளைப் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்திருந்தும் 1795-ஆம் ஆண்டில் தேசிய சபைக்கு எதிராகப் பாரிஸில் எழுந்த புரட்சியை அடக்கினார். டூலோன் என்னுமிடத்தில் இங்கிலாந்தினரை வென்றார். ராபஸ்டியரின் நண்பர் ஜோசப்பைன் எனும் ஆஸ்டிரிய நாட்டு இளவரசியை மணந்ததால் ஏனைய நாடுகளுடனான செல்வாக்கு நெப்போலியனுக்குப் பெருகியது. கார்சிகா எனும் இடத்தில் இத்தாலியப் பெற்றோருக்குப் பிறந்தவராயினும், பிரான்ஸ் இராணுவப் பள்ளியில் பயிற்சி பெற்று தன்னுடைய 26-வது வயதிலே பிரான்ஸ் நாட்டுப் படைக்குத் தலைவரானார். 1799-ஆம் ஆண்டு எகிப்து படையெடுப்பை முடித்துக் கொண்டு பாரிஸ் வந்தபோது இயக்குநராட்சிக்குப் பலமான எதிர்ப்பு நிலவியது. நிர்வாகத்தில் இருந்து வந்த லஞ்சலாவண்யங்கள், தொழிலாளர் மத்தியில் நிலவிய அதிருப்தி, நிதி நெருக்கடி ஆகியவற்றால் எதிர்ப்பை எதிர்கொள்ளும் நிலையில் இயக்குநராட்சி இருந்தது. எதிர்ப்பாளர்கள் நெப்போலியனை நாட்டின் காவலர் என்று

கருதிக் கொண்டிருந்தனர். 1799-இல் இங்கிலாந்து ரஷ்யா, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் 2-வது கூட்டணி அமைத்துக் கொண்டிருந்தன. அக்கூட்டணி பிரான்ஸைத் தாக்கின. இயக்குநரவையால் இத்தாக்குதலை முறியடிக்க முடியவில்லை. எனவே, அவர்கள் நெப்போலியனின் உதவியை நாடினர். நெப்போலியன் தன் படையின் உதவியால் அப்புரட்சியை அடக்கினார். அவர் நாட்டின் சர்வாதிகாரியாக ஆனார். இருப்பினும் ஜனநாயத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பதைப் போல் காட்டிக் கொள்ள புதிதாக ஒரு அரசியலமைப்பை உருவாக்கினார். கான்சலேட் எனும் அமைப்பு அது. அந்த அமைப்பில் மூன்று உறுப்பினர். அதில் முதல் கான்சல் என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு ஆட்சியைத் தொடங்கினர். இத்துடன் பிரான்சில் 1789-ஆம் ஆண்டுப் புரட்சி அடக்கப்பட்டது.

***(ஆ) வளர் கற்பனை இயக்கம்***
***(Utopia Movememnt in Europe)***

(Utopia) கற்பனை இயக்கம் என்பது ஆங்கிலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தைக் (an ideal Community or Society) குறிக்கும். இவ்வார்த்தை கி.பி.1516-இல் சர்தாமஸ் மோர் என்பவர் எழுதிய Of the Best state of a Republic, and of the NewIisland Utopia எனும் நூலின் இருந்து எடுக்கப்பட்டது. அப்புத்தகத்தில் அட்லாண்டிக் கடலில் ஒரு கற்பனைத் தீவில் சரியான (Perfect) சமூக, பொருளாதார, சட்டதிட்டங்களுடன் வாழும் சமுதாயத்தை விளக்குகின்றார்.

பிளாட்டோவின் குடியரசு (Republic) புத்தகத்திலிருந்து இக்கற்பனை உலகம் (Utopia) எனும் கருத்து அடிப்படையாக அமைகிறது. அப்புத்தகத்தில் சமுதாய மக்கள் சமத்துவ அடிப்படையிலும், சமாதான அடிப்படையிலும் வாழ்ந்தார்கள் என்றும், தேவைப்பட்டால் சண்டையிடவும் தயாராக இருந்தார்கள் என்றும் பிளாட்டோ கூறுகின்றார். அத்தகைய சமுதாயத்தில், வறுமை, தொல்லைகள் ஒழிக்கப்பட்டிருக்கும். ஒரு சில சட்டங்களே நடைமுறையில் இருக்கும். ஆனால் சட்டவல்லுநர்கள் இருக்கமாட்டார்கள். அருகாமையில் உள்ள போர்க்குணம் படைத்த சமூகத்தினரைக் கூலிப் படைகளாகத் தங்களுக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் போது

பயன்படுத்துவர் அதன் மூலம் போர்க்குணம் படைத்தவர்களை அழித்துவிட்டு அமைதி விரும்புவர்கள் மட்டும் வாழும் சூழ்நிலையை உருவாக்குவர். அத்தகைய சமுதாயம் எல்லாச் சமயங்களையும் மதித்து நடக்கும் சில எழுத்தாளர்கள், குறிப்பாக கற்பனை சோசியலிசவாதிகள் (Utopian Socialists) இத்தகைய கற்பனை சமுதாயம் கொண்ட நாடுகள் தேவை என்பதை ஒத்துக்கொள்வர். ஆனால் பலர் இவையெல்லாம் கட்டுக்கதை என்பர். முன்னால் இந்திய குடியரசுத்தலைவர் முனைவர் அப்துல்கலாம்கூட இந்தியா 2020 என்ற புத்தகத்தில், இந்தியா ஒரு வல்லரசாகும் என்று நம்பிக்கை வைத்து எழுதியுள்ளார். இதுவும் ஒரு வகையில் (Utopia) கற்பனை நோக்கு கொண்ட ஒன்றுதான். அதாவது எதிர்காலத்தில், தன்னைச் சார்ந்துள்ள சமுதாயமோ, அரசோ எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்று கற்பனை செய்து எழுதுகின்றோமோ அவை கற்பனை இயக்கம் என்று கருதப்படும்.

(Utopianism) கற்பனையியல் என்பது எல்லா கலாச்சாரத்திலும், சமுதாயத்திலும், சமயத்திலும் இருந்து வந்த ஒரு கருத்து ஆகும். கடந்த காலத்தில், ஆரம்பக்கால மனிதர்கள் மகிழ்ச்சியோடும், தங்கள் தேவைகள் பூர்த்தி செய்த நிலையிலும், மிக எளிமையாக வாழ்ந்தார்கள் என்ற பழங்கதைகளை நாம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றோம். அக்கதைகளில் இயற்கைக்கும், மனிதனுக்கும் இடையே இயல்பான சமூக நிலை இருந்து வந்ததாக நாம் அறிகிறோம். மனிதர்களின் தேவைகள் மிகக்குறைவு என்றும் ஆனால் கட்டுக்கு அடங்கி இருந்தன என்றும் அறிகிறோம். இவை இரண்டும் தேவைக்குமேல் இருந்த வளமான இயற்கையால் பூர்த்தி செய்யப்பட்டன என்றும் அறிகிறோம். எனவே அம்மக்களிடையே போர்தொடங்க வேண்டும் என்றோ, யாரையும் துன்பப்படுத்த வேண்டும் என்றோ எண்ண வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அவர்கள் கடினமாக உழைக்க வேண்டிய தேவையும் இல்லை. மனிதர்கள் மிக எளிமையாகவும், தெய்வீக நம்பிக்கை உடையவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். இத்தகைய நல்ல சமுதாயம் பற்றிய கற்பனைக் கதைகள் எல்லாச் சமய இலக்கியங்களிலும் உள்ளன. அதேபோன்ற தங்களுடைய மரணத்துக்குப் பின்னர், எதிர்காலத்திலும், கற்பனையுகத்தில் இத்தகைய சமுதாயம் அமைய வேண்டும் என்று ஐரோப்பிய எழுத்தாளர்கள் மற்றும் அறிவியலார்கள் கருதினர். அத்தகைய இயக்கத்திற்குத்தான் "வளர் கற்பனை இயக்கம்" என்று பெயர். இவர்கள் சுற்றுப்புறச் சூழ்நிலை,

பொருளாதாரம், அரசியல், சமயம் மற்றும் விஞ்ஞானமும் தொழிற்நுட்பமும் ஆகிய துறைகளின் எத்தகைய அமைப்புக் கொண்டதாக எதிர்காலம் அமையவேண்டும் என்று கற்பனை செய்கின்றனர்.

**சுற்றுச்சூழல் (Ecology)**

சுற்றுச்சூழல் கற்பனையாளர்கள் சமுதாயம் இயற்கையோடு இணைந்து வாழ்வதே சிறந்தது எனக் கருதுகின்றனர். அவர்கள் இயற்கையை அழிக்கக்கூடிய நவீன மேலைநாகரீக் வாழ்க்கை முறைக்கும் இயற்கையோடு சுமூகமான முறையில் இணைந்து வாழ்க்கை நடத்தும் பாரம்பரிய வாழ்க்கை முறைக்கும் பெரும் இடைவெளியிருப்பதாக உணர்கின்றனர். டச்சு நாட்டு தத்துவமேதை மரீயஸ்-டி-ஜுயூஸ் (Marius-de-Geus) என்பவர் பசுமை அரசியல் இயக்கங்களுக்கு சுற்றுப்புறச்சூழல் ஒரு தூண்டுகோளாக அமையும் என்று கூறுகின்றார். 1793-இல் ஜாக் வான்ஸ் (Jack vance) என்பவர் வெளியிட்ட நாவலில், சுற்றுச்சூழல் அமைந்த கற்பனைச் சமுதாயத்தை வலியுறுத்துகின்றார். அவருடைய படைப்பில் வரும் கதாநாயகன் தன்னுடைய பயணத்தின் போது ஒரு புது பூமிக்கு அரசரானதாகவும், அத்தகைய அரசில் ஒவ்வொருக்கும் தனித்தனியாக, விடுமுறை வாசஸ்தலம் போன்று, அண்டையர்கள் யாரும் இன்றித் தனித்தனியாக புதிய பூமிகள் அமைத்துக் கொண்டு வாழ வகைசெய்வதாகக் கூறுகின்றார். இருப்பினும் ஒவ்வொரு வாரமும் அவர்கள் பூமியின் உண்மைத் தன்மையை நிலைநிறுத்த பூமியைச் சுத்தம் செய்யவேண்டும் என்று கூறுகின்றார். அதாவது புல்டோசர் போன்ற இயந்திங்களைக் கொண்டு தொழில் சார்ந்த கலாச்சாரத்தை அழித்து புல்வெளிகொண்ட உலகை உருவாக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

**பொருளாதாரம்:**

19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் பொருளாதாரக் கற்பனைக் கருத்துக்கள் எழுந்தன. குறிப்பாக 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாளித்துவம் மற்றும் வாணிபத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகச் சமுதாயத்தில் பல பிரச்சனைகள் தோன்றின. இதனால் கற்பனைச் சோசிலியவாதிகள் தோன்றினர். (Utopian Socialists) அவர்களுடைய கற்பனை இயக்கத்தின்படி பணப் புழக்கம் கூடாது என்றும், தேவையான

பொருள்கள் சமஅளவில் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும் என்றும், அவர்கள் செய்யும் தொழில் பொதுநன்மைக்காக இருக்கவேண்டும் என்றும், கற்பனைக் கருத்துகொண்டிருந்தனர். இத்தகைய கருத்தை வலியுறுத்தியவர் எட்வர் பெல்லமி (Edwar Bellamy). இவர் எழுதி புத்தகம் (Looking backward) லுக்கிங் பேக்வேர்டு என்பதாகும். இவர் எழுதிய புத்தகத்தில் உள்ள கருத்துக்களை மற்றொரு கற்பனைக் கருத்துகொண்ட வில்லியம் மோரிஸ் (William Mories) என்பவர் தன்னுடைய புத்தகமான News from Nowhere எனும் புத்தகத்தில் குறைகூறுகின்றார். ஆனால் கார்ல் மார்க்ஸ் இத்தகைய சோசியலிசவாதிகளின் கருத்துக்கள் கற்பனையே அன்றி செயல்பாட்டுக்கு உகந்தது அல்ல என்று தான் எழுதிய Das capital போன்ற புத்தகங்களின் வாயிலாகத் தெளிவுபடுத்துகின்றார்.

அரசியல் ரீதியாகக் கற்பனைச் சோசிலிசவாதிகளுக்கு எதிராக முதலாளித்துவவாதிகள் வேறுவிதமான கற்பனைப் பொருளாதார முறையை வலியுறுத்துகின்றனர். உதாரணமாக ராபர்ட் ஹெய்னியன் என்பவர் தான் எழுதிய The Moon is a Harsh Mistress எனும் புத்தகத்தில் தனிமனிதன் மற்றும் சுதந்திர உரிமைகளைக் கற்பனையாக எவ்வாறு இருக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். இத்தகையவர்கள் முதலாளித்துவக் கற்பனைப் பொருளாதாரவாதிகளாவர். அவர்கள் பொருளாதாரத்தில் சுதந்திரச் சந்தை வேண்டும் என்றும், தனிமனிதன் தொழில் தொடங்க, நடத்த உரிமை வேண்டும் என்றும், அவர்களின் செயல்பாட்டில் அரசு போன்ற எந்த அமைப்பும் தலையிடக் கூடாது என்றும் கருதுகின்றனர். அவ்வாறு செய்யும் பட்சத்தில், தனிமனிதனும் மற்றும் ஒட்டுமொத்தச் சமுதாயமும் வளர்ச்சி பெறும் என்றும் கூறுகின்றனர். அரசியலில் உலக அமைதியை காப்பதன் மூலம் வரலாற்றில் பிரச்சனைகளுக்கு முடிவு காணலாம் என்பது உலகலாவிய கற்பனைக் கருத்து (Global Utopia) அவற்றை அடைய பல் கலாச்சார ஒருங்கிணைப்பு (Poly centralism) எனும் கற்பனைக் கருத்தை வலியுறுத்தி, சமுதாயத்தில் உள்ள அனைத்துக் கலாச்சாரம் மற்றும் அடையாளங்களை (identies) ஒன்றாகக் கலந்து பங்கு பெறும் சமுதாயமாக (Participatory Society) அமைய வேண்டும் என்று கருதுகின்றனர்.

**சமயத்தில் கற்பனை இயக்கம்**

சமயக் கொள்கைகளின் அடிப்படையில் சமயக் கற்பனைக் கருத்து கொண்ட பல அமைப்புக்கள் உருவாயின. அவர்கள் தங்கள் சமய கொள்கையில் நம்பிக்கை வைத்தால் தாங்கள் விரும்பியவை கிடைக்கும் என்று நம்பினர். சிலர் தங்கள் சமயத்தில் நம்பிக்கை இல்லாதோரையும் அனுமதித்தனர்.

இஸ்லாமியர், யூதர்கள் மற்றும் கிருத்தவர்கள், சொர்க்கம் இருப்பதையும் ஏடன் தோட்டம் (Garden of Eden) இருப்பதையும் நம்பினர். இந்நம்பிக்கையைக் கற்பனை இயக்கம் என்பர். சில சமயக் கற்பனைக் கருத்துக்கள் மகிழ்ச்சி தோட்டம் (Garden of delight) இருப்பதாகவும், தாம் முக்தி (enlightenment) அடைந்தால் அனைத்து விதமான கவலைகளில் இருந்தும் விலகி அம்மகிழ்ச்சித் தோட்டத்தை அடையலாம் என்றும் நம்பினர். அத்தகைய நிலையில் தன்னுடைய வறுமை, வலி, பாவம், மரணம் ஆகியவற்றைக் கடந்து இறைவனுடன் சேர்ந்துவிடலாம் என்றும் நம்பினர். இதுபோன்ற கற்பனைக் கருத்துக்களைத்தான் இந்து மதத்தில் மோட்சம் என்றும் புத்தமதத்தில் நிருவினார் என்றும் கூறுகின்றனர்.

இத்தகைய கருத்துக்களின் அடிப்படையில் தங்களுடைய கற்பனைக் கருத்துக்களைச் செயலாக்கப் பல அமைப்புக்களை மனிதர்கள் உருவாக்கினர். 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட இரண்டாவது விழிப்புணர்வு காரணமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளில் பல தீவிரவாத சமய அமைப்புகள் தங்கள் மதங்களின் கொள்கைகளைப் பரப்பும் வகையிலும், கடைப்பிடிக்கும் வகையிலும் உருவாகின. அவற்றில் சில வருமாறு: 18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய சேக்கர்ஸ் (Shakers) என்ற அமைப்பு. இவ்வமைப்பு பின்னர் அமெரிக்காவுக்கு மாற்றப்பட்டது. இது போன்ற பல சமய அமைப்புகள் ஐரோப்பாவில் கி.பி.18, 19-ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி பின்னர் அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்தது. அவை சொசைட்டி ஆப் தி வுமன் (Society of the Women), தி எப்ராடா கிளாய்ஸ்ட் (The Ephrate cloista) மற்றும் தி ஹார்மோனி சொசைட்டி (The Harmony Society) ஆகியவவை ஆகும். தி ஹார்மோனி சொசைட்டி ஒரு கிருத்துவ சங்கம் ஆகும். இச்சங்கம் கி.பி. 1785-இல் ஜெர்மனியில் கிருத்துவ மதபோதகர்களாலும், பக்தர்களாலும் தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் விட்டன்பார்க்கில் இருந்த அரசம், லூதரன் திருச்சபையும் சமயப்

படுகொலையில் ஈடுபட்டு அவர்களைத் தூக்கியதால், அச்சங்கம் கி.பி.1803 அக்டோபர் 7-இல் ஐக்கிய அமெரிக்கா சென்றது. பென்சில்வேனியாவில் அமைக்கப்பட்ட அச்சங்கம் 1805-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அச்சங்கத்தின் 400 உறுப்பினர்களும், தங்களுடைய உடமைகளைப் பொதுவுடமையாக்கி ஹார்மோனி சங்கம் உருவாக்கினார். இச்சங்கம்தான் அமெரிக்க வரலாற்றில் நீண்டகாலமாக நிதி ஆதாரத்தில் வெற்றிகரமாக நீடித்த சங்கமாகும். காரணம் இச்சங்கம் கி.பி.1905 வரை செயல்பட்டுக் கொண்டிருந்தது.

**விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்:**

விஞ்ஞானம் மற்றும் தொழிற் நுட்பத்தால் ஏற்பட்ட கற்பனை வாழ்வில் பல மாற்றங்கள் உருவாக்கியுள்ளது. விஞ்ஞான மற்றும் தொழிற்நுட்பம் வளர்ச்சியால் மனிதன் தன் எதிர்காலத்தில் தனக்கு மரணம் மற்றும் கவலை, தொல்லை ஆகியவை இருக்காது என்றும், மனிதனுடைய இயல்புத் தன்மை மற்றும் நிலைமையில் மாற்றம் ஏற்படும் என்றும், மனிதனின் வாழ்க்கைத் தரம் உயரும் என்றும் கற்பனை செய்ய வாய்ப்பை உருவாக்கியுள்ளது. தொழில் நுட்பத்தால் மனிதன் இயல்பாகச் செய்யும், தூங்குவது, சாப்பிடுவது மற்றும் குழந்தைகளை உற்பத்தி செய்வது போன்ற காரியங்களைக்கூட செயற்கை முறையில் செய்து முடிக்க முடிகின்றது. இதனால் தனிமனிதன் சமூகத்தில் இருந்து விடுபட்டுத் தனியாகவோ சுதந்திரமான ஒரு கூட்டத்தோடு சேர்ந்தோ தங்கள் விருப்பம் போல் சமூக அமைப்புக்களை அமைத்துக் கொள்ளலாம் என்ற கற்பனை எண்ணத்தைத் தூண்டுகிறது.

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியால் பல கெடுபயன்களும் ஏற்படலாம் என்று வேறு சில கற்பனைக் கருத்துடையோரும் உண்டு. அத்தகையோர் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தைத் தவறாக பயன்படுத்துவதால் சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படவும் மற்றும் மனித நேயம் மறைவதற்கும் காரணமாகலாம் என்று எச்சரிக்கின்றனர். ஜேக்கூஸ் எல்லுல் மற்றும் திமோதி மைகேல் ஆகியோர் தொழில் நுட்பத்தைக் கடைப் பிடித்து வேலைப் பகுப்பு **(Division of Labour)** முறையை கடைப்பிடிப்பதால் தனிமனிதனின் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்று எச்சரிக்கின்றனர்.

தனிமனிதனின் சுதந்திரம் மற்றும் தன்னாட்சி உரிமை ஆகியவற்றிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் தொழில்நுட்பத்தைப் போக்க தொழிற்சாலை நாகரீகத்தை மாற்றி சிறு தொழில் அமைப்புகளை உருவாக்க வேண்டும் என்று ஜான் ஜெர்ஜான் மற்றும் டெர்ரிக்ஜென்சன் ஆகியோர் வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறு, எதிர்காலத்தில் மனித நேயத்தை, மனிதனை மகிழ்ச்சியுடன் வாழவைக்க எத்தகைய அமைப்பு அவசியமாக இருக்கும் என்று கற்பனையில் கருத்து தெரிவிப்பதே வளர் கற்பனை இயக்கமாக விளங்குகிறது.

### (இ) தொழில் புரட்சி காரணங்கள், போக்கு, விளைவுகள்

நவீன கால ஐரோப்பாவின் பொருளாதார வளர்ச்சி என்பது தொழிற்புரட்சியின் விளைவேயாகும். 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இருந்து தொடர்ந்து பொருளாதாரம் மற்றும் சமூகத்துறையில் ஏற்பட்ட பல மாற்றங்களையே தொழிற்புரட்சி என்று அழைக்கின்றோம். 18-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஐரோப்பிய சமுதாயம் பெரும்பாலும் விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வந்தது. ஆனால் தொழிற்புரட்சி ஏற்பட்டபின் ஐரோப்பாவில் உள்ள பல நாடுகள் தங்கள் நாட்டில் விவசாயத் துறையில் இருந்து தொழிற்துறைக்கு மாறியதன் பயனால் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளன. தொழிற்புரட்சியின் முக்கிய அம்சம் என்னவென்றால் உற்பத்திக்கு மனிதர்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதேயாகும். இத்தகைய இயந்திர சாதனங்களைப் பயனப்படுத்தும் வாய்ப்பு, புதிதாக ஏற்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புகளே யாகும். இப்புதிய கண்டுபிடிப்புகள், உற்பத்தித் துறையில், சுரங்கத் துறையில் இப்புரட்சி மற்றும் போக்குவரத்துறையில் பயன்படுத்தப்பட்டன. இப்புரட்சி ஆறு துறைகளில் ஏற்பட்டது. அவை: 1.நெசவுத்துறையில் இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்துவது. 2.இரும்பு மற்றும் தாதுப் பொருள்களின் உற்பத்தியில் இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்துதல் 3.சுரங்கத்துறையில் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவது. 4.பெறியியல் துறையில் இயந்திர சாதனங்களைப் பயன்படுத்துவது. 5.சாயம் தீட்டுதல், சுத்தப்படுத்துதல், அச்சிடுதல் ஆகிய துறைகளில் இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்துவது. 6.தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்துத் துறையில் விஞ்ஞான சாதனைகளைப் பயன்படுத்துவது போன்றவையாகும். இத்தகைய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு முக்கிய எரிசக்தியாக அமைந்தவை நீராவி, மின்சாரம், எண்ணெய் ஆகியவையாகும்.

இத்தகைய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஐரோப்பாவில் உள்ள அனைத்து நாடுகளிலும் ஒரே சமயத்தில் ஏற்படவில்லை. தொழிற்புரட்சி ஏற்பட்ட பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில், முதன் முதலில் பிரிட்டனில் தான் ஏற்பட்டது. இங்கிலாந்தில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் துவங்கியது. சுமார் 70 அல்லது 80 ஆண்டுகளில் தொழிற்புரட்சியானது

இங்கிலாந்து நாட்டை விவசாய நாடு என்ற நிலையில் இருந்துமாற்றி தொழிற்துறையில் உற்பத்தி செய்த மற்றும் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடு எனும் அந்தஸ்தையும் பெற்றது. பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் தொழிற்புரட்சியின் தாக்கம் தெரிய வந்தது. ஜெர்மனியில் 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில்தான் தொழிற்புரட்சியின் தாக்கம் தோன்றிற்று. இருப்பினும் மிகக் குறைந்த காலத்திலேயே ஜெர்மனி உலகிலேயே தொழிற்துறையில் மிக வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

**தொழிற்புரட்சியின் காரணங்கள்:**

கி.பி.17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கடல் கடந்த வாணிபம் தொழிற்புரட்சிக்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது. பல நாடுகளில் அந்தந்த நாட்டு மக்களுக்குத் தேவையான உபயோகப் பொருளின் தேவையினால் உற்பத்தியைப் பெருக்கும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது. அதிக உற்பத்தியை உருவாக்க இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்தும் தேவை அதிகரித்தது. தேவையே கண்டுபிடிப்பின் மூலகாரணம் ஆகும். அதன்படி கி.பி.18-ஆம் நூற்றாண்டில் ஹார்டுகிரீவ்ஸ் என்பவர் கண்டுபிடித்த ஆர்கிரைட் கண்டுபிடித்த (Spinning Jenny) ஸ்பின்னிங் ஜென்னி, (Water frame), வாட்டர் பிரேம் கிராம்டன் கண்டுபிடித்த (Mule), கார்ட்ரைட் கண்டுபிடித்த (Powerloom) பவர்லூம் ஆகியவை தொழிற்புரட்சியின் வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிந்தன. இவற்றிற்கும் மேலாக பிரிட்டனில் முதன்முதலில் தொழிற்புரட்சி ஏற்பட பல அரசியல் மற்றும் அரசியல் சார்ந்த பலவித காரணங்கள் துணையாக நின்றன. பிரிட்டன் நாடு பல ஆண்டுகளாக அரசியலில் ஸ்திரத் தன்மையுடையதாகவும் மற்றும் நிலையான நிதிநிலைமை கொண்ட நாடாகவும் விளங்கிற்று. அதிக பணம் முதலீடு செய்யும் அளவிற்குச் செல்வச் செழிப்புடைய நாடாகவும் மற்றும் மிகச்சிறப்பான வங்கி அமைப்பு முறையும் விளங்கிய நாடாகவும் விளங்கிற்று. பிரிட்டன் நாட்டின் தனிமனிதன் உரிமை பெரிதும் போற்றப்பட்டது. மற்றும் அங்கு அமைதி, பாதுகாப்பு ஆகியவையும் சிறப்பாக அமைந்திருந்தது. அதைவிட மிக முக்கியமான ஒரு காரணம், தன் நாட்டில் உற்பத்தி செய்த பொருள்களை விற்பதற்கு ஏற்ற சந்தைகளாக, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளைத் தன் குடியேற்ற நாடுகளாகக் கொண்டிருந்தது. மேலும் அக் குடியேற்ற

நாடுகளிடமிருந்து பிரிட்டனில் உள்ள தொழிற்சாலைளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைப் பெறும் வசதியும் பிரிட்டனுக்கு இருந்தது. மேலும் பிரிட்டனில் நிலக்கரி மற்றும் இரும்பு போன்ற தாதுப்பொருள்கள் அதிக அளவில் கிடைத்தன. இத்துடன் பிரிட்டனின் இயற்கைத் துறைமுகங்கள், போக்குவரத்துக்கு ஏற்ற நதிகள் உலகின் மையப்பகுதிகள் அமைந்த நிலவியல் அமைப்பு ஆகியவையும் தொழிற்புரட்சி முதலில் பிரிட்டனில் ஏற்படக் காரணமாக அமைந்தன. இத்தகைய காரணங்களால் குறைந்த 80 ஆண்டுகளில் உலகின் தொழிற்பேட்டையாக பிரிட்டன் விளங்கிற்று. இருப்பினும் பிற்காலத்தில் மேலே குறிப்பிட்ட காரணங்களால் ஜெர்மனி போன்ற பிற ஐரோப்பிய நாடுகளிலும், மேலும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தொழிற்புரட்சி ஏற்பட்டுப் பிரிட்டனையும் விஞ்சும் அளவிற்குத் தொழில்துறையில் வளர்ச்சி பெற்றன.

**விளைவுகள்**

தொழிற் புரட்சியால் ஏற்பட்ட முக்கிய விளைவு யாதெனில், குடிசைத் தொழிலில் செய்து வந்த உற்பத்தி, தொழிற்சாலை முறைக்கு மாறியது. நவீனகால தொழில்துறையில் இயந்திரச் சாதனங்களைப் பயன்படுத்தி அதிக உற்பத்தியைப் பெருக்கி உலகச் சந்தையில் விற்பனை செய்யும் அளவுக்குச் சர்வதேச வியாபாரத்தைப் பெருக்கியது. இத்தொழில் புரட்சி, முதலீடு செய்யும் முதலாளி, கூலித் தொழிலாளிகளை வைத்து முழுநிர்வாகத்தையும் எளிய முறையில் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடிந்தது. தொழிலாளிகள் உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்களை வாங்கவோ, உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருள்களை சேகரிக்கவோ முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே சம்பளம் பெறும் தொழிலாளியாகவே இருந்தான். முதலீடு செய்யும் முதலாளி, இயந்திரங்களை வாங்கவும், கச்சாப் பொருள்களைச் சேகரிக்கவும் தன் முதலைப் பயன்படுத்தி தொழிற்கூடத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். தொழிற்கூடம் நடத்துவதற்கான விதிமுறைகளை வகுப்பது. தொழிற்கூடம் அமைப்பது போன்ற கொள்கை ரீதியான முடிவுகளை முதலாளிகளே செய்து வந்தனர். இதனால் தொழிற்கூட உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்துக் கொண்டு தொழில்துறையைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. இத்துறையில் உள்ள ஒருசில முதலாளிகளே ஏனைய

தொழில் வளமான வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள், போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றையும் நடத்தி வந்தனர். இதனால் ஒட்டுமொத்த பொருளாதார அதிகாரமும் ஒரு சில முதலாளிகளிடமே இருந்தது. தொழிற்கூட முறையில், தேவையை அறிந்து அத்தேவைக்கு ஏற்றவகையில் உற்பத்தியைப் பெருக்கினர். தொழிற்கூட முறையில், சிறப்பு வேலைகளுக்கு (Specialisation) எனத் தனித்தனி நபர்கள் நியமிக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு வேலைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன (Division of Labour). பழைய பண்டமாற்று முறை நீக்கப்பட்டு பணப்பட்டுவாடா அல்லது கடன் முறையில் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் விற்கப்பட்டன. வியாபாரச் சந்தைகள் தேசிய அளவில் அல்லது சர்வதேச அளவில் செயல்பட்டன. இத்தகைய மாற்றங்கள் தொழிற்புரட்சியின் போதும் அதற்கு பின்னரும் தொழிற்கூட வளர்ச்சியால் ஏற்பட்டன.

**பொருளாதார விளைவுகள்:**

தொழிற்புரட்சியில் ஏற்பட்ட ஏனைய விளைவுகளில் முக்கியமானவை பொருளாதார மற்றும் சமூக விளைவுகள் ஆகும். பொருளாதாரத் துறையில், தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அதிகரித்து அதற்கேற்ற வகையில் வாணிபமும் வளர்ச்சி பெற்றது. பல ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக பிரிட்டன் தன் நாட்டுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருள்களைப் பெறவும், தன் நாட்டு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பதற்குச் சந்தைகளாக தன் குடியேற்ற நாடுகளைப் பயன்படுத்திக் கொண்டன. இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்ட இப்பொருள்களைப் பல நாடுகளுக்கு விற்று உணவுப் பொருள்களையும் பெற்றன. 2. புதிய நகரங்கள் பல உருவாகின. பிரிட்டனில் லங்காஷியர், யார்க்ஷையர் போன்ற நகரங்கள் பருத்தி தொழிற்சாலைகள் நிறைந்த நகரங்களாயின. அதேபோன்ற நிலக்கரி மற்றும் இரும்பு தாதுப்பொருள்கள் கொண்ட தொழிற்சாலை நகரங்கள் பலவும் உருவாயின. இத்தகைய நகரங்கள் திடீர் என்று உருவான காரணத்தால் திட்டமிடப்படாமல் கட்டிடங்கள் கட்டப்பட்டன. தெருக்கள் சரியான வகையில் அமைக்கப்படவில்லை. சாக்கடை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே பிளேக், அம்மை போன்ற தொத்து நோய்கள் பரவி பலர் இறந்தனர். இத்தகைய தொழிற்சாலை இறப்பு விகித எண்ணிக்கை அதிகரித்தது. 3. தொழிற் புரட்சியின் விளைவால் குடிசைத் தொழில் அழிந்து விட்டது. குடிசைத் தொழிலின்

போது ஒரு பொருளை ஒருவரே எல்லா வேலைகளையும் செய்து உற்பத்தி செய்வார். ஒரு தொழிலாளிக்கு அந்த பொருளின் அனைத்து வேலைகளும் தெரியும். ஆனால் இயந்திர முறையில் உற்பத்தி செய்யும் போது வேலைகள் பிரித்துக் கொடுத்தமையால் ஒரு தொழிலாளிக்கு ஒரு பொருளின் முழு வேலையும் தெரியாது. தொழிற் சாலைகளில் அதிகமான தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டாலும் ஒவ்வொரு-வருக்கும் தனித்தனி வேலை என்பதால், பொருள் உற்பத்தித் திறன் முழு அறிவும் ஒரு தொழிலாளிக்குத் தெரிய வாய்ப்பு இலலை. எனவே நூல் நூற்பவர் காலம் முழுவதும் நூல் நூற்பது மட்டும் தெரியும். 4. வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி அடைந்தது. பிரிட்டன் போன்ற தொழிற் வளர்ச்சி பெற்ற நாடுகள், தன் நாட்டில் செய்த உற்பத்திப் பொருள்களை வளர்ச்சி அடையாத பின் தங்கிய நாடுகளுக்கு அனுப்பி உணவுப் பொருள் மற்றும் கச்சாப் பொருள்களைப் பெற்றன. அவ்வேளையில் தொழில் வளர்ச்சிபெற்ற பிரிட்டன் தன் நாட்டின் நன்மை கருதியே ஏற்றுமதி இறக்குமதி கொள்கையைக் கடைப்பிடித்தது. எனவே விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட வளர்ச்சி அடையாத நாடுகள் தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கியதால் பிரிட்டன் நல்ல ஆதாயம் பெற்றது. நாளடைவில் ஜெர்மனி போன்ற பிற ஐரோப்பிய நாடுகளும் தொழிற்சாலை உற்பத்தியைப் பெருக்கியதால் பிரிட்டனுக்கு வியாபாரப் போட்டியாக அமைந்தது. இருந்த போதிலும் தொழில் வளத்தில் சிறப்பு பெற்ற நாடுகள், தொழில் வளத்தில் பின்னடைந்த நாடுகளைச் சுரண்டும் சூழ்நிலையே அமைந்தது.

5. ஐரோப்பிய நாடுகளிடையே உள்ள பொருளாதார மற்றும் அரசியல் துறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. தொழிற்புரட்டசிக்கு முன்னால் நிலவளம் அதிகம் நிறைந்த பிரான்ஸ் பொருளாதாரம் மற்றும் அரசியல் பலம் ஆகியவற்றில் சிறந்த நாடாக விளங்கிற்று. ஆனால் தொழிற்புரட்சிக்குப் பின் நிலக்கரி மற்றும் இரும்பு அதிகம் நிறைந்த இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் பொருளாதாரத்திலும், அரசியலிலும் செல்வாக்கு பெற்ற நாடுகளாக மாறின. இதனால்தான் து.ஆ.ஜெய்ன்ஸ் என்பவர், "இரத்தமும் இரும்பு இதயமும் கொண்ட ஜெர்மனி இப்போது நிலக்கரியும், இரும்பும் கொண்ட ஜெர்மனியாக விளங்குகிறது" என்று கூறினார்.

அதாவது ஒன்றுபட்ட ஜெர்மனியை உருவாக்க பிஸ்மார்க் இரத்தமும் இரும்பு இதயமும் கொண்டுதான் உருவாக்க முடியும் என்று கூறினார். அத்தகைய ஜெர்மனி இப்போது நிலக்கரி மற்றும் இரும்பு ஆகியவற்றால் பலம் பொருந்திய நாடாக அமைந்துள்ளது என்று கூறுகின்றார். எனவே பிரான்ஸ் ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட தாழ்ந்த நிலையை அடையும் சூழ்நிலை ஏற்பட்டது.

6. இறுதியாக உற்பத்தித் துறையில் முதலாளி தொழிலாளி உறவு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. பழைய முறையில் சிறு தொழிலில் முதலீடு செய்யும் முதலாளியிடம் பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளி விசுவாசமாக இருந்தார். இருவருக்கும் இடையே நேரடித் தொடர்பு இருந்தது. ஆனால் தொழிற்சாலை உற்பத்தி முறையில் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே அதிக இடைவெளி ஏற்பட்டது. முதலாளி தொழிலாளியிடம் விசுவாசத்தை எதிர்பார்க்க முடியாது. தொழிற்சாலை உற்பத்தியில் தொழிலாளர்கள் ஒரே இடத்தில் கூடும் வாய்ப்பு இருப்பதால் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சங்க அமைப்புக்களை உருவாக்க முன்வந்தனர்.

**சமூக விளைவுகள்:**

தொழிற்புரட்சியால் நல்ல மற்றும் தீய சமூக விளைவுகள் ஏற்பட்டன. தொழிற்சாலை முறையால் தொழிலாளர்கள் சங்கம் வைத்து பல கோரிக்கைகளை முன் வைத்தனர். அதன்படி தரமான கூலி, குறைந்தபட்ச வேலை நேரம், முறையான சம்பள பட்டுவாடா போன்றவற்றைப் பெற்றனர். தொழிற்சாலை முறையில் காற்றோட்ட வசதிகள் நிறைந்த கட்டடங்களைப் பெற்றனர். குடிசைத் தொழிலில் அத்தகைய வசதி இல்லை. குடிசைத் தொழிலில் பணியாற்றிய தொழிலாளர் சம்பளத்தை விட தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் அதிகம் உண்டு. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு, குடிசைத் தொழிலாளர்களை விட வேலை நிரந்தரம் உண்டு. இருந்தாலும் தொழிற்சாலை முதலாளிகள் எந்த நேரத்திலும் தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கும் அபாயமும் இருந்தது. 2. தொழிலாளர்கள் ஒன்று கூடும்போது அவர்களின் பொது அறிவும் வளர்ச்சி பெற்றது. அவர்கள் தொழிலாளர் சங்கங்கள் அமைத்து உரிமைகளை கோரத் தொடங்கினர். இவ்வாறாகத் தொழிலாளர்கள் சங்கங்களின் வாயிலாக அரசியல் அதிகாரம் பெறும் வழியினையும்

தெரிந்து கொண்டனர். வேலை வாய்ப்புகள் அதிகம் கிடைத்தது. போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர்கள், பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள், பாரம் ஏற்றுபவர்கள், இறக்குபவர்கள் என்று பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்தன. புதிதாகத் தொழிற்சாலைகள் கட்டவும், புதிய நகரங்களில் வீடுகள் கட்டவும் கட்டடம் கட்டும் தொழிலதிபர்களுக்கு அதிகமான வேலையாட்கள் தேவைப்பட்டனர். சுரங்கத் தொழிற்சாலை, பருத்தி தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளில் வேலைபார்க்க ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். எனவே, விவசாய நாடாக இருந்த ஐரோப்பிய நாடுகள் தொழிற்சாலை நாடுகளாக மாறியபோது தொழிலாளர்களின் தேவை அதிகரித்தது.

**கெடு பயன்கள்:**

தொழிற்சாலை முறையில் ஆரம்பக் கட்டத்தில் கடுமையான பாதிப்புகளைத் தொழிலாளர்கள் சந்தித்தனர். அதிகநேரவேலை, குறைந்த சம்பளம், குழந்தைகள் தொழிற்சாலைகளில் பணியமர்த்தப்படுதல் சுகாதார வசதியற்ற நிலை ஆகிய நிலைமைகள்தான் நிலவின. குடிசைத் தொழிலில் ஈடுபட்ட தொழிலதிபர்கள் தொழிற்சாலைக்குத் தேவையான அளவு அதிக முதலீடு செய்ய முடியாததால் குடிசைத் தொழிலில் ஈடுபட்ட சிறு தொழில் அதிபர்களும், தொழிலாளர்களும் தொழில் இழந்தனர். குடிசைத் தொழிலில் இருந்து தொழிற்சாலை உற்பத்திக்கு மாறும் காலத்தில் எண்ணற்ற தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிப்புக்குள்ளானது. தங்களின் பாரம்பரியத் தொழிலை இழந்தனர். தொழிற்சாலை முறையில் தொழிலாளர்கள் ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் முழுமையான அறிவுத்திறன் பெற்றவராக இல்லை. குடிசைத் தொழிலில் ஒரு நபர் அப்பொருளை உற்பத்தி செய்வார். ஆனால் வேலைப் பிரிவு முறை கடைப்பிடிக்கப்பட்டதால் அத்தகைய முழுஅறிவும் தொழிற்சாலைத் தொழிலாளிக்குத் தெரியாது. அதேபோன்று குடிசைத் தொழிலாளிக்கு இருந்தது போன்று தொழிற்சாலைத் தொழிலாளிக்குத் தனிமனிதன் சுதந்திரம் இல்லை. தொழிற்சாலைத் தொழிலாளியை முதலாளி எந்த நேரத்திலும் வேலையில் அமர்த்தவும், வேலையை விட்டு நீக்கவும் உரிமை பெற்றிருந்தார். வெவ்வேறு தொழிற்சாலை நகரங்களில் கணவன், மனைவி வேலைபார்ப்பதால் இருக்கும் ஒரே இடத்தில் வாழ்வதற்கான

சூழ்நிலை இல்லை. இவ்வாறு தொழில் புரட்சியால் சமூக வாழ்க்கையில் நற்பயன்களும் கெடு பயன்களும் இருந்தன.

**போக்குவரத்தில் புரட்சி:**

18-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியால் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கம், போக்குவரத்துத் துறையில் முன்னேற்றத்தை உருவாக்க காரணமாயிற்று. போக்குவரத்துத் துறையில், வசதியைப் பெருக்குவது தொழில் உற்பத்தி பொருள்களின் அதிகரிப்பு ஏற்பட்டதால் அவசியமாயிற்று. உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க, போக்குவரத்து அதிகரித்தது. போக்குவரத்து அதிகரிக்க அதிகரிக்க சந்தைத் தலங்கள் அதிகரித்தன. சந்தைத் தலங்கள் அதிகரிக்க அதிகரிக்க பொருளாதார மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இத்தகைய தொழிற்சாலை அதிகரிப்பால் போக்குவரத்துத் துறையில், சாலைகள் அமைப்பது, கால்வாய்கள் அமைப்பது. இருப்புப் பாதைகள் அமைப்பது மற்றும் கடல்வழிப் போக்குவரத்தில் நீராவி என்ஜின் அறிமுகப்படுத்துவது போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

**சாலைகள்:**

பல நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் உள்ள நாடுகளில் சாலைகள் திருப்திகரமாக அமையவில்லை. பெரும் நகரங்களை இணைக்கும் பெரிய சாலைகள்கூட மழைக்காலங்களில் பயனற்றதாக இருந்தன. சாலைகள் அமைப்பதில் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவில்லை. சாலைகள் பொருள்களைக் கொண்டு செல்லும் வாகனக் கட்டணங்கள் அதிகமாக இருந்தன. ஆனால் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள சாலைகளைச் சீராக அமைப்பத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. இங்கிலாந்தில் மெட்காப் (Metcafe) டைல்போர்டு (Tielbord) மெக்ஆடம் (Meckadam) போன்ற பொறியியல் வல்லுநர்கள் பல தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நல்ல சாலைகளை அமைத்தனர். பல ஐரேர்ப்பிய நாடுகளில் சாலை அமைக்கும் பணி உள்ளாட்சித் துறையிடம் விடப்பட்டிருந்தது. ஆனால் பிரான்ஸ் நாட்டில் சாலை அமைக்கும் பணி மத்திய அரசிடம் இருந்தமையால் பிரான்சில் சாலைகள் மிகவும் தெளிவாக அமைத்தனர். இங்கிலாந்தில் பல ஆண்டுகளாக டர்ன்பைக் முறை என்ற முறையில் சாலைகள் அமைக்கப்பட்டு வந்தன. பிற்காலத்தில் கி.பி. 1835-இல் ஹைவேஸ் சட்டம் (Highways Act) ஒன்றை நிறைவேற்றியும் கி.பி1909-

இல் மத்திய சாலை அமைப்பு நிதி (Central Road fund) ஏற்படுத்தியும் சாலைகளைச் சீராக அமைத்தனர். ஆனால் 19-ஆம் நூற்றாண்டில்தான் ரஷ்யா, ஜெர்மனி போன்ற ஏனைய ஐரோப்பிய நாடுகளில் சாலைப் போக்குவரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. இத்தகைய சாலை போக்குவரத்து முன்னேற்றத்தால் பயணிகள் பலர் பயன் அடைந்தனர். சாலைகள் பல அமைக்கப்பட்டாலும், பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனச் செலவு காரணமாகக் கட்டணங்கள் அதிகமாகவே இருந்தன. எங்கெங்கு நீர்வழிப் போக்குவரத்து உள்ளதோ அங்கெல்லாம் நீர்வழிப் போக்குவரத்தைக் கடைப்பிடித்தனர். இருப்புப்பாதை வளர்ச்சிக்குப் பின்னரே சாலைப் போக்குவரத்தில் முக்கியத்துவம் குறையத் தொடங்கிற்று.

**நீர்ப் போக்குவரத்து:**

இருப்புப்பாதை அமைப்பதற்கு முன்னர். தரைப் போக்குவரத்தை விட நீர்ப் போக்குவரத்து மூலம் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான கட்டணச் செலவு குறைவாக இருந்தது. எனவே இங்கிலாந்து, ஹாலந்து, இத்தாலி போன்ற பல நாடுகளில் கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர்ப் போக்குவரத்து 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் விரிவுபடுத்தப்பட்டது. இங்கிலாந்தில் கி.பி.1750-க்கும் 1761-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரிட்ஸ் வாட்டர் கால்வாய் ஒன்று வெட்டப்பட்டு மான்செஸ்டர் மற்றும் ஓர்ஸ்லி ஆகிய நகரங்களை இணைத்தது. அது முதற்கொணடு செயற்கை முறையில் கால்வாய்ப் போக்குவரத்தை நாடு முழுவதும் இங்கிலாந்து உருவாக்கியது. இத்தகைய போக்குவரத்து இங்கிலாந்து தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்ல மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இக்கால்வாய்ப் போக்குவரத்து, தனியார் நீர்போக்குவரத்து கம்பெனிகளால் உருவாக்கப்பட்டன. பிற நாடுகளில் அரசே கால்வாய்ப் போக்குவரத்தை விரிவுபடுத்தியது. காலப்போக்கில் இருப்புப்பாதை வளர்ச்சி ஏற்பட்ட பின் சாலைப் போக்குவரத்து போன்று கால்வாய்ப் போக்குவரத்தின் முக்கியத்துவமும் குறைந்தது.

**இருப்பு பாதை:**

கி.பி.1830-இல் இருப்புப்பாதைப் போக்குவரத்து துவக்கப்பட்டது. கி.பி.1825-இல் இங்கிலாந்தில் ஸ்டாக்டன் மற்றும் டார்லிஸ்டன் ஆகிய ஊர்களை இணைக்கும் பிரிட்டிஷ் இருப்புப்பாதை

துவக்கப்பட்டது. கி.பி. 1830-இல் ஸ்டீபன்சன் என்பவரால் இரயில் வண்டியை நீராவி என்ஜின் மூலம் மிகக் குறைந்த செலவில் இயக்க முடியும் என்று கண்டறிந்தபின், அதே ஆண்டில் லிவர்பூல் நகருக்கும் மான்செஸ்டர் நகருக்கும் இடையே இப்புப்பாதை அமைக்கப்பட்டது. இங்கிலாந்தில் இருப்புப்பாதை அமைக்கும்பணி முற்றிலும் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் சிறுசிறு கம்பெனிகள் இருப்புப்பாதை அமைப்பில் ஈடுபட்டாலும் காலப்போக்கில் அவைகள் ஒன்றாக இணைந்து செயல்படத் தொடங்கின. கி.பி1850-இல் பெரிய அளவிலான இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன. லண்டன் வடமேற்கு இருப்புப்பாதை, மிட்லாண்டு - கிரேட் நார்தர்ன் ரெயில்வே போன்ற ரெயில்வே அமைப்புகள் தோன்றின. இருப்புப்பாதைகள் தனியார் வசம் இருந்தாலும், இருப்புப்பாதை அமைக்க ரயில்களை இயக்க அரசின் அனுமதியைப்பெற வேண்டும் என்ற அரசுக் கட்டுப்பாடுகள் இருந்தன. அத்தகைய அனுமதி நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று விதிமுறை வகுக்கப்பட்டது. கி.பி.1873-இல் ரெயில்வே கமிசன் ஒன்று அமைக்கப்பட்டது. கி.பி.1888-இல், ரயில் பயணிகள் நலன் கருதி ரெயில்வே கமிசன் அதிகபட்சமாகப் பயணக் கட்டணத்தை நிர்ணயிக்க அதிகாரம் வழங்கப்பட்டது. கி.பி.1890-க்கும் 1914-க்கும் இடையே பயணம் மற்றும் சரக்கு ரயில்களை இயக்க புதிய அனுமதி பெறுவதில் ரெயில்வே கம்பெனிகளிடையே கடும் போட்டி நிலவியது. கி.பி.1921-இல் இரயில்வே துறையில் முக்கிய முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி பிரிட்டனில் உள்ள 120 இரயில்வேக்களை நான்கு முக்கிய பிரிவுக்குள் கொண்டுவந்தனர். அவை: 1.லண்டனும் வடக்கும் 2.மிட்லாண்டும் ஸ்காட்டிஸும் 3.கிரேட் வெஸ்டர்னும் தெற்கும், 4.லண்டனும் கிழக்கும் என்பன. ரெயில்வே கட்டணத் தீர்ப்பாயம், (Railway rates Tribunal) ஒன்று அமைக்கப்பட்டு, பயணிகள் கட்டணம் மற்றும் சரக்குக் கட்டணம் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்டன. ரெயில்வே துறையில் பெரும்பாலான வேலைகளை இத்தீர்ப்பாயம் எடுத்துக் கொண்டது. பெல்ஜியம், ஜெர்மனி போன்ற பிற ஐரோப்பிய நர்டுகளில் அரசே இருப்புப்பாதை அமைப்பு பணியில் ஈடுபட்டது. பிரான்சில் அரசு தனியாருடன் சேர்ந்து பங்கீட்டு அடிப்படையில் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டன.

**கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து:**

நீர் வழிப்போக்குவரத்தில் நீராவி சக்தியைப் பயன்படுத்துவதில் அமெரிக்கா பெரும்பங்கு வகித்தது. ராபர்ட் புல்ட்டன்

என்பவர் படகுகளை எவ்வாறு நீராவி சக்தியால் இயக்குவது என்று செய்முறை விளக்கம் செய்து காட்டியதைத் தொடர்ந்து கப்பல் போக்குவரத்து வளர்ச்சி பெற்றது. கி.பி.1819-இல் நீராவி சக்தியால் இயக்கப்பட்ட கப்பல் அட்லாண்டிக் கடலை கடந்தது. இருப்பினும் கி.பி.1870 வரை, வர்த்தகப் போக்குவரத்து கடலில் மிகவும் சிறிய அளவில்தான் நடைபெற்றது. காரணம் சிறிய படகு அல்லது கப்பல்களுக்குத் தேவையான நீராவி என்ஜினை இயக்கத் தேவையான நிலக்கரியைக் கொண்டு செல்ல கப்பலில் சிறிய அறை மட்டும்தான் இருந்தது. அதற்குப் பின்னர்தான் நிலக்கரிக்குப் பதிலாக எண்ணையில் இயங்கும் என்ஜினைக் கண்டுபிடித்தனர். பின்னர், நீர்வழிப் போக்குவரத்துக்கு அதிக முக்கியத்துவம் கிடைத்தது. இதனால் எரிபொருள் சிக்கனம் கிடைத்தது. பெரிய கப்பல்கள் கட்டத் தொடங்கினர். கடல் வழிப் பயணத்தில் குறிப்பிட்ட நேரத்தில் சென்றடையும் நிலை ஏற்பட்டது. கப்பல்கட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டதால் கப்பல் கட்டுவதில் முதலீடு செய்வோர் அதிகம் முன் வந்தனர். பெனின்சுலார் (Peninsular) மற்றும் ஓரியண்டல் (Oriental) கம்பெனி, கன்னார்டு (Cunnard) கம்பெனி போன்றவை தோன்றின. விமானப் போக்குவரத்து என்பது 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வளர்ச்சி பெற்றது. இருப்பினும் அவை மனிதர்கள் பயணிக்க மட்டும்தான் பயன்பட்டது. சரக்கு விமானங்கள் மிகச் சிறிதளவே இருந்து வந்தன.

**தொலைத்தொடர்புத் துறை:**

போக்குவரத்துத்துறை வளர்ச்சி பெற்றுவரும் அதே காலகட்டத்தில் தொலைத்தொடர்புத் துறையும் வளர்ச்சி பெற்றது. தந்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி, தபால் போக்குவரத்து போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகப் பல தொலைதூரத்து நாடுகளிடையே தொடர்பு கொள்ள முடிந்தது. இத்தகைய வளர்ச்சி அரசுகளிடையே வாணிபம் சம்பந்தமாகக் கொள்கை பற்றிக் கலந்து முடிவு எடுக்கவும், வியாபாரிகள் வியாபாரத் தகவல் தெரிந்து கொள்ளவும் பயன்பட்டது. பன்னாட்டு வாணிபத்தை அடிப்படையாகக் கொண்டு பல நாட்டு நாணயங்கள் மற்றும் வங்கி முறைகள் மாற்றி அமைக்கப்பட்டன.

### (ஈ) விவசாயப் புரட்சி காரணங்கள், போக்கு, விளைவுகள்

இடைக்காலத்திலிருந்து நவீன காலத்திற்கு மாறும் காலவேளையில் கிராமியப் பொருளாதாரம் பல மாற்றங்களைச் சந்தித்தது. விவசாயத்துறையில் ஏற்பட்ட பல மாற்றங்களைத்தான் விவசாயப் புரட்சி என்று அழைக்கின்றோம். இடைக்காலத்தில் கிராமியப் பொருளாதாரத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. அதாவது நிலங்களை ஒருங்கிணைத்து வேலி அமைத்தல் போன்ற செயல்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. அத்தகைய செயல்பாடுகள் வேலைக்கு ஆள் பற்றாக்குறை காரணமாகவும், விவசாய நிலத்தை ஆடு மாடுகள் மேய்க்கப் பயன்படவும் அமைக்கப்பட்டன. 18-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஐரோப்பாவில் நிலங்களை மூன்று பிரிவாகப் பிரித்து விவசாயம் செய்தனர். அதனால் அதனை 'மூன்று நிலமுறை' என்று அழைத்தனர். ஒருவருக்குச் சொந்தமான நிலத்தை மூன்று பங்காகப் பிரித்து இரண்டு பங்கு நிலத்தில் கோதுமை மற்றும் பார்லி, ஓக் ஆகியவை பயிரிடுவர். மீதி ஒரு பங்கைத் தரிசு நிலமாக வைத்திருப்பார். காரணம் நிலத்தின் வளத்தைக் காக்கவேண்டும் என்பதற்காக ஓராண்டில் விவசாயம் செய்த நிலத்தை அடுத்த ஆண்டு தரிசுபோட்டு விட்டுத் தரிசு போட்ட நிலத்தில் விவசாயம் செய்வர். இம்முறைக்குச் சுழற்சிமுறை என்று பெயர். ஆனால் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்று நில சுழற்சி முறை நீக்கப்பட்டு புதிய புரட்சி ஏற்பட்டது. டவுன்செண்டு என்பவர் மூன்று நில சுழற்சி முறையை மாற்றி 'நான்கு நில சுழற்சி' முறையைப் புகுத்தினார். அதன்படி நான்கில் ஒரு பகுதி நிலத்தைத் தரிசு நிலமாகப் போடவேண்டிய தேவையில்லை. நான்கு பங்கு நிலத்தில் ஒரு பங்கில் கோதுமை இரண்டாம் பங்கில் பார்லி ஓக் மூன்றாம் பங்கில் க்ளோவர் நான்காவது பங்கில் டர்னிப் என்று நான்கும் பயிரிடலாம் என்றும், ஒரு ஆண்டில் ஒரு பயிரிட்ட நிலத்தில் அடுத்த ஆண்டு வேறு ஒன்றைப் பயிரிடவேண்டும் என்றும் இவ்வாறு நான்கு பயிர்களையும் நான்கு நிலத்தில் சுழற்சி முறையில் பயிரிட்டால் அதிக உற்பத்தியையும் பெறலாம். கால்நடைகளுக்கும் மழைக்காலங்களிலும், தீவனம் கிடைக்கும் என்று புதிய முறையைப் புகுத்தி விவாசயப்புரட்சியை உருவாக்கினர்.

ஆரம்பக் காலத்தில் விவசாயப் புரட்சி இங்கிலாந்து, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளில் மட்டும் இருந்தது. ஜெத்ரோடெல் எனும்

ஆங்கிலேயே வழக்கறிஞர் புதிய உழவு இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அவருடைய முயற்சியால், பல சோதனைகளால் பழையமுறை நீக்கப்பட்டு புதிய முறையில் விதைகள் விதைக்கப்பட்டன. கடலைப் பருப்பை ஒரு புனலில் போட்டு உழுபவர் கையில் உள்ள கலப்பையில் கட்டிவிட்டால் ஒவ்வொரு பருப்பாக விழுந்து சம அளவில் பயிர்கள் வளர வகை செய்யப்பட்டது. ராபர்ட் பேக்வெல் என்பவர். விஞ்ஞான முறையில் கால்நடைகளை வளர்க்கும் முறையினைக் கண்டுபிடித்தார். அதனால் கால்நடைகளைச் சக்தி வாய்ந்த கால்நடைகளாக வளர்க்க முடிந்தது. ஆடு மற்றும் மாடுகள் முன்பிருந்ததை விட இருமடங்கு அதிகமாக ஆகியது. விவசாயப் புரட்சியில் கண்டறிந்த தொழில் நுட்பத்தை இங்கிலாந்து முழுவதும் பரப்ப ஆர்தர் யங், தாமஸ் கோக் போன்றோர் முயற்சிகள் மேற்கொண்டனர். இன்னும் சொல்லப்போனால் இங்கிலாந்தின் மூன்றாம் ஜார்ஜ் எனும் மன்னர் விவசாயத்தை வளர்ப்பதில் அதிக அக்கறை காட்டினார். அதனால் விவசாயி ஜார்ஜ் என்று அவரை மக்கள் அழைத்தனர். ஐரோப்பாவில் உள்ள பிற நாடுகளில் விவசாய புரட்சி ஏற்பட பல ஆண்டுகள் ஆகின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட விவசாய புரட்சி சில காரணங்களால் ஏற்பட்டது. அதனால், விவாசய உற்பத்தி கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. செயறகைமுறை உரம் தயாரிக்கப்பட்டது. ஜெர்மானிய விஞ்ஞானிகளின் முயற்சியால் செயற்கை உரம் அதிகம் தயாரிக்கப்பட்டடு, விவசாயக் கருவிகள் அதிகம் தயாரிக்கப்பட்டன. அதிக அளவில் உற்பத்தி செய்தமையால் அவை பன்னாட்டு வாணிபப் பொருளாகவும் பயன்பட்டது. விவசாயக் கருவிகள் அதிகம் கண்டுபிடித்து விவாசய உற்பத்தியை பெருக்கினாலும், தொழிற்புரட்சி அளவிற்கு அதிக லாபம் கிடைத்தது என்று கூறமுடியாது. காரணம் விவசாயம் இயற்கையையும், தட்பவெப்ப நிலையையும் பொருத்தது. எனவே அதனடிப்படையில் உற்பத்தி கூடும் அல்லது குறையும். இருப்பினும் விவசாயக் கருவிகள் பயன்பாட்டில், உழவு, விதைப்பு, அறுவடை போன்ற பணிகளில் வேலை ஆட்களின் எண்ணிக்கையைக் குறைத்துச் சிக்கனமாக விவசாயம் செய்ய உதவியது.

**விளைவுகள்:**

நவீன காலத்தில் தனி மனிதன் அமைத்த பெரிய அளவிலான பண்ணை முறையில் இடைக்காலத்தில் நிலவிய கிராமியச் சமுதாயமுறை சீரழிந்தது. கிராமியச் சமுதாய முறையில் கூட்டமாக

விவசாயம் செய்தனர். பண்ணை முறையில் ஒரு சிலர் தனியாக பண்ணை அமைத்து விவசாய கருவிகளைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினர். கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வேலி அமைப்பு (Enclosure Movement) முறை தொடங்கப்பட்டது. அதன்படி பலர் சிறுசிறு நிலங்களை தாமாக முன்வந்து பண்ணை அமைத்தனர். சில வேளைகளில் நாடாளுமன்ற சட்டங்களின் மூலமும் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இதனால் விஞ்ஞானமுறையில் உருவாக்கப்பட்ட விவசாயக் கருவிகளை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க முடிந்தது. அதே வேளையில் இம்முறையால் பாரம்பரியமாகக் கிராமப் பகுதிகளில் விவசாயம் செய்து வந்த சிறு விவசாயிகளான யோர்மென் எனும் வகுப்பினரின் அழிவுக்குக் காரணமாயிற்று. இந்த இழப்பு இங்கிலாந்தின் சமூக வாழ்வில் ஈடுகட்ட முடியாத ஒன்றாக அமைந்தது. தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்பட்ட அதிகப்படியான இழப்பு இது என்றும் கூறலாம்.

இங்கிலாந்தில் சிறு சிறு விவசாயிகள் ஒழிக்கப்பட்ட இதே காலத்தில் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் சிறு சிறு அளவில் குத்தகைதாரர்களாக இருந்த விவசாயிகள் நிலப்பிரபுக்களை ஒழித்தனர். காரணம் நிலக்கிழார்கள் அதிகம் விவசாயத்தில் கவனம் செலுத்தாது குத்தகைப் பணம் கிடைத்தால் போதும் என்று இருந்தனர். குத்தகைதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் அளவுக்கு அதிகமான குத்தகைப் பணம் கொடுக்க வேண்டியது இருந்தமையால் காலப்போக்கில் குத்தகை விவசாயிகள் நிலச்சுவான்தார்கள் மீது வெறுப்படைந்தனர். இது பிரான்சில் ஏற்பட்ட புரட்சிக்குரிய காரணங்களில் ஒரு முக்கிய காரணமாக விளங்கிற்று. இப்புரட்சியின் காரணமாகக் குத்தகை விவசாயி நிலப்பிரபுவிடம் கொண்டிருந்த தொடர்பைத் துண்டிக்க முடிந்தது. ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளில் பிரான்சில் ஏற்பட்ட அரசியல் புரட்சி போன்ற ஒரே நாளில் விவசாயிகள் பிரபுக்களின் பிடியிலிருந்து விடுதலை பெற முடியவில்லை. விவசாயிகள் விடுதலை பெற ரஷ்யா போன்று நாடுகளில் ஏறத்தாழ 50 ஆண்டுகள் விவசாயி விடுதலை இயக்கம் நடைபெற்றது.

விவசாயப் புரட்சியின் பயனாகப் பல விவசாயிகள் வியாபார நோக்கோடு அதிக உற்பத்தியில் இறங்கினர். 18-ஆம் நூற்றாண்டில் விவசாயிகள் தங்களின் தேவைக்கேற்ற அளவில் விவசாயம் செய்து வந்தனர். ஆனால் தொழிற்புரட்சியின் பயனால்

தொலைத் தொடர்புத்துறை மற்றும் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக விவசாய உற்பத்தி பன்னாட்டுச் சந்தைகளில் விற்கும் அளவிற்கு பெருகிற்று. அதனால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது.

**முதலாளித்துவ வளர்ச்சி:**

தொழிற்புரட்சி மற்றும் விவசாயப் புரட்சியின் நேரடி விளைவு யாதெனில் முதலாளித்துவ வளர்ச்சியாகும். ஆர்தர் பிர்ரைன் **(Arther Birain)** என்பவர் தொழிற்புரட்சியின் காலத்தை முதலாளித்துவ வளர்ச்சியின் காலமெனச் சரியாக அழைக்கலாம் என்று கூறுகின்றார். உண்மையில் முதலாளித்துவம் இடைக்காலத்திலேயே தெரிய வந்தது என்றும் ஆனால் அக்காலத்தை முதலாளித்துவ ஆரம்பக் கட்டம் என்று அழைக்கலாம் என்றும் கருதப்படுகிறது. ஆரம்பக் கட்ட முதலாளித்துத்தை வாணிப முதலாளித்துவம் என்றும், பன்னாட்டு வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் ஆரம்பக்கால முதலளிகள் என்றும் கருதப்படுகிறது. 15-ஆம் நூற்றாண்டில் துணி மற்றும் கம்பளி வியாபாரத்தில் ஈடுபட்ட முதலாளிகளும் பின்னர் கட்டடம் கட்டுவோர் மற்றும் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டோரும் முதலாளிகளாகக் கருதப்பட்டனர். ஆனால் முதலாளித்துவம் என்ற கொள்கை முழு அளவில் ஏற்றுக் கொள்ளும் நிலையை அடைந்த காலம் நவீன காலத்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி விவாசயப் புரட்சிக் காலமேயாகும்.

தொழிலதிபர்கள் முதலாளிகளாகக் கருதப்படுவது ஏனெனில், தொழிற்சாலைக்குத் தேவையான கச்சாப்பொருள்களிலோ அல்லது தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களிலோ தொழிலாளர்களுக்குப் பங்கு கிடையாது. தொழிலாளர்கள், தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் கருவிகள் மீது உரிமை கொண்டாட முடியாது. அக்கருவிகள் ஒன்றாக மட்டும் இருந்தால் தொழிலாளர் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு தொழிற்சாலையில் கருவிகளைப் பிரிக்கமுடியாது. தொழிலாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதால் அவர்கள் உற்பத்திப் பொருளில் எந்த உரிமையும் கொண்டாட முடியாது. முதலாளித்துவ முறையில் முதலாளிக்கும், தொழிலாளிக்கும் உள்ள உறவு தொழிலாளர்களின் தேவையான எண்ணிக்கையையும் தொழில் செய்ய வரும் தொழிலாளர் எண்ணிக்கையையும் பொருத்தே அமையும்.

மேலும் முதலாளித்துவ முதலாளி, சந்தை நிலவரத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்வார். சந்தையில் எந்த அளவு விலைபோகும் என்பதை யூகித்து அதனால் கிடைக்கும் லாபத்தைக் கணக்கிட்டு முதலாளி தன் உற்பத்தியைப் பெருக்குவார். சில வேளைகளில் அதிக லாபமும் சில வேலைகளில் நட்டமும் ஏற்படலாம். இவ்வாறு முதலாளித்துவ முறையில் ஒரு வகையான ஸ்திரத்தன்மையற்ற நிலை ஏற்படும். லாபநோக்குடன் தொழில் உற்பத்தியைப் பெருக்கும் எண்ணம் முதலாளிகளுக்கு ஏற்படும் போது தொழிலதிர்பகளிடையே கடுமையான போட்டி நிலவும்.

முதலாளித்துவ கோட்பாடு என்பது தனிமனித கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்தது ஆகும். இக்கோட்பாட்டின்படி சமுதாயத்தில் தனி மனிதன் ஒரு அங்கம் (Unit) எனக் கருதப்படுகிறான். தொழிற்சாலை உற்பத்தி மற்றும் விசாய உற்பத்தியால் முதலாளித்துவம் தலைதூக்கியது. எனவே, நாட்டின் பொருளாதாரம் ஒரு சிலர் கையில் மட்டுமே இருந்து வந்தது. எனவே நாட்டின் சொத்து சமஅளவில் மக்களைச் சென்றடையவில்லை. உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோர், தங்கள் அன்றாட வாழ்வுக்குத் தேவையான அளவுதான் லாபம் பெறமுடியும். உற்பத்தியை நிர்வகிக்கும் ஒரு சிலரே அதிக லாபம் பெற்றுப் பெரும்பாலான சொத்துக்களுக்கு அதிபதிகளாக ஆகமுடியும். ஐரோப்பா விவசாய அமைப்பு கொண்டதாக இருந்தபோது முதலாளித்துவம் என்பது பெயரளவில்தான் இருந்தது. ஆனால் தொழிற்புரட்சிக்குப்பின் குறிப்பாக கி.பி.1760 முதல் கி.பி.1914 வரை முதல் உலகப்போர் வரை ஐரோப்பிய பொருளாதாரத்தில் முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்தியது.

முதல் உலகப் போருக்குப் பின்னர் முதலாளித்துவ முறையில் மாற்றம் ஏற்பட்டது. சுதந்திரமான முதலாளித்துவம் என்பது நவீன காலத்தில் குறைந்து காணப்பட்டது. காரணம் தனியார் உற்பத்தியாளர்கள் தங்களுக்குள் உள்ள போட்டியைத் தவிர்க்க டிரஸ்ட் போன்ற அமைப்புகளை உருவாக்கிக் கொண்டு செயல்படத் தொடங்கினர். மற்றொரு புறம் அரசுகள் நாட்டின் பொருளாதார செயல்பாட்டில் தலையிட்டுப் பல கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கின. இத்தகைய அரசின் தலையீட்டை நவீனகால பொருளாதார வளர்ச்சியில் அரசின் முதலாளித்துவம் என்று 19-ஆம் நூற்றாண்டில் அழைக்கத் தொடங்கினர்.

**தொழிலாளர் நிலை:**

18-ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சியில் ஏற்பட்ட மாற்றத்தால் தொழிலாளர் நிலையில் மிகவும் வேதனைக்குரிய சூழ்நிலை உருவாகிற்று. குறிப்பாக தொழிலாளர்களின் தனிமனிதச் சுதந்திரம் பாதிக்கப்பட்டது, தனித்தன்மை பறிக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சி ஏற்பட்ட அளவிற்கு நேர்மாறாக சமுதாய ஏற்றத்தாழ்வும் பொருளாதார ஏற்றத்தாழ்வும் ஏற்பட்டது. சமுதாயத்தில் ஒரு சில பணக்காரர்கள் பணக்காரர்களாக ஆகிக்கொண்டே-யிருக்கும்போது ஏழைகள் மிகவும் ஏழைகளாகவே ஆகிக் கொண்டிருந்தனர். எனவே, தொழிற்புரட்சி நன்மைகளும், தீமைகளும் கலந்த ஒன்றாகவே அமைந்துள்ளது. இது தேசியப் பொருளாதாரத்தைப் பெருக்கியது என்றாலும் தேசிய மக்களின் நல்வாழ்வைப் பாதித்தது. பொருளாதாரத்தில் செல்வச் செழிப்பைக் கொடுத்தது. ஆனால் சமூக வாழ்க்கையில் சீரழிவை ஏற்படுத்திற்று. 19-ஆம் நூற்றாண்டுத் தொழிலாளி தன் அன்றாட வாழ்க்கைக்காக உழைக்கும் தொழிலாளியாக மட்டும் வாழ்ந்து வந்தான். நாட்டின் உற்பத்தியில் அவனுக்கு எந்த வித உரிமையோ பங்கோ இல்லை. எனவே, தொழிற்புரட்சி கிராம மற்றும் நகர்ப்புற தொழிலாளர் சமுதாயம் உருவாக காரணமாக அமைந்தது என்று கூறலாம்.

தொழிற்புரட்சியால் இங்கிலாந்து உலக அரங்கில் பொருளாதாரத்தில் ஒரு முன்னேறிய நாடாகக் கருதப்பட்டது. ஆனால் அதன் உள்நாட்டு விவகாரங்களில் பல சோகமான சமூக நிலைகளைச் சந்தித்தது. ஆரம்பக்காலத்தில் தொழிற்கூடங்களில் பெண்கள் குழந்தைகள் போன்றோரை வேலைக்கு அமர்த்தியிருந்தனர். தொழிற்கூடங்கள் சுகாதாரமற்ற சூழ்நிலைகளில், சூடான தாழ்வாரங்களால் மூடப்பட்டு சிறிய அறைகளில் செயல்பட்டன. தொழிலாளர்கள் ஒரு நாளுக்கு 14 மணி நேரம் வேலைபார்க்க வேண்டிய நிலை இருந்தது. வேலை நிரந்தரம் இல்லை. கூலி முறையாக தக்க நேரத்தில் கொடுக்கப்படவில்லை. 6 அல்லது 7 வயது சிறுவர்கள் கூட வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவ்வாறு அமர்த்தப்பட்டவர்கள் அதிக மணி நேரம் குறைந்த சம்பளத்துக்குப் பணியில் அமர்த்தப்பட்டனர். வேகமாக இயக்கப்படும் இயந்திரச் சாதனங்கள் மூடப்படாமல் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தமையால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டன.

தொழிற்கூடங்கள் அசுத்தமாகவும் காற்றோற்றம் அற்றதாகவும் இருந்தன. சிறு சிறு குழந்தைகள் இயந்திரங்களின் அருகாமையிலேயே உணவருந்தி தூங்க வேண்டிய கட்டாய நிலை இருந்தது. அவர்களுக்குப் போதுமான உணவும் வழங்கப்படுவது இல்லை. போதுமான ஆடைகள் வழங்கப்படுவது இல்லை. அதிக வேலைப்பளு கொடுக்கப்பட்டது. எனவே பல ஏழைக் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டு அல்லது விபத்துக்களால் இறந்தனர். சுரங்கங்களில் பணியாற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் நிலை இன்னும் பரிதாபத்திற்குரியது. அவர்களுக்குக் கூலி, பொருளாக வழங்கப்பட்டது. புதிதாக உருவான தொழிற்சாலை நகரங்கள் சுகாதாரமற்றதாக அமைக்கப்பட்டன. அதனால் பல நோய்கள் ஏற்பட்டு ஆண்டுதோறும் பலர் மரணமடைந்தனர். நகராட்சியோ எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இல்லை.

அக்கால நடைமுறைப்படி, அரசு, தொழிற்சாலை முதலாளிகளின் நிர்வாகத்தில் தலையிடக் கூடாது என்று முதலாளிகள் கருத்துத் தெரிவித்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் அரசு அவ்வாறு தலையிடுவது தனிமனிதனின் உரிமைக்கும், தொழிற்புரட்சிக்கும் எதிரானது என்று வாதிட்டனர். மேலும் அவ்வாறு அரசு தலையிட்டால், இங்கிலாந்து தொழிற்சாலைகள், ஏனைய நாட்டுத் தொழிற்சாகைளோடு போட்டிபோட இயலாது என்றும், தொழிலாளர்கள் நிலை, வெளியில் பேசிக்கொள்வது போன்ற மோசமாக இல்லை என்றும், பெண்கள் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது கட்டாயத் தேவை என்றும் வாதிட்டனர். இத்தொழிலாளர்களின் நிலை நன்றாக இருப்பதாகவும், தொழிலாளர்கள் இருக்கின்ற நிலைமையில் வேலை செய்ய வேண்டும் அல்லது பட்டினி கிடக்கவேண்டும் என்ற நிலை உண்டு என்றும் வாதிட்டனர். துரதிஷ்டவசமாக அக்காலத்தில் வாழ்ந்த பொருளாதார நிபுணர்கள்கூட இத்தகைய தொழிலாளர் நிலையைக் கண்டிக்கவில்லை.

ஆரம்பக் காலத்தில் தொழிற்சாலை அதிபர்கள் தங்களுக்குத் தேவையான வேலையாட்கள் கிடைப்பதில் சிரமத்திற்குள்ளாயினர். ஆனால் காலப் போக்கில் புதியநகரங்கள் உருவானபின், பலர் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி குடியேறியதால் தேவைக்கும் அதிகமான தொழிலாளர்கள் கிடைக்கப் பெற்றனர். குழந்தைகள், பெண்கள் என்று எண்ணற்றோர் சிறு சிறு

குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். சிறுவர்களை வைத்து வேலைவாங்குவது லாபகரம் என்று கருதிய தொழிலதிபர்கள் சிறுவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம், உடை ஆகியவை ஏற்பாடு செய்து தொழிற்சாலைகளிலேயே தங்கவைத்தனர். சிறுவர்கள் தொழிற் சாலைகளில் சேர்க்கப்படும் போது அவர்களுக்குப் பயிற்சித் தொழிலாளர்கள் (Apprentices) என்று சேர்த்து இரவு நேரங்களிலும் வேலை வாங்கினர். இரவில் வேலை இல்லை என்றால், பகலில் பல மணிநேரம் செய்யவேண்டும் என்று பணிக்கப்பட்டனர். வேலை செய்து கொண்டே உணவு உட்கொள்ள வேண்டும். அவர்களுக்குக் கல்வி கொடுக்கவேண்டும். முதலாளிகள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறு ஆரம்பக்கால தொழிற்சாலையில் பணியாற்றிய தொழிலாளர்களின் நிலை மிகவும் மோசமான சூழ்நிலையில் இருந்து வந்தது.

இத்தகைய சூழ்நிலையில் இரண்டு கருத்துக்கள் நிலவின. பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து சமுதாய விழிப்புணர்வும் ஏற்பட்டது. ஆடம் ஸ்மித் போன்ற பொருளாதார நிபுணர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முதலாளித்துவ முறையே சிறந்தது என்றும் தனிமனிதன் தொழில் நடத்தும் உரிமையில் அரசு தலையிடக் கூடாது என்றும் கருத்துக்களை வலியுறுத்தினர். ஆனால் அதே வேளையில் சோசியலிஸ்ட்கள் இத்தகைய பொருளாதார முறையில் அரசின் தலையீடு வேண்டும் என்றும் தொழில்துறையில் தொழிலாளர்களுக்கும் கூட்டுப்பொறுப்பு வேண்டும் என்றும் வாதிட்டனர். இத்தகைய இருவகையான கருத்துக்கள் 19-ஆம் நூற்றாண்டு முழுவதும் நடைமுறையில் இருந்துவந்தது.

**தொழிற்சாலை சட்டங்கள்:**

19-ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் நிலவிய பொருளாதார சுதந்திரத்தைத் தடுக்க முதல் கட்டமாகத் தொழிற்சாலை சட்டங்கள் இயற்றப்பட்டன. இத்தொழிற்சாலைச் சட்டங்களால் தனிமனிதப் பொருளாதாரச் சுதந்திரத்திற்குத் தோல்வி ஏற்பட்டது. அதிக நேரம் வேலை செய்யும் தொழிலாளர்கள் போதுமான உணவுகூட இல்லாமல் பணியாற்றிய சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் நிலைமை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. எனவே, அரசும் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று

முடிவுக்கு வந்தது. ஐரோப்பிய நாடுகளில் முதன் முதலில் இங்கிலாந்தில்தான் இச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. கொடுமையான வேலைக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோர்களின் நலன் கருதி சட்டமியற்ற முடிவு செய்தனர். அவர்கள் சுகாதரமற்ற சூழ்நிலையிலும், அதிக நேரம் வேலைப்பார்ப்பதையும் தவிர்க்கும் பொருட்டு சட்டமியற்றுவது அவசியம் ஏற்பட்டது. சர்ராபர்ட் பீல் மற்றும் ராபர்ட் ஓவன் ஆகிய அறக்கொடையாளர்களின் முற்சியால் இங்கிலாந்தில் கி.பி.1802-லும் பின்னர் 1819-இலும் சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் பெண்கள், சிறுவர்கள் ஆகியோர்களை தொழிற்சாலைகளில் அமர்த்துவது குறித்த கட்டுப்பாடுகளை விதித்தது. அச்சட்டங்களின்படி அதிகபட்ச வேலைநேரம் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் என்றும், குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க தொழிலதிபர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தியது. மேலும் தொழிற்கூடத்தில் தூங்கும் குழந்தைகளுக்குச் சுகாதாரமான, சுத்தமான தங்குமிடம் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியது. அதுமட்டுமல்லாமல் 9 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்றும், அக்குழந்தைகள் வயது 9-லிருந்து 16-வயது வரை உள்ளவர்களுக்கு ஒரு நாளைக்கு 12 மணி நேரத்திற்கு மேல் வேலை கொடுக்கக் கூடாது என்றும் விதிமுறை வகுக்கப்பட்டது. ஆனால் இச்சட்டங்கள் பருத்தித் தொழிற்சாலைக்குத்தான் பொருந்தும் என்றும் கூறப்பட்டது. ஆனால் அச்சட்டங்களின் சரத்துக்களை செயல்படுத்தும் விதம் தெளிவு படுத்தப்படவில்லை. இச்சட்டங்களை செயல்படுத்தும் அதிகாரம் அமைதிக்கான நீதிபதிகளிடம் (Justices of Peace) விடப்பட்டது. ஆனால் அத்தகைய நீதிபதிகளே தொழிற்சாலை உரிமையாளர்களாகவோ அல்லது தொழிற்சலை உரிமையாளர்களின் நண்பர்களாகவோ இருந்தமையால் இச்சட்டங்கள் இயற்றியும் தொழிலாளர்களுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படவில்லை.

கி.பி. 1830-இல் பொதுமக்கள் புரட்சியின் காரணமாகத் தொழிற்சாலை சீர்திருத்தம் பற்றிய சிந்தனை மீண்டும் தலை தூக்கியது. கற்றறிந்த பலர் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர். அவர்களின் முக்கியமானோர் சாப்ஸ்பரி ஏர்ல் ஆஸ்லிபிரபு மற்றம் சாட்லர் போன்றோர் ஆவர். தொழிற்சாலைச் சட்டங்களைச் செயல்படுத்தும் நோக்கோடு தொழிற்சாலை ஆய்வாளரை (Inspector of Factories) அரசு நியமிக்க அதிகாரம் வழங்கும் வகையில் கி.பி.1833-இல் (Factory Act) தொழிற்சாலைச் சட்டம் இயற்றப்பட்டது. மேலும் சிறுவர்

தொழிலாளர்களின் வேலை நேரத்தை இச்சட்டம் மீண்டும் குறைத்ததோடு இரவு நேரங்களில் குழந்தைத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவதைத் தடைசெய்தது. கி.பி.1847-இல் (Ten hours Act) 10 மணிநேர வேலைச் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இயற்ற திரு.பீல்டன் என்பவர் முயற்சி செய்தார். கி.பி.1860-க்குப்பின் தொழிற்சாலைச் சட்டங்கள் உலகில் உள்ள அனைத்து நாடுகளின் கவனத்தையும் ஈர்த்தது. இங்கிலாந்தில் பருத்தித் தொழிற்சாலைக்கு விதிக்கப்பட்டிருந்த இச்சட்டங்களின் சரத்துக்குள் ஏனைய தொழிற் சாலைகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. 1842-இல் இயற்றப்பட்ட (Mines Act) சுரங்கச் சட்டம் மூலம் சுரங்கத் தொழிலாளர்களுக்கும் இச்சலுகைககள் நீட்டிக்கப்பட்டன. கிபி.1867-இல் இச்சட்டங்களின் சரத்துக்கள் அனைத்துத் தொழிற்கூடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. கி.பி.1878-இல் ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்சாலைச் சட்டம் அதாவது (Factory and Workshop Act), தொழிற்சாலை மற்றும் தொழிற்கூடச் சட்டம் இயற்றப்பட்டுத் தொழிற்சாலை விதிமுறைகள் வகுக்கப்பட்டன. பின்னர் வந்த சட்டங்கள், வயது வந்த தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் குறைத்தது. 1937-இல் இயற்றப்பட்ட சட்டப்படி தொழிலாளர்களின் வேலை நேரம் ஒரு நாளைக்கு 9 மணிநேரம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. இச்சட்டங்களின் மூலமாகத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பு கருதி தொழிற்சாலை இயந்திரங்களை மறைத்து வைக்கவும் காற்றோட்டமான அறைகளை அமைக்கவும் தொழிலாளர்களுக்குப் போதுமான சுகாதர வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்றும் பல விதிமுறைகளை விதித்துத் தொழிலாளர் நலன்களைப் பாதுகாத்தது.

இதுபோன்ற சட்டங்கள் ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் இயற்றப்பட்டன. கி.பி.1841-இல் பிரான்சில் முதன் முதலில் தொழிலாளர் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலையில் அமர்த்தக் கூடாது. 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 8 மணி நேரவேலை மட்டும்தான் கொடுக்கவேண்டும் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 12 மணிநேர வேலைதான் கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இருந்த போதிலும் இச்சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரம் யாரிடமும் ஒப்படைக்கப்படாததால், இச்சட்டங்களால் பயனில்லை. பின்னர் வந்த சட்டங்கள் இத்தகைய குறைபாடுகளை அகற்றின. 1892-இல்

இயற்றப்பட்ட சட்டப்படி பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கு வாரத்தில் ஒருநாள் விடுமுறை அளிக்க வகை செய்தது. 1906-இல் இயற்றப்பட்ட சட்டப்படி வாரத்தில் ஒருநாள் விடுமுறை என்பது அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நீடிக்கப்பட்டது. முதல் உலகப்போருக்குப் பின் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. 1919-இல் இயற்றப்பட்ட சட்டப்படி ஒரு நாளைக்கு 8 மணிநேர வேலை என்றும் 1936-ஆம் ஆண்டுச் சட்டப்படி ஒரு வாரத்திற்கு 40 மணி நேர வேலை என்றும் வேலை நேரம் நிர்ணயிக்கப்பட்டது.

**ஜெர்மனி:**

கி.பி.1839-இல்தான் ஜெர்மனியில் ஒரு நாடாக விளங்கிய பிரஸ்ஸியாவில் முதன் முதலில் தொழிற்சாலைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஜெர்மனியச் சட்டத்தின் தனித்துவம் என்னவென்றால், இச்சட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரம் காவல்துறையிடம் விடப்பட்டிருந்தது. தொழிற்சாலை ஆய்வாளர்கள் தொழிற்சட்ட விதிமீறல் குறித்துப் புகார் கூற மட்டும் அதிகாரம் பெற்றிருந்தனர். அத்துடன் காவல் துறைக்கு ஆலோசனை கூறவும், நடவடிக்கை எடுக்கவும் அவர்கள் சிபாரிசு செய்யலாம். 1891-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் 1839-இல் இயற்றப்பட்ட சட்டத்தின் பிரிவுகளைத் தொழிற்கூடங்களுக்கும் நீடித்ததோடு அல்லாமல், தொழிற்சாலை தொழிலாளர்களுக்குப் பல சலுகைகளையும் வழங்கிற்று. 1919-இல் தொழிற்சாலை மற்றும் தொழிற்கூட தொழிலாளர்களின் வேலை நேரம் ஒருநாளுக்கு 8 மணி நேரம் என்று நிர்ணயம் செய்தாலும் நடைமுறையில், தொழிற்சாலை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கோடு அரசின் ஒப்புதலோடு 8 மணி நேரத்திற்கு மேல் தொழிலாளர்கள் வேலை செய்தனர். சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டபின் தொழிற்சாலை நிறைந்த நாடுகளில் வாழும் தொழிலாளர் நலன் காக்கும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்:**

தொழிற்சாலைச் சட்டங்கள் அல்லாமல், சமூகப் பாதுகாப்புக்காகத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட சட்டங்களில், தொழிலாளர்கள் பாதுகாப்புக்காகச் சமூகக் காப்பீட்டுத் திட்டம் மிக முக்கியத்துவம்

வாய்ந்த ஒன்றாகும். இத்திட்டத்தின் படி தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றும் போது விபத்து ஏற்பட்டாலோ, நோய்வாய்ப் பட்டாலோ, வேலையில்லா நிலை ஏற்பட்டாலோ வயது முதிர்வு ஏற்பட்டாலோ, இறந்தாலோ காப்பீட்டுத் தொகை பெறுவதன் மூலம் பாதுகாப்பு பெற்றனர். இத்தகைய பாதுகாப்புத் திட்டங்கள் தனியார் அமைப்பு மூலமும், சில வேளைகளில் அரசின் தலையீட்டின் மூலமும் செயல்பட்டு வந்தன. முதலில் தனியார் காப்பீட்டுத் திட்டங்கள்தான் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்தன.

இங்கிலாந்தில் 'நண்பர்கள் சமூக இயக்கம்' மூலம் தொழிலாளர்களுக்கு ஆரம்பத்தில் பாதுகாப்பு கிடைத்தது. இச் சங்கத்தின் செயல்பாட்டில் நம்பிக்கை வைத்திருந்த பிரிட்டிஷ் நாடுடாளுமன்றம் இச்சங்கச் செயல்பட்டின் உள்நிர்வாகச் செயல்பாடுகளில் தலையிடுவதில்லை. இது போன்ற பதிவு செய்யப்பட்ட சமூக அமைப்புகள் சமூகத்தில் நல்ல அந்தஸ்துடன் செயல்பட்டன. இதுபோன்ற 'நண்பர்கள் சமூக அமைப்புகள்' பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளிலும் தோன்றின. அவ்வமைப்புகள் தொழிலாளர்களில் சிலர் நோய்வாய்ப்பட்டாலோ மரணமடைந்தாலோ அவர்களை அடக்கம் செய்வதற்குப் பண உதவிகள் செய்து வந்தன. இத்தகைய நிதி, தொழிற்சாலை உரிமையாளர், தொழிலாளர்கள் ஆகியோர் மாதாந்திரச் சந்தாக் கட்டணம் செலுத்தி பணம் சேர்ப்பதன் மூலம் உருவாக்கப்படும். அரசு சார்பில் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வந்த நாடுகளில் முதன்மையானது ஜெர்மனியாகும். கி.பி. 1883-இல் முதன் முதலில் ஜெர்மனியில் காப்பீட்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் நோய் காப்பீட்டுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி தொழிற்சாலை உரிமையாளரும், தொழிலாளரும் கூட்டாக சந்தாத் தொகை செலுத்தவேண்டும். அரசும் ஓரளவு சந்தாத் தொகை செலுத்தவேண்டும் என்று பிஸ்மார்க் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை. ஆண்டுக்கு 2000 மார்க்கு(பணம்)கள் சம்பளம் பெறும் அனைத்துத் தொழிலாளர்களும் நோய்க் காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரவேண்டும். தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்தில் 2 அல்லது 3 சதவீத பணத்தைச் சந்தாவாக செலுத்தவேண்டும். தொழிலாளர் செலுத்தும் தொகையில் பாதித் தொகையைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் செலுத்த வேண்டும். இப்பணத்தின் மூலம் தொழிலாளர்கள் நோய் வாய்ப்பட்டால், தொழிலாளர்களின் மருத்துவச்

செலவிற்கும், மருந்து செலவுக்கும் பணம் வழங்கப்படும். அத்துடன் நோய்வாய்ப்பட்டு 4 நாட்களுக்கு மேல் உள்ள காலத்திற்குச் சம்பளம் ஆண்டுக்கு 13 வாரத்திற்கு வழங்க உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை உரிமையாளர் பொறுப்புச் சட்டத்தின் படி (Employers Liability Laws) தொழிலாளர்கள் தொழிற்சாலையின் பணியில் இருக்கும்போது விபத்து ஏற்பட்டால் நட்ட ஈடுவழங்க வகை செய்தது. 1880-இல் ஜெர்மனியில் வேலை செய்ய இயலாதோர் அல்லது வயது முதிர்வு அடைந்தோர் ஆகியோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் (Insurance Law against Liability and Oldage) சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. இச்சட்டம் பிஸ்மார்க் காலத்தில் இயற்றப்பட்ட பாதுகாப்புச் சட்டங்களில் மூன்றாவது சட்டம் ஆகும். இந்த வகையில் ஓய்வூதியதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 50 மார்க்(பணம்) பணம் கூடுதலாக அரசு வழங்கும். 1927-ஆம் ஆண்டு ஜெர்மனியில் வேலையில்லாதோர் காப்பிட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1937-இல் இத்திட்டத்தின்படி 13 மில்லியன் வேலையில்லாதோர் பயனடைந்தனர். அவர்களுக்கு ஆண்டுக்கு 26 வாரத்திற்குச் சிலருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டு 30 வாரத்திற்கு வேலையில்லாதோர் காப்பீட்டுப் பணத்திலிருந்து பணம் வழங்கப்பட்டது.

இங்கிலாந்தில் அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டம் மிகப் பிந்திய காலத்தில் புகுத்தப்பட்டது. முதன் முதலில் கி.பி.1908-ஆம் ஆண்டில்தான் முதியோர் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. கி.பி.1880-இல் தொழிற்சாலை உரிமையாளர் பொறுப்புச் சட்டம் (Employment Liablitity Act) என்று இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி தொழிற்சாலை உரிமையாளர் அல்லது தொழிற்சாலை மேலாண்மையாளர் ஆகியோரின் கவனக்குறைவால் ஏதேனும் தொழிலாளருக்கு வேலை நேரத்தின்போது விபத்து ஏற்பட்டால் அத்தொழிலாளருக்கு நட்ட ஈட்டுத்தொகை வழங்கவேண்டும் என்று வகை செய்தது. 1869-இல் இயற்றப்பட்ட சட்டப்படி, எந்த நிபந்தனையும் இன்றித் தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டால் நட்ட ஈட்டுத் தொகை வழங்கவேண்டும் என்று வகை செய்தது. தொழிலாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கும் நட்ட ஈடு வழங்கும் வகையில் 1906, 1911 ஆகிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட காப்பீட்டுச் சட்டங்கள் வகை செய்தன. 1905-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வேலையில்லாதோர் வேலைவாய்ப்புச் சட்டத்தின்படி உள்ளாட்சித் துறையினர்.

வேலையில்லாதோருக்கு வேலை உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. அதேபோன்று வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கி.பி.1906-இல் இயற்றப்பட்ட சட்டப்படி இங்கிலாந்தில் நிறுவப்பட்டன. 1844-இல் சர்வில்லியம் பீவரேஜ் என்பவரால் உருவாக்கப்பட்ட பீவரேஜ் திட்டத்தின்படி அனைத்து வகையான தொழிலாளர்கள் பாதுகாப்புக்குக் காப்பீட்டுத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பிரிட்டனில் மக்களின் கல்வியை மேம்படுத்த அரசு பல சட்டங்களை இயற்றியது. கி.பி.1870-இல் தேசிய அளவில் கல்விமுறையை ஒழுங்குபடுத்த தொடக்க கல்விச் சட்டம் (Elementary Education Act) என்ற ஒரு சட்டம் இயற்றியது. இச்சட்டத்தின்படி குழந்தைகள் வருகைப் பதிவு கட்டாயமாக்கப்பட்டது. கி.பி.1891-இல் இயற்றப்பட்ட சட்டப்படி தொடக்கக் கல்வி இலவசமாக்கப்பட்டது. இத்துடன் தொழிற்கல்விக்கும் ஊக்கம் கொடுக்கப்பட்டது. கி.பி.1902-இல் இயற்றப்பட்ட சட்டப்படி நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உயர்நிலைப் பள்ளிகள் நிறுவப்பட்டன. கல்வி நிலையங்களை மேற்பார்வையிட கல்வியாளர் குழுக்கள் (Education Committee) உருவாக்கப்பட்டன. கி.பி.1918-இல் இயற்றப்பட்ட சட்டம் பலவகைகளில் கல்வியின் தரத்தை உயர்த்த விதிகள் வகுத்தது. இதுபோன்ற கல்வி மேம்பாட்டுச் சட்டங்கள், சமூக பாதுகாப்புக்கான நோய்க் காப்பீடு, முதியோர்க் காப்பீடு, வேலையில்லாதோருக்கு உதவி, ஊனமுற்றோருக்கான உதவி போன்ற திட்டங்களுக்கும் பிரான்ஸ் நாட்டிலும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை அல்லாமல் பல தொழிற்சாலைகளில் சம்பள வாரியம் போன்ற அமைப்புகள் உருவாக்கி தொழிலாளர்களுக்கு அதிகபட்டச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. இவையெல்லாம் அரசு சமூக நல அரசுகள் என்ற நிலையை உருவாக்க இயற்றப்பட்ட சட்டங்களாகும்.

**தொழிற்சங்க வளர்ச்சி:**

தொழிற்சங்கங்களின் வளர்ச்சி என்பது தொழிற்புரட்சியால் ஏற்பட்ட தாக்கம் ஆகும். தொழிலாளர்கள் தங்கள் வேலை நிலையிலும், வாழ்க்கை நிலையிலும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, தொடர்ந்து செயல்பட அமைக்கப்பட்ட அமைப்புகளே தொழிற்சங்கங்கள் என்பன. அவைகளின் முக்கிய நோக்கம், தங்கள் வேலை நேரத்தைக் குறைப்பது, அதிக ஊதியம்

கோருவது, சம்பளக் குறைப்பைத் தடுப்பது போன்றவையாகும். இவ்வியக்கம் தொழிலதிபர்களின் கூட்டமைப்பை எதிர்த்துத் தங்கள் உரிமைகளை காப்பதற்காகத் தொழிலாளர்களால் அமைக்கப்படும் சங்கங்களாகும். தொழிலாளர்கள் காலம் முழுவதும் கூலித் தொழிலாளியாக இருப்பதை உணர்ந்து. தங்கள் தொழிலதிபர்களால் ஏற்படும் இன்னல்களை தனிப்பட்ட முறையில் எதிர்க்க வல்லமையற்ற நிலையில் கூட்டாகச் சேர்ந்து போராடுவது என்ற நிலையில் அமைக்கப்பட்ட அமைப்புகள்தான் தொழிலாளர் சங்கங்கள் என்பன. முதன் முதலில் இத்தகைய அமைப்புகள் இங்கிலாந்தில் தோன்றின.

ஆரம்பகால தொழிற்சங்கங்கள் சிறுசிறு அமைப்புகளாக இருந்தன. அவைகள் ஒருமித்த கருத்து கொண்டு கூட்டாகத் தொழிலதிபர்களிடம் பேரம் பேசும் அமைப்பாகவோ, தொழிலாளர் நலன் கருதி தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளிலோ ஈடுபடவில்லை. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர்தான் புரட்சி மனப்பான்மை இங்கிலாந்திலும் ஏற்பட்டது. இத்தகைய புரட்சி இங்கிலாந்திலும் ஏற்பட்டு விடும் என்று அஞ்சிய பிரிட்டன் அரசு கி.பி.1799லும் 1800-லும் குழுமச் சட்டங்கள் (Combination Acts) எனும் சட்டங்களை இயற்றி தொழிலாளர்கள் தொழிலாளர் சங்கம் என்ற போர்வையில் கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடாத வகையில் பல சரத்துக்களை உருவாக்கினர். இச்சட்டங்களால் தொழிலாளர் சங்க அமைப்புகள் தலைமறைவாகச் செயல்படத் தொடங்கின. இச்சட்டங்கள் கி.பி.1824 வரை அமலில் இருந்தது. கி.பி.1800 முதல் 1824 வரை தொழிற்சங்க இயக்கங்கள் பல இன்னல்களைச் சந்தித்தன.

ஜோசப் ஹூம் என்ற தத்துவமேதையும், பிரான்ஸிஸ் பிளேஸ் எனும் தையற் தொழிற் வல்லனரும் முயற்சி செய்து போராடி குழுமச்சட்டங்களை ரத்து செய்தனர். அதன் விளைவாகத் தொழிலாளர் சங்கங்களுக்குச் சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைத்தது. அதன் படி 1824-ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டு, தொழிலாளர்கள் கூட்டாகச் சேர்ந்து தங்களின் ஊதியம் மற்றும் வேலைநேரம் ஆகியவை குறித்துத் தங்கள் தொழில் அதிபர்களிடம் பேரம் பேசி தீர்வு காண உரிமை வழங்கப்பட்டது. ஆனால் தொழிலதிபர்களைப் பயமுறுத்தவோ, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவோ அவர்களுக்கு உரிமைகள் இல்லை. இந்த உரிமைகளைத் தொழிலாளர்கள் தவறாகப் பயன்படுத்தத்

தொடங்கினர். சட்டமியற்றிய ஓராண்டுக்குள் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கலவரங்களில் ஈடுபட்டனர். எனவே கி.பி. 1825-இல் மற்றொரு சட்டம் இயற்றப்பட்டு, வேலை நேரம், அவர்களின் ஊதிய விகிதம் ஆகியவை தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் கூட்டு நடவடிக்கையில் இறங்கி போராட்டம் செய்தால் இங்கிலாந்தில் பொதுவாக உள்ள கிரிமினில் சட்டப்படி தொழிலாளர்களைத் தண்டிக்கலாம் என்று வகை செய்யப்பட்டது. அதே போன்று வேலைநிறுத்தம் செய்வோர்கள் எந்தவகையிலும் வேலைக்குச் செல்ல இருக்கும் தொழிலாளர்களுக்கு இடையூறு விளைவிக்க கூடாது என்றும் அச்சட்டம் வலியுறுத்தியது.

கி.பி.1829 முதல் சிறு சிறு தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து பெரிய அமைப்புக்களை உருவாக்க முயற்சித்தன. 1834-இல் தேசிய மகா தொழிற்சங்கம் (Grand National Consolidated Trade Union) என்ற ஒரு அமைப்பு, ராபர்ட் ஓவன் என்பவர் முயற்சியால் உருவாக்கப்பட்டது. ஆனால் அதற்குத் தற்காலிக வெற்றிதான் கிடைத்தது. அதற்கடுத்தபடியாக கி.பி. 1850-க்குப்பின் புதிய மாதிரி தொழிற்சங்கம் என்ற ஒரு அமைப்பு இங்கிலாந்தில் உருவாயிற்று. புதிய புதிய தொழிற்சங்கங்கள், புதிய விதமான தலைவர்கள் தலைமையில் உருவாயின. அவற்றிற்கு ஒரு உதாரணம் கூறவேண்டுமாயின் ஒருங்கிணைந்த பொறியாளர் சங்கம் என்ற ஒரு அமைப்பைக் கூறலாம். இதனுடைய முக்கிய அம்சங்கள் வருமாறு:

1. இது சிறு சிறு தொழிற்சங்களுக்கு மாறாகத் தேசிய அளவிளான ஒரு அமைப்பு
2. இது தொழில் நுட்ப தொழிலாளர்கள் கொண்ட அமைப்புடையது.
3. அதிகமான உறுப்பினர் கட்டணம் வசூலித்தது.
4. அதன் உறுப்பினர்களுக்குச் சங்கத்தின் மூலம் குடும்பநலச் சலுகைகளை வழங்கியது. இச்சங்கத்தின் முக்கியத்துவம் இதன் நிதிவளத்தில் அமைந்தது.

இது போன்ற பலம் பொருந்திய சங்கம் இதற்கு முன்னர் அமையவில்லை.

கி.பி. 1860-களில் தொழிற்சங்கங்கள் பின்னடைவைச் சந்தித்தன. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவை: தொழிற்சங்கங்கள் கடைப்பிடித்த வன்முறைச் சம்பவங்கள். மற்றொன்று தொழிற்சங்கங்களின் நிதி சேமிப்புச் சம்பந்தமாக, சங்கங்களுக்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள். ஆனால் கி.பி.1875-இல் இயற்றப்பட்ட சூழ்ச்சி மற்றும் சொத்துப் பாதுகாப்புச் சட்டம் தொழிற்சங்கங்களுக்கு மீண்டும் பல உரிமைகளை அளித்தது. இச்சட்டப்படி வேலைநிறுத்தம், அமைதியான முறையில் மறியல் செய்வது, தங்கள் தொழிற்சாலை உரிமையாளரிடம் தொழிலாளர்கள் பேரம் பேசுவது போன்றவைகளுக்குச் சட்ட பூர்வ அங்கீகாரம் கிடைத்தது.

தொழிற் சங்க இயக்கத்தில் அடுத்த முக்கியகட்டம் தொழில்நுட்பம் அல்லாத தொழிலாளர் (Unskilled Labourers) அமைப்பு ஆகும். இத்தகைய தொழிலாளர் அமைப்புகளும், மிகத் தீவிரமாகப் போராடத் தொடங்கின. அவர்கள் போராட்டம் வலிமையானதாகவும், வன்முறையில் இறங்கக் கூடியதாகவும் சர்வதேச சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்க கூடியதாகவும் அமைந்திருந்தது. அவர்கள் நடத்திய பல வேலை நிறுத்தங்களில் கி.பி.1889-இல் நடைபெற்ற லண்டன் டாக் (London Dock) போராட்டம் மிக முக்கியமான ஒன்று. இப்போராட்டம் பொதுமக்களின் முழு ஆதரவைப் பெற்றமையால் வெற்றி பெற்றது. கி.பி1893-இல் அமைக்கப்பட்ட சுதந்திர தொழிற்கட்சி(Independence Labour Party)யும் 19-ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட தொழிற்கட்சியும் தொழிற் சங்கங்களுக்கு நல்ல ஆதரவைக் கொடுத்தன. 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நீதிமன்ற உத்தரவுகளால் தொழிற்சங்கங்களுக்குச் சில பின்னடைவுகள் ஏற்பட்டாலும் முதல் உலகப் போருக்குப் பின்னர் தொழிற்சங்க இயக்கம் வலுப்பெற்றது. தொழிற்சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றதோடு, சிறு சிறு தொழிற் சங்கங்கள் ஒன்று சேர்ந்து பெரிய அமைப்புக்களை உருவாக்கின.

பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் தொழிற்சங்க இயக்கங்கள் பிற்காலத்தில்தான் தோன்றின. கி.பி.1864 வரை பிரான்ஸ் நாட்டில் தொழிலாளர் சங்கங்கள் சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டிருந்தன. அவ்வாண்டுக்குப் பின்னர் சிறுசிறு அமைப்பில்

சங்கங்கள் தோன்றத் தொடங்கின. அவற்றின் நிதி நிலையும் சீராக இல்லை. உறுப்பினர் கட்டணம் மிகக்குறைவே. அக்கட்டணங்களை முறையாக உறுப்பினர்கள் செலுத்துவது கிடையாது. சராசரியாக ஒரு தொழிற்சங்கத்தில் 200 உறுப்பினர்கள்தான் இருந்தனர். பிரெஞ்சுத் தொழிற்சங்கங்கள் பலவீனமானமைக்குத் தொழிற் சங்கங்களிடையே இருந்த கூட்டமைப்பு முறையும், அவர்கள் எதையும் உடனடியாகப் புரட்சி முறையில் காரியம் சாதிக்கவேண்டும் என்று இருந்த எண்ணமும் ஆகும். இரண்டாவதாக, தொழிலாளர்கள் சங்கங்களில் சேரும் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே இருந்தது. எனவே தொழிற்சங்கங்களின் செயல்பாடு பிரான்சு நாட்டைப் பொறுத்தவரை மிகுதியாகச் சொல்லும் அளவிற்கு இல்லை.

**ஜெர்மனி:**

19-ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை ஜெர்மனி தொழிற்துறை மிக்க நாடு என்று கூறும் அளவில் இல்லாமையால் தொழிற்சங்க இயக்கமும் மிகச் சாதாரணமாக இருந்து வந்தது. ஏனைய நாடுகளைவிட ஜெர்மனியில் அரசியலும், தொழிற்சங்க இயக்கமும் ஒன்றுபட்டே செய்ல்பட்டு வந்தன. எனவே அரசியல் கொள்கையின் அடிப்படையில் தொழிற்சங்க இயக்கம் மூன்று பிரிவுகளாக இயங்கிவந்தன. அவை: 1.சுதந்திர அல்லது சோசியலிசத் தொழிற்சங்கம் 2.தாராள அல்லது ஜனநாயகத் தொழிற்சங்கம் 3.கிருத்துவத் தொழிற் சங்கம் என்பன. ஜெர்மனிய தொழிற்சங்கங்கள், தொழில் அதிபர்களுடன் பேரம் பேசி, சம்பள விகிதம், வேலை நேரம் ஆகியவை பற்றி முடிவு செய்து ஒப்பந்தங்கள் போடுவதில் மிகவும் மெதுவாகச் செயல்பட்டன. கி.பி.1918-க்குப் பின்னர்தான் தொழிற் சங்கத்தினரும், தொழிற்சாலை உரிமையாளர்களும் கூட்டாகப் பேரம் பேசி ஒப்பந்தங்கள் அமைத்துக் கொள்ள சட்டபூர்வ அங்கீகாரம் பெற்றனர். இத்தகைய நிலைக்குப் பின்னர் தொழிலாளர்கள், குறிப்பாக தொழில் நுட்பம் அல்லாத தொழிலாளர்கள் அதிக அளவில் சங்கத்தில் உறுப்பினர்ளாகச் சேரத்தொடங்கினர். ஆனால் 1933-இல் நாஜி கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் தொழிற்சங்கங்களுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. நாஜி ஆட்சியின் போது தொழிற்சங்கங்களை ஒழுங்குபடுத்தும் வகையில் அரசுத் தொழிலாளர் கழகங்கள் என்ற அமைப்பினை உருவாக்கி, தொழிற்சங்கங்களுக்கு இருந்த சுதந்திரமான கொள்கைகளைத் தடைசெய்தது. வேலை நிறுத்தம் தடை செய்யப்பட்டது. ஒவ்வொரு

மாவட்டதிலும் தொழிலாளர்கழகங்கள் என்ற அரசு அமைப்பில் (Labour Trustees) உள்ள அரசு அதிகாரிகளே வேலை நேரம் எவ்வளவு என்பதையும் சம்பளம் எவ்வளவு என்பதையும் நிர்ணயம் செய்தனர்.

**சோசியலிசத்தின் தோற்றம்:**

சோசியலிசம் எனும் சொல் ஆங்கிலமொழிக்குப் புதுமையான ஒன்று. கி.பி.19-ஆம் நூற்றாண்டு வரை இந்தச் சொல் ஆங்கிலமொழியில் வழக்கில் இல்லை. ராபர்ட் ஓவன் என்பவர்தான் தன்னுடைய மேடைப் பேச்சுகளில், கருத்தரங்குகளில் இவ்வார்த்தையைப் பயன்படுத்தினார். இந்தியாகூட தன்னுடைய அரசியல் அமைப்பில் சோசியலிச ஜனநாயக நாடு என்று இச் சொல்லைச் சேர்த்துக் கொண்டது. உலகில் உள்ள பல நாடுகளில் சோசியலிசக் கட்சிகள் நடைமுறையில் உள்ளன. பலவிதமான சோசியலிசத் தத்துவங்கள் நிலவுகின்றன. அவற்றுள் சோசியலிசக் கற்பனை என்பது ஒன்று. பிளாட்டோ முதல் தாமஸ்மன்றோ மற்றும் ஹரிங்டன் வரை சமதர்ம சமுதாயம் பற்றிய பல கருத்துக்கள் அவர்களின் பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும், புத்தக வடிவிலும் இருந்து வருகின்றன. எழுதப்பட்ட வரலாறு தோன்றிய காலம் முதல், புதிய விவிலியம் (New Testament) உள்ளிட்ட பல வகையில் சொத்துக்கள் பொதுவுடமையாக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கள் நிலவின. கிராமியப் பொருளாதாரச் சமுதாயத்தில் திறமைக்கேற்ற வேலை தேவைக்கேற்ற கூலி என்ற கொள்கையின் அடிப்படையில் சமூக பொருளாதார அமைப்பு நிலவி வருகின்றது. சோசியலிச வாதிகளான ஓவன், பூரியர், சைமன், லூயி பிளாங் போன்றோர்கள் அரசியல் ரீதியாகவோ, புரட்சியின் மூலமோ சோசியலிசத்தை உருவாக்க முடியவில்லை. ஆனால் அவர்கள் கல்வி மற்றும் பிராசாரத்தின் மூலம் சோசியலிசக் கருத்துக்களைப் பரப்பினர். ஆனால் அவை தோல்வியில் முடிந்தன.

**கார்ல்மார்க்ஸ் (1818-1883):**

ஹெகல் என்ற தத்துவமேதையின் மாணவரான கார்ல்மார்க்ஸ் தன்னுடைய ஆறாவது வயதில் ஜெர்மன் லூதரன் திருச்சபையில் மதமாற்றம் செய்யப்பட்டவர். அவர் பொதுவாக விஞ்ஞான சோசியலிசத்தைத் தோற்று வித்தவர் என்று கருதப்படுகிறது. அவருடைய கருத்துப்படி விஞ்ஞான சோசியலிசமும், கம்யூனிசமும் ஒன்றுதான் என்று கூறுகிறார். கார்ல்மர்க்ஸ் கற்றறிந்த அறிஞர். அவர் பல்கலைக்கழகத்தில்

பேராசிரியராக இருந்தவர். விஞ்ஞான சோசியலிசத்தின் புதிய விவிலியம் என்று கருதப்படும் கம்யூனிஸ்ட் கோட்பாடு எனும் தத்துவத்தை கி.பி.1848-இ கார்ல்மார்க்சும், பிரடெரிக் எங்கலும் சேர்ந்து வெளியிட்டனர். இங்கிலாந்தில் தலைமறைவராக இருக்கும் போது தாஸ் கேபிடல் (Das Capital) எனும் நூலை எழுதினார். அப்புத்தகம், கம்யூனிசத்தின் விவிலியம் (Bible) என்று கருதப்படுகிறது. விஞ்ஞான சோசியலிசத்தின் பொருளாதார, சமூகச் சிந்தனைகள் இந்த இரு புத்தகங்களின் அடிப்படையில் அமைந்துள்ளன. லெனின் சோசியலிசத்திற்கு ஆற்றிய பங்கு குறைந்த மதிப்புடையது அல்ல.

மார்க்சீய கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகள் வருமாறு:

ஐரோப்பா, இங்கிலாந்து ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள தொழிற்புரட்சி, தொழிற்சாலை உரிமையாளர்களின் நல்வாழ்வுக்காக உருவாக்கப்பட்டவை. நடுத்தர மக்கள் இத்தகைய தொழிற் புரட்சியை வரவேற்றமைக்குக் காரணம், அவர்களுக்கு உடனடியாகச் சில சலுகைகள் கிடைத்தமையால்தான். இத்தகைய பொருளாதார அமைப்பு லாப நோக்கோடு ஆக்கப்பட்டதே ஒழிய சேவை மனப்பான்மையோடு தொடங்கப்படவில்லை. தொழிற்புரட்சியால் ஏற்பட்ட லாபம் மற்றும் பலன்கள் எல்லாம் தொழிலதிபர்க்கும் மற்றும் அவர்களுடைய நண்பர்களான பூர்ஸ்வாக்கள் அல்லது பணக்கார மக்கள் ஆகியோருக்கே சென்றடைந்தன. இத் தொழிற்புரட்சியால் ஏற்பட்ட பொருளாதார அமைப்பில் பலன் பெறாத லட்சக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களால் உருவாக்கப்பட்ட மதிப்புமிக்க இத்தொழிற்புரட்சியின் பலனும் லாபமும் முதலாளிகளையே சென்றடைந்துள்ளன. இத்தகைய சமூகப்பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் புரட்சியின் மூலம்தான் முடியும் என்று கார்ல்மார்க்ஸ் கூறினார். சமூகத்தில் ஏற்பட்ட எல்லா மாற்றங்களும் புரட்சியின் மூலம்தான் ஏற்பட்டுள்ளன. பூர்ஸ்வாக்கள் தாங்களாகவே முன்வந்து தங்களுடைய அதிகாரததையும் லாபத்தையும், தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பார்கள் என்று கருதமுடியாது. எனவே வன்முறைப் புரட்சியின் மூலம்தான் தொழிலாளர்கள் தங்கள் உரிமையைப் பெறமுடியும். முதலாளித்துவ வர்க்கத்தின் நலன் உலக அளவிலானது எனவே, உலக அளவில் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து

போராட்டம் செய்வது அவசியமான ஒன்று என்று கூறுகிறார். சோசியலிசக் கருத்துக்களை வெளியிடும் தத்துவ மேதைகளால் மாற்றத்தை உருவாக்க முடியாது என்று கருதுகிறார். மேலும் புதிய உலகிற்குத் தனியார் சொத்துரிமை தேவையில்லை என்று கருதும் நிலையில் அனைத்துச் சொத்துக்களையும், உற்பத்திக்குத் தேவையான கருவிகளையும் பொதுவுடமை ஆக்கவேண்டும் என்று கூறுகிறார். இத்தகைய மாற்றத்தை உருவாக்க வேண்டுமானால் ஒரு வன்முறைப் புரட்சி ஏற்படவேண்டும் என்றும் கூறுகிறார்.

கார்ல்மார்க்ஸின் கருத்துக்கள் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மனித குலம் போற்றும் சிறந்த தத்துவமாக விளங்கிற்று. மார்க்சீய சோசியலிசம் சோவியத் ரஷ்யா, சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பரவியது. ரஷ்யாவில் 1917- முதல் மார்க்சீய தத்துவத்தை நடைமுறைப்படுத்திய செயல் லெனினைச் சாரும். சீனாவிலும் அந்நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைகேற்றவாறு மார்க்சீயக் கொள்கையில் மாற்றம் செய்து, அக்கொள்கையைச் செயல்படுத்தி வருகின்றனர். உலகில் உள்ள ஜனத்தொகையில் பாதிப்பேர் மார்க்சீய கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சோசியலிசத்தில் பலவகை உண்டு. அனார்க்கிசம் என்பது தனியுடமையை எதிர்ப்பதோடு, அரசுக்குக் கட்டுப்படாத பகிர்ந்தளிக்கும் சமூகப் பொருளாதாரத்தை வலியுறுத்துகிறது. பிரான்ஸில் அழைக்கப்படும் சிண்டிகா லிசம் (Syndicalism) என்பதும், இங்கிலாந்தில் பொதுவாக அழைக்கப்படும், கில்டு சோசியலிசம் (Guild Socialism) என்ற அமைப்பும், தொழிற்சங்க அடிப்படையில் தொழிலாளர் அமைப்பாக அமைந்துள்ளன. இவ்வமைப்புக்குள் தொழிற்சாலைகளில் போராட்டம் செய்வதன் மூலமும், கூட்டாகச் சேர்ந்து பேரம் பேசுவதன் மூலமும்தான் சோசியலிசத்தை உருவாக்க முடியும் என்று நம்பியது. கில்டு அல்லது சங்கங்கள், வர்த்தகம், தொழிற்சாலை மற்றும் தொழிலாளர்கள் ஆகியவைகளின் பிரிதிநிதிகளாக உள்ளன என்று கருதினர். ஸ்காண்டிநேவியன் நாடுகள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வெவ்வேறு துறைகளில் சோசியலிசம் மற்றும் சோசியலிசப் பொருளாதாரத்தை நிறுவமுடியும் என்று கருதுகிறது. ஜெர்மனியில் ஜனநாயகப் புரட்சியின் மூலம் ஜனநாயக சோசியலிச ஜெர்மனியை உருவாக்க முயற்சித்தனர். அத்தகைய முயற்சியில் நாஜி (National Socialisum) சோசியலிசத்தை

முறியடித்தனர். தேசிய சோசியலிசம் என்ற அமைப்பு பெரும் தொழிற்சாலைகளையும், போக்குவரத்து, தொலைதொடர்புத்துறை ஆகியவற்றையும், அரசுக் கட்டுப்பாட்டில் நாட்டு மக்கள் நலன் கருதி வைத்துக் கொள்ளவேண்டும் என்பது. இங்கிலாந்தில் லேபர் கட்சி கடைப்பிடித்து வந்த பாகியன் சோசியலிசம் (Fahien Socialisum) என்பது நாடாளுமன்ற முறையில், பெரும் தொழிற்சாலைகள், போக்குவரத்து, தொலைதொடர்பு, மின்சக்தி மற்றும் இயற்கை கனிமவளங்கள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்குவதில் சோசியலிசத்தை உருவாக்க முடியும் என்று நம்பியது. சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலின் தலைமையில் உழைப்பாளர்களின் சர்வாதிகாரத்தைக் கம்யூனிசக் கட்சியினர் மூலமாக நிலைநிறுத்தி மார்க்ஸ் லெனின் கொள்கையின் அடிப்படையில் 'ஒரு நாட்டில் சோசியலிசம்' என்னும் கொள்கையை செயல்படுத்தியது. இப்போதைய சூழ்நிலையில் உலகம் முழுவதும் மனித வாழ்க்கையில் சோசியலிசம் ஏதேனும் ஒரு வகையில் முக்கிய அங்கம் வகிக்கிறது.

## (அ) தேசியத்திற்கு எதிரான பன்னாட்டியம்

கி.பி.19-ஆம் நூற்றாண்டுகளில் தேசியம் தலைதூக்கியிருந்தது. காரணம் அக்காலத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலை ஆசியாவில் பல நாடுகள் குடியேற்ற நாடுகளாக இருந்தன. ஐரோப்பாவில் இருந்த பல நாடுகள் சிறு சிறு எல்லைகளைக் கொண்ட பல பகுதிகளாக இருந்து வந்தன. ஒரே விதமான கலாச்சார, பொருளாதார வாழ்க்கை கொண்ட மக்கள், ஒன்றுபட்ட பல தேசிய அமைப்பில் வாழ விரும்பினர். இந்தியா போன்ற குடியேற்ற நாடுகள் விடுதலை வேண்டி தேசிய உணர்வுடன் போரிட்டன.

ஐரோப்பாவைப் பொறுத்தமட்டில் தேசிய உணர்வால் உந்தப்பட்ட பல நாடுகளின் நடவடிக்கைகளால் முதல் இரண்டு உலகப்போர்களும் நடைபெற்றன. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலி ஜெர்மனி போன்ற நாடுகள் பல பல சிறு துண்டு பகுதிகளாகப் பிரிந்து, சிறு சிறு அரசர்கள் தலைமையின் கீழ் வாழ்ந்து வந்தன. எனவே, மாவீரன் நெப்போலியன் போன்றோர் அவர்களை எளிதில் தோற்கடித்து 39 நாடுகளைக் கொண்ட ஜெர்மனிய கூட்டமைப்பையும், இத்தாலியை 9 பகுதிகளாகப் பிரித்துப் பல சிறு நாடுகளாகவும் வைத்திருந்தார். இத்தகைய அமைப்பை விரும்பாத ஜெர்மனிய மக்கள் மற்றும் இத்தாலிய மக்கள் தங்கள் நாடுகளை ஒருங்கிணைத்து தேசிய அரசுகளை உருவாக்க வேண்டும் என்று எண்ணினர். எனவே பிரஸ்ஸியா நாட்டின் பிரதமரான பிஸ்மார்க் தலைமையில் ஜெர்மனிய கூட்டரசு நாடுகளும், விக்டர் இமானுவேல், கவுண்ட்கவூர், மாஜினி, கரிபாலியு ஆகியோரின் முயற்சியால் இத்தாலியும் ஒருங்கிணைந்த தேசிய அரசுகளாக ஆயின. இத்தேசிய அரசுகளின் தேசிய உணர்வால் முக்கூட்டு உறவு, முக்கூட்டு உடன்படிக்கை என்று கூட்டணிகள் அமைக்கப்பட்டமையால் முதல் உலகப்போர் ஏற்பட்டது.

முதல் உலகப் போரின் முடிவில், உலகில் அமைதியை உருவாக்கவேண்டும் என்ற நோக்கோடு அனைத்து நாட்டுக்கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. இதுவும் ஒரு வகையில் பன்னாட்டு அமைப்புதான். வெற்றி பெற்ற நாடுகள் வெர்சே உடன்படிக்கையின் போது பல

கட்டுப்பாடுகளை, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மீது விதித்ததோடு அவ்விரு நாடுகள் அனுமானத்திற்குள்ளாகும் வகையில், இழப்பீட்டுத்தொகை அதிகம் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைகளையும் விதித்தன.

பெருமை குன்றிய இத்தாலிய மக்களும், ஜெர்மனிய மக்களும், தங்கள் தங்கள் நாடுகளின் பெருமையைத் தரணியில் உயர்த்தவேண்டும் என்ற தேசிய உணர்வோடு வெறியுடன் இருந்து வந்தனர். தங்கள் நாட்டின் பெருமையைக் காக்கும் வகையில் ஏதேனும் வலிமை வாய்ந்த தலைவர்கள் வரமாட்டார்களா? என்று எண்ணிக் கொண்டிருந்த வேலையில்தான் முசோலினி இத்தாலியிலும் ஹிட்லர் ஜெர்மனியிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியைப் பிடிக்கின்றனர். அவர்கள் தங்கள் பெருமையை மீண்டும் நிலைபெறச் செய்யவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் ஆட்சி செய்தமையால், அந்தந்த நாட்டு மக்கள், இவர்கள் எடுக்கும் அனைத்து முடிவுக்கும் முழு ஆதரவு கொடுத்தனர். அதனால் முசோலினியுடைய கொள்கையைப் பாசிசம் என்றும், ஹிட்லரின் கொள்கையை நாசிசம் என்றும் தற்போது வர்ணித்து மற்ற நாடுகள் அக்கொள்கைகளைக் குறை கூறுகின்றன. குறைகூறும் நாடுகள் இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற நாட்டவரே. பாசிசம், நாசிசம் என்பது, தலைவனை நம்பு, தலைவனுடைய உத்தரவைச் செயல்படுத்த தலைவனுக்காகப் போரிடும் (Belive, obey and fight) என்பது தான். முசோலினியும், ஹிட்லரும் தங்கள் நட்டின் மீது உள்ள தேசப்பற்றின் காரணமாக, தேசத்தின் பெருமையை நிலை நிறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி செய்தமையால், இத்தாலி மற்றும் ஜெர்மனியில் வாழ்ந்த மக்கள் அவர்கள் நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டனர். இத்தகைய மிதமிஞ்சிய தேசிய உணர்வுதான் இரண்டாம் உலகப் போர் ஏற்படவும் காரணமாக அமைந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகில் அமைதியைக் காக்கும் நோக்கோடு அனைத்து நாட்டுக் கழகத்திற்குப் பதிலாக ஐ.நா.சபை அமைக்கப்பட்டது. இதுவும் ஒரு பன்னாட்டு அமைப்புதான். ஆனால் இந்த அமைப்பு உலகில் அனைத்து நாடுகளின் நன்மை கருதி முடிவு எடுக்கும் அமைப்பாக விளங்குகிறது.

ஆனால் 20-ஆம்நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகில் உள்ள ஒத்த கருத்துடைய பல நாடுகள், ஓரே கண்டத்தில் உள்ள பல நாடுகள், உலகின் ஒவ்வொரு பகுதிகளிலும் வாழும் பல நாடுகள் தங்கள் தங்கள் நலனைக் காத்துக் கொள்ள தங்கள் தேசிய அமைப்பு இருந்த போதிலும் பன்னாட்டுக் கூட்டுறவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றன. அவ்வாறு அமைக்கப்பட்ட அமைப்புகள் வடஅட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (NATO), தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த அமைப்பு (SEATO) போன்ற அமைப்புகளும், G.8 நாடுகள் என்ற அமைப்பு, இந்தியா போன்ற தெற்கு ஆசிய நாடுகளைக் கொண்ட சார்க் (SAARC) அமைப்பு போன்றவையாகும்.

ஐரோப்பிய வரலாற்றைப் பொறுத்த மட்டில் முதல் இரண்டு உலகப் போர்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது ஐரோப்பிய நாடுகளிடையே நிலவி வந்த மிதமிஞ்சிய தேசிய உணர்வுகள்தான். மேலும் ஐரோப்பிய நாடுகளில் பல, கடல்வழிக் கண்டுபிடிப்பால் பயன்பெற்ற நாடுகளானதால், உலகின் பல்வேறு பகுதிகளில் குடியேற்றங்களை அமைத்து, பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மிகுந்த செல்வாக்கு பெற்ற நாடுகளாக இருந்து வந்தன. ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அக்குடியேற்றத்தில் பெரும்பாலானவை விடுதலை பெற்றுவிட்டமையால் தங்கள் தங்கள் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேறு வழிகளை நாட வேண்டிய தேவை ஏற்பட்டது. கலாச்சாரத்தில் ஓரளவு ஒத்த தன்மையுடைய மேற்கு ஐரோப்பிய நாடுகள், பெருளாதாரக் கொள்கையில் முதலாளித்துவ கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை இருந்தமையால், தங்களுக்குள் ஒரு ஒற்றுமையை உருவாக்கிக் கொள்ள பன்னாட்டு அமைப்பு ஒன்றை உறுவாக்கினர். அவ்வமைப்பு முதலில் ஐக்கிய அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேவியத் ரஷ்யாவுக்கு எதிராகத் தன் பக்கம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக மார்சல் திட்டத்தை 1947-ஆம் கொண்டு வந்தது. பின்னர் மார்சல் திட்டத்தில் பயனடையும் அனைத்து மேற்கு ஐரோப்பிய நாடுகளும் ஒன்று சேர்ந்து ஒரு பொருளாதாரக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியது. அதற்கு ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு (Europan Economic co-oeration) என்று பெயர். ஜெர்மனி மீது சந்தேகம் இருந்தமையால் இவ்வமைப்பு சிறப்பாகச் செயல்படவில்லை பிரான்ஸ் தன் நாட்டின் நலன் கருதி "ஸ்கூமேன்

திட்டம்" (Sehuman Plan) எனும் திட்டத்தையும் "பிளீவன் திட்டம்" (Pleven Plan) எனும் பன்னாட்டு படைத்திட்டத்தையும் கொண்டுவர முயற்சித்தது. ஆனால் பிளீவன் திட்டம் நிறைவேறவில்லை. ஸ்கூமேன் திட்டப்படி ஐரோப்பிய நிலக்கரி மற்றும் இரும்பு சமுதாய அமைப்பு (Eurpian Coal and steel community) ஒற்றை 1952-ல் நிறுவியது. அதன்படி இண்டாம் உலகப் போரின் போது நலிந்து இருந்த ஐரோப்பிய நாடுகள் கனரகத் தொழில்களைப் புதுப்பித்து உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. இந்த அமைப்பு கி.பி.1952 முதல் 15 ஆண்டுகள் இருந்து வந்தது.

அடுத்து 1957-இல் ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம் (Europian Economic Community) என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு, ஐரோப்பிய வாணிபத் தலங்களில் தங்கள் பொருள்களைத் தாராளமாக விற்பதற்கு வழிவகுத்தனர். ஆனால் இந்த அமைப்பு, அதில் உள்ள உள்ள உறுப்பினர் நாடுகளின் சுதந்திரத்தையோ, உரிமையையோ கட்டுப்படுத்தும் அமைப்பாக இல்லை. இரண்டாம் உலகப்போர் நடைபெற்று 20 ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முதலாளித்துவச் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில் ஐரோப்பிய பொருளாதார அமைப்பு (EEC) உறுப்பினர் நாடுகளுக்கு நல்ல உதவியாக அமைந்தது என்று கருதப்படுகிறது. 1980-க்குப் பின் ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (EEC) என்பது ஐரோப்பியச் சமுதாயம் (Europian Community) என்று மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1993-இல் ஐரோப்பிய ஒன்றியம் (European Union) என்று மாற்றப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியம் தேவை என்று விரும்புவோர், இவ்வொன்றியம் ஐரோப்பிய பகுதியில் உள்ள மக்களை, அவர்களின் தேசிய வேறுபாடுகள் மற்றும் தேசிய போட்டிகளில் இருந்தும் விடுவித்து அம்மக்களிடைய நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளது என்று கூறுகின்றனர். சோசியல் ஜனநாயகவாதிகள் மற்றும் கம்யூனிஸ்டுகள் பொதுவாக தேசியவாதத்தில் நம்பிக்கை வைத்தவர்கள். அவர்கள் கூட ஐரோப்பிய ஒன்றியத்தைப் பன்னாட்டு அமைப்பின் வளர்ச்சி என்று கருதுகின்றனர்.

கார்ல் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் போன்றோர் தொழிலாளர்கள் தங்கள் தேசிய உணர்வில் இருந்து விடுபட்டு, தங்கள் நாடுதான் உயர்ந்தது என்ற எண்ணத்தைக் கைவிட்டால்தான் முதலாளித்துவ தத்துவத்தின் பிடியில் இருக்கும் அரசுகளிடம் இருந்து விடுதலை பெறமுடியும் என்று கூறுகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள உறுப்பினர் நாடுகள் செய்து கொண்ட ஸ்ஸெங்கென் ஒப்பந்தத்தின்படி (Schengen Treaty) ஐரோப்பிய ஒன்றியத்தில் பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின், போர்த்துக்கல், இத்தாலி மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகளும் இணைந்துள்ளன. இத்தகைய நாடுகளிடையே எல்லையில்லா நிலையை உருவாக்கி தேசிய அரசுகளின் கீழ்வாழும் மக்கள், தாங்கள் ஐரோப்பிய குடிமகன் என்று என்னும் அளவிற்கு, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள உறுப்பினர் நாடுகளுக்குத் தாராளமாகச் சென்று வரவும், குடியமர்த்திக் கொள்ளவும் உரிமை பெற்றனர். ஆனால் ஐரோப்பியர் அல்லாதோருக்கு இத்தகைய உரிமை கிடையாது. இத்தகைய வளர்ச்சி பல அரசியல் தலைவர்களை அரசியலிலும், ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் எல்லை வரையறையற்ற வகையில் அரசியல் நடத்த உரிமை வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றனர். ஏனென்றால் அதிகாரம் எல்லைவரையரையை தாண்டிவிட்டதால் அரசியல் செய்வதற்கும் அத்தகைய உரிமை வேண்டும் என்று கூறத் தொடங்கினர். அதிகாரபூர்வமாகவும், ஊடகங்களிலும் மேற்கு ஐரோப்பிய, நாடுகள் பாரம்பரியமாக உயர்ந்த கலாச்சாரம், பொருளாதார வளர்ச்சிபெற்ற நாடாகவும், அரசியலில் தாரளா கொள்கைகளை கடைப்பிடிக்கும் அமைப்பாகவும் இருக்கின்றது என்று பிரசாரம் செய்யப்பட்டது. இத்தகைய நிலையில், அவர்களுடைய பார்வையில் கிழக்கு ஐரோப்பிய மேற்கு மற்றும் கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகள் பின் தங்கியவைகளாகவும், அதிகார குவிப்பு கொண்டவைகளாகவும், அடக்கு முறையைக் கையாலும் நாடுகளாகவும் இருப்பதாகச் சித்தரித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒரு ஐரோப்பிய பார்லிமென்ட் ஒன்று உண்டு. ஆனால் அதில் உள்ள உறுப்பினர் தேசிய அரசுகளின் பிரதிநிதிகளாகவே கலந்து கொள்கின்றனர். அந்தந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது இல்லை. எனவே, தேசிய அரசுகளின் நன்மைகருதி இப்பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள உறுப்பினர்கள், தங்கள் நாட்டில் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்

கொள்வதற்காக, ஐரோப்பிய பிரச்சனைகளைப் பற்றிப் பேசும் போது, தங்கள் நாட்டின் சுயநலம் கருதியே பேசி வந்தனர். உதாரணமாக, நாணய மதிப்பீடு நிர்ணயம் (Exchange rates) செய்வது, விவசாய ஒதுக்கீடு, மீன்பிடிக்கும் உரிமை, வாணிபத் தன்மை இராணுவ உறவுகள் போன்றவை பற்றிப் பேசும்போது அவ்வுறுப்பினர்களிடையே தேசிய உணர்வுகள்தான் விஞ்சி நின்றன. அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்திற்குப் பணம் ஒதுக்குவது எவ்வாறு என்பதிலும் உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு இருந்து வந்தது. எனவே, சில செய்தித் தாள்களில் இந்த ஐரோப்பிய ஒன்றியத்தை வர்ணிக்கும் போது, ஐரோப்பிய ஒன்றியம் ஒரு (Club) சங்கம் என்றும், அச்சங்கத்தில் உயர் இன மக்கள் (racially privileged) உறுப்பினர்களாக உள்ளனர் என்றும் வர்ணித்தது காரணம், ஐரோப்பிய ஒன்றியத்திற்குள், ஐரோப்பியர் அல்லாத தென்ஆப்பிரிக்கர், ஆசிரியர், மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்த்து இஸ்லாமியர்கள் யாரும் குடியமர்த்தப்படக் கூடாது என்று வலியுறுத்துகிறது. அதேபோன்று அகதிகள் யாரையும் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்துகின்றது. எனவே, ஐரோப்பிய ஒன்றியம் இனவேறுபாடு காட்டும் ஒரு அமைப்பாக விளங்குகிறது.

***(ஆ) அனைத்து நாட்டுக் கழகம்***

**தோற்றம்:**

முதல் உலகப் போரின் விளைவாக உலகில் பல தொல்லைகள் ஏற்பட்டன. மக்கள் வறுமைக்குள்ளானார்கள். நாடுகளில் அமைதியின்மையும் ஒழுங்கின்மையும் ஏற்பட்டன. இதனுடைய நிலையையுணர்ந்த உலகத் தலைவர்கள் இது போன்ற போர்களை அறவே ஒழிக்க வேண்டும் என்று முடிவு கட்டினர். அதன் பயனாய் எழுந்த அமைப்பே அனைத்து நாட்டுக் கழகம், அமெரிக்க ஜனாதிபதியான உட்ரோவில்சன் என்பவர் தன்னுடைய பதினான்கு அம்சக் கொள்கையில் இதுபோன்ற அமைப்பைக் குறிப்பிட்டுள்ளார். இதன் அடிப்படையில் இக்கழகம் 1919-இல் நிறுவப்பட்டது. இக் கழகத்தில் 27 நாடுகள் உறுப்பினர்களாயிருந்தன. 1932-இல் இவ்வெண்ணிக்கை 53 ஆக உயர்ந்தது.

**நோக்கங்கள்:**

நாடுகளிடையே ஒற்றுமையையும் அமைதியையும் காப்பதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாகும். இவ்வமைப்பில் ஐக்கிய

அமெரிக்காவும் (United States of America) கம்யூனிச ரஷ்யாவும், (United Soviet Socialist Republic), ஏனைய தோல்வியுற்ற நாடுகளும் அங்கம் வகிக்கவில்லை. ஏனைய உறுப்பினர் நாடுகள் இவ்வொப்பந்தத்தில் கையொப்பம் இட்டுள்ளது. நாடுகளுக்கிடையே தகராறு ஏதேனும் ஏற்படுமாயின். போரின்றி, அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வதுதான் இதன் நோக்கமாகும். ஏதேனும் ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது போர் தொடுக்குமாயின் போர் தொடுத்த நாட்டிற்கெதிராக ஏனைய உறுப்பினர் நாடுகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இத்தகைய சூழ்நிலையில் போர் தொடுத்த நாட்டுடன் வாணிபத் தொடர்பு போன்ற எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது. உறுப்பினர் நாடுகளின் ரகசிய உடன் படிக்கைகளும் அனைத்து நாட்டுக் கழகத்தலைவர் செயலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

**அமைப்பு:**

இக் கொள்கைகளைச் செயல்படுத்த நான்கு அமைப்புகள் அமைக்கப்பட்டன. (1) சபை, (2) குழு (3) செயலகம், (4) சர்வதேச நீதிமன்றம் ஆகியவையாகும். அனைத்து நாட்டுக் கழகத்தின் தலைமை அலுவலகம் ஜெனீவாவிலிருந்தது.

**1. சபை:**

இச் சபையில் எல்லா நாடுகளும் உறுப்பினர்களாயிருந்தன. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மூன்றுபேர் அங்கத்தினர்களாக அனுப்பப்படுவர். இது ஆண்டுக்கு ஒரு முறை கூடும். புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்க இச் சபையில்தான் முடிவு செய்யப்படும்.

**2. குழு**

இக் குழுவின் தொடக்கத்தில் ஒன்பது உறுப்பினர்களிருந்தனர். நிலையான உறுப்பினர்களாக, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. ஏனைய நான்குபேரும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை தேர்தல் மூலம் மற்ற உறுப்பினர் நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். பின்னர் இம்முறையில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதாக உயர்ந்தது. இக்குழு ஆண்டிற்கு மூன்று முறை கூடும். அவசர காலங்களிலும் கூட்டப்படும். சபையில் எடுக்கும் முடிவை இக்குழு

செயல்படுத்தும். பல கமிட்டிகளின் உறுப்பினர்களையும் இக்குழு நியமனம் செய்யும்.

**3. செயலகம்:**

தலைமைச் செயலர் (Secretary Ganeral) இதன் தலைவராவார். இச்செயலகம் உறுப்பினர் நாடுகளுடன் தபால் போக்குவரத்து வைத்துக்கொள்ளும், உறுப்பினர் நாடுகள் செய்து கொண்ட உடன் படிக்கைகளைப் பதிவு செய்யும். இது ஆண்டு முழுவதும் செயல்படும்.

**4. சர்வதேச நீதிமன்றம்:**

இதன் தலைமை அலுவலகம் 'திஹேக்' என்னுமிடத்தில் உள்ளது. இவ்விடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிபதிகள் கூடி, மன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட நாடுகளின் தகராறுகளை விசாரித்து நீதி வழங்குவர்.

**5. சர்வதேச தொழிலாளர் மன்றம்**

தி ஹேக் என்னுமிடத்தில் தொழிலாளர் செயலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இது அனைத்து நாடுகளிலும் உள்ள தொழிலாளர் நலனைக்காக்கும் பொருட்டு அமைக்கப்பட்டது.

இவை தவிர சுகாதாரம் போன்ற பல்வேறு அமைப்புகளும் இருந்தன.

***சாதனைகள்:***

சுகாதாரக்கழகம், தொழிலாளர்கழகம் போன்றவைகள் மூலமாக இது மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்துள்ளது. தொற்றுநோய்கள், காலரா போன்ற நோய்களைத் தடுக்கப் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. ஆலந்து தீவுப் பிரச்னை, பின்லாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகளுக்கிடையே பிரச்சனைகள் இருந்தன. இதனைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தது. சிறு நாடுகளுக்குப் பாதுகாப்பளித்தது. கிரேக்க நாட்டிற்கும் பல்கேரியா நாட்டிற்குமிடையே 1925-இல் போர் மூளும் சூழ்நிலை இருந்தது. இதனை இக்கழகம் தீர்த்தது. ரஷ்யா, ஹங்கேரி போன்ற நாடுகள் அனைத்து நாட்டுக்கழகத்திடம் கடனுதவி பெற்று நாட்டின் ஆட்சிமுறையை ஒழுங்குபடுத்தியது.

இத்தகைய சிறுசிறு வெற்றிகள் பெற்ற போதிலும் அனைத்து நாட்டுக்கழகம், வலிமை மிக்க நாடுகள் ஆக்கிரமிப்புச் செய்தபோது, அவற்றைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்ரமித்த போதும் இத்தாலி அபிஸீனியாவை ஆக்ரமித்த போதும் அனைத்து நாட்டுக் கழகத்தால் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது. நாடுகள் படைகளைப் பெருக்கிக் கொண்டிருந்த போது படைக்குறைப்பு நடவடிக்கைகளை எடுக்கமுடியவில்லை. ஏதேனும் முடிவு எடுக்க வேண்டுமாயின் ஒருமித்தவாக்குகள் வேண்டும் என்ற விதி இருந்தமையால் பல நல்ல முடிவுகளைச் செயலாக்க முடியவில்லை வலிமைமிக்க நாடான அமெரிக்கா இதில் உறுப்பினராக இல்லாததும் இதன் தோல்விக்கு ஒரு காரணமாகும்.

### *(இ) ஐக்கிய நாடுகள் சபை*

ஐக்கிய நாடுகள் சபை இரண்டாம் உலகப் போருக்குப்பின், அனைத்து நாட்டுக் கழகத்திற்கு மாற்றாக கி.பி.1945-இல் நிறுவப்பட்டது. நாடுகளிடையே சண்டை வராமல் தடுப்பதற்காகவும், அவ்வாறு ஏற்படும் சூழ்நிலையில், பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வாய்ப்பினை உருவாக்கும் அமைப்பாகவும் அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் சர்வதேச நாடுகளிடையே சட்டம், பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, மனித உரிமைகள் மற்றும் உலக அமைதி காத்தல் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பைப் பெறுவது ஆகும். ஐக்கியநாடுகள் சபை இத்தகைய குறிக்கோளை அடைய பல துறைகளை அமைப்புக்களாகக் கொண்டு விளங்குகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் கி.பி.2008 வரை மொத்தம் 192 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. ஐக்கிய நாடுகள் சபைகள் துணை அமைப்புகள் பல உலகின் பல்வேறு இடங்களில் அலுவலகங்களை அமைத்து நிர்வாகம் மேற்கொண்டு வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் ஆறு முக்கிய அங்கங்கள் உள்ளன. அவை 1. பொதுச்சபை 2. பாதுகாப்பு குழு 3. சமூகப் பொருளாதாரக் குழு 4. செயலகம் 5. சர்வதேச நீதிமன்றம் 6. ஐக்கிய நாடுகள் அறக்கட்டளைக்குழு (U.N.

Trusteeship Council) என்பன. இவற்றுள் ஐக்கிய நாடுகள் சபையின் அறக்கட்டளைக் குழு தற்காலிகமாகச் செயல்படாமல் உள்ளது. இவை அல்லாது (WHO) மிகப்பிரபலமான, உலக சுகாதார அமைப்பு, உலக உணவுத் திட்டம் (World Food Programme) WFP) ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதி (UNCEF) போன்ற அமைப்புகளும் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய தலைவர் அவ்வமைப்பின் முதன்மைச் செயலர் (Secretary – General) ஆவார். தற்போதைய முதன்மைச் செயலர் கொரிய நாட்டைச் சேர்ந்த பான்-கி.மூன் (Ban-ki-Moon) என்பவர் ஆவார்.

**ஐக்கிய நாடுகள் சபை தோன்றிய விதம்:**

கி.பி.1919-1946 வரை இயங்கி வந்த அனைத்து நாட்டுக் கழகத்தின் தோல்வியால் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப் பட்டது. அனைத்து நாட்டுக் கழகத்தில் ஐக்கிய அமெரிக்கா உறுப்பினராக இல்லாத ஒன்றும் அச்சபையின் தோல்விக்கு காரணம் ஆகும். ஐக்கிய நாடுகள் எனும் சொல்லை (United Nations) முதன் முதலில் பயன்படுத்தியவர் பிராங்க்லின் ரூஸ்வெல்ட் ஆவார். ஐக்கிய அமெரிக்காவின் தலைவரான அவர் இரண்டாம் உலகப் போரில் கூட்டாகச் சேர்ந்து போரிட்ட நேச நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் என்று பெயர் கொடுத்தார். ஐக்கிய நாடுகள் எனும் சொல் எழுத்துப்பூர்வமாக அங்கீகாரம் பெற்றது கி.பி. 1942 ஜனவரி 1-ஆம் தேதி ஆகும். அந்நாளில் 26 நாடுகள் ஒன்று கூடி அட்லாண்டிக் பிரகடணம் (Atlantic Charter) ஒன்றைத் தயாரித்துக் கையெழுத்திட்டு வெளியிட்டன. அதன்படி ஐக்கிய நாடுகளான 26 நாடுகளும் இரண்டாம் உலகப் போரைத் தொடர்வது என்று முடிவு செய்தன. கி.பி.1945 ஏப்ரல் மாதம் 25-ஆம் நாள் சான்பிரான்ஸிஸ்கோ நகரில், ஐக்கியநாடுகள் அமைப்பை உருவாக்க ஒரு மாநாடு நடத்தப்பட்டது. அம்மாநாட்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சாசனங்களைத் தயாரிக்க 50 நாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அல்லாத அமைப்புப் (N.G.O) பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பின்னர் அதிகாரப் பூர்வமாகக் கி.பி.1945 அக்டோபர் 24-இல் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது. அது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்களைப் பாதுகாப்புக் கவுன்சிலில் உள்ள ஐந்து நாடுகளான பிரான்ஸ், சீனக் குடியரசு, சோவியட் யூனியன், ஐக்கிய இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியவை ஒப்புதல் அளித்தன. அத்துடன் உறுப்பினர்

நாடுகளில் பெரும்பாலான (46) நாடுகளும் கையொப்பமிட்டன. பொதுச்சபையின் முதல் கூட்டம் லண்டன் நகரில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் மத்திய அரங்கில் கூடியது. அக்கூட்டத்திற்கு 51 உறுப்பினர் நாடுகளும் பாதுகாப்புகுழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**ஆட்சி மொழி:**

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அரச கூட்டங்களிலும், ஆவணங்கள் தயாரிப்பதிலும் பயன்படுத்தப்படும் மொழி சைனீஸ், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன் மற்றும் ஸ்பானிஷ் ஆகியவையாகும். ஆனால் செயலகத்தில் பயன்படுத்தி வரும் மொழி இரண்டு அவை ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு, ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்படும் போது ஐந்து மொழிகள்தான் ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டன. கி.பி.1973-இல் தான் அராபிக் மொழி ஆட்சிமொழியாகச் சேர்க்கப்பட்டது. ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் போது இங்கிலாந்து நாட்டில் வழக்கத்தில் உள்ள ஆங்கிலத்தையும் ஆக்ஷ்போர்டு முறைப்படி சொல்லையும் பயன்படுத்த வேண்டும் என்றும் சீன மொழியைப் பயன்படுத்தும் போது சாதாரண நடைமுறையில் இருந்த சீனமொழியைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. கி.பி.1971-இல் சீனக் குடியரசுக்குப் பதிலாகச் சீனாவின் மக்கள் குடியரசு நாட்டை ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகச் சேர்த்தபோது, பாரம்பரிய சீனமொழியைப் பயன்படுத்தவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

**பொதுச்சபை:**

ஐக்கிய நாடுகள் சபையில் பொதுச்சபை ஒரு முக்கிய அங்கம். இதன் அலுவலகம் நியூயார்க் நகரில் உள்ள சர்வதேச எல்லையில் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டு விவாதிக்கும் அவையாகும். இச்சபை ஆண்டுக்கு ஒருமுறை முறையாக நடைபெறும். இச்சபையை நடத்த உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்வர். இச்சபை ஆண்டுக்கு இரண்டு வாரங்கள் தொடர்ந்து நடைபெறும் இந்த இரண்டு வார கூட்டங்களில் அனைத்து உறுப்பினர்களுக்கும் தங்கள் கருத்துக்களைக் கூற வாய்ப்பு கொடுக்கப்படும். கூட்டத்தலைவர் உரை நிகழ்த்தியபின் தலைமைச்

செயலர் (Secretary – General) தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

பொதுச் சபையில் இருக்கும் உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு. வாக்கெடுப்பு சில முக்கிய பிரச்சனைகள் குறித்து நடைபெறும். சில பிரச்னைகளுக்கு 2/3 பங்கு உறுப்பினர்கள் வாக்களித்தால்தான் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். சில பிரச்னைகளுக்கு அரிது பெரும்பான்மை இருந்தால் போதும். அமைதிகாத்தல் மற்றும் பாதுகாப்பு குறித்துச் சிபாரிசு செய்தல், ஐக்கிய நாடுகள் சபையனின் பிற அங்கங்களுக்கு நடைபெறும் உறுப்பினர் தேர்தல், புதிய நாடுகளை உறுப்பினராக சேர்த்தல், உறுப்பினர் நாட்டைத் தற்காலிக நீக்கம் செய்தல், முழுமையாக நீக்கம் செய்தல் மற்றும் நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக முடிவு எடுத்தல் போன்றவற்றுக்கு 2/3 பங்கு உறுப்பினர் வாக்குகள் வேண்டும். ஏனைய பிரச்னைகளில் முடிவு எடுக்க பெரும்பான்மை வாக்கு இருந்தால் போதும். உறுப்பினர் நாடு ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்கு உண்டு. இருப்பினும் நிதி நிலை அறிக்கை சம்பந்தமாக எடுக்கப்படும் தீர்மானங்களைத் தவிர ஏனைய பிரச்சனைகளில் எடுக்கப்படும் தீர்மானம் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஐக்கிய நாடுகள் சாசனங்களுக்கு உட்பட்ட அனைத்துத் துறைகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் குறித்து பொதுச்சபை தீர்மானம் இயற்றி சிபாரிசு செய்யலாம். ஆனால் அமைதி, பாதுகாப்பு சம்பந்தமாகப் பாதுகாப்பு குழு மட்டும்தான் முடிவு எடுக்கும். இது சம்பந்தமாக பொதுக்குழு சிபாரிசு செய்ய அதிகாரம் இல்லை.

ஒரு நாட்டுக்கு ஒரு ஓட்டு என்னும் கொள்கையின்படி உலக மக்கள் தொகையில் 8% மக்கள் தொகை கொண்ட நாடுகள் பல வாக்களித்து 2/3 பங்கு அதிகம் பெற்றுத் தீர்மானங்களை நிறைவேற்ற முடியும். அதனால் உலக மக்கள் தொகையில் 90% மக்கள் தொகை கொண்ட நாடுகள் பாதிக்கப்படும் என்ற தோற்றம் உண்டு. ஆனால் அப்படியல்ல; ஏனென்றால் பொதுச்சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் சிபாரிசுத் தன்மை கொண்டது. அதற்குச் சட்டபூர்வ அங்கீகாரம் கிடையாது. எனவே, அத்தீர்மானங்களை 90% சதவீத மக்கள் கொண்ட நாடுகள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. கி.பி.2006 ஜுன் 28-இல் மாண்டினேக்ரோ நாட்டை ஐக்கிய நாட்டு உறுப்பினராகச் சேர்த்ததுடன் உறுப்பினர்கள்

எண்ணிக்கை 192. இது அல்லாமல் வாடிகன் நகர் தனிநாடு எனும் இறையாண்மையுடன் விளங்குவதால் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு நிலையான பார்வையாளராக அனுமதிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக ஆவதற்குக் கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள் வருமாறு:

1. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் (Charter) உள்ள விதிமுறைகளை ஏற்கும் மற்றும் அமைதியை விரும்பும் எந்த ஒரு நாடும் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகச் சேரலாம். அதே வேளையில் அந்த உறுப்பினர் நாடு ஐ.நா. சாசன விதிமுறைகளை மதிக்கும், செயல்படுத்தும் விதிமுறைகளை மதிக்கும், செயல்படுத்தும் என்று ஐ.நா. நிறுவனம் பார்வையில் கருதப்படவேண்டும்.
2. அவ்வாறு சேர நினைக்கும் நாட்டினைப் பாதுகாப்புக் குழுவின் பரிந்துறையின்படி பொதுக்குழுவில் வாக்கெடுப்பு நடத்தி 2/3 பங்கு வாக்குகள் வித்தியாசத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் சேர்த்துக் கொள்வர். இத்தகைய விதிமுறைகள் ஐக்கிய நாடுகள் சபைச் சாசனம் பாகம் 2 விதிமுறை 4-இல் உள்ளன.

## 77 நாடுகள் குழுமம்

இதுவளரும் நாடுகள் மொத்தமாகச் சேர்ந்து தங்களின் பொருளாதார வளர்ச்சியின் நலன் கருதி, ஐக்கிய நாடுகள் சபையில் கூட்டு முயற்சி மற்றும் கூட்டுப்பேரம் பேசவதற்கென அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு. இவ்வமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் வியாபாரம் மற்றும் வளர்ச்சி சம்பந்தமாகக் கி.பி.1964 ஜுன் 15-இல் நடைபெற்றபோது நிறுவப்பட்டது. 77 நாடுகள் குழுமம் (Group of 77) அமைக்கப்பட்டபோது அந்நாடுகளின் எண்ணிக்கை 77, இப்போது அதன் எண்ணிக்கை 130.

## பாதுகாப்புக் குழு (Security Council):

சர்வதேச நாடுகளிடையே அமைதி மற்றும் பாதுகாப்பைக் காக்கும் பொறுப்பு பாதுகாப்புக் குழுவிடம் விடப்பட்டுள்ளது. ஐநாவின் ஏனைய அமைப்புகள் உறுப்பினர் நாடுகளுக்குச் சிபாரிசின் அடிப்படையில்தான் தீர்மானம் நிறைவேற்றி உத்தரவு பிறப்பிக்க முடியும். ஆனால் ஐ.நா.சாசனம் பிரிவு 23-ன்படி

பாதுகாப்புக்குழு எடுக்கும் முடிவை எந்த உறுப்பினர் நாட்டின்மீதும் செயல்படுத்தும்படி கட்டாயப்படுத்தலாம். பாதுகாப்புக் குழவின் முடிவு அனைத்து உறுப்பினர் நாடுகளையும் கட்டுப்படுத்தும். இக்குழுவின் தீர்மானங்களுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவின் தீர்மானங்கள் என்று பெயர்.

பாதுகாப்புக் குழுவில் மொத்தம் 15 உறுப்பினர்கள் உள்ளனர். அவற்றுள் 5 நாடுகள் நிலையான உறுப்பினர்கள். மீதி 10 பேர் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஐ.நா. சபையின் பொதுசபையால் தேர்ந்தெடுக்கப்படுவர். சீனா, பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகியவை நிலையான உறுப்பினர்கள். இப்போது மீதம் உள்ள 10 உறுப்பினர்கள் வருமாறு, ஆஸ்திரியா, பாஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினியா, பிரேசில் காபான், ஜப்பான், லெபனான், மெக்சிகோ, நைஜீரியா, துருக்கி மற்றும் உகண்டா. இவர்கள் பகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். நிலையாக உள்ள 5 உறுப்பினர் நாடுகளுக்கு ரத்து (veto) அதிகாரம் உண்டு. இந்த 5 உறுப்பினர்களில் ஏதேனும் ஒரு உறுப்பினர் ஒரு தீர்மானத்தை எதிர்த்தாலும், அத்தீர்மானம் நிறைவேறாது. பாதுகாப்புக் குழுவின் தலைவர் மாதத்திற்கு ஒருவராக, அகரவரிசையில் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். அதன்படி பிப்ரவரி மாதம் 2010-ஆம் வருடத்திற்குப் பிரான்ஸ் நாடு தலைமையேற்றுள்ளது. இதன் தலைமை அலுவலகம், நியூயார்க் நகரில் உள்ள சர்வதேச எல்லையில் உள்ளது.

**பொருளாதார, சமூகக் குழு**

(Ecosoc-Economic and Social Council)

சர்வ தேச பொரளாதார, சமூக ஒற்றுமை மற்றும் வளர்ச்சி குறித்து முடிவுகள் எடுக்கவும் அதனைச் செயல்படுத்தவும் இக்குழு சிபாரிசு செய்யும் இக்குழுவில் 54 உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படுவர். இதன் தலைவர் ஆண்டுக்கு ஒருமுறை பொருளாதார, சமூக குழுவில் இடம்பெற்றுள்ள சிறு மற்றும் நடுத்தர நாடுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் கூடும். ஒவ்வொரு கூட்டமும் 4 வாரம் நீடிக்கும். 1998 முதல் இக்குழு ஆண்டுக்கு இருமுறை கூடும். ஜுலை மற்றும் ஏப்ரல் மாதங்களில் கூடும். ஏப்ரல் மாதம் கூடும் கூட்டத்தில் உறுப்பினர் நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் உலக வங்கி (World Bank) மற்றும் சர்வதேச

நிதி நிறுவனம் (IMF) ஆகியவற்றின் முக்கியக் குழு உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் இடம் பெறுவர். இக்குழு உலகில் உள்ள பொருளாதார, சமூக நிலை குறித்துச் செய்திகள் சேகரிப்பது, உறுப்பினர் நாடுகளுக்கு பொரளாதார, சமூகச் சீர்திருத்தம் குறித்து ஆலோசனை வழங்குவது மற்றும் பொருளாதார, சமூக நிலை குறித்துச் சிபாரிசு செய்வது போன்ற பணிகளை மேற்கொள்ளும். மற்றும் ஐ.நா. சபையின் ஏனைய சிறப்பு அமைப்புக்களின் பணியில் முரண்பாடுகள் இல்லாதவாறு மேற்பார்வை இடும். இதன் தலைமை அலுவலகம் நியூயார்க் நகரில் உள்ள சர்வதேச எல்லையில் உள்ளது.

**சர்வதேச நீதிமன்றம்:**

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கம் சர்வதேச நீதிமன்றம். இது நெதர்லாந்தில் உள்ள் திஹேக் எனும் நகரில் அமைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனப்படி 1945-இல் நிறவப்பட்டது. சர்வதேச நிலையான நீதிமன்றம் என்ற சர்வதேச சங்கத்தின் அங்கத்தை நீக்கிவிட்டு அவ்விடத்தில் 1946-இல் செயல்படத் தொங்கியது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச நீதிமன்றத்தின் விதிமுறைகள் முந்திய நீதிமன்றத்தின் விதிமுறைப்படியே அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் திஹேக் அகெடமி ஆப் இன்டர்நேசனல் லா (Hare Academy of International law) எனும் தனியார் சட்டக் கல்வி நிறுவனம் இருக்கும் கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. இந்நீதிமன்றத்தில் உள்ள தற்போதைய பல நீதிபதிகள் இந்த அகடாமியில் படித்தவர்கள் அல்லது இந்த அகடாமியில் பணியாற்றிய பேராசிரியர்கள் ஆவர். இதன் பணி பல நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்னைகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் அவை மட்டுமல்லாமல் போர்க் குற்றவாளிகள், சட்ட விரோதமாக அடுத்த நாட்டில் தலையிடுவது, இனப் படுகொலை போன்ற பிரச்னைகள் குறித்தும் விசாரணை நடத்தும்.

பொதுச் சபையில் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவின்படி கி.பி.2002-இல் இந்த நீதிமன்றம் தொடர்பான மற்றொரு நீதிமன்றம் செயலுக்கு வந்தது. அதன் பெயர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International criminal court (ICC)) ஆகும். போர் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை போன்ற கடுமையான குற்றங்கள் செய்வோரைச் சர்வதேச சட்டப்படி விசாரிக்க அமைக்கப்பட்ட முதல் நிலையான நீதிமன்றம் ஆகும். நீதி மற்றும் நிர்வாக ரீதியாக ICC எனும்

இந்நீதிமன்றம் சுதந்திரமாகவே செயல்படுகின்றது. ஐ.நா.வுடன் இந்த அமைப்பின் நிர்வாகிகள் சில கூட்டங்களில் மட்டும் கலந்து கொள்வர். உறவு ஒப்பந்தம் (Relationship Agreement) என்ற ஆவணப் படி ICC-க்கும் U.N.க்கும் உள்ள சட்டப்படியான தொடர்புகள் எவை எவை என்று கூறப்பட்டுள்ளது.

**செயலகம்:**

ஐக்கிய நாடுகள் சபையின் செயலகம் நியூயார்க் நகரில் உள்ள சர்வதேச எல்லையில் அமைந்துள்ளது. இச்செயலகத்திற்கு தலைமைச் செயலர் (Secretary – General) என்ற ஒருவர் தலைவர். இவருக்கு துணையாகச் சர்வதேச சிவில் அதிகாரிகள் பலர் பணியில் இருப்பர். உலக அளவில் தேர்வு செய்யப்படும் இந்த அதிகாரிகள், ஐ.நா.சபை மற்றும் அதன் துணை அமைப்புகளுக்குத் தேவையான தகவல்கள், வசதிகள் ஆகியவற்றைச் செய்து கொடுப்பர். அதே போன்று, ஐ.நா. அமைப்புகளான பாதுகாப்புக்குழு, பொதுச்சபை, பொருளாதார சமூகக் குழு மற்றும் ஏனைய துணைக்குழுக்கள் எடுக்கும் முடிவுகளை அந்த அங்கங்கள் கேட்டுக்கொண்டபடி செயல்படுத்தும் ஐக்கிய நாடுகள் சபை சாசனப்படி உலகில் உள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும், உயர்ந்த தகுதி, திறமை மற்றும் நேர்மையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஐ.நா. செயலகத்திற்குத் தேவையான அதிகாரிகள், அலுவலர்களைத் தேர்வு செய்து நியமனம் செய்யவேண்டும்.

ஐ.நா. சாசனப் படி, அவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர்கள், U.N.O. தலைமைச் செயலரைத் தவிர வேறு அமைப்பிடம் இருந்தோ அல்லது தங்கள் சொந்த நாட்டு அரசிடம் இருந்தோ எந்த வித ஆலோசனையோ உத்தரவோ பெறக்கூடாது. ஒவ்வொரு ஐ.நா. உறுப்பினர் நாடும், ஐ.நா.வின் தலைமைச் செயலகத்தை ஒரு சர்வதேச செயலகம் என்று கருதவேண்டும். அதில் பணியாற்றும் பணியாளர்களை எந்த வகையாலும் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி சிபாரிசு செய்தல் கூடாது என்று ஐ.நா.சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. ஐ.நா. செயலகத்திற்குத் தேர்வு செய்யப்படும் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு தலைமைச் செயலருக்கு மட்டும்தான் உண்டு.

தற்போதைய தலைமைச் செயலாளர் பான்-கி.மூன் (Ban-ki.Moon) என்பவர் ஆவார். இவர் கோபி அன்னான் என்பவருக்குப்பின் கி.பி. 2007-இல் பொறுப்பேற்றார். இவருடைய முதல் பதவிக்காலம் 2011-இல் முடிகிறது. 2011-க்குப் பின்னர் மற்றுமொரு பதவிக்காலத்திற்குத் தேர்வு செய்யப்பட தகுதியுடையவர். தலைமைச் செயலாளர் பற்றி "உலக பரிபாலனர்" (world moderator) என்று பிராங்கிளின் ரூஸ்வெல்ட் கூறுகின்றார். ஐ.நா. சாசனம் தலைமைச் செயலரை ஐ.நா. அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி (Chief Administrative Officer) என்று கூறுகிறது. அதே வேளையில் அவருடைய பணிகள் இன்ன இன்ன என்றும் ஐ.நா. சாசனம் கூறுகின்றது. நாடுகளிடையே ஏற்படும் சர்வதேச பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சி எடுப்பது. அமைதிகாக்கும் செயல்பாடுகளில் (peace keeping operations) நிர்வாகம் மேற்கொள்வது, சர்வதேச கருத்தரங்குகளை நடத்துவது, பாதுகாப்புக்குழு எடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்துவது தொடர்பான செய்திகளைச் சேகரிப்பது. உறுப்பினர் நாடுகளுடன் பல்வேறு பிரச்சனைகள் குறித்துக் கலந்து ஆலோசிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். அதேபோன்று, தலைமைச் செயலர் தன்னுடைய பார்வையில் ஏதேனும் பிரச்சனை உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்று கருதினால் அப்பிரச்னையைப் பாதுகாப்புக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். தலைமைச் செயலர், தலைமை நிர்வாகி மட்டுமல்லாமல், ஒரு ராஜதந்திரியாகவும் செயல்படுவார். நாடுகளிடையே உலகப் பிரச்சனைத் தொடர்பாக ஒரு பொதுக் கருத்தை உருவாக்கப் பாடுபடுவார்.

தலைமைச் செயலாளர், பாதுகாப்புக் குழுவின் சிபாரி அடிப்படையில் பொதுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவார். பாதுகாப்புக் குழுவில் இருக்கும் ஐந்து உறுப்பினர் நாடுகளுக்கு ரத்து அதிகாரம் உண்டு. எனவே, ஐந்து நிலையான பொதுக்குழு உறுப்பினர்களும் ஒத்துக்கொள்ளும் வேட்பாளரே பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் வாக்கெடுப்பில் அவ்வாறு சிபாரிசு செய்யப்பட்ட வேட்பாளர் தோற்றுவிட்டால், பாதுகாப்புக்குழு சிபாரிசு செய்யப்பட்ட வேட்பாளர் தலைமைச் செயலர் ஆகமாட்டார். ஆனால் இதுவரை அத்தகைய நிலை ஏற்படவில்லை. இப்பதவிக்கு வர குறிப்பிட்ட தகுதிகள் எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் இது ஒத்துக்கொள்ளப்பட்ட நடைமுறையின்படி 5 ஆண்டுகள் கொண்ட ஒன்று அல்லது இரண்டு முறைதான் ஒருவர் தலைமைச் செயலராகப் பதவி வகித்துள்ளனர்.

தலைமைச் செயலராகப் பதவி வகித்துள்ளனர். தலைமைச் செயலர், பூலோக அடிப்படையில், பகுதிச் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஆனால் பாதுகாப்புக் குழுவில் நிலையான உறுப்பினராக இருக்கும் சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாட்டைச் சேர்ந்த யாரும் தலைமைச் செயலாளராக வரமுடியாது.

இதுவரை பதவி வகித்த தலைமைச் செயலர்கள் பற்றி பின்வரும் அட்டவணையில் காண்க.

| எண் | பெயர் | சார்ந்த நாடு | பதவி ஏற்ற நாள் | பதவி விலகிய நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | ட்ரிவ்கிவ் லீ Trvgve Lie | நார்வே | பிப்ர வரி 2 1946 | நவம்பர் 10 1952 | ராஜினாமா |
| 2, | டாக் ஹேமாஸ்க்-ஜோல்டு Dag Hammarskjold | ஸ்வீட ன் | ஏப்ரல் 10 1953 | செப்டம் பர் 18 1961 | அலுவலில் மரணம் |
| 3. | உ. தாண்ட் U. Thant | பர்மா | நவம் பர் 30 1961 | செப்டம் பர் 18 1972 | ஆசியாவின் முதல் தலைமைச் செயலர் |
| 4. | கர்ட் வால்டேய்ம் Kurt Waldheam | ஆஸ்த ிரியா | ஜனவ ரி 1 1972 | ஜனவரி 1 1982 | |
| 5. | ஜாவியர் பெரெஜ் டி-குள்ளார் | பெரு | ஜனவ ரி 1 1982 | ஜனவரி 1 1992 | தென் அமெரிக்காவின் முதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Javier Perez de Cuillar | | | | தலைமைச் செயலர் |
| 6. | பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி Boutros Boutros Chali | எகிப்து | ஜனவரி 1 1992 | ஜனவரி 1 1997 | ஆப்ரிக்காவின் முதல் தலைமைச் செயலாளர் |
| 7. | கோபி அன்னான் Kofi Annan | கானா | ஜனவரி 1 1997 | ஜனவரி 1 2007 | |
| 8. | பான்-கி-மூன் Ban-Ki.Moon | தென்கொரியா | ஜனவரி 1 2007 | | |

மேலே கூறிய அமைப்புகள் அல்லாது ஐ.நா. சபையின் குறிக்கோள்களை நிறைவேற்ற பல சிறப்பு நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனப்படி ஐ.நா.வில் முக்கிய அங்கங்கள் தங்களுடைய பணியினை நிறைவேற்ற பல சிறப்பு நிறுவனங்களை நிறுவிக் கொள்ளலாம் என்று கூறுகின்றது. அதன்படி பல சிறப்பு நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. உதாணமாக, சர்வதேச அனு சக்தி அமைப்பு (International Atomic Energy Assemply) உணவு மற்றும் விவசாய அமைப்பு (Food and Agriculture Organisation) ஐ.நா.வின் கல்வி விஞ்ஞான மற்றும் கலாச்சார நிறுவனம் (UNESCO) உலக வங்கி (World Bank) உலக சுகாதார அமைப்பு (World Health Organisation). இது போன்ற அமைப்புகளின் மூலம் மனிதநேய, மனித பாதுகாப்பு நடவடிக்கைகளை ஐ.நா. செய்து வருகிறது. உதாரணமாக, தடுப்பு ஊசித் திட்டம், பஞ்ச நிவாரணம் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டம் தொழுநோய் போன்ற கொடுமையான நோய் ஒழிப்புத் திட்டம் போன்றவைகளைச் செயல்படுத்தி வருகின்றது. இத்தகைய நிறுவனங்கள் பற்றி பின்வரும் அட்டவணையில் காண்க:

| எண் | நிறுவன த்தின் சுருக்கம் | நிறுனத்தின் பெயர் | தலைமை அலுவல கம் | அமை ந்த ஆண்டு | 2010-ல் தற்போதைய தலைவர் |
|---|---|---|---|---|---|
| 1. | FAO | (Food and Agriculture Organisation) உணவு மற்றும் விவசாய நிறுவனம் | ரோம், இத்தாலி | 1945 | Jacques Diouf ஜாக்கூஸ் டயோவ் |
| 2. | IAEA | Intenational Atomic Energy Agency சர்வதேசஅணுசக்திஅமைப்பு | வியன்னா ஆஸ்திரியா | 1957 | Yukio Amano யூகியோ அமானோ |
| 3. | ICAO | International civil Aviation Organisation சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பு | ரோம் இத்தாலி | 1977 | Raymond Benjamin ரேமாண்டு பெஞ்சமின் |
| 4. | IFAD | Internation Fund for Agriculture Development சர்வதேச விவசாய வளர்ச்சி நிதி நிறுவுனம் | ரோம் இத்தாலி | 1977 | Kanayo F Nwanzw கனாயே, எப். ந்வான்ஞ் |
| 5. | ILO | International labour Organiasation சர்வதேசதொழிலாளர்அமை | ஜெனிவா சுவிட்சர் லாந்து | 1946 | Juvan Somavia ஜுவான், சோமாவியா |
| 6. | IMO | International Maritime Organisation சர்வதேச கடல்வழி போக்குவரத்து அமைப்பு | லண்டன் இங்கிலாந்து | 1948 | Efthimios E Mitrpoulous எய்திமோஸ் E மித்ரோபோலஸ் |
| 7. | IMF | International Monetary Fund சர்வதேச நிதி நிறுவனம் | வாசிங்டன் ஐக்கிய அமெரிக்கா | 1945 | Dominique Stravos – Khan ஸ்ட்ராஸ்-கான் |
| 8. | ITU | International Telecommunication Union சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியம் | ஜெனிவா ஸ்விட்சர் லாந்து | 1947 | Aamadoun Toure ஹமா டோன் டோரே |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9. | UNESCO | United Nations educational, Scientific and Cultural organisation<br>ஐ.நா.வின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாச்சார அமைப்பு | பாரிஸ் பிரான்ஸ் | 1947 | Irina Bokova<br>இரினா பொகோவா |
| 10. | UNIDO | United Nations International development organisation<br>ஐ.நா.வின் தொழில் வளர்ச்சி நிறுவனம் | வியன்னா ஆஸ்திரியா | 1967 | Kandeh Yumkella<br>காண்டே யும்கெல்லா |
| 11. | UPU | Universal Postal Union<br>உலக தபால் ஒன்றியம் | பெர்னே ஸ்விட்சர்லாந்து | 1947 | Edoward Dayan<br>எடுவர் தயான் |
| 12. | W.B | World Bank<br>உலக வங்கி | வாசிங்டன் D.C ஐக்கியஅமெரிக்கா | 1945 | Robert B. zoetlick<br>ராபர்ட் டீ. ஜோலிக் |
| 13. | W.F.P | World Food Programme<br>உலக உணவுத் திட்டம் | ரோம் இத்தாலி | 1963 | Josene Sheeran<br>ஜோஸின் சீரான் |
| 14. | W.H.O | World Health Organisation<br>உலக சுகாதார அமைப்பு | ஜெனிவா ஸ்விட்சர்லாந்து | 1948 | Margaret Chan<br>மார்க்கரெட்சான் |
| 15. | WIPO | World Intellectual Property Organisation<br>உலக அறிவாற்றல் உரிமை அமைப்பு | ஜெனிவா ஸ்விட்சர்லாந்து | 1950 | Francis Gutty<br>பிரான்சிஸ் குட்டி |
| 16. | W.M.O | World Metearological Organisation | ஜெனிவா ஸ்விட்சர்லாந்து | 1950 | Alexander Bed risky<br>அலெக்சாண்டர் பெட் ரிஸ்கீ |
| 17. | W.T.O | World Tuorisam Organisation<br>உலகச் சுற்றுலா அமைப்பு | மேட்ரிட் ஸ்வீடன் | 1974 | Taleb Rifai<br>தலேப் ரிபாய் |

**ஐ.நா.சபையின் நிதி ஆதாரம்:**

ஐ.நா.சபைக்கு இரண்டு வகைகளில் வருமானம் கிடைக்கின்றது. ஒன்று ஒவ்வொரு நாட்டுக்கும் விதிக்கப்படும் தொகை. மற்றொன்று உறுப்பினர் நாடுகள் தானாக முன்வந்து கொடுக்கும் நன்கொடைகள். நிதிநிலை (Budget) அறிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தயாரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும். இந்நிதிநிலை அறிக்கையையும், ஒவ்வொரு உறுப்பினர் நாட்டுக்கும் விதிக்கப்படும் நிதி அளவினையும் பொதுச்சபை அங்கீகரிக்கும் நிதி அளவு, ஒவ்வொரு உறுப்பினர் நாட்டின் மொத்த தேசிய வருமானம் (Gross Neationa Income) மற்றும் அந்த உறுப்பினர் நாட்டின் தனிநபர் வருமானம் (per capital income) அதன் கடன் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அந்த உறுப்பினர் ஒரு நாடு ஐ.நா.சபைக்கு எவ்வளவு பணம் செலுத்தவேண்டும் என்று நிர்ணயிக்கப்படும்.

எந்த ஒரு தனிப்பட்ட நாட்டின் மீதும் ஐ.நா.வின் நிதிச்சுமை விழுந்து விடக் கூடாது என்பது ஐ.நா.வின் பொதுச் சபையின் கொள்கையாக அமைந்துள்ளது. எனவே, முறையான நிதிநிலை (Regular Budget)க்கு தேவையான நிதிச்சுமையை ஒரு நாட்டின் மீது விதிக்கும் போது அதிகபட்சத் தொகை எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. கி.பி.2010 டிசம்பரில் பொதுச்சபை இன்றைய உலகப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப நிதிவிதிப்பு முறையை மாற்றியமைத்துள்ளது. அதன்படி அதிகபட்ச நிதியாக ஒருநாடு செலுத்தவேண்டிய தொகை, ஐ.நா.வின் முறையான நிதிநிலை அறிக்கையில் 22% சதவீதமாக நிர்ணயித்துள்ளது. இதற்குமுன் அதிகபட்ச நிதித்தொகை. மொத்த நிதிநிலை அறிக்கையில் 25%மாக இருந்தது. அப்படியிருந்தும் ஐக்கிய அமெரிக்காதான் அந்நாட்டின் வருமான அடிப்படையில் அதிகபட்ச நிதித் தொகையைக் கட்டும் அளவிற்குத் தகுதி பெறுகிறது. அதே வேளையில் ஐ.நா.நிதிநிலை அறிக்கையில் மொத்த தொகையில் குறைந்தபட்சத் தொகை செலுத்தும்

வகையும் வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி வருமானம் குறைவாக உள்ள சிறு நாடுகள் குறைந்தபட்சமாக ஐ.நா. நிதி நிலை அறிக்கைத் தொகையில் 0.001% செலுத்தினால் போதும் என்றும் விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது. மேலும் மிகக் குறைந்த வளர்ச்சி பெற்ற நாடுகள் குறைந்த பட்சமாக 0.01% பட்ஜெட் தொகையைச் செலுத்தினால் போதும் என்றும் வகை செய்யப்பட்டுள்ளது.

ஐ.நா.சபையின் வருமானத்தில் பெரும் பகுதி உலக அமைதியைக் காப்பதற்காக அனுப்பப்படும் படைகளுக்குச் செலவிடப் படுகின்றது. கி.பி.2005, 2006-க்குரிய அமைதியைக் காக்க ஒதுக்கப்பட்ட தொகை 5 பில்லியன் டாலர்கள் ஆகும். அதே நிதி ஆண்டில் ஏனைய திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1.5 பில்லியன் டாலர் ஆகும். அந்த ஆண்டில் உலகில் உள்ள பல்வேறு நாடுகளுக்கு அமைதிப் படையாக 70,000 படைவீரர்கள் 17 அமைதிகாக்கும் பணிகளுக்காக அனுப்பபட்டனர்.

அமைதி காக்கும் பணிக்காக விதிக்கப்படும் நிதியை சில விதிமுறைப்படி விதிக்கின்றனர். அவ்வாறு விதிக்கப்படும் போது 5 நிலையான பாதுகாப்புக் குழ உறுப்பினர் நாடுகளுக்கு அவர்கள் மீது விதிக்கப்பட்ட நிதி அளவிற்கு மேல் சர்சார்ச் வரியும் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். இந்த சர்சார்ஜ் வரி, குறைந்த வளர்ச்சி பெற்ற நாடுகள் செலுத்தவேண்டிய நிதித் தொகைக்கு அளிக்கப்படும் சலுகைகளை ஈடுகட்டுவதாக அமைந்துள்ளது. ஜனவரி 1,2008-ன் படி ஐ.நா. சபைக்கு அமைதிப் பணிக்ககாக அதிகம் விதிக்கப்பட்டு நிதி வழங்கிய முதல் 10 நாடுகள் வருமாறு: ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, சீனா, கனடா, ஸ்பெயின் மற்றும் கொரிய குடியரசு ஆகியவையாகும்.

ஐ.நா. சபையின் சிறப்பு நிறுவனங்களுக்கு ஆகும் செலவு ஐ.நா. வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதில்லை. இந்த நிறுவனங்களுக்கு ஆகும் செலவினை உறுப்பினர் நாடுகள் நன்கொடையாக வழங்குகின்றன. இந்த நன்கொடைகளைச் சில நாடுகள் பணமாக அளிக்கின்றனர். இன்னும் சில நாடுகள் விவசாய உற்பத்திப் பொருள்களாக, உலகில் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு வழங்குகின்றன. இந்த அமைப்புகளுக்குத் தேவையான நிதியை நன்கொடை மூலம்

பெறுவதால், சில அமைப்புகள் சிறப்பாகச் செயல்பட முடிவதில்லை. குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக நிகழ்ந்த பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. கடந்த 2009-இல் உலக உணவுத் திட்டம் அமைப்பு (world food programme) கொடுத்த அறிக்கையின் படி, போதுமான நிதியின்மையின் காரணமாகத் தன்னுடைய சேவையை முழுமையாக நிறைவேற்ற இயலவில்லை என்பது தெரிகிறது. 2009/2010 நிதியாண்டுக்குத் தேவையான நிதியில் 1/4 பங்கு நிதிதான் கிடைத்துள்ளது என்று கூறியுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்குத் தேவையான, விதிக்கப்பட்ட நிதியளவில் அதிகம் செலுத்தும் முதல் 10 நாடுகள் பின்வரும் அட்டவணையில் வருமாறு:

**ஐ.நா.வுக்கு நிதி வழங்கும் முதல் 10 நாடுகள்**

| உறுப்பினர் நாடுகள் | ஐ.நா. நிதிநிலை அறிக்கையில் (பட்ஜெட்டில்) |
|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 22.00% |
| ஜப்பான் | 16.624% |
| ஜெர்மனி | 8.577% |
| இங்கிலாந்து | 6.642% |
| பிரான்ஸ் | 6.301% |
| இத்தாலி | 5.079% |
| கனடா | 2.977% |
| ஸ்பெயின் | 2.977% |
| சீனா | 2.667% |
| மெக்சிகோ | 2.257% |
| இதர நாடுகள் | 23.908% |

**செயல்பாடுகள்:**

**அமைதிப்படை:**

பாதுகாப்புக் குழுவின் அனுமதியுடன் ஐ.நா.சபை உறுப்பினர் நாடுகளிடையே சண்டை நடக்கும் பகுதிகளுக்கு அமைதிப்படையை அனுப்புகின்றது. குறிப்பாக, உறுப்பினர் நாடுகளிடையே தற்காலிகப் போர் நிறுத்தம் ஏற்பட்டு அமைதி

உடன்படிக்கைக்குத் தயாராகும் நிலையில், மேலும் பிரச்னைகள் வராதவாறு பார்த்துக்கொள்ள அமைதிப்படை அங்கு நிறுத்தப்படுகின்றது. ஐ.நா.விற்கு நிலையான படை இல்லாத காரணத்தால் உறுப்பினர் நாடுகள் தாமாக முன்வந்து தங்கள் நாட்டுப் படைவீரர்களில் சிலரை அமைதிப்படைக்கு அனுப்புகின்றன. இந்தப் படைகளுக்கு நீலத் தொப்பிகள் என்று பெயர். இப்படைவீரர்களுக்கு ஐ.நா., ஐக்கிய நாடுகள் பதக்கம் வழங்குகிறது. இப்பதக்கம் அந்தச் சொந்த நாட்டு ராணுவ அலங்காரத்துக்காக அல்லாமல், இது ஒரு சர்வதேச அலங்கார விருது ஆகும். ஐ.நா. சபையின் அமைதிப்படை 1988-ஆம் ஆண்டு நோபிள் அமைதிப் பரிசு(Noble Peace Prize)னைப் பெற்றது. ஐக்கிய நாடுகள் சபையை நிறுவியவர்கள் உறுப்பினர் நாடுகளிடையே சண்டை வராமல் தடுக்கவும், எதிர்காலத்தில் அமைதியை நிலை நிறுத்தவேண்டும் என்றும் விரும்பினர். ஆனால் (Cold War) கெடுபிடிப்போர் அல்லது பனிப்போர் ஏற்பட்டதன் காரணமாக அமைதி ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் பல சிரமங்கள் ஏற்பட்டன. (Cold War) கெடுபிடிப்போர் அல்லது பனிப்போர் முடிந்தபின் மீண்டும் ஐ.நா. சபை அமைதி ஒப்பந்தங்கள் செய்து வைப்பதில் தீவிரம் காட்டியது. அதன்படி அமைதிப்படைகள் அனுப்பப்பட்டுப் பல ஒப்பந்தங்கள் நடைபெற்றுள்ளன.

கி.பி.2005-ஆம் ஆண்டில் ராண்டு குழு (Rand Group) ஆய்வின் படி ஐ.நா.வின் அமைதிகாக்கும் முயற்சியில் மூன்றில் இரண்டு நிகழ்ச்சிகளில் வெற்றி கண்டுள்ளது என்று கூறுகின்றார். ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி முயற்சியில் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது ஐ.நா. 8 பிரச்சனைகளில் 7 பிரச்சனைகளில் வெற்றி கண்டுள்ளது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவோ, 8 பிரச்சனைகளில் 4 பிரச்சனைகளில்தான் வெற்றி கண்டுள்ளது. கி.பி. 2005 மனித பாதுகாப்பு அறிக்கை (Human Security Reports)யின்படி (Cold War) பனிப்போருக்குப் பின் போர்களின் எண்ணிக்கை, இனப் படுகொலை மனித உரிமை மீறல்கள் ஆகியவை ஐ.நா.வின் முயற்சியில் குறைந்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. அமைதிப்படையை அனுப்பி அனுமதி காப்பதோடு, சில வேளைகளில் போரிலும் ஈடுபடுகின்றது. உதாரணமாக 1950-53-இல் நடைபெற்ற கொரியப் போரில் தலையிட்டது. 1990-இல் நடைபெற்ற ஈராக் போரில் அமெரிக்கா தலையிட அனுமதி வழங்கியது.

**ஐ.நா.சபையின் அமைதிப் படையின் பணிகள்**

1. 1948 முதல் ஐ.நா. ஒப்பந்த மேற்பார்வை அமைப்பு ஒன்று செயல்பட்டு வருகின்றது.

2. 1949 ஜனவரி முதல் இந்தியா பாகிஸ்தான் எல்லையில் ஐ.நா.வின்" இராணுவ பார்வையாளர் (Observer) குழு நிலை நிறுத்தப்பட்டுள்ளது.
3. 1956 நவம்பர் முதல் 1967 ஜுன் வரையிலும் ஐ.நா.வின் முதல் அவசர காலப் படை அமைக்கப்பட்டிருந்தது.
4. 1958 ஜுன் முதல் 1958 டிசம்பர் வரை லெபனானில் ஐ.நா.வின் பார்வையாளர் குழு நிலை நிறுத்தப்பட்டிருந்தது.
5. 1960 ஜுன் முதல் 1964 ஜுன் வரை காங்கோவில் ஐ.நா. இராணுவ நடவடிக்கையில் இருந்தது.
6. 1962 அக்டோபர் முதல் 1963 ஏப்ரல் வரை மேற்கு நியூ கினியாவில் ஐ.நா.வின் பாதுகாப்புப் படை நிறுத்தப்பட்டிருந்தது.
7. 1963 ஜுலை முதல் 1964 செப்டம்பர் வரை ஐ.நா.வின் ஏமன் பார்வையாளர் குழு நிறுத்தப்பட்டிருந்தது.
8. 1964 மார்ச் முதல் இன்று வரை சைப்ரஸில் ஐ.நா.வின் அமைதிப் படை நிறுத்தப்பட்டுள்ளது.
9. 1965 மே முதல் 1966 அக்டோபர் வரை டொமானிகன் குடியரசில் ஐ.நா.வின் தலைமைச் செயலரின் பிரதிநிதி பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்.
10. 1965 செப்டம்பர் முதல் 1966 மார்ச் வரை ஐ.நா.வின் பார்வையாளர் குழு இந்தியா – பாக்கிஸ்தான் பணியில் இருந்தது.
11. 1973 அக்டோபர் முதல் 1979 ஜுலை வரை ஐ.நா.வின் இரண்டாவது அவசர கால படை அமைக்கப்பட்டது.
12. 1978 மார்ச் முதல் இன்று வரை லெபனானில் ஐ.நா.வின் இடைக்கால படை நிறுத்தப்பட்டுள்ளது.
13. 1992 ஏப்ரல் முதல் 1993 ஏப்ரல் வரை சோமாலியாவில் ஐ.நா.வின் செயல்பாடுகள் (Operations) இருந்தன.
14. 1992 டிசம்பர் முதல் 1994 டிசம்பர் வரை மொசாம்பிக் நாட்டில் ஐ.நா.வின் செயல்பாடுகள் இருந்தன.
15. 1993 மே முதல் இன்று வரை இரண்டாவது முறையாக சோமாலியாவில் ஐ.நா.படைச் செயல்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
16. 1993 ஜுன் முதல் 1994 செப்டம்பர் வரை உகண்டா – ருவாண்டாவில் ஐ.நா.வின் பார்வையாளர் பணி நடைபெற்றது.

17. 1993 ஆகஸ்ட் முதல் இன்று வரை ஜார்ஜியாவில் ஐ.நா.வின் பார்வையாளர் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
18. 1993 செப்டம்பர் முதல் இன்று வரை லைபீரியா நாட்டில் ஐ.நா.வின் பார்வையாளர் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.
19. 1993 செப்டம்பர் முதல் இன்று வரை ஹெய்தியில் ஐ.நா.வின் பார்வையாளா பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
20. 1993 அக்டோபர் முதல் இன்றுவரை ருவாண்டாவில் ஐ.நா.வின் உதவிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
21. 1994 டிசம்பர் முதல் இன்று வரை தாஜிகிஸ்தான் நாட்டில் ஐ.நா.வின் பார்வையாளர் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பல முயற்சிகளில் தோல்வியுற்றமைக்காக ஐ.நா.வைப் பற்றிக் குறைபாடுகள் கூறுவதும் உண்டு. பல உறுப்பினர் நாடுகள் பாதுகாப்புக்குழு இயற்றும் தீர்மானங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அவைகள் ஐ.நா.சபை என்பது 192 உறுப்பினர்கள் கொண்ட ஒரு சங்கம், சர்வதேச அரசு அல்ல என்று எண்ணுகின்றன. எனவே பல நாடுகளைப் பாதுகாப்புக் குழு தீர்மானத்தின் மீது ஒரு மித்த கருத்துடன் நடந்து கொள்வதில்லை பாதுகாப்புக் குழுவில், சில ராணுவ நடவடிக்கை குறித்து ஒருமித்த கருத்து ஏற்படாத காணத்தால் சில தோல்விகளைச் சந்தித்துள்ளது. உதாரணமாக கி.பி.1994-இல் ருவாண்டா (Rwandan Genocide) நாட்டுப் படுகொலையைத் தடுக்க முடியவில்லை. இரண்டாவது காங்கோ போரில் மனிதாபிமான உதவிகளைச் செய்யவில்லை. 1995-இல் நடைபெற்ற ஸ்ரிபினிகா (Srebrenica) படுகொலையைத் தடுக்கவோ, அமைதிப்படைக்கு உத்தரவிட்டு, ஆயுதங்களைப் பயன்படுத்தி அந்நாட்டு அகதிகளைக் காக்காவோ தவறிவிட்டது. சோமாலியாவில் பசியால் வாடிய மக்களுக்குப் போதுமான உணவு வழங்கத் தவறிவிட்டது. இஸ்ரேல் பாலஸ்தீனப் பிரச்சனையில் பாதுகாப்புக்குழு இயற்றிய தீர்மானத்தைச் செயல்படுத்த இயலவில்லை. டார்பர் இல் நடைபெற்ற இனப்படு கொலையைத் தடுக்கவோ, அல்லது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவோ முடியவில்லை. கி.பி.2003-இல் இருந்து, காங்கோ, ஹெய்தி (Haiti) லைபீரியா (Liberia) சூடான் (Sudan) புருண்டி (Burunti) கோட்டன்-டி-ஐவோர் (Cote-d- Ivoire) ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட அமைதிப் படையினர் குழந்தைகளைக் கற்பழித்ததாகவும், பாலின பலாத்காரம் செய்ததாகவும், விலை

மாதுக்கள் அதிகரிக்க காரணமாக இருந்தனர் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஐ.நா. அமைதி காக்கும் பணியில் ஈடுபடுவதோடு படைக்குறைப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது. ஐ.நா. சாசனம் தயாரிக்கும் போதே படைப்பெருக்கத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற கருத்து வலியுறுத் தப்பட்டுள்ளது. படைப் பெருக்கத்தைத் தடுக்கப் படைப் பெருக்கத்திற்கு அதிக மனித சக்தியையும், பொருளாதாரத்தையும் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்துகின்றது. ஐ.நா. சாசனத்தில் இவ்வாறு கூறப்பட்ட போது அணுஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஐ.நா. சாசனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வாரகாலத்தில் அணு ஆயுதக் கண்டுபிடிப்பு ஏற்பட்டதால் பொதுச்சபை முதன் முதலில் கூடிய போது அணுஆயுதம் என்ற சொல்லைப் பயன்படுத்தித் தீர்மானம் நிறைவேற்றியது. அதாவது, "தேசிய பாதுகாப்புக்காக உறுப்பினர் நாடுகள் ஆயுதங்கள் தயாரிக்கும் போது மனித இனங்களை அழக்கக் கூடிய அணு ஆயுதங்களையோ ஏனைய பெரும் அழிவை விளைவிக்கக் கூடிய ஆயுதங்களையோ தயாரிக்கக் கூடாது" என்று தீர்மானம் நிறைவேற்றியது. படைக்குறைப்பு சம்பந்தமாகத் தற்போது இருக்கும் அமைப்புகளாவன பொதுக்குழுவின் முதல் குழு, ஐ.நா. படைக்குறைப்பு ஆணையம் (U.N. Disarmament Commission) மற்றும் படைக்குறைப்பு மாநாடு (Conference on disamanent) ஆகியவை ஆகும். படைக்குறைப்பிற்காக மேலும் ஐ.நா. எடுக்கும் முயற்சிகள் யாவையெனில், அணு ஆயுதசோதனை நடத்துவதைத் தடைசெய்வது, ஆகாயத்தில் பயன்படுத்தும் ஆயுதங்களைத் தடைசெய்வது, வேதியியல் ஆயுதங்களைத் (Chemical Weapons) தடை செய்வது, தரையில் கண்ணிவெடிகள் வைப்பதைத் தடைசெய்வது அணுஆயுதமில்லாப் பகுதிகளைத் (Nuclear Weapon-freezones) உருவாக்குவது. நாடுகளின் இராணுவச் செலவினைக் குறைப்பது மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு முறையைப் பலப்படுத்துவது போன்றவையாகும்.

**மனித உரிமைகள் மற்றும் மனிதநேய உதவிகள்:**

மனித உரிமை என்பது, ஐ.நா. தொடங்க அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. இரண்டாவது உலகப் போரில் ஏற்பட்ட உயிர்ச் சேதம் மற்றும் பொருள்சேதம் ஆகியவற்றைக் கண்ணுற்ற உலகத் தலைவர்கள், இதுபோன்ற கொடுமையான சேதங்களை

எதிர்காலத்தில் மனித இனம் சந்திக்காத வகையில் இருக்க ஒரு அமைப்பு தேவை என்று கருதினர். அதனால், மனித உரிமை மீறல் பற்றிய புகார்களை விசாரிக்க சட்டபூர்வமான ஒரு அமைப்பு தேவை என்பது தன் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று ஐ.நா. கருதியது. ஐ.நா. சாசனத்தின்படி ஒவ்வொரு உறுப்பினர் நாடும் "உலகலாவிய மனித உரிமையை மதிக்கவும் மற்றும் அதைக் காக்கவும்" முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. அதற்காகத் தனியாகவோ, கூட்டாகவோ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது. "உலகலாவிய மனித உரிமைப் பிரகடணம்" (Universal Declaration of Human Rights) என்னும் கொள்கையை ஐ.நா.வின் பொதுச் சபையில் 1948-இல் நிறைவேற்றினர். அது முதற்கொண்டு பொதுச்சபை தொடர்ந்து மனித உரிமை மீறல் பிரச்சனைகளை விவாதித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஐ.நா.வும், அதன் துணை அமைப்புகளும் உலகலாவிய மனித உரிமைப் பிரகடணத்தை செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. உதாரணமாக, நாடுகள் பல ஜனநாயக முறைக்கு வரமுயற்சிக்கும் நாடுகளுக்குத் துணை செய்கின்றன. நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடத்த நீதிமுறையை அமைக்க, அரசியல் அமைப்பை உருவாக்க, மனித உரிமைக்காக நியமிக்கப்படும் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல் ஆயுதப் புரட்சியாளர்களை அரசியல் கட்சிக்கு மாற்றுதல் போன்றவற்றிற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளைச் செய்து உலகினை ஜனநாயக முறைக்குக் கொண்டு வர முயற்சிக்கின்றது. ஜனநாயகம் இல்லாத நாடுகளில், தேர்தல் நடத்துவதற்குப் பல உதவிகளைச் செய்து வருகிறது. உதாரணமாக ஆப்கானிஸ்தானம், கிழக்கு தைமூர் ஆகிய நாடுகளில் தேர்தல் நடத்த துணைபுரிந்து. பெண்கள் அரசியலில் இறங்குவதற்காகவும், பொருளாதாரம் மற்றும் சமூக நிலையில் பெரும் பங்கு வகிப்பதற்காகவும் ஐ.நா. துணைபுரிகிறது. சர்வதேச நீதிமன்றத் தீர்ப்புகள், பாதுகாப்புக்குழு தீர்மானங்கள் மற்றும் பொதுச்சபைத் தீர்மானங்கள் மூலம் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஐ.நா. ஏற்படுத்துகின்றது.

மனித உரிமை மீறல் புகார்களை விசாரிப்பதற்காக ஐ.நா. மனித உரிமைக் குழு (U.N.Human Rights Council) என்ற ஒரு

அமைப்பை கி.பி.2006-இல் ஏற்படுத்தினர். இவ்வமைப்புக்கு முன் ஐ.நா. மனித உரிமை ஆணையம் என்ற ஒன்று இருந்தது. இந்த ஆணையத்தின் மீது பல குறைபாடுகள் கூறப்பட்டன. அதாவது இந்த ஆணையத்தில் இருந்த உறுப்பினர் நாடுகள், தங்கள் நாட்டிலேயே மனித உரிமையைக் காக்க தவறிவிட்டனர் என்ற குற்றத்திற்கு உள்ளாயின. தற்போது ஆரம்பிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைக்குழுவில் 47 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் பகுதிவாரியாக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக் கப்படுகின்றனர். ஆனால் எந்த ஒரு உறுப்பினர் நாடும் தொடர்ந்து மூன்றுமுறை குழு உறுப்பினராக இருக்க முடியாது. இந்த அமைப்புக்கு உறுப்பினராக வேண்டுமானால் பொதுச் சபையின் பெரும்பாலான வாக்கினைப் பெறவேண்டும். இத்துடன் இக்குழுவில் உறுப்பினர் ஆக பல கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. சில உறுப்பினர் நாடுகள் தங்கள் நாட்டிலேயே மனித உரிமையைக் காக்கத் தவறிவிடுகின்றனர். எனவே அத்தகைய நாடுகளைத் தவிர்க்கும் வகையில் அந்த நாடுகளில் உள்ள மனித உரிமை பற்றிய ஆய்வறிக்கையைப் பொறுத்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

உலக அளவில் 370 மில்லியன் மண்ணின் மக்கள் உரிமையைக் குறிக்கோளாக வைத்து ஐ.நா. பொதுச் சபையில் கி.பி.2007-இல் 'மண்ணின் மக்கள் உரிமைப் பிரகடணம்' எனும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்த உரிமைப் பிரகடணத்தில் பல நூற்றாண்டுகளாகத் தாங்கள் கடைபிடித்து வந்த கலாச்சாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களால், விடுதலை பெற்ற பின், ஏற்பட்ட பல பிரச்சனைகள் உதாரணமாக, கலாச்சாரம், மொழி, கல்வி அடையாளம், வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில், தனியாகவோ அல்லது கூட்டாகவோ இருக்கும் உரிமைகளைப் பற்றி விளக்குகிறது. இப்பிரகடணம், மண்ணின் மக்கள், தங்கள் நிறுனங்கள், கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை வளர்க்கவும், பலப்படுத்தவும் காத்துக்கொள்ளவும் தேவையான ஊக்கங்களை அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதுமற்றுமன்றி மண்ணின் மக்களைத் தாழ்வாகப் பார்க்கும் (Discriminetion aginst indegenons people) நிலையைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகின்றது.

மனித நேய உதவிகளை ஐ.நா.வின் துணை அமைப்புகளான செங்சிலுவைச் சங்கத்தின் மூலம் செய்படுத்துகின்றது. இச்சங்கத்தின் மூலம், தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்கள்,

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆகியோருக்கு உணவு, குடிநீர் மற்றும் உறைவிடம், தேவையான மருந்து உதவிகள் போன்றவற்றை அளித்து உதவுகின்றது. மனித நேய உதவிகளைச் செய்யும் ஏனைய ஐ.நா.வின் ஆணை அமைப்புகளாக, உலக உணவுத்திட்டம் (World Food Programme) அகதிகளுக்கான உயர் ஆணையம் (High Commission for Refugees) ஆகியவை விளங்குகின்றன. உலக உணவுத் திட்டத்தின் மூலம் 80 நாடுகளில் 100 மில்லியன மக்களுக்கு உணவு வழங்குகின்றது. அகதிகளுக்கான உயர் ஆணையம், 116 நாடுகளில் தன்னுடைய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் 24 நாடுகளில் அமைதிப் படைக்கான திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

**சமூக பொருளாதாரத் துறை**

ஐ.நா. சபை சமூக பொருளாதார துறை வளர்ச்சிக்குப் பல அமைப்புகள் மூலம் துணைபுரிந்து வருகின்றது. அதன்படி மில்லேனியம் வளர்ச்சி குறிக்கோள் (Millenium Develpment Goals), ஐ.நா. வளர்ச்சித் திட்டம் (UN Development Programme) போன்ற அமைப்புகள் வழியாகப் பல திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. உலக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் உலக சுகாதார அமைப்பு மற்றும் எய்ட்ஸ் தடுப்பு போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கியது. உலக நிதியின் மூலம் மலேரியா மற்றும் காசநோய போன்ற நோய்களைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. ஐ.நா. மக்கள் தொகை நிதியின் மூலமாக, 100 நாடுகள் ஜனத்தொகைப் பெருக்கத்தைத் தடுக்கவும், சிசுக்கொலையைத் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இவை அல்லாது மனித வள மேம்பாட்டுக்கு, உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் போன்றவற்றின் மூலம் பல திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கின்றது. ஐ.நா. ஆண்டுக்கு ஒருமுறை வறுமை, கல்வி, கல்வி கற்றோர் எண்ணிக்கை, சராசரி மரண வயது போன்றவைகளில் நாடுகளிடையே உள்ள தரப்பட்டியலின் புள்ளி விவரங்களைத் தருகின்றது.

கி.பி.2000 செப்டம்பர் மாதம் 192 நாடுகள் கையெழுத்திட்ட ஐ.நா. மில்லேனியம் வளர்ச்சிக் குறிக்கோளின் அறிவிப்பின்படி கி.பி.2015-க்குள், ஐ.நா. உறுப்பினர் நாடுகள் எட்டுத் துறைகளில் தங்களின் குறிக்கோளை அடைவது என்று பிரகடணம்

செய்துள்ளது. அந்த 8 துறைகள் பின்வருமாறு: 1. பசி, பட்டினியைப் போக்குவது 2. உலகளவில் தொடக்க கல்வியில் முழு நிறைவு பெறுவது 3. ஆண்பால், பெண்பால் இடையே வேற்றுமையைக் களைந்து சமத்துவம் பெறுவது மற்றும் பெண்ணுரிமை வழங்குவது 4. சிசுக் கொலையைத் தடுப்பது 5. கர்ப்பிணிப் பெண்கள் நலன் காப்பது 6. HIV, AIDS, மலேரியா போன்ற தொத்து நோய்களைத் தடுப்பது. 7. சுற்றுப் புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பது 8. வளர்ச்சிக்கு உலக அளவில் பங்கீடு அளிப்பது போன்றவையாகும்.

**சட்டபூர்வ செயல்பாடுகள் (Mandates)**

ஐ.நா. அமைப்புகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், "வேண்டுகோள்" (requests) 'கோரப்படுகிறது' (Calls Upon) வரவேற்றத்தக்கது போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினால் கூட அவற்றைச் சட்டபூர்வ தீர்மானம் என்று கருதி ஐ.நா. தலைமைச் செயலர் அவற்றை நிறைவேற்ற பல தற்காலிக குழுக்களை நியமிக்கலாம். இந்தக் குழுக்கள், சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கைகள் தயார் செய்து வெளியிடும்.

இவை அல்லாது ஐ.நா.விற்கு முயற்சியால் 80-க்கும் மேற்பட்ட நாடுகள் விடுதலை பெற்றுள்ளன. 1960-இல் குடியேற்ற நாடுகள் விடுதலைப் பிரகடணம் ஒன்றை வெளியிட்டது. அதன்படி 1962 ஐ.நா. விடுதலை பிரகடணக் குழு ஒன்று அமைக்கப்பட்டுக் குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை கிடைக்கப் பாடுபட்டது. குடியேற்ற நாடுகள் விடுதலை பெறுவதில் ஐ.நா.சபை முழுக் கவனம் செலுத்துகிறது. சுயஆட்சி முறையில் அரசு வேண்டிப் போராடும் நாடுகளுக்கும் தன் உதவிகளை வழங்குகின்றது. 20,000 கிலோமீட்டர் பரப்புகள் கொண்ட ஒவ்வொரு நாட்டின் விடுதலைக்காக எடுக்கும் நடவடிக்கைகளை இக்குழு மேற்பார்வையிடும். அம் மேற்பார்வையின் பயனாக ஸ்பெயின் தன் ஆதிகத்தில் இருந்த மேற்கு சஹாரா பகுதியை விடுவித்தது. ஐ.நா.சபை ஆண்டின் பல முக்கிய நாட்களை ஐ.நா. நாட்களாக அறிவித்து உலகளவில் விழா எடுக்கும்படி வேண்டிக் கொள்கின்றது. உதாரணமாக உலக காசநோய் நாள், பூமி தினம் (Earth day), சர்வதேசபுறக்கணிப்பு தினம் (International Year of Desserts and Descrimination) உலக மகளிர் தினம் (World Womens day) போன்றவையாகும்.

**சீர்திருத்தம்**

ஐ.நா. தொடங்கிய காலம் தொட்டு ஐ.நா. அமைப்பில் மாற்றம் வேண்டும் என்ற கருத்து நிலவி வருகின்றது. அச்சீர்திருத்தக் கருத்துக்களில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. சில உறுப்புநாடுகள் உலக அளவில் ஐ.நா. பெரும்பங்கு வகித்து அனைத்துப் பிரச்சனைகளிலும் தலையிடவேண்டும் என்று விரும்புகின்றன. சில நாடுகள் ஐ.நா. மனித நேய பிரச்சனைகளை மட்டும் எடுத்துக்கொண்டு சேவை செய்தால் போதும் என்று கருதுகின்றன. ஐ.நா. சபையின் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கையைக் கூட்டவேண்டும் என்றும் பலர் கோரிக்கை வைக்கின்றனர். ஐ.நா.சபையின் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுப்பதில் பலமுறைகளைப் பலர் வலியுறுத்துகின்றனர். அதேபோன்று ஐ.நா.சபைக்கு அந்தந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட ஐ.நா. பாராளுமன்றத்தை உருவாக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஐ.நா. சபையின் நிர்வாகத் திறமையைப் பலர் குறைகூறுகின்றனர். எனவே 1994-இல் ஐ.நா. அலுவலக மேற்பார்வைச் சேவை என்ற அமைப்பை உருவாக்கியது. அதன் மூலம் ஐ.நா. நிர்வாகத்தை மேற்பார்வை செய்து அதன் திறமையை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1997-ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அன்னான் அதிகபூர்வமாக ஐ.நா. சீர்திருத்தத் திட்டத்தை அறிவித்தார். அத்திட்டத்தில் பாதுகாப்புக் குழு உறுப்பினர் முறையில் மாற்றம் வேண்டும் என்றும், நிர்வாகம் வெளிப்படையாகவும், திறமையாகவும் அதேவேளையில், நிர்வாகிகள் எடுக்கும் முடிவுக்கு அவர்களே பொறுப்பாளர்கள் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்றும், ஐ.நா. அமைப்பு அதிக ஜனநாயக கொள்கைக்கு மாற்றப்படவேண்டும் என்றும் உலக அளவில், ஆயுதங்கள் தயாரிப்பில் ஈடுபடும் அனைத்து நாடுகள் மீதும் சர்வதேச பாதிப்பு செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

கி.பி.2005 செப்டம்பரில் உலக உச்சி மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் எடுக்கவேண்டிய முடிவுகளைக் கோபி அன்னான் விளக்கினார். அதன்படி ஐ.நா. சீர்திருத்தம் ஐ.நா.அமைப்பின் குறிக்கோளான அமைதி பாதுகாப்பு, மனித உரிமை, வளர்ச்சி ஆகிய துறைகளில் ஐ.நா. புதிய உத்வேகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறுகின்றார். அம் மாநாட்டில் பெரும்பாலான உறுப்பினர் நாடுகளின் தலைவர்கள் பங்குபெற்றனர். அதன் விளைவு உலக நாட்டுத்

தலைவர்களிடையே சில ஒருமித்த கருத்துக்கள் ஏற்பட்டு உடன் படிக்கைகள் செய்து கொண்டனர். அவற்றுள் அமைதிகாக்கும் குழு ஒன்று, சண்டைகள் ஏற்படவிருக்கும் நாடுகள், அமைதியான முறையில் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள உதவுவதற்கு அமைக்கப்பட்டது. மனித உரிமைக்குழு (Human Rights Council) ஒன்று உருவாக்கப்பட்டது. ஜனநாயக நிதி ஒன்று உருவாக்கப்பட்டது. பயங்காரவாதத்தை எல்லா வகைகளிலும் கண்டிக்கின்ற வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐ.நா. உள்அலுவலக மேற்பார்வைச் சேவைக்கு அதிக நிதி ஒதுக்கத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. மில்லேனியம் வளர்ச்சித் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தர்மகர்த்தா சபை நீக்கப்பட்டது. ஒரு நாடு தன் நாட்டில் உள்ள மக்கள் கொடுமையான முறையில் தாக்கப்படும்போது அந்நாட்டு அரசு அம்மக்களைக் காக்கத் தவறும் பட்டசத்தில் சர்வதேச சமுதாயம் பாதிப்புக்குள்ளாகும் அம்மக்களை காக்கக் கடமைப்பட்டுள்ளது எனும் தீர்மானத்தையும் நிறைவேற்றியுள்ளது.

ஐ.நா. உள் அலுவலக மேற்பார்வைச் சேவை அமைப்பில் மாற்றம் செய்து அதிக நிதியுதவிகளையும் பெற்றது. இந்த அமைப்புடன் பொதுச்சபை, ஏனைய அமைப்புகளின் செயல்பாடுகளைத் தணிக்கை செய்யும் வகையில், ஒரு சுதந்திரமான தணிக்கை ஆலோசனை குழு (Audit Advisory Committee) என்ற ஒரு அமைப்பும் உருவாக்கப்பட்டது. இக்குழு செய்யும் பணிகள் எவை என்பதையும் நிர்ணயம் செய்தது. கி.பி. 2006-இல் தார்மீக (Ethicis Office) அலுவலகம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இவ்வலுவலகம் நிதி நிர்வாகத்தைத் தணிக்கை செய்கிறது. ஐ.நா. உள் அலுவலக மேர்பார்வை சேவையுடன் சேர்ந்து தார்மீக அலுவலகம் நிதி நிர்வாகத்தில் ஏற்படும் லஞ்சம் மற்றும் தில்லு முல்லுகள் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ளும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வரும் திட்டங்களை நீக்குவதற்குச் செயலகம் பரிசீலனை செய்யும். இவ்வாறு பல சீர்திருத்தங்களையும் அவ்வப்போது ஐ.நா. சபை மேற்கொண்டு வருகின்றது.

ரோமானிய பேரரசின் பிளவினால் மேற்கு ரோமானிய பேரரசு தனது தொன்மையான தொடர்புகளை இழந்துவிட்டது. இதனால் பாதிப்புக்கு உள்ளான அலெக்ஸாண்டிரியா நூலகம் ரோமானிய ஆட்சியின் கீழ் வந்தது. பின்னர் கி.பி.642-இல் எகிப்தினை அராபியர் வென்ற சில ஆண்டுகளிலேயே நிர்மூலம் ஆக்கப்பட்டுவிட்டது. அப்போதும் கான்ஸ்டாண்டிநோபிள் உள்ளிட்ட கல்வி மையங்களை பைசான்டைன் பேரரசு தக்கவைத்து இருந்தது. மேலும் 12-13 ஆம் நூற்றாண்டுகளில் மத்திய கால பல்கலைக்கழகங்கள் உருவாகும் வரையிலும் மேற்கு ஐரோப்பாவின் அறிவு மடாலயங்களிலேயே பொதிந்து வைக்கப்பட்டிருந்தது. மடாலய பள்ளிகளின் பாடத்திட்டம் அப்போது இருந்த சில தொன்மையான சூத்திரங்கள், பயிற்று முறை, மருத்துவத்தின் புதிய வழிமுறைகள் மற்றும் இசை போன்றவற்றை உள்ளடக்கி இருந்தது.

இதனிடையே மத்திய கிழக்கு நாடுகள் புதிய அராபிய பேரரசின் கீழ் வந்தபின் கிரேக்கத் தத்துவம் சற்று வரவேற்பைப் பெற்றது. ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய மதப் பரவலைத் தொடர்ந்து 'இஸ்லாமிய பொற்காலம்' எனப்பட்ட இஸ்லாமிய கல்வி உதவித் தொகை வழங்கும் முறை 16-ஆம் நூற்றாண்டுவரை நீடித்தது. ஒரே மொழி உபயோக நடைமுறையின்படி அராபியம் ஊக்குவிக்கப்பட்டதால் மொழி பெயர்ப்பாளர் இன்றி தகவல் தொடர்பு சாத்தியம் ஆனது. இந்திய பாடங்கள் மட்டுமல்லாது பைசான்டின் பேரரசினின்று கிடைக்கப் பெற்ற கிரேக்க, லத்தின் பாடங்கள் இஸ்லாமிய மாணவர்கள் தமது அறிவை பெரிதும் வளர்த்துக்கொள்ள வழி செய்தது.

**நவீன அறிவியல் - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**

அறிவியல் புரட்சி அறிவை வளர்க்கும் அடிப்படை கல்விப்பாடமாக அறிவியலை நிலைநிறுத்தியது. 19-ஆம் நூற்றாண்டில் அறிவியல் பயிற்சி தொழில் முறையாக்கப்பட்டு பின் நிறுவனப்படுத்தப்பட்ட நிலை 20-ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தது. சமுதாயத்தில் ஏற்பட்ட விஞ்ஞான அறிவுப் பெருக்கத்தினால் தேசிய,

மாநில செயல்பாடுகளின் பல்வேறு நிலைகளிலும் அறிவியல் உட்புகுந்துவிட்டது. ஒன்றிற்கொன்று போட்டியாகத் திகழும் விஞ்ஞான அறிவு மற்றும் தொழில்நுட்பம் இவற்றில் ஏற்பட்ட தொடர் முன்னேற்றத்தினால் அறிவியலின் வரலாறு குறிப்பிடப்படுகிறது. புதுமையான தொழில்நுட்பங்கள் புதிய கண்டுபிடிப்புகளுக்கு வித்திடுவதோடு அல்லாமல் நீண்டகால விஞ்ஞான பிரச்சனைகளைத் தீர்க்க உகந்த புதிய வழிமுறைகள் மற்றும் சாதக அம்சங்களை உள்ளடக்கிய பிற கண்டுபிடிப்புகளால் வளர்ச்சி காண்கின்றன.

**இயற்கை விஞ்ஞானம் - இயற்பியல்**
**முதன்மைப் படைப்பு இயற்பியலின் வரலாறு**
**ஜேம்ஸ் மாக்ஸ்வெல்**

பழமையான சிந்தனைக்கும் பாரம்பரிய இயற்பியலுக்கும் இடையே அமைந்த ஏற்றதொரு எல்லையாக விஞ்ஞான புரட்சி உள்ளது. அரிஸ்டார்க்கஸ்-ஆல் விவரிக்கப்பெற்ற சூரிய மண்டலத்தின் ஹிலியோ-சென்ட்ரிக் மாதிரியினை நிக்கோலஸ் கோப்பர்நிக்கஸ் உயிர்பித்தார். தொடர்ந்து 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதன் முறையாக கோள்களின் இயக்கம் குறித்து கெப்லர் விவரித்தார். இதன்படி சூரியனை மையமாகக் கொண்டு கோள்கள் யாவும் நீளவட்டப் பாதையில் சுற்றுவதாக விளக்கப்பட்டது. நவீன இயற்பியலின் தந்தை எனப்படும் கலிலியோ அவர்களும் பல ஆய்வுகள் உதவியுடன் விஞ்ஞான ரீதியில் இயற்பியல் கோட்பாடுகளை மதிப்பீடு செய்தார்.

அடிப்படை இயந்திரவியலுக்கு அடிகோலிய 'நியுட்டனின் இயக்க விதிகள்' மற்றும் அடிப்படையான புவியிர்ப்பு விசையை விளக்கும் 'நியுட்டனின் புவியீர்ப்பு விதி' ஆகிய இரண்டு ஒருங்கிணைந்த இயற்பியல் கோட்பாடுகளை உள்ளடக்கிய 'பிரின்ஸிபியா மேத்தமாட்டிகா' என்ற நூலை 1687-இல் ஐசக் நியுட்டன் வெளியிட்டார். மின்சாரம் மற்றும் காந்தவியல் பண்புக்ள ஃபாரடே ஓம் மற்றும் பலரால் 19-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆராயப்பட்டது. இவ்வாய்வுகளின் விளைவாக இவ்விரண்டு நிகழ்வுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு 'மின் காந்தவியல்' எனும் ஒரே கோட்பாடு மாக்ஸ்வெல் அவர்களால் வகுக்கப்பபட்டது.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் இயற்பியல் புரட்சிக்கு வழிவகுத்தது. நீண்டகாலமாக நம்பப்பட்டுவந்த நியுட்டனின் விதிகள் எல்லா சூழ்நிலைகளிலும் சரியாகப் பொருந்துவது இல்லை என அறியப்பட்டது. 1900-தின் தொடக்கத்தில் மாக்ஸ் பிளான்க், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், நீல்ஸ் போர் மற்றும் பலர் தீர்க்கமான ஆற்றல் செலுத்தும் முறையின் அடிப்படையில் பல்வேறு ஒழுங்கற்ற ஆய்வு முடிவுகளை விளக்கும் பொருட்டு குவாண்ட்டம் கோட்பாடுகளை உருவாக்கினர். இந்த குவான்ட்டம் கோட்பாடுகள் இயக்கவிதிகள் சிறிய அளவையில் நிலையாக இருப்பதில்லை என்பதை விவரித்தன. 1915-இல் ஐன்ஸ்டீனால் விளக்கப்பட்ட சார்பு நிலைக் கோட்பாடுகள் விண்வெளியின் நிலையான நேர் பின்னணியில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நியுட்டனின் இயக்க விதிகளும் சிறப்புச் சார்புநிலையும் ஒன்றாக இருக்கமுடியாது என நிரூபித்தன. 1925-இல் வெர்னர் ஹெய்சன்பர்க் மற்றும் எர்வின் ஸ்க்ராடின்ஜர் ஆகியோர் குவான்ட்டம் கோட்பாடுகளை விளக்க குவான்ட்டம் இயந்திரவியலை உருவாக்கினர். 1929-இல் எட்வின் ஹப்பில் ஆய்வுகள் நட்சத்திர மண்டலங்களின் இயக்க வேகம் அவற்றின் அமைவிட தொலைவைப் பொருத்தது என்று புலப்படுத்தின. இது பிரபஞ்சம் விரிவடையும் தன்மை உள்ளது என்பதை புரிந்து கொள்ளவும் பெருவெடிப்புக் கொள்கை ஜார்ஜஸ் லேமையிர் அவர்களால் வகுக்கப்படவும் வழிகோலியது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து இன்று வரையிலும் ஒளிக்காட்சி தொடர்பான சமிக்ஞை உருவாக்கம், மறு உருவாக்கம் ஆகிய துறைகளில் அதிவேக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. ஜெர்மனியின் லிப்ஸிக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆகஸ்ட் கரோலஸ் என்பவர் முதன் முதலில் ஒரு தொலைக்காட்சி சமிக்ஞையினை உருவாக்கினார். தொடர்ந்து அவர்தம் மாணவரும் ஆய்வக உதவியாளரும் ஆன எர்கார்ட் கெய்ட்ஸ் என்பவர் ஒளிக்கற்றையின் அதிர்வலை முடுக்கம் குறித்து 1939-இல் ஆய்வு செய்தார். பின்னர் அமெரிக்கா சென்று, ஆம்பெக்ஸ் கார்பரேசன் நிறுவனத்திற்காக ஒளி சமிக்ஞை குறித்த தனது கண்டுபிடிப்புகளுக்குப் பல காப்புரிமையைப் பெற்றார்.

இரண்டாம் உலகப்போரின் போது மேலும் பல முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. இவையாவும் ரேடாரின் பயன்பாடு அணுகுண்டு உற்பத்தி மற்றும் பயன்படுத்துதலுக்கு அடிகோலின் இவையாவும் 1930-களில் எர்னஸ்ட் லாரன்ஸ் அவர்களால் சைக்ளோட்ரான் கருவி வடிவமைக்கப்பட்டதின் அடிப்படையில் நிகழ்ந்தன.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இத்துறை வரலாற்றாளர்கள் பலரும் பெரும் விஞ்ஞானம் என்று கூறும் வகையில் மாபெரும் இயந்திரங்கள், பெரும் நிதி, கோட்பாடுகளைச் சோதிக்கும் வகையில் அமைந்த ஆய்வகங்கள் இவற்றால் வளர்ந்தது. இயற்பியல் வளர்ச்சியின் முக்கிய பயனாளிகளாக வளர்ந்தன. இயற்பியல் வளர்ச்சியின் முக்கிய பயனாளிகளாக மாநில அரசுகள் திகழ்ந்தன. அவை இத்துறையின் அடிப்படை அய்வுகள் யாவும் ராணுவ மற்றும் தொழில்துறை பயன்பாட்டிலுள்ள புதிய தொழில்நுட்பங்களுக்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்திருந்தன. தற்போது, பொதுச் சார்புநிலை மற்றும் குவான்ட்டம் இயந்திரவியல் இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை எனினும் இவ்விரண்டையும் ஒன்றிணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வேதியியல்**

***முதன்மைப் படைப்பு: வேதியியலின் வரலாறு***

நவீன வேதியியலின் வரலாறு 1661-இல் ராபர்ட் பாயல் அவர்கள் 'தி செப்டிகள் கிமிஸ்ட்' என்ற தமது ஆய்வறிக்கையின் வாயிலாகவும் மருத்துவ வேதியியலாளர்களான வில்லியம் குல்லன், ஜோசப் பிளாக், டார்பன் பெர்க்மேன் மற்றும் பிர்ரி மாக்குவர் போன்றோரின் புவி அளவை ஆய்வு முறைகள் வாயிலாகவும் வேதியியல் "ஆல்கெமி"யில் இருந்து வேறுபடுத்தப்பட்டதிலிருந்து துவங்குகிறது. மற்றொரு முக்கிய நிகழ்வு, நவீன வேதியியலின் தந்தை எனப்படும் ஆன்டனி பவாஸியர் அவர்களால் ஆக்ஸிஜன் கண்டறியப்பட்டதாகவும், நிறை அழிவின்மை விதி வகுக்கப்பட்டு, ஃப்ளாஜிஸ்டன் விதி முறியடிக்கப்பட்டதாலும் நிகழ்ந்தது. ஜான் டால்டன் 1803-இல் வகுக்கப்பட்ட அணுக்கொள்கை (அனைத்து பொருட்களும் மிக நுண்ணிய அணுக்களால் ஆனவை; அணுவினை அது சார்ந்த பொருளின் இயற்பியல் வேதியல் பண்புகள் மாறாமல் பிளக்க இயலாது என பூரணமாக நிருபிக்கப்பட சுமார் நூறு ஆண்டுகள் ஆனது டால்டன் அவர்கள் நிறைதொடர்பு விதிகளையும் வகுத்தார். 1869-ஆம் ஆண்டு டால்டனின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் டிமிட்ரி மான்டலீவ் அவர்கள் கனிமங்களின் ஆவர்த்தன அட்டவணையை உருவாக்கினார்.

ஃப்ரட்டுரிச் ஓலர் அவர்களால் யூரியா உருவாக்கப்பட்ட பின்பு கரிம வேதியியல் எனும் பதிய துறை தோன்றியது. 19ஆம்

நூற்றாண்டின் இறுதியில் விஞ்ஞானிகளால் நூற்றுக்கணக்கான கரிமப் பொருட்களை உருவாக்க இயன்றது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திமிங்கல வேட்டையினின்று பெறப்பட்டுவந்த எண்ணெய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து புவியின் பெட்ரோலிய வேதிப் பொருட்களை பயன்படுத்தும் முறை ஆரம்பித்தது. 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் முறையான உற்பத்தி வழிகளினால் கிடைக்கப்பெற்ற சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் யாவும் ஆற்றல் மட்டுமல்லாது உடை, மருந்திற்கான செயற்கை மூலப் பொருட்களையும் வழங்கின. கரிம தொழில் நுட்பத்தினை உயிரினங்களில் செயல்படுத்தியதால் உருவான செயலியல் வெதியியல் உயிர் வேதியியல் துறை உருவாக அடிகோளியுள்ளது. 20-ஆம் நூற்றாண்டில் அணுவின் அமைப்பின் விவரத்தின் அடிப்படையில் வேதிப்பண்புகள் வரையறுக்கப்பட்டதால் இயற்பியல் மற்றும் வேதியியல் துறைகள் ஒருங்கிணைப்பும் நிகழ்ந்தது. லூயிஸ் பாலின் அவர்கள் எழுதிய "வேதிப் பிணைப்பின் இயல்பு" புத்தகம் குவான்ட்டம் இயலில் தத்துவங்கள் அடிப்படையில் மிகச் சிக்கலான மூலக்கூறுகளிலும் பிணைப்புக் கோணங்களை ஊகிக்கும் முறையினை விவரித்தது. பாலிஸ்ஸின் ஆய்வுகள் உயிரின் ரகசியம் எனப்பட்ட (பிரான்ஸில் கிரிக், 1353) டி.என்.ஏவின் (DNA) மாதிரி அமைப்பினை விவரிப்பதில் முடிந்தன. அதே அண்டில், மில்லர்-யூரே, இவர்கள் புரதத்தின் அடிப்படை கட்டமைப்பான எளிய எமினோ அமிலங்கள் எளிய மூலக்கூறுகளின்று தாமே உருவாகும் என்பதை தமது மாதிரி செய்முறை ஆய்வுகள் வாயிலாக விவரித்தனர்.

**புவியியல்**

**முதன்மைப் படைப்பு : புவியியலின் வரலாறு**

தொடர்புடை விஞ்ஞானமாக அறியப்படும் வரையிலும் புவியியல் என்பது தனித்தனியான பாறைகள் தாதுக்கள், நிலஅமைப்புகள் குறித்த தொடர்பில்லாத கொள்கைகளைக் கொண்டதாக இருந்தது. பாறைகள் குறித்த தியோப்ராஸ்டஸ் ஆய்வுகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கான ஆதாரமாகத் திகழ்ந்தன. விஞ்ஞானப் புரட்சி ஏற்படும் வரையிலும் புதைபடிமங்கள் குறித்து அவர் கூறிய கருத்துகளுக்கு மறுப்பு ஏற்படாமல் இருந்தது. சீனாவைச் சேர்ந்த ஷென்குவாதான் (1031-1095). நில உருவாக்கம் குறித்த கொள்கைகளை முதன் முதலில் வகுத்தவராவார். தொன்மையான புதைபடிமங்களை நன்கு ஆராய்ந்த பின்னர் அவைகள் அரிக்கப்பட்டதாலும், மணற்துகள்

படிந்ததாலும்தான் நிலம் உருவானது என்று கண்டறிந்தார். விஞ்ஞானப் புரட்சியின் போதும் புவியியல் முறையாக ஒழுங்குபடுத்தப் படவில்லை. ஆனால் தனிப்பட்ட பல கொள்கையாளர்கள் முக்கியப் பங்காற்றினர். உதாரணத்திற்கு ராபர்ட் ஹூக் என்பவர் நிலநடுக்கம் குறித்த கோட்பாடுகளை உருவாக்கினார். நிக்கோலஸ் சல்டெனோ அவர்கள் "ஒன்றின் மேல் ஒன்று அமைவு கோட்பாட்டை" வகுத்ததோடு, புதை படிமங்கள் என்பவை ஒருகாலத்தில் உயிருடன் இருந்தவற்றின் எச்சமே என வாதிட்டார். 1681-இல் உருவான தாமஸ் பர்னட் அவர்களின் "புவியின் புனிதக் கொள்கை"யினைத் தொடர்ந்து, இயற்கைத் தத்துவவியலாளர்கள் புவி காலம் காலமாக பல மாற்றங்களைச் சந்தித்துள்ளது என்ற கருத்தை வலியுறுத்தத் தொடங்கினர். பர்னர் மற்றும் அவரது சமகாலத்தவர் சிலர் புவியின் கடந்த காலத்தை பைபிளில் கூறியுள்ள நிகழ்வுகள் அடிப்படையில் விவரித்தனர். ஆனால் அவர்தம் ஆய்வுகள் புவி வரலாறு குறித்த சமத்துவ கருத்துக்களின் அறிவார்ந்த அடிப்படைக்கு வழி கோலியது. நவீன புவியியலானது, நவீன வேதியியல் போன்றே 1700-1800களில் மெல்ல தோற்றம் பெற்றது. பெனாய்ட் டிமைலெட் மற்றும் கோம்டே டிப.்.பன் போன்றோர் புவி 6000-ஆண்டுகளுக்கு மேலான வயதுள்ளது என்று பைபிள் அடிப்படையில் வாதிட்டனர். ஜின்.எட்டினே கட்டர்ட் மற்றும் நிக்கோலஸ் டெஸ்மாரஸ்ட் இருவரும் மத்திய பிரான்சுக்கு நடந்தே பயணித்துச் சில முதன்மையான புவிவரைபடப் பதிவினை நிகழ்த்தினர். ஆப்ரகராம் வெர்னர் பாறை மற்றும் தாதுக்கள் குறித்த முறையான வகைபாட்டுத் திட்டத்தினை உருவாக்கினார். இது லின்னேயஸ் அவர்கள் உயிரியலில் ஏற்படுத்தியதிற்கு இணையானதொரு முக்கியத்துவம் வாய்ந்த சாதனையாகக் கருதப்படுகிறது. மேலும் வெர்னர் புவி வரலாறு குறித்த பொதுவான கோட்பாடை வெளியிட்டார். இது அவர்தம் சமகால புவியியல் ஆய்வாளர்களான ஜேம்ஸ் கூவியர் மற்றும் லெக்ஸாண்டர் பிரானியர்ட் போன்றோர் புதை படிமங்கள் கொண்டு புவி பாறை அடுக்கின் வயதைக் கணக்கிடலாம் என வாதிட்டனர். இது பாரிஸ் களஞ்சியத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புவியியல் குறித்த முதல் தத்துவம் ஆகும். புவி வரைபடம் தயாரிப்பதற்குப் புதை படிமங்கள் பெரிதும் உதவின. ஏனெனில் இவை ஓரிடத்தில் அமைந்த பாறையினை வெகுதொலைவில் அமைந்த சமகாலத்தைச் சார்ந்த மற்ற பாறைகளோடு தொடர்புபடுத்த உதவின. 19-ஆம் நூற்றாண்டின் முதல் பாதி வரையிலும் சார்லஸ் லேயல், ஆடம் செட்விக் மற்றும் ரோடரிக் முர்ச்சிகன் போன்ற

புவியியல் ஆய்வாளர்கள் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஐரோப்பா மற்றும் கிழக்கு, வடக்கு அமெரிக்க பாறைகளின் வயது நிலைகளை விவரித்தனர். இது அரசு உதவியுடன் வரைபடம் தயாரிப்பதற்குப் பின்னாளில் உதவியது.

19-ஆம் நூற்றாண்டின் மத்தியில் புவியியல் குறித்த பார்வையானது விவரித்தல் மற்றும் வகைப்படுத்துதல் என்பதினின்று விலகி புவியின் புறப்பரப்பு எங்ஙனம் மாற்றம் பெற்றது என்பது குறித்த ஆய்வுக்குத் திரும்பியது. நிலநடுக்கம் மற்றும் எரிமலைச் சீற்றம் குறித்த நவீன கோட்பாடுகளும் மலை உருவாக்கம் தொடர்பான ஒருங்கிணைந்த முதல் கோட்பாடுகளும் இக்காலத்தில் முன்மொழியப்பட்டன. கண்டங்களின் பனிமூடிய காலம் குறித்த உண்மையை லூயில் அகஸ்ஸிஸ் மற்றும் பலர் நிலைநிறுத்தினர். மேலும் ஆன்ட்ரு க்ராம்பி ராம்ஸே ஆற்றுப் பள்ளத்தாக்குகள் பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே மலைகளின் இடையிலான நீரோட்டத்தினால் ஏற்பட்டன என வாதிட்டார். 1900-களில் கதிர்வீச்சு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் கதிர்வீச்சு அளவை அடிப்படையில் பாறைகளின் வயது கணக்கெடுக்கும் முறை உருவானது. 1910-இல் ஆல்ஃப்ரடு வெகனர் கூறிய "கண்டம் நகர்வு கொள்கை" பரவலாக மறுக்கப்பட்டது. ஆனால் 1950-60களில் சேகரிக்கப்பட்ட புதிய தகவல்கள் . புவித்தட்டு இயக்கக் கொள்கை வகுக்கப்பட வழிசெய்தது. இக்கொள்கை பலதரப்பட்ட தொடர்பில்லாதது போன்று தெரியும் புவியியல் நிகழ்வுகளுக்கு ஒன்றுபட்ட விளக்கம் அளித்தது. 1970-இல் இருந்து இக்கொள்கை புவியியலில் "ஒருங்கிணைக்கும் தத்துவமாக"த் திகழ்கிறது.

புவித்தட்டு கொள்கையை விமர்சித்த புவியியல் ஆய்வாளர்களின் விமர்சனங்கள் யாவும் புவித்தட்டு இயக்க ஆய்வுகள் என்றாலே பாறைகளை ஆய்வது என்பதினின்று, புவியினை ஒரே கோளமாகக் கொண்டு ஆராய்வது என்ற நிலைக்கு கொண்டு சென்றன. இந்த மாற்றத்தில் பங்குடைய மற்றவற்றுள் உள் அமைந்த புவியியல்பு அமைப்பு ஆய்வுகள் வானிலை மற்றும் கடல் சார்ந்த ஆய்வுகள் ஒன்றுபட்ட புவி அறிவியல் ஆய்வுகள் மற்றும் புவியுடன் சூரிய மண்டலத்தின் மற்றைய பாறை கோலங்களை ஒப்பிடும் ஆய்வுகள் போன்றன அடங்கும்.

**வானியல்**

**முதன்மைப் படைப்பு : வானியலின் வரலாறு**

சூரியன், சந்திரன் போன்றவற்றின் அளவு மற்றும் அமைவிட தொலைவினைக் கணக்கிடுவது எப்படி என்பதினை அரிஸ்டார்க்கஸ் வெளியிட்டதைத் தொடர்ந்து எராட்டோஸ்தீன்ஸ் என்பவர் இதன் அடிப்படையில் புவியின் அளவைக் கணக்கிட்டுக் கூறினார். பின்னர் ஹிப்பாக்கஸ் என்பவர் பூமியின் சுற்றுபாதையைக் கண்டறிந்தார்.

வானியல் மற்றும் தொலைநோக்கி குறித்து 19-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் 1891-இல் முதல் விண்கல்லையும் 1846-இல் நெட்டியூன் கோளையும் கண்டு அறிவிக்க வழி செய்தது. ஜார்ஜ் காமோ, ரால்ஃப் ஆல்பர் மற்றும் ராபர்ட் ஹெர்மான் போன்றோர் பெரும் வெடிப்பிற்கு உறுதி செய்யும் வகையில் ஏதேனும் ஒரு வலுவான ஆதாரம் பிரபஞ்சத்தின் சுற்றிலும் அமைந்த வெப்பப் பகுதியில் இருக்க வேண்டும் எனக் கணக்கிட்டனர். 1964-இல் ஆர்னோ பென்ஸியாஸ் மற்றும் ராபர்ட் வில்ஸன் இருவரும் தமது பெல் ஆய்வக ரேடியோ தொலைநோக்கில் மூன்று கெல்வின் மதிப்புடைய பின்புலச் சீற்றத்தைக் கண்டறிந்து இது பெரு வெடிப்புக் கொள்கைக்கு ஒரு ஆதாரமாக இருந்ததோடு பிரபஞ்சத்தின் வயதைக் கணக்கிட உதவிய பல ஆய்வுகளுக்கு அடிப்படையாகவும் இருந்தது. சூப்பர் நோவா SN 1987A-வை வானியல் ஆய்வாளர்கள் பூமியில் இருந்து கண்கூடாகவும் காமியோகண்டேவில் அமைந்த சூரிய நியுற்றினோ டிடக்டர் உதவியுடனும் கண்டனர். இது நியுற்றினோ வானியல் ஆய்வில் ஒரு வெற்றியாகக் கருதப்பட்டது. எனினும் சூரிய நியுற்றினோ பிளக்ஸ் என்பது கோட்பாட்டில் விவரிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீட்டின் ஒரு சின்னஞ்சிறு அளவே ஆகும். இந்த முரண் துகள்இயற்பியல் தொடர்பான நிலையான மாதிரி மதிப்புகளில் ஒரு மாற்றம் ஏற்பட வழி செய்தது.

**உயிரியல், மருத்துவம் மற்றும் மரபியல்:**

முதன்மைப் படைப்புகள்: உயிரியலின் வரலாறு, மூலக்கூறு உயிரியலின் வரலாறு, மருத்துவத்தின் வரலாறு மற்றும் பரிணாம கொள்கை வரலாறு.

1847-இல் ஹங்கேரிய மருத்துவர் இக்னாக் ஃப்யுலோப் செம்மல்வீஸ் என்பவர் மகப்பேறு மருத்துவர்கள் தமது பணிக்கு முன்னர் கைகளைக் கழுவ அறிவுறுத்தியதின் விளைவாகப் பேறுகால காய்ச்சல் ஏற்படுவது பெருமளவு குறைந்தது. இது நோய்க்கான கிருமிக் கொள்கை உருவாக அடிப்படையாக அமைந்தது. எனினும் அவர்தம் கண்டுபிடிப்பு சக மருத்துவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை அதன் முழுமையான உபயோகம் யாவும் 1865-இல் கிருமிநாசினி தத்துவத்தைப் பிரிட்டிஸ் அறுவைசிகிச்சை நிபுணர் ஜோசப் லிஸ்டர் என்பவர் நிருபணம் செய்த பின்னரே உணரப்பட்டன. லிஸ்டர் கண்டுபிடிப்புகள் யாவும் லூயி பாயஸ்ச்சரின் முக்கியக் கண்டுபிடிப்புகள் அடிப்படையில் அமைந்தவை. பாஸ்ச்சர், கிருமிகளையும் நோய்களையும் தொடர்புபடுத்தி மருந்து புரட்சியினை ஏற்படுத்தினார். மேலும் 1880-இல் ராபிஸ்க்கு எதிரான தடுப்பூசிகள் கண்டுபிடித்ததன் மூலம் தடுப்பு மருந்து வழிமுறையில் முக்கிய சாதனை நிகழ்த்தினார். பாய்ச்சர் அவர்கள் பாஸ்ட்டுரைசேசன் (பதப்படுத்துதல்) தொழில்நுட்பத்தைக் கண்டறிந்ததின் மூலம் பால் மற்றும் உணவு பொருள் வழியாக நோய் பரவலைத் தடுக்க அடிகோலினார்.

அனேகமாக அதிமுக்கியத்துவம் வாய்ந்ததும் முரண்பட்டதும், மூலைமுடுக்கெல்லாம் பரவிய ஒரு அறிவியல் கொள்கை பரிடிஸ் இயற்கைவியலாளர் சார்லஸ் டார்வின் என்பவர் 1859-இல் தனது உயிரினங்களின் தோற்றம்" என்ற புத்தகத்தில் வெளியிட்ட இயற்கை தேர்ந்தெடுத்தல் அடிப்படையிலான பரிணாம வளர்ச்சிக் கொள்கையே ஆகும். டார்வின் அவர்கள் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களின் பண்புகளும் பல காலமாக ஏற்பட்ட இயற்கை நிகழ்வுகளாலேயே நெறிப்படுத்தப்பட்டுள்ளன என்றார். பரிணாம வளர்ச்சிக் கொள்கையை நேரடி அறிவியலுக்கு அப்பாற்பட்ட துறைகளில் உட்படுத்தியது சமூகத்தின் பல பகுதிகளில் இருந்தும் எதிர்ப்புகளையும் ஆதரவையும் உருவாக்கியதோடு, பிரபஞ்சத்தில் மனிதனின் நிலையைப் பரவலாகப் புரிந்துகொள்ள ஏதுவானது. எனினும் டார்வினின் பரிணாம வளர்ச்சி விளக்க மாதிரிகள் மரபியல் ஆய்வுகளின் நேரடித்தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான், 1866-இல் நிகழ்ந்த மெண்டலின் மரபுக் கடத்தல் விதிகள், 1900-இல் மறு அடையாளம் காணப்பட்ட பின்னர் மரபியல் ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்றன. மெண்டலின் விதிகள் மரபியல் ஆய்வுகளுக்கு அடிகோலின.

மேலும் இவைபின்னர் பல்வேறு விதமான அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆய்வுகளில் முக்கியத்துவம் பெற்றன. 1953-இல் ஜேம்ஸ் D.வாட்சன், ∴ப்ரான்ஸிஸ் கிரிக் மற்றும் ரோசலின்ட் ∴ப்ராங்களின் போன்றோர் அனைத்து உயிரினங்களிலும் பண்புகளை நிலைப்படுத்தும் மரபுப்பொருளான DNA-வின் அடிப்படை அமைப்பை விவரித்தனர். 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மரபுப் பொறியியல் என்பது நடைமுறை சாத்தியமானது. தொடர்ந்து 1990-இல் மனித மரபுத்தொகுதி வரைபடம் தயாரிக்கும் பொருட்டு மாபெரும் உலகளாவிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாகப் பல்வேறு மருத்துவப் பயன்பாடுகளும் ஏற்பட்டன.

## சூழியல்

### முதன்மை படைப்பு : சூழியலின் வரலாறு:

டார்வினின் பரிணாமக் கொள்கை மற்றும் ஹம்பால்டியன் பயோஜியோ கிரா∴பி அடிப்படையில் சூழியல்துறை 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தோற்றம் பெற்றது. சூழியல் துறை, வளர்ச்சியுடன் இணைந்தே, நுண்ணுயிரியல் மற்றும் பாஸ்டர் மற்றும் ∴பெர்டினாண்டுகான் போன்றோர் விவரித்த, உயிர் சுழற்சித் தத்துவம் போன்றவையும் வளர்ந்தன. சூழியல் என்ற சொல் எர்னஸ்ட் ஹெக்கல் என்பவரால் உருவாக்கப்பட்டது. இயற்கை குறித்த அவர்தம் புனிதக் கண்ணோட்டம் சூழியல் சிந்தனை பரவ முக்கியக் காரணமாகத் திகழ்ந்தது. 1930-இல் ஆர்தா டான்ஸ்லி மற்றும் பலர் சூழ்நிலை மண்டல சூழியல் ஆய்வுகளைத் துவக்கினர். இது ஆற்றலின் இயல்பு அடிப்படையிலான மண்ணியல் ஆய்வுகளையும், கள உயிரியல் தொழில் நுட்பங்களையும் உள்ளடக்கியது. 20-ஆம் நூற்றாண்டில் சூழியல் வரலாறு சுற்றுச் சூழலியலுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுவிட்டது. 1960-களில் ஏற்பட்ட "கையா ஹைப்பாத்தஸிஸ்" மற்றும் சூழ்நிலை குறித்த சமீபத்திய விஞ்ஞான - மத இயக்கம், இவ்விரண்டையும் நெருக்கமாக்கி விட்டது.

## *தத்துவம்*

17, 18-ஆம் நூற்றாண்டுகளில் தத்துவ மேதைகளின் கருத்துக்கள் இரண்டு விதமாக இயங்கிவந்தன. ஒன்று பகுத்தறிவுத் தத்துவம், மற்றொன்று தெய்வீக அடிப்படைத் தத்துவம் என்பன.

பகுத்தறிவுத் தத்துவம், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் தோன்றியது. அவர்களின் கருத்துப்படி அறிவு என்பது மனித சிந்தனையின் உள் உணர்வின் மூலம் தோன்றுவது என்பர். இத்தகைய கருத்தினை வலியிறுத்துவோர் சார்ட்டஸ், பருச்பினோசா, லெய்ப்னிட்ஜ் மற்றும் நிகோல்ஸ் மாலேபிரான்ச் ஆகியோர் ஆவர். மற்றொரு வகையினர் emoricist எனப்படுவர். இவர்களுடைய கருத்துபடி அறிவு அனுபவ உணர்வு (Sensor Experience) அடிப்படையில் அமைவது என்பர். இக்கருத்தினை வலியுறுத்துவோர் ஜான் லாக், ஜார்ஜ் பெர்க்லி மற்றும் டேவிட் ஹூம். Ethics (சமதர்ம கருத்துக்கள்) மற்றும் அரசியல் தத்துவம் மேலே கூறிய தத்துவத்தில் அடங்காது. இருப்பினும் இத்தத்துவ மேதைகள் அவரவர் பாணியில் Ethics பற்றியே கூறுகின்றனர். அரசியல் தத்துவமதைகளில் மற்றும் உள்ள முக்கிய நபர்கள் தாமஸ் ஹாப்ஸ் மற்றும் ஜீன்ஜாக்கியூஸ் ருசோ.

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இமானுவேல் கென்ட் தத்துவ முறையில் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தார். அதன்படி பகுத்தறிவுக்கும் empiricist-க்கும் ஒரு ஒற்றுமையை உருவாக்கினார். அவர் கூறியது சரியா, தவறா என்பது தெரியவில்லை. காரணம் அவர் கூறிய தத்துவத்தில் இப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு அவர் கூறவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காண்ட் தத்துவத்தில் ஒரு புயலை உருவாக்கினார். அதன்படி அவர் ஜெர்மானிய idealism எனும் புதிய தத்துவத்தை உருவாக்கினார். அதன் படி உலகமும் சிந்தனையும் world and mind) ஒன்றையொன்று புரிந்துகொண்டு செயல்படவேண்டும் என்று கூறினார். இக்கருத்தை பிரடெரிக் ஹெகல் தன்னுடைய புத்தகத்தில் வலியுறுத்துகிறார். அவர் "உண்மை என்பது பகுத்தறிவு பகுத்தறிவு என்புது உண்மை" "Real is Rational; Rational is real" என்று கூறுகின்றார்.

ஹெகலின் படைப்பு பல கருத்துக்களை வெளிக்கொணர்ந்தது அவர் கருத்தை ஆதரிப்போரும், குறைகூறுவோரும் பல வகைகளில் கருத்துக்களை வெளியிட்டனர். கார்ல்மார்க்ஸ் ஹெகலின் கருத்துக்களையும், இங்கிலாந்தில் நிலவிய Emprical ethics, கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு, ஹெகலின் கருத்துக்களைப் பொருளாதார ரீதியாக மாற்றம் செய்து, அக்கருத்தைப் புரட்சிக்கு துணைபுரியும் கருவியாகப் பயன்படுத்தினார். சோரன் கியர்க்கிசார்டு

(Soren Kierkegaard) எனும் தத்துவமேதை, மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்க முறையான தத்துவங்கள் போதுமான வழிகாட்டியாக இல்லை என்று கூறுகின்றார். அவர் வாழ்க்கை வாழ்வதற்கே ஒழிய, மனிதப் பிரச்சனைகளைத் தீர்க்கும் மந்திரம் அல்ல (Life is meant to be lived, not a mystery to be Solved) என்று கூறுகின்றார். ஆர்தர் ஸ்ஸோபன்ஹார் (Arthur Schopen haver) என்பவர் உலகம் என்பது பல்வேறு பட்டோரிடையோ தோல்வியில் முடிந்த கௌரவமும், ஆசையும் தவிர வேறு ஒன்றும் இல்லை என்ற கூறுகிறார். அத்துடன் அவர் கடவுள் இல்லை (ethism) என்பதையும், Pessimism-த்தையும் வலியுறுத்துகிறார். நீட்ஜ்சே (Nietzsche) எனும் தத்துவ மேதை சேபன்ஹேர் என்பவரின் கொள்கையை எடுத்துக்கொண்டு மாற்றுக் கருத்தைத் தெரிவிக்கின்றார். சோபன்ஹேர் அவர்களின் கொள்கையான கடவுள் இறந்துவிட்டார், என்பதையும் முறையான தத்துவங்களை மறுப்பதையும், தனி மனிதனின் முடிவான உண்மைக்கு எடுக்கும் முயற்சிகளையும் கருத்திற்கொண்டு, இவைகள் எல்லாம் Pessimission-த்திற்கான அடிப்படைக் கொள்கைகள் அல்ல என்றும், இது ஒரு புதுவகையான சுதந்திரம் என்றும் கூறுகின்றார். 19-ஆம் நூற்றாண்டு இங்கிலாந்து தத்துவம் புதிய ஹெகலியன் தத்துவத்தில் மூழ்கியிருந்தது. இதனால் உந்தப்பட்ட பெர்ட்ண்டு ரஸ்ஸல் ஆகியோர் தத்துவங்களை ஆய்வுக்குட்படுத்த முற்பட்டனர் (Analytic Philosophy).

**பகுத்தறிவு வாதம் (Rationalism)**

தற்கால தத்துவம் ரேனே டெஸ்கார்டஸ் மற்றும் அவருடைய "நான் சிந்திக்கிறேன். ஆகவே நானாக இருக்கிறேன்" (I think, therfore I am) முதுமொழியில் இருந்து தொடர்கிறது. 17-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், சமய அடிப்படையிலான கருத்துக்களைக் கூறும், அறிஞர்களால் (Scholasicsm) பல தத்துவங்கள் கூறப்பட்டன. அவர்களில் முக்கியமானவர்கள், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் மற்றும் ஆரம்பக்கால திருச்சபை எழுத்தாளர்கள். டெஸ்கார்ட்டே, அவற்றுள் பல (Scholastic metephysical documents). அர்த்தமற்றவை அல்லது தவறானவை என்று கூறுகின்றார். சுருக்கமாகச் சொன்னால், அவர் Serateh என்பதில் இருந்து தத்துவத்தை ஆரம்பிக்கின்றார். இவருடைய முக்கிய படைப்பான Meditation on First Philosophy தியானத்தின் தத்துவம் எனும் நூலில் ஆறு கட்டுரைகளை எழுதியுள்ளார்.

எதைப்பற்றியும் தான் தெரிந்த உண்மைகளை இதனால் தான் என்று முடிவு செய்யும் தன்னுடைய நம்பிக்கைகளை உதறித்தள்ளுகின்றார். அவர் உலகில் உள்ள எந்த நிலைகளையும் சந்தேகம் கொள்ளலாம். கடவுள், அவர் வரலாறு, விஞ்ஞானம், மடம் ஆகியவை எல்லாம் இருக்குமா, இல்லையா என்று சந்தேகம் கொள்ளலாம். ஆனால் கடவுள் ஒருவர் உண்டு என்பதைச் சந்தேகிக்க முடியாது என்று கூறுகின்றார். கடவுள் இல்லை என்றாலும் நாம் அவர் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். நமக்குத் தெரியும், அவரைப் பற்றிச் சிந்திப்பதில் அவர் இருக்கின்றார். இதன் அடிப்படையில் தன்னுடைய சிந்தனைக் கருத்துக்களைக் கூறுகின்றார். அவர், தன்னுடைய சில கருத்துக்கள் முழுவதும் தன்னிடம் உள்ள சிந்தனையில் உதித்தவை அல்ல. கடவுளிடம் இருந்த பெற்ற சிந்தனைகள் என்று கூறுகின்றார். அவர் கடவுள் உண்டு என்று நிரூபிக்கின்றார். அத்துடன் இருக்கும் எதையும் இல்லையென்று கூறி ஏமாற்றுவதைக் கடவுள் அனுமதிக்கமாட்டார். சாதாரண முறையில் கூறப்படும் விஞ்ஞான மற்றும் பகுத்தறிவு ஆகியவை பொய்யானவைகள் எனக் கூறுகின்றார்.

Empiricism எனும் கொள்கையை வலியுறுத்திய தத்துவ மேதைகள், ஜான் லாக், ஜார்ஜ் பெர்க்லி, டேவிட் ஹும் ஆவர். அரசியல் தத்துவத்தை வலியுறுத்திய தத்துவ மேதைகள், தாமஸ் ஹாப்ஸ், ஜான்லாக், ஜுன், ஜாக்கூஸ் ரூசோ, கார்ல்மார்க்ஸ், பிரடெரிக் எங்கல்ஸ், ஜான்ஸ்டுவாட்மில், ஜெருமி பென்தாம் மற்றும் ஜேம்ஸ் மில் ஆகியோர் ஆவர். Ideqlism எனும் தத்துவத்தை வலியுறுத்தியவர்கள் இமானுவேல் காண்ட், ஜார்க் வில்ஹெறாம், பிரெடெரிக் ஹெகல், ஆர்தர் சோபன் வராயர், பிரான்ஸிஸ் ஹெர்பர்ட் பிராட்லி ஆகியோர் ஆவர்.

**Existentialists**

இருப்பவைகள் எனும் தத்துவத்தை கூறுபவர்கள் சோரன் கீர்க்கிகார்டு, பிரடெரிக் நீட்ஜ்சே ஆகியோர் ஆவர்.

**Phenomenology:**

இத்தத்துவத்தை வலியுறுத்துபவர்கள் எட்மண்டு ஹுஸ்ஸேரி மார்ட்டின் ஹெறட்ஜ்ஜர் ஆவர்.

**Pragmatism:**

இத்தத்துவத்தை வலியுறுத்துபவர்கள், பெர்ட்டண்டு ரஸ்ஸல், ஜார்ஜ் எட்வர்டு மோர் ஆகியோர் ஆவர்.

### தற்கால கலை மற்றும் இலக்கியம்

கி.பி. 1860 முதல் 1970 வரை கலையின் அமைப்பு, தத்துவம் ஆகியவற்றை வெளிக்கொணரும் படைப்புகளைத் தற்கால கலை என்று அழைக்கின்றோம். இக்காலத்தில் எழுந்த கலைகள், பாரம்பரியமாக இருந்துவந்த கலை அமைப்புகளிலிருந்து மாறுபட்டதாக அமைந்துள்ளது. கலைப் படைப்பின் கருப்பொருளின் தன்மையைப் பொறுத்துப் புதிய சிந்தனை மற்றும் புதிய பார்வையில் தற்கால கலைப்படைப்புகள் எழுந்துள்ளன. கருத்தின் சுருக்கத்தை (Abstract) வெளிக்கொணர்வதே நவீன கால கலைப்படைப்பின் பண்பாக அமைந்துள்ளது. மிக அண்மைக்காலத்தில் படைக்கப்பட்ட கலைப் படைப்புக்களுக்குச் சமகால கலைப் படைப்பு அல்லது நவீன காலத்திற்குப் பிந்திய படைப்பு என்றும் அழைப்பர்.

**19-ஆம் நூற்றாண்டில் கலை:**

கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவை 19-ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் தோன்றியவை எனினும், தற்கால கலை 19-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தோன்றியது எனலாம். பொதுவாக, தற்கால கலையின் காலம் கி.பி.1863-இல் இருந்து தொடங்குகிறது என்று கருதப்படுகிறது. இந்த ஆண்டில் எட்வர்டு மானேட் (Edoward Manet) எனும் படைப்பாளர் லிடிஜெனுனர் சர் I.ஹெப்பி எனும் வண்ணக்கலை (Painting) பாரிஸில் உள்ள சலான் டெஸ் ரெவூசஸ் (Salam des Refuses) எனுமிடத்தில் படைத்தார். அது முதல் தற்கால கலை ஆரம்பம் என்பர். சிலர் அதற்கும் முன்னர் கலை படைக்கப்பட்டதாகக் கூறுவர். அதன்படி கி.பி.1855-இல் குஸ்டால் கார்பெட் என்பவர் வைத்திருந்த கலைஞரின் ஸ்டுடியோ கண்காட்சி, மற்றும் 1784-இல் ஜேக்கூல் லூயி டேவிட் தன்னுடைய ஓத் ஆப்தி ஹோரோச்சி (Oath of the Horchhi) எனும் வண்ண ஓவியமும் 1863-க்கு முன்னதாகப் படைக்கப்பட்டவைகளாகும். கலை வரலாற்றுப் பேராசிரியர் H.ஹார்வர்டு ஆர்னாசன் கூற்றுப்படி மேலே கூறிய ஆண்டுகள் நவீன கால கலை வளர்ச்சியில் முக்கியமானவைகள். ஆனால் எந்த ஒரு

ஆண்டும் கலை வரலாற்றின் முக்கியத் தொடக்கம் என்று கூறமுடியாது என்று கூறுகின்றார்.

தற்கால கலை பற்றிய வரலாறு, அறிவு ஒளிசார்ந்த காலம் முதல் அல்லது 17-ஆம் நூற்றாண்டு முதல் தொடங்கலாம். கிளமெண்ட் கீரீன்ஸர்க் எனும் தற்கால கலை பற்றிய திறனாய்வாளர், இமானுவேல் கென்ட் என்பவர் தற்கால கலை வல்லுநர் (Modermist) என்று கூறுகின்றார். மேலும் அறிவு ஒளிசார்ந்த காலம் (Enlightenment) கலையை வெளியில் இருந்து திறனாய்வு செய்வதும், தற்கால கலையை உள்ளிருந்து திறனாய்வு செய்வதும் வழக்கில் இருந்தது. 1789-ஆம் ஆண்டு புரட்சிக்குப்பின் பல நூற்றாண்டுகளாகக் கேள்வி கேட்கப்படாமல் இருந்துவந்த நிறுவனங்களில், சிந்தனைகளை எல்லாம் ஒழித்துக்கட்டி அரசியல் சமுதாயப் பிரச்சினைகள் தொடர்பாக வாதங்கள் நடைபெற்றன. இத்தகைய சிந்தனைகள் படைப்பாளிகள் தங்கள் சொந்த விருப்பத்திற்கு ஏற்ப கட்டட அமைப்புக்களை உருவாக்கத் தூண்டியது என்று கலை வரலாற்றறிஞர் எர்னஸ்ட் காம்பிட்ச் என்பவர் கூறுகின்றார்.

தற்கால கலையில் முன்னோடிகளாக காதல், (Romantics) இயல்பு (Realists) மற்றும் தாக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியோரின் படைப்புக்களே இருந்தன. 19-ஆம் நூற்றாண்டில் Post Impression என்ற வகைகளையும், உணர்த்துதல் (Symblism) என்ற வகையும் வளர்ச்சி பெற்றன.

இத்தகைய கலைப் படைப்பின் தாக்கத்தால் கீழை நாடுகளில் அழகு சாதனைக் கலைகள் வளர்ந்தன. குறிப்பாக, டர்னர் மற்றும் டெலோகிராப்ஸ் ஆகிய ஜப்பானியர்கள் வண்ணம் தீட்டுவதில் புதிய வண்ணங்களைப் படைத்தனர். இப்படைப்பினால் பிராங்கீஸ் மில்லட் (Franker's Millet) என்பவர் வண்ணப் படைப்பினைப் போன்று சாதாரண மனித வாழ்க்கையில் நிகழும் இயல்பினைச் சித்தரித்துக் காட்டுகின்றார். பாரம்பரிய கலை வல்லுநர்கள் பொதுமக்கள் மற்றும் அரசு விரும்பும் பாரம்பரிய கலைக்கு எதிராக இயற்கையை சித்திரிக்கும் படைப்பாளிகள் இருந்து வந்தனர். ஓவியக் கலைஞர்கள், தங்கள் படைப்புக்களைக் கொண்டு கண்காட்சிகளை நடத்தி, புகழ் பெற்றனர். அரசின் அங்கீகரிக்கப்பட்ட ஓவியர் சங்கங்கள் இருந்தன. அரசாங்கங்கள்

பல கண்காட்சிகள் நடத்தி புதிய, சிறந்த கலைப்படைப்புகளைக் கண்காட்சியில் வைத்து ஆதரவு அளித்தனர்.

**Inpressionists:**

ஓவியர்கள், ஸ்டுடியோக்களில் செயற்கையாக ஒளியை உருவாக்கி படம் எடுப்பதைப் போல் அல்லாமல் இயற்கை ஒளியில் பிரதிபளிக்கக் கூடிய பொருள்களை வண்ணமாகத் தீட்டவேண்டும் என்று வாதிட்டனர். Impressionsists என்பவர்கள், வண்ண ஓவியர்கள், சிற்பக்கலைஞர்கள், எழுதுபவர்கள் போன்றோர்கள் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் (Association of Painters, Sculptors, Engravers) வைத்துத் தங்கள் படைப்புக்களைக் கண்காட்சிகள் மூலம் வெளிப்படுத்தினர். கலைஞர்கள், அவரவர் நாட்டிற்கேற்ப கலைகளைப் படைத்தனர். இத்தகைய செயல்பாடுகள், கலைத்துறைகள் தற்காலத்தில் ஒரு இயக்கமாகத் தோன்றியது.

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் Fanvism, Cubism, Expressionism and Futurism என்ற தத்துவங்களின் அடிப்படையில் கலை எழுந்தன. ஆனால் முதல் உலகப் போரின் விளைவாக இத்தகைய இயக்கங்களுக்கு தடைஏற்பட்டது. மாறாக, கலை இயக்கத்திற்கு எதிரான இயக்கம் தோன்றியது. உதாரணமாக, தாதா இயக்கத் (Dada)தைச் சார்ந்த மார்செல் டுச்சாம்ப் (Marcel duchamp) படைப்புகள் ஆகும். தற்கால கலை ஐக்கிய அமெரிக்காவில் கி.பி.1913-இல், முதல் உலகப்போரின் போது, ஐரோப்பாவில் இருந்து அமெரிக்கா சென்ற கலைஞர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இருப்பினும் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்தான் ஐக்கிய அமெரிக்காவில் கலை இயக்கம் வளரத் தொடங்கியது. 1950, 1960-களில் கலைத்துறையில் புதிய உத்திகள் தொடங்கப்பட்டன. அவ்வாறு தொடங்கப்பட்ட துறைகள் Abstract expressionism, (color field painting) Pop art, Opart, Had edge painting, minimal art typicel abstraction, Fluxus, post minimalism, photorealism மற்றும் ஏனைய துறைகளில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. 1960, 70களில் நிலக் கலை, Performance art, conecptual art, மற்றும் ஏனைய artforms, curators களுடைய கவனத்தை ஈர்த்தது. அதன்படி பல கலைபடைப்புகள் காட்சிகளிலும், நடைமுறையிலும் கடைப்பிடிக்கப்பட்டன. இக்காலத்தில்

தோன்றிய கலைஞர்கள் பலர் தற்கால கலை என்ற சொல்லை ஏற்க மறுத்து, அவர்கள் படைப்பை அண்மைக்காலப் படைப்பு (Post modern works) என்று அழைக்கவேண்டும் என்று கூறுகின்றனர். 1970-க்குப் பின் புதிய வீடியோ கலைநுட்பம் வந்தபின் பல கலைஞர்கள் தாங்கள் படைக்கும் படைப்புகளைப் புதிய ஊடகக்கலை (New media art) என்று அழைத்துக் கொள்கின்றனர்.

**தற்கால இலக்கியம்:**

ஐரோப்பாவில் இலக்கிய வரலாற்றில் தற்காலம் என்பது மறுமலர்ச்சிக் காலத்தை தொடர்ந்து, வந்த அறிவு ஒளிசார்ந்த காலம் மற்றும் 18-ஆம் நூற்றாண்டில் பரோக் (Barogue) காலத்தின் முடிவிலிருந்து தொடங்கியது எனலாம். ஆனால் ஐரோப்பாவிற்கு அப்பால் உள்ள பகுதிகளில் தற்கால இலக்கியத்தின் காலம் மாறுபடுகின்றது. ஆட்டோவான் துருக்கியில் கி.பி.1820-இல் டான்ஜிமாத் சீர்திருத்தம் முதல் தொடங்குகிறது. 1830-முதல் நாசர்-அல்-டின்-ச, வின் தலைமையில் இருந்த காஜா பாரசீகத்தில் தற்கால இலக்கிய வரலாறு தொடங்குகிறது. இந்தியாவில் மொகலாயப் பேரரசு முடிந்து பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் தோற்றுவித்தது முதல் தற்காலம் தொடங்குகின்றது. ஜப்பானில் கி.பி.1860-இல் ஏற்பட்ட மெய்ஜி புரட்சி முதற்கொண்டு தற்காலம் தொடங்குகிறது. சீனாவில் கி.பி.1910-இல் தொடங்கிய புதிய கலாச்சார இயக்கம் தொட்டு தற்காலம் தொடங்குகிறது.

18-ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் இமானுவேல் காண்ட், வால்டேர், ஜின் ஜாக்யூல், ரூசோ போன்றவர்கள் எழுதிய இலக்கியங்களில் இருந்து தொடங்குகிறது.

19-ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள்தான் எல்லா நூற்றாண்டுகளில் எழுந்த இலக்கியங்களைவிட சிறந்தவையாகும். காரணம் இக்காலத்தில் சினிமா, வானொலி, டெலிவிசன் ஆகியவை வளர்ச்சி பெறவில்லை. நாடக ஆரம்பத்தில் கதைகள் நாடகமாக்கப்பட்டன. மேலும் இக்காலத்தில் நாவல்கள், சிறுகதைகள், மாத வார-இதழ்கள் போன்றவை சமகாலத்தில் இருந்துவந்தன. எனவே எழுத்துக்களுக்கு அதிக ஆதரவு இருந்த காலம், மற்றும் எழுத்துக்களை நேரடியாக நாடகமாக இயற்றப்பட்ட காலம்.

காதல் சார்ந்த கற்பனை இலக்கியங்கள் பல தோன்றின. கிராமிய பாரம்பரியம் மற்றும் பழங்கதைகளைத் தேடும் போக்கும் காதல் சார்ந்த இலக்கியங்களில் இருந்து வந்தன. 1802-இல் சர் வால்டேர் ஸ்காட் Minsterey of the Scotish Border- எனும் நூலை எழுதினார். அரசர் ஆர்தர் மற்றும் மெர்லின் ஆகியவர்கள் பற்றிய நாவலை ஆர்தர் பேனர்மேன் என்பவர் எழுதினார். 1807-இல் தாமஸ்மோர் என்பவர் Iris melodies எனும் நூலை எழுதினார். லார்டு பைரன் என்பவர் இக்காலத்தில் பல கவிதைகளை எழுதியுள்ளார். 1810-இல் சர் வால்டேர் ஸ்காட் Lady of the lake எனும் நூலை வெளியிட்டார் கோதிக் வகையிலனான நாவல்கள் எழுதப்பட்டன. கோதிக் என்பது மறுமலர்ச்சிக்குப் பின் காதல் சார்ந்த இலக்கியங்களைக் குறிக்கும். ஸர்சி ஷெல்லி என்பவர் செயின்ட் Drvine எனும் நாவலை 1811-இல் இயற்றினார். 1807-இல் சார்லஸ் மற்றும் மேரிலாம்ப் (Mary Lamb) என்பவர்கள் ஷேக்ஸ்பியரின் கதைகள், குழந்தைகள் தெரிந்து கொள்ளும் அளவில் எளிமைப்படுத்தி சிறுசிறு கதைகளாக வெளியிட்டனர். 1811-இல் ஜேன் ஆஸ்டின் என்பவர் sense and sensibility எனும் நூலை வெளியிட்டார். 1813-இல் இவரே Pride and Prejudice எனும் நூலை வெளியிட்டார். 1814-இல் Dante's Divine comedy எனும் நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. 1817-இல் ஜான் கீட்ஸ் பல கவிதைகளை எழுதினார். சர்வால்டேர் ஸ்காட் என்பவர் Harold the Dountless எனும் நூலையும் பைரன் Manfred எனும் நூலையும் எழுதினர். 1821-இல் பைரன் Prophecy of Dante எனும் நூலை எழுதினார். 1826-இல் மேரிஷெல்லி என்பவர் The last man எனும் நூலை எழுதினார் 1831-இல் வால்டோ ஸ்காட் என்பவர் castle dangerous எனும் நூலை எழுதினார். 1844-இல் அலெக்ஸாந்தர் டூமாஸ் (Dumas) என்பவர். The three musketeers எனும் நூலை வெளியிட்டார். ஆலிவர் டுவிஸ்ட் கி.பி.1837 முதல் 1844 வரை பல புத்தகங்களை எழுதினார். அவை Nicholas Nickleby, The old curiosity shop. Bornoby, Rudge, A christian larol போன்றவை. 1837-இல் எட்கார் அல்லன் போ (Edgar Allen poe) என்பவர் The conqueror worm எனும் செய்யுளை எழுதினார். அவர் 1843, 44-களில், The Masque of the Red Death எனும் சிறுகதையையும், The Baldoon Hoax ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். 1854- முதல் 1860க்குள் சார்லஸ் டிக்கன்ஸ் David copperfield, Bleak House, Hard Times, A Tale of two cities ஆகிய நூல்களை எழுதினார்.

**19-ஆம் நூற்றாண்டின் பிற்காலம்:**

சார்லஸ் டிக்கன்ஸ் 1864 முதல் 1865 களில் our Mutual friend எனும் நூலை பல கட்டுரைகளாக எழுதி வெளியிட்டார். இக்காலத்தில் இலக்கியங்களுக்கு அதிக மரியாதை கிடைத்தது. காரணம் ஐரோப்பியர்கள் மற்றும் வட அமெரிக்கர்கள் முன்னைவிட அதிகம் கற்றவர்களாகவும், வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களாகவும் விளங்கினர். அதே வேளையில் எழுத்தாளர்களும் தங்கள் படைப்புக்களைச் சாதாரண நடைமுறையில் அதன் கருப்பொருளை அனைவரும் புரிந்து கொள்ளும்படி எழுதினர். மக்கள், துப்பறியும் நாவல், பேய், பிசாசு பற்றிய கதைகள், இயந்திரங்கள் பற்றிய செய்திகள், அதிசயங்கள், வீரதீரச் செயல்கள், விதியின் பயனால் காதலில் ஏற்படும் தோல்விகள், மாற்றங்கள் பற்றிய படைப்புக்களை அதிகம் விரும்பிப் படித்தனர். அதேபோன்று புதிய கண்டுபிடிப்புகள், விஞ்ஞான வளர்ச்சி, போன்ற புத்தகங்கள் வெளியாயின. அவற்றையும் மக்கள் விரும்பிப் படித்தனர். இத்தகைய படைப்புகளில் 1866-இல் டோஸ்டோய்வ்ஸ்கி என்பவர் எழுதிய crime and punishment எனும் நூல் வெளியாயிற்று. 1866-இல் அவர் எழுதிய The idiot என்னும் நூல் வெளியாயிற்று. 1887-இல் ஆஸ்கார் வில்டி எழுதிய The conterville Ghost எனும் நூலும், 1888-இல் அவர் எழுதிய The happy Prince and other stories எனும் நூலும் வெளியாயின. மேலும் அவர் எழுதிய The Ballad of Reading Goal எனும் நூலும் 1898-இல் வெளியானது.

HG.வெல்ஸ் என்பவர் எழுதிய Teh war of the worlds எனும் நூல் 1898லும், 1889-இல் When the Sleeper Wakes எனும் நூலும் வெளியாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும் காலத்தில் சிறுவர் இலக்கியம், பேய், பிசாசு கதைகள் குற்றவியல், விஞ்ஞான கற்பனை (Fiction) கதைகள், வரலாற்று நாவல்கள் போன்றன அதிகம் நிலைபெற்றிருந்தன.

MADURAI KAMARAJ UNIVERSITY ★ DR. T.P.M. LIBRARY ★
299114